# இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்கள்

## - ஒரு வெட்டுமுகம் -

எஸ். முஹம்மது மூசா B.A. (Cey)

அல்-மனார் வெளியீட்டுப் பணியகம்
மருதமுனை - 02, கல்முனை,
ஸ்ரீலங்கா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில்

# இஸ்லாமிய இயக்கங்கள்

~ ஒரு வெட்டுமுகம் ~

REFERENCE

297.7
இக

S. முகம்மது மூசா. B. A. (Cey).

பொது நூலகம்
நகர சபை
கல்முனை

**அல்-மனார் வெளியீட்டுப் பணியகம்**

**அல்-மனார் வீதி,**

**மருதமுனை,**

**ஸ்ரீலங்கா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 15539

# BIBLIOGRAPHICAL DATA

Title of the Book : ILANKAYIL ISLAMIYA IYAKKANGAL.
- ORU VETTUMUHAM -

Subject : ISLAMIC MOVEMENTS IN SRI LANKA.
- A PROFILE -

Authorised By : S. M. MOOSA. B. A. (Cey), J. P.,
TRAINED GRADUATE TEACHER,
AL-MANAR ROAD,
MARUTHAMUNAI.

Publisher : AL-MANAR PUBLICATION BUREAU,
AL-MANAR ROAD,
MARUTHAMUNAI.
(PUBLICATION NO. 04)

Printed By : ABNA DIGITAL PRINTING SYSTEM,
MARUTHAMUNAI.

Date of Publication: 2000.05.15.

No. Of Copies : 1000.

No of Pages : 152

Price : Rs. 125.00



ACCESSION NO: 15539
CLASS NO: 297.7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

மறைந்த என்தந்தைக்கும்
என்தாய்க்கும்,
இஸ்லாத்தினை அதன் தூயவடிவில்
விளங்க விளையும்
இனிய நெஞ்சங்களுக்கும்,
இந்நூல் **சமர்ப்பணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலின் உள்ளே.....

- ★ அணிந்துரை.
- ★ ஆசிரியருரை.
- ★ இலங்கை கண்ட இஸ்லாம்.
- ★ தப்லீ். ஜமாஅத்.
- ★ ஜம்இயது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா.
- ★ ஜமாஅதுல் முஸ்லிமீன்.
- ★ ஜமாஅதே இஸ்லாமி.
- ★ ஷீயாக்கள்.
- ★ காதியானிகள்.
- ★ வஹ்ததுல் வுஜூத் - தஸவ்வுப்.
- ★ துணைநின்றவை.

"நான் உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவை இரண்டையும் நீங்கள் பின்பற்றியொழுகும் காலமெல்லாம் வழிதவறவேமாட்டீர்கள். அவை அல்குர்ஆனும், எனது வழிமுறையுமாகும்" – (முஅத்தா, மாலிக்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னூலாசிரியரும்,
பேராதனைப் பல்கலைக்கழக
மெய்யியல்துறை முதுநிலை விரிவுரையாளருமான,
**M. S. M. அனஸ் M. A.** அவர்களினால்
அகமுவந்து வழங்கப்பட்ட

# அணிந்துரை.

இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்கள் பற்றி எழுதப்பட்ட, கவனத்திற்கொள்ளக்கூடிய நூலாக சகோ. எஸ். எம். மூசாவின் ''இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்களை''க் கூறலாம்.

இயக்கங்களின் செல்வாக்கு, இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகள், புதிய இயக்கங்களின் அறிமுகம் என்பன இலங்கை முஸ்லிம்களின் தற்காலச் சமயப்பண்பாட்டின் தவிர்க்கமுடியாத நிகழ்வுகளாக உள்ளன. இயக்கங்களின் செல்வாக்கு ஒவ்வொரு குடும்பத்தையும் ஒவ்வொரு நபரையும் அசைத்துவரும் இக்காலகட்டத்தில் இதுபற்றிய அறிவுவிளக்கத்திற்கோ, மதிப்பீட்டிற்கோ உதவும் ஒரு நூலின் வருகை வரவேற்கத்தக்கதாகும்.

சமயமும் இயக்கங்களும் என்பதுகூட விவாதத்துக் குட்படவேண்டிய தலைப்பாகும். சமயம் பொதுவானது, விரிவானது. சகிப்புத்தன்மைக்கும் சுதந்திரத்திற்கும் அது இடமளிக்கிறது. சமயத்தின் சார்பில் தோன்றும் சமய இயக்கங்களில் இந்த எல்லா இயல்புகளையும் காண்பது அரிது.

அடிப்படையில் இயக்கங்கள் அரசியல் இயல்பு கொண்டவை. குறிப்பிட்ட சில நோக்கங்கள், தேவைகள் காரணமாகத் தோன்றி வளர்பவை. இயக்கங்களைத் தோற்றுவித்தவர்களின் அறிவு, காலம், சூழல், இலட்சியம் போன்றவற்றினால் வரையறைக்குட்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம், சுதந்திரத்தை வழங்கியிருந்தாலும் இயக்கம் சுதந்திரத்திற்கு எதிராகச் செயற்படலாம். சமயம் நடுநிலை, சமாதானம், ஒற்றுமை போன்ற இலட்சியங்களுக்கு முதன்மைதரும்போது அதன் வழிவந்த இயக்கங்களோ பிரிவினை, பாரபட்சம், சர்வாதிகாரம் ஆகியவற்றை ஆதரிப்பதாக உணரலாம். சமய மேம்பாட்டிற்காக அவை பாடுபடுவது உண்மையாயினும் எல்லா இயக்கங்களும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமயத்திற்கு சமாந்தரமாகவோ சமநிலைத்தன்மை கொண்டதாகவோ இருப்பதில்லை.

இயக்கங்கள் அவற்றின் தாபகர்களினதும் தலைவர்களினதும் குறிக்கோள்களையும் திட்டங்களையும் செயற்படுத்தும் கடமைப்பாட்டைப் பெரும்பாலும் தீவிரமாக அனுஷ்டிக்கின்றன. அதனால் மனித ஆளுமை, அபிலாசை, விருப்புவெறுப்புக்கள் என்பன இயக்கத்தின் கடமையைப் பாதிக்கும் அம்சங்களாகிவிடுகின்றன. ஆயினும் அவை முன்வைக்கும் பொதுமைப்படுத்தப்பட்ட சமயப்பிரச்சாரம் இந்த உண்மைகளை வெளித்தோன்றாது மறைத்துவிடுகின்றன. உண்மையில் இயக்கங்களுக்கிடையிலான ''அரசியல்'' வேறுபாடுகளும் பிரிவினைகளும் எழுவதில் இவ்வம்சத்திற்கு முக்கிய பங்குண்டு.

எல்லா இயக்கங்களும் இஸ்லாத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதாகக் கூறினாலும் தமது கொள்கைகளே உண்மை இஸ்லாத்தை பிரதிபலிப்பதாக அவை வாதிடுவதையும் காணலாம். இயக்கம் ஒன்று தோன்றுகிறதென்றால் அது சமயத்தின் உட்கட்டமைப்பில் ஏற்படும் ஒரு நெருக்கடியை, அரசியல் விளைவை அல்லது ஒரு மாற்றத்தைப் பிரதிபலிப்பதாகக் கருதமுடியும். அதனால் சில சமய இயக்கங்களில் சர்வாதிகாரப்போக்கும் வன்முறைச்சாயலும் தவிர்க்க முடியாத வகையில் இணைந்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் இலட்சியங்களில் ஒருமைத்தன்மை காணப்படுகிறது. எனினும் இயக்கங்களின் வேலைத் திட்டங்களிலும், அணுகுமுறைகளிலும், கொள்கை விளக்கங்களிலும் ஒருமைப்பாடு இல்லை. நூலாசிரியர் மூசாவினால் தப்லீ்.. இயக்கம் பற்றியும் ஜமாஅத்துல் முஸ்லிமீன் பற்றியும் தந்துள்ள விளக்கங்களில் இந்த வேறுபாடுகள் அல்லது ஒருமைப்பாடின்மைகள் வகைப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கமுடியும்.

எல்லா மக்களையும் ஒன்றிணைக்கும் சக்தியைவிட வெவ்வேறு மக்கள் குழுக்களையே ஒவ்வொரு இயக்கமும் தத்தமது ஆர்ஷிப்பிற்குள் கொண்டுவருவதில் வெற்றிபெற்றுள்ளன. இவை பல சந்தர்ப்பங்களில் வேற்றுமையை வளர்ப்பதாகவும் பிரிவினை உணர்வுகளுக்குத் தூபமிடுவதாகவும் அமைந்துவிடுகின்றன.

மேலும் இயக்கங்கள் தம் அளவில் ஒரு அரசியற் கட்சிக்குரிய முழுவடிவமைப்புக்களையும் குறுங்-கருத்தியலையும் (Mini Ideology) நிகழ்ச்சி நிரல்களையும் வகுத்துச் செயல்படுகின்றன. இவை பொதுத்தன்மை வாய்ந்தனவல்ல. இவை இயக்கத்துக்கு இயக்கம் வேறுபடுபவை. நூலாசிரியர் எஸ். எம். மூசாவின் இயக்க விளக்கங்களிலும் இதற்கான நல்ல உதாரணங்களைக் காணமுடியும். தப்லீ்.. இயக்கம் அதன் ஆறு 'நம்பர்'களிலும் அதனை வலிமைப்படுத்தும் உப-திட்டங்களிலும் இதற்கு அனுசரணையான பிரச்சார முறைகளிலும் தங்கியுள்ளது. ஜமாஅதே இஸ்லாமியின் அமைப்புமுறை இதற்குச் சமமானதல்ல.

தோன்றிய காலம், தேவை, நோக்கம் என்பன இயக்கங்களை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஜமாஅதே இஸ்லாமி, இந்தியத் தேசியவாதத்துடனும் பாகிஸ்தான் பிரிவினைப் பிரச்சினையோடும் முஸ்லிம் கிலாபத் வீழ்ச்சியினால் ஏற்பட்ட அதிருப்தியோடும் உள்ள தொடர்புகளிலிருந்து உருவாகியது. பிறப்பிலேயே அதற்கு அரசியல் நோக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதன் தாபகர் மௌலானா அபுல்அ∴லா ம∴தூதியின் அரசியல் நோக்கு, சமய இலட்சியங்கள், ஆளுமை, மனோபாவம், அறிவுநிலை என்பன அதன் வடிவமைப்பில் முக்கிய பங்கைக் கொண்டிருந்தன.

தப்லீ∴ இயக்கத்திற்கும் இந்திய அரசியல் நிகழ்வுகளின் தாக்கம் உண்டு. ஆனால் அது முஸ்லிம்களை மதமாற்றத்திலிருந்து தடுத்து முஸ்லிம்களை முஸ்லிம்களாக வைத்திருக்கும் செயற்திட்டங்களுக்கும் பிரச்சாரத்திற்கும் முக்கியமளிக்கின்றது.

இந்தியாவில் கிலாபத் இயக்க வீழ்ச்சியுடன் 1920களின் மத்தியில் இந்து-முஸ்லிம் உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது. 'சுத்தி, சங்கதத்தான்' போன்ற இந்துத்துவ இயக்கங்கள் முஸ்லிம்களாக மதம்மாறிய இந்துக்களை மீண்டும் சுத்திகரித்து இந்துக்களாக்கும் பணியை நடாத்திவந்தன. இதனால் முஸ்லிம்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தனர். இந்தச் சூழலிலேயே தப்லீ∴ தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தது. ஆங்கில அரசுக்கு எதிரான "ஜிஹாத்" எதிர்ப்பை அரசாங்கம் ஒழித்துக்கட்டுவதில் ஈடுபட்டிருந்ததால் இவ்வியக்கத்தின் தாபகர், 'ஜிஹாத்' பின்னணியைத் தவிர்த்துக் கொண்டார். ஏனெனில் அவரது நோக்கம் ஏகாதிபத்தியவாதிகளுடன் 'ஜிஹாத்' புரிவதாக இருக்கவில்லை.

அதன் தாபகர் மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்கள், தமது இலட்சியம், ஆளுமை, தாம் அவசியம் என உணர்ந்த சேவை என்பனவற்றிற்கேற்ப தப்லீ∴ அமைப்பை அரசுடனும் இந்துக்களுடனும் மோதாத சாத்வீகப் பிரச்சார இயக்கமாக உருவாக்கினார். மேலும் இது பின்பற்றிய சமய நடைமுறைகளும் சமயக் கொள்கைகளும் 'அஹ்லே ஹதீத்' வாதிகளின் மரபைத் தழுவியதாக இருந்துள்ளது என்ற கருத்தும் அவதானத்திற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஸன் அல் பன்னாவின் இஹ்வான் இயக்கம் ஏகாதிபத்தியத்துடனும் எகிப்திய ஆட்சியுடனும் நேரடியாகவே மோதியதால், போர்ப்பயிற்சியும் படையணியும், 'ஜிஹாத்' கோட்பாடும் அதற்கு அவசியமாக இருந்தன. ஜிஹாத்தை மைய இலட்சியமாகக் கொண்ட சமயக்கொள்கை விளக்கத்தையும் பிரச்சாரத் திட்டத்தையும் அது தனது தேவைக்கேற்ப வகுப்பது அவசியமானதாக இருந்தது. உள்நாட்டு ஆட்சி, உலக ஆட்சி போன்ற அரசியல் பிரச்சினைகளிலும் இளைஞர் வேலைத்திட்டங்களிலும் தீவிர ஈடுபாடுகாட்டியதால் இஹ்வான் இயக்கமும் ஜமாஅத்தே இஸ்லாமியும் நகர்ப்புறத்தவர்களையும், படித்த மத்திய வகுப்பினரையும், இளைஞர்களையும் முன்னைய ஆட்சியாளர்களினால் விரக்தியுற்றவர்களையும், புதிய தலைமுறையினையும் வேகமாகக் கவர்ந்தன.

இவை எல்லாவற்றையும் விட, அப்துல் வஹ்ஹாபின் இயக்கத்திற்கு அதிக வரலாற்று முக்கியத்துவம் உண்டு. 18ம் நூற்றாண்டில் நஜ்த் மாநிலத்தில் அவர் நிகழ்த்திய இஸ்லாத்தின் இரண்டாவது புரட்சியென்று வர்ணிக்குமளவு அது முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. ஷிர்க்கையும் மரபுவாதத்தையும் எதிர்ப்பதற்கு முஸ்லிம்களுக்குள்ளேயே போரிடும் தேவையை வஹ்ஹாபிகள் வற்புறுத்தினர். நஜ்தின் சவூத் மன்னர் பரம்பரையினருடன் வஹ்ஹாபி இயக்கம் ஒன்றுகலந்தபோது துருக்கிய சாம்ராஜ்யத்தையும் ஹிஜாஸின் ஆட்சியாளரையும் யுத்தமுனையில் சந்திக்கும் அரசியல் இயக்கமாக அது வளர்ச்சிபெற்றது. 'ஷிர்க்' எதிர்ப்பையும் அவுலியா எதிர்ப்பையும் உலகளாவியரீதியில் அது கொண்டுசென்றது. ஷியா எதிர்ப்பு, இப்னு அரபி எதிர்ப்பு, நபி (ஸல்) அவர்களின் சந்ததியில் வந்த ஹிஜாஸ் ஆட்சியாளர் எதிர்ப்பு என்று பல்வேறு எதிர்ப்புக்கள் இவ்வியக்கத்தினால் பிரபலப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இயக்கங்கள் அவற்றிற்கே தனித்துவமான நோக்கங்களையும் பின்னணிகளையும் அரசியல் நோக்குகளையும் கொண்டு செயற்படுகின்றன என்ற முடிவுக்கு வருவது கடினமானதல்ல. அரசியற் சிந்தனைப் பயிற்சியும் சமூகவியல் மற்றும் வரலாற்று இயக்கப்பார்வைகளும் இவற்றை நன்கு உணர்வதற்குரிய வழிகளை ஏற்படுத்தலாம். எனினும் பாமரரும், உணர்ச்சிமேலீட்டிலிருப்பவர்களும் இயக்கங்களே இறுதியானதும், பூரணமானதும், தெய்வீகமானதும் என்ற விமர்சனத்திற்கிடமற்றவாறு தம்மை முழுமையாக இழக்கின்றனர்.

சகோதரர் மூசா அவர்கள் இஸ்லாமிய இயக்கங்களை மட்டும் கூறவில்லை. அவற்றைவிட வேறுபடும் சிக்கலான நிலைப்பாட்டைக் கொண்ட காதியானி, ஷீயா இயக்கங்கள் அல்லது சமயப்பிரிவுகள் பற்றியும் பேசுகின்றார். இயக்கங்களின் வரிசையிலன்றி இவை வேறுவகையில் கையாளப்படவும் ஆராயப்படவும் வேண்டிய விடயங்களாகும். காதியானிபற்றி ஆசிரியர் கூறியுள்ள கருத்துக்கள் பொதுவான கருத்தொற்றுமைப்பாட்டிற்குரியதே. ஆனால் 'ஷீயா' பற்றி அவர் முன்வைத்துள்ள வரலாறும் விபரங்களும் சரியானதாயினும் ஆசிரியர் கூறும் முடிவுகள் விவாதத்துக்குரியனவாகும்.

நூலாசிரியர் எஸ். எம். மூசா இலங்கையில் இவ்வியக்கங்கள்பற்றி எழுதுவதையே முக்கிய நோக்காகக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு இயக்கத்தினதும் தோற்றம், சுருக்க வரலாறு, அவற்றின் மீதான தனது விமர்சன நோக்கு அல்லது கண்டன உரை ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளார். ஆசிரியர் தனக்குச் சரியெனக் கண்ட கோட்பாடுகளின் பக்கமிருந்து இக்கண்டனப்பார்வைகளைச் செலுத்தியுள்ளார். அவர் நூலின் ஆரம்பத்திலிருந்து கடைப்பிடிக்கும் 'அக்கீதா', 'தௌஹீத்' கோட்பாடுகளுக்கு இசைவான எழுத்துமுறையிலிருந்து இதனை அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்களின் வரலாற்றுப் பதிவாக மாத்திரம் இந்நூலைக் கூறமுடியாது. இயக்கங்கள் விமர்சனத்துக்குட்படுத்தப்பட்டிருப்பது இந்நூலின் முக்கிய பண்பெனக் கருதலாம். விவாதத்துக்குரியதாக அதிக விடயங்கள் பேசப்படுவதனால் இந்நூலின் கருத்துக்களுக்கு ஒருவன் உடன்படுவது போலவே உடன்படாமலிருக்கவும் உரிமை பெறுகிறான். ஆய்வறிவு நோக்கில் மதிப்பிடுகையில் சில பிரச்சினைகள் உண்டெனினும் விவாதத்துக்குரிய கருத்துக்களையும் தமது கொள்கை நிலைப்பாட்டையும் எடுத்துரைப்பது அறிவுச் செயற்பாட்டிற்கு அப்பாற்பட்டதல்ல. ஆசிரியரின் எழுத்துக்களில் விவாதத்துக்குரிய கருத்துக்கள் காணப்பட்டபோதும் அவரது நோக்கங்களிலொன்று இயக்கங்களுக்கிடையிலான மோதல்களைத் தவிர்ப்பதும் வேறுபாடுகளைக் குறைப்பதுமாகும். அந்தவகையில் ஒரு நல்லெண்ணத் தூது மங்கலாகவாவது இந்நூலிலிருப்பது வரவேற்புக்குரியதாகும்.

ஆனால் இது ஒரு கடினமான பிரச்சினையாகும். இதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. ஒவ்வொரு இயக்கமும் தன்னைத்தவிர சத்திய இயக்கம் வேறில்லை என இஸ்லாத்தின் மூலாதாரங்களிலிருந்து நிரூபிக்க முயல்கின்றது. மூசா அவர்கள் விரிவாக எழுதியிருப்பது போல ஜமாஅத்துல் முஸ்லிமீன் தமது இயக்கத்தின் சத்தியப்பிரமாணத்திற்கு, 'பைஅத்' திற்கு உடன்படாதவர்களை காபிராகவே ஒதுக்கிவிடுகிறது. சில இயக்கங்களிடம் இத்தகைய கடினநிலைப்பாடு இல்லையென்றாலும் தமது இயக்கத்தைச் சாராதவர்கள்மீது குறைந்தபட்சம் அதிருப்தியையாவது அவை வெளிப்படுத்தாதிருப்பதில்லை.

மூசா அவர்கள் முன்வைத்துள்ள சில விளக்கங்களும் கொள்கைகளும் அப்துல் வஹ்ஹாபின் மரபில் காணப்படுவனவாகும். அகீதா, தௌஹீத் கோட்பாடுகளில் இதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
பொது நூலகம் நகர சபை

பிரதிபலிப்பைக் காணலாம். மி'.ராஜ், தஜ்ஜால், உலக அழிவு போன்றவற்றை அவை கூறப்பட்டுள்ள அதே விதத்தில் எளிமையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசிரியரின் கருத்திலும் வஹ்ஹாபியச் செல்வாக்கையே காணமுடிகிறது.

வஹ்ஹாபிகளின் தெளஹீத் வாதமும் வஹ்தத்துல் வுஜூதும் முரண்பட்டவை. வஹ்ஹாபிகள் வஹ்தத்துல் வுஜூதை நிராகரிக்கின்றனர். அதன் மூலம் சூபித்துவம் அங்கீகரிப்பை இழக்கின்றது. இறைவனும் படைப்புக்களும் என்ற விடயத்தில் இஸ்லாத்தின் கடவுட்கோட்பாட்டின் நிலை என்ன என்பதற்கு இரு வேறுகோணங்களிலிருந்து அளிக்கப்படும் விடைகளிலிருந்து இச்சர்ச்சை மூள்கின்றது. இதற்கும் அப்பால் உலகமறுப்பும் துறவறமும் போலிக் கோட்பாடுகளும் சூபித்துவத்தில் நிலைகொண்டபோது அது இஸ்லாமிய சமூக இலட்சியத்தை மறுக்கும் துறையாக மாற்றமடைந்தது. இந்தநோக்கில் ஆசிரியர் மூசா கூறும் சூபித்துவ எதிர்ப்புக்கு ஒரு வரலாற்று மதிப்புண்டு.

இத்தகைய சூபித்துவத்தையே ஷாஹ் வலியுல்லாஹ்வும் அல்லாமா இக்பாலும் எதிர்த்தனர். ஆயினும் அவர்களின் கடவுட்கோட்பாடு தெளஹீத் நெறியைக் கூறியபோதும் ஏதாவதொரு வகையில் சூபித்துவக் கடவுட்கோட்பாட்டின் தொடர்பு அல்லது இணக்கம் அவற்றில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

இஸ்லாமியக் கோட்பாட்டை விளங்குவதற்கு அல்-கஸ்ஸாலி, இப்னு அரபி, ஷாஹ்வலி, இக்பால் போன்றோரின் கருத்துக்களை ஆராய்வதற்கு ஒரு முஸ்லிமுக்கு உரிமையுண்டு. ஆயினும் சங்கரரின் அத்வைத வேதாந்தமோ, மாயைக் கோட்பாடோ இப்பிரச்சினைக்குரிய தீர்வாகாது. ஏனெனில் இவை இரண்டும் இருவேறு பண்பாட்டு மூலகங்களிலிருந்து தோன்றுவனவாகும்.

ஒவ்வொரு விடயத்துக்குமான விளக்கத்திற்கு இரு பக்கங்களோ ஒன்றுக்கு மேற்பட்ட மட்டங்களோ உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் முன்னேற்றம் குன்றிய மக்கள்பிரிவினை வளர்க்க வழங்கப்பட்ட அனேக விளக்கங்களை மாற்றமுடியாத உண்மைகள் என வாதிட்டால் அனேக தவறுகளுக்கு அது இடமளித்ததாகிவிடும். மு.'.தஸிலாக்கள் பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் இதனைத் தமக்குரிய வகையில் வலியுறுத்தியிருந்தனர். தற்காலத்தில் 'மரிஸ் புகைல்' இதைத்தான் விஞ்ஞான உண்மைகள் மூலம் நிறுவினார்.

மரிஸ் புகைல், விஞ்ஞான எல்லைக்குட்பட்ட விடயங்களுக்கு மறுவிளக்கமளித்து பழைய விளக்கங்களை நிராகரித்தார். ஆனால் பௌதீகவாதக் (Mataphysics) கோட்பாடுகளிலும் விளக்கங்களிலும் இதனைச்சந்திப்பது கடினம். இஸ்லாத்தில் மு.'.தஸிலாக்களின் பங்களிப்பு விரிவாக ஆராயப்படவேண்டியதாகும். ஆசிரியர் மூசா, மு.'.தஸிலாக்களைக் கடுமையாகச் சாடியிருந்தாலும் கிரேக்க சிந்தனைத் தொடர்பும் மு.'.தஸிலா மரபும் வஹ்ததுல் வுஜூதுடனோ, சூபித்துவக் கோட்பாட்டுடனோ மட்டும் தொடர்புடையதல்ல. இதையும் தாண்டிய பண்பாட்டு வளர்ச்சி மட்டங்களில் அவற்றின் பங்கு ஆராயப்படுவது அவசியம்.

விடயம் ஒன்று சமய மூலங்களில் எளிமையானதாக எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதனால் அந்த விடயமும் எளிமையானதாகவே இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அறிவு விடயங்களில் முஸ்லிம்களை மிகவும் பலவீனர்களாக்கியுள்ளது. எதுவும் எளிமையானதாக இல்லை என்பதைத்தான் உலகவாழ்வும் அறிவும் எமக்குச் சொல்லுகின்றன. விளக்கங்கள் எளிமையாகவிருப்பது அறிவுமட்டத்தையும் ஆய்வுவிடய அம்சத்தையும் பொறுத்ததாகும். அதையும் எதார்த்தத்தையும் சமமாக்கினால் நாம் விரும்பமுடியாத சிக்கலை அரவணைத்தவர்களாவோம்.

விவாதிக்கப்பட வேண்டிய பல விடயங்களும் கருத்துக்களும் இயக்கங்களினூடாகவும் வந்து சேர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் எமது முக்கிய கவனம் இலங்கையில் இவ்வியக்கங்களின் வரலாறுபற்றியதே. இது தொடர்பாக இன்னும் அதிகமான விளக்கங்களும் பதிவுகளும் நமக்குத் தேவையாகவுள்ளன. ஜம்இயத்துல் அன்ஸாரிஸ் சுன்னத்தில் முஹம்மதியா, ஜமாஅத்துல் முஸ்லிமீன் ஆகியன புதிதாக வரலாற்றுப் பதிவுக்குட்படுத்தப்பட்டுள்ளன. நூலொன்றில் இவைபற்றி, விரிவாகப் பேசப்பட்டுள்ள முதல் சந்தர்ப்பமென்றும் இதனைக்குறிப்பிடலாம். இது இந்நூலின் சிறப்பிற்குரிய மற்றுமொரு அம்சம் எனக்கூறலாம்.

ஆசிரியர் மூசா முன்வைத்துள்ள பதிவுகளோ, கருத்துக்களோ விவாதத்துக் குரியனவாகவோ குறைபாடுகளுடையவைகளாகவோ இருக்கலாம். இத்துறையில் காத்திரமான முன்னோடி எழுத்துக்கள் இல்லாத சூழ்நிலையிலிருந்தே இதை நாம் மதிப்பிடவேண்டி யுள்ளது. என்பதை நாம் மறக்கக்கூடாது. தற்காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் சமய-பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குச செலுத்திவரும் இஸ்லாமிய இயக்கங்கள் பற்றிய விடயங்களைப் பேச நல்ல சந்தர்ப்பத்தை எஸ். எம். மூசாவின் நூல் வழங்கியுள்ளதை நாம் மறக்க முடியாது.

பொது வாசகர்களுக்கு மாத்திரமின்றி இத்துறையில் ஆய்வுமுயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கும் இந்நூல் பயனுள்ளதாக அமையும் என்பது எனது எண்ணம்.

எம். எஸ். எம். அனஸ்,
முதுநிலை விரிவுரையாளர்,
மெய்யியல்துறை,
பேராதனை வளாகம்.

2000.05.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியருரை.....

இளமையிலிருந்தே என் உள்ளத்தில் ஒரு ஆதங்கம். இம்மைக்கும் மறுமைக்கும் பொருத்தமான வழிமுறைகளையும் விழுமியங்களையும் தன்னகத்தே தாங்கியது இஸ்லாம், அதன் எழுச்சிக்காக வாய்ப்பும் வளமும் வரும்போதெல்லாம் தன்னால் இயலுமானதைச் செய்துகொண்டிருக்கவேண்டும் என்பதுவே அது.

அதுமட்டுமின்றி எனது எழுத்து முயற்சியினை ஒரு புனிதப்போராக (ஜிஹாத்) க்கூட நான் கருதிவருகின்றேன்.

> "........நீர் நிராகரிப்போருக்கு (நபியே)
> கீழ்ப்படியாதீர் அன்றி (குர்ஆனாகிய) இதனை
> (சான்றாக)க் கொண்டு நீர் அவர்களுடன்
> போரிடுவீராக" (25:52)

மக்காவில்வைத்து றசூலுல்லாஹ்வுக்கு இவ்வசனம் அருளப்பட்டது. இவ்வசனத்தின் கருப்பொருளை நோக்கின், ஒரு முஸ்லிம் தாம் வாழும் சமூகத்தினை, தமது சுற்றுச்சூழலைப்பற்றிப் பேசுவது, எழுதுவது, சிந்திப்பது இஸ்லாத்தின் எழுச்சிக்காக உழைப்பது - யாவுமே இஸ்லாமியக்கண்ணோட்டத்தில் புனிதப்போர் சார்ந்தவைகளே என்பது வெள்ளிடைமலை. அதே நேரம் கி.பி. 623 இல் மதினாவில் வைத்தே ஆயுதம் ஏந்திப்போராடும் 'ஜிஹாத்', முஸ்லிம்கள் மீது விதிக்கப்பட்டது என்பது இங்கு நோக்கற்பாலது.

இப்பகைப்புலத்தில் 1977களிலிருந்து, உயர்வகுப்பு இஸ்லாமிய மாணவர்களை மையமாகக்கொண்டு தேசியப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இஸ்லாமியக் கட்டுரைகளை எழுத ஆரம்பித்த நான், 1980களின் பின்னர் இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம் தொடர்பான மூன்று வினா விடைத் தொகுதிகளையும் நூலுருவில் வெளியிட்டேன். அல்லாஹ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியினால் எனது முயற்சிக்கு மாணவருலகிலிருந்து அமோக ஆதரவு கிடைத்தது.

இத்தொடரில் எனது பார்வையினைச் சற்று விசாலப்படுத்திய போது இலங்கையிலுள்ள இஸ்லாமிய இயக்கங்கள் (Islamic Movments), சிந்தனைப்பிரிவுகள் மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பனிப்போர்களும், மோதல்களும் என்னுள்ளத்தினை வெகுவாக நெருடின. எந்நிலையிலும் இயக்க அலைகளினால் அள்ளுப்படாமல் இஸ்லாத்தினை அதன் தூயவடிவில் அறிய அவாவுறும் நான், தாம் சார்ந்த இயக்கங்களுக்காகத் தம்மை அற்பணித்துள்ள, அதே நேரம், அவ்வியக்கங்களின் பின்னணியினைச் சரிவரப் புரிந்துகொள்ளாத தொண்டர்கள் (Followers) ஆதரவாளர்கள் (Supporters) இருப்பதையும் கண்டேன்.

உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கும் இஸ்லாத்தினை தத்துவார்த்தரீதியாக விளங்க விளையும் அறிவுஜீவிகளுக்கும் முக்கிய இயக்கங்கள், கோட்பாடுகள் பற்றிய அறிமுகமொன்று ஒரேபார்வையில் அவசியம் என்பதையும் உணர்ந்தேன்.

''தப்லீ: ஜமாஅத், தௌஹீத் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி, வஹ்ஹாபி, ஷியா..... என்றெல்லாம் இயக்கங்கள் இருப்பதாகக் கூறிக்கொள்கின்றார்கள். நானும் அவர்கள் பலருடன் பழகிவருகின்றேன். ஆனால் அவைகள் என்ன கூறுகின்றன என்பது பற்றி எனக்குத் தெரியாது. அறியவேண்டும் என்ற ஆசைதான் அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.'' நீண்டகாலமாக இலங்கைவாழ் முஸ்லிம்களினால் தலைவர்களுள் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட, அண்மையில் காலஞ்சென்ற பழுத்த அரசியல்வாதி ஒருவரின் இயக்கங்கள் பற்றிய கருத்து இது. என்னுடன் நெருக்கமாகப் பழகிவரும் நண்பர்கள், உறவினர்கள் பலரின் நிலையும் மேற்கூறிய முஸ்லிம் தலைவரின் நிலையையே ஒத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அழுத்தங்களின் வெளிப்பாடே இச்சிறிய பனுவலாகும்.

ஒரு ஜனனாயக நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு பிரசையின் அடிப்படை உரிமைகளில் (Fundermental Rights) ஒன்று விமர்சன உரிமை. அதற்கு எவருமே தளையிட முடியாது. ஒரு கோட்பாட்டின் ஆதரவாளன் அதன் ஒரு பக்கத்தையே பார்க்கின்றான். ஒரு விமர்சகன் அதன் இரு பக்கங்களையும் பார்க்கின்றான். இது அவனின் கடமையுங்கூட. இந்த அடிப்படையில் எனது கால்நூற்றாண்டுக்கு மேலான உயர்வகுப்பு மாணவர்களுடனான வித்தியா தொடர்பு, நான் தானாகவே வளர்த்துக்கொண்ட தொடர்ச்சியான வாசிப்புப் பயிற்சி, கடந்த எட்டு வருட காலமாக அரபுக்கலாசாலை ஒன்றில் விரிவுரையாளராகக் கடமையாற்றியபோது இஸ்லாமிய அறிஞர்களுடன் ஏற்பட்ட தொடர்புகள் - உரையாடல்கள், சமூகத்தின் போக்கில் நான்கண்ட குறைநிறைகள் என்பன இந்நூலை விமர்சனரீதியாகக் கட்டமைப்பதற்கு உதவின.

இந்நூலின் உள்ளடக்கம் பற்றி அறிமுகம் செய்யவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. காரணம், இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள மெய்யியல்துறை முதுநிலை விரிவுரையாளர் சகோதரர் M. S. M. அனஸ் அவர்கள் அதனை அழகாகச் செய்துள்ளார்கள். அவரால் கூறப்பட்டுள்ள சில கருத்துக்களில் நான் முரண்பட்டாலும் அவருடைய காத்திரமான விமர்சனங்கள் இந்நூலுக்கு மேலும் அணிசேர்த்துள்ளன. இவ்வாறான விமர்சனங்களை வாசகர்களிடமிருந்தும் நான் எதிர்பார்க்கின்றேன். அவை எனது எழுத்துப்பணியைத் தொடர வாய்ப்பளிக்குமல்லவா!

இந்நூலினைக் கட்டமைப்பதற்கு எனக்குப் பலரின் ஒத்திசைவு தேவைப்பட்டது. அவர்களுள் முக்கியமானவர்களைக் கோடிட்டுக்காட்ட வேண்டியது எனது கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ வேலைப்பளுக்களுக்கு மத்தியில் இந்நூலின் அவசியத்தினை விளக்கி ஆக்கபூர்வமானதோர் அணிந்துரையை வழங்கியுள்ளார் பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல்துறை முதுநிலை விரிவுரையாளர் சகோ. M. S. M. அனஸ் M. A.

இந்நூலின் மூலப்பிரதியை நான் தயாரிக்கும் போது ஏற்பட்ட சில சந்தேகங்களை நிவர்த்தி செய்தும் ஆலோசனை வழங்கியும் உதவிய சகோ. A. L. கலீலுர்ரஹ்மான் M. A.

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் தொடர்பான சந்தேகங்கள் ஏற்பட்டபோது சளைக்காமல் விளக்கம் தந்தவர்கள் சகோதரர்களான அன்ஸார். எம். காசிம் (றியாதி), M. T. M. ஸாஹிர் (மதனி), எனது புதல்வர் றஸ்மி. M. மூசா (ஸலபி).

தொடர்புகொள்ளும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கியதுடன், நூலின் பின்பக்க அட்டையை அலங்கரித்து உதவியவர், நாடறிந்த விமர்சகரும் பத்திரிகையாளருமான சகோ. M. I. M. முஸாதிக். B. A.

இந்நூல் எனது நீண்டகாலத் தேடலாகையால் நான் களைப்படைந்த போதெல்லாம் என்னை உற்சாகப்படுத்தியோர் இருவர். ஒருவர் எனது இனிய நண்பர் சாய்ந்தமருதூர் M. S. மீராசாஹிபு (இளைப்பாறிய ஆசிரியர்), மற்றையவர் தென்கிழக்கு ஆய்வு அமையத்தலைவர் கவிஞர் இக்பால் அலி.

நூலின் மூலப்பிரதியை எழுத்துருவில் வடிவமைத்துத் தந்த எனது கனிஷ்ட புதல்வர் ஜெஸ்மி. M. மூசா.

நூலின் மூலப்பிரதியை கணனிமயப்படுத்தி வடிவமைத்துத் தந்த சகோதரர்களான M. M. றிழ்வான், A. C. றொஸான் ஆகியோருக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக என்முயற்சி தொடர உதவி நல்கும் எல்லாம்வல்ல அல்லாவுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

அன்புடன்,

**S. M.** மூசா.

2000.05.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கண்ட இஸ்லாம்.

இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவம் 'தவ்ஹீத்' எனும் ஓரிறைக் கொள்கையாகும். இதனை எத்திவைப்பதற்காகவே அல்லாஹ் காலத்துக்குக் காலம் இவ்வுலகின்கண் இறைவன் தூதர்களையும் வேதங்களையும் அனுப்பிவைத்தான். முதல் மனிதன் ஆதம்(அலை) அவர்களின் இம்மைப் பிரவேசத்துடன் இத்தத்துவத்திற்கு வித்திடப்பட்ட போதிலும் காலத்துக்குக் காலம் மனிதர்களினால் உருவாக்கப்பட்ட மனோவிச்சைக்குட்பட்ட கொள்கைகள், சிந்தனைகள் ஆகியவற்றின் பாதிப்பினால் 'தவ்ஹீத்' கோட்பாடு திரிபடைந்து வந்துள்ளதையும், அவ்வப்போது தோன்றிய இறைத்தூதர்கள் அதனைப் புதுப்பித்து வந்துள்ளதையும் இஸ்லாத்தின் முதுசொம்மாகிய அல்குர்ஆனினூடாக நாம் அறிந்து கொள்கின்றோம். ஈற்றில் அல்குர்ஆனும் நபிவழியும் (சுன்னா) செய்த புரட்சி மூலம் இஸ்லாம், நித்தியமானதொரு இடத்தைப் பெற்று இன்று, அது தோன்றிய அரபியத் தீபகற்பத்திலிருந்து உலகெலாம் வியாபித்துக் காணப்படுகின்றது.

இத்தொடரில், இலங்கை ஒரு பௌத்த நாடாக இருந்துங்கூட, இங்கும் முஸ்லிம்கள் ஒரு சமூகக் கூறாக வாழ்ந்து வருகின்றனர். அரேபியரின் வருகையானது, இலங்கையின் வரலாற்றுத் தொன்மையுடன் பின்னிப் பிணைந்துள்ளபடியால், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அரேபியத் தீபகற்பத்தில் தோன்றிய இஸ்லாம், மறுநூற்றாண்டின் முதற்பகுதியிலேயே இலங்கை வந்தடைந்துவிட்டது என்பதில் வாதப் பிரதி வாதங்களுக்கு இடமேயில்லை. ஆனால், துரதிஸ்டவசமாக பிற்காலத்தில் இஸ்லாத்தில் தோன்றிய உட்பிரிவுகளும் கோட்பாடுகளும் இலங்கை முஸ்லிம்களையும் கூறுபோடத்தவறவில்லை. எனவே, இலங்கையில் கோட்பாட்டுரீதியாக (அகீதா) இஸ்லாத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தினை, இந்நூலின் அவசியங்கருதி இவ்வியலில் நோக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

முஹம்மத் நபி(ஸல்) அவர்களினதும் நாற்பெரும் கலீபாக்களினதும் ஆட்சியானது அல்குர்ஆன், சுன்னா ஆகியவைகளின் அடிப்படையில் அமைந்திருந்தபடியால் அதனை "இறையாட்சி" என்கின்றோம். மூன்றாவது கலீபா உதுமான்(ரழி) அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையைத் தொடர்ந்து இஸ்லாமிய உலகில் முஸ்லிம்கள் மத்தியில் தோன்றிய உட்பூசல்கள், இறுதிக் கலீபா அலி(ரழி) ஆட்சியில் விஸ்வரூபமெடுக்கத் தொடங்கின. அதன் விளைவாக அன்னார் கி.பி. 661 இல் கொலை செய்யப்பட்டதுடன், அவ்வாட்சி முற்றுப்பெற்று முதலாவது கலீபாவாக முஆவியா(ரழி) வைக் கொண்ட உரோம, பாரசீக மன்னர்களின் ஆட்சியை ஒத்த, உமைய்ய வம்சவாட்சி இஸ்லாமிய உலகைக் கவ்விக் கொண்டது.

கலிபா அபூபக்கர்(ரழி) ஆட்சிமுதல், அரேபிய உயர்குடிகளான குறைஷிகளின் ஒரு பிரிவினரான ஹாஸிமீக்களிடம் (ரஸூலுல்லாஹ்வின் கிளை) தாங்களே இஸ்லாமிய உலகை ஆளத் தகுதியடையோர்; ஏனையோரெல்லாம் அடிமைகள் எனும் முரட்டுவாதம் குடிகொண்டிருந்தது. இதன் காரணமாக, அரேபியாவிலிருந்த ஹாஸிமீக்களுக்கும் அவர்களின் முதற்றர எதிரிகளான உமையாக்களுக்குமிடையில் பகைமை வலுவடையத் தொடங்கியது. கலீபா அலி(ரழி) அவர்களின் கொலையின் பின்னர் உமைய்யாகக்களின் கரங்களுக்கு ஆட்சி மாறியதும், அவர்கள் ஹாஸிமீக்களைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் இம்சிக்கத் தொடங்கினர். கலீபா அப்துல் மலீக் பின் மர்வான் (கி.பி. 685-705) ஆட்சிபீடமேறியதும் உமையாக்களின் துன்பந் தாங்கவொண்ணாது அரேபிய தீபகற்பத்தை விட்டு வெளியெறிய ஹாஸிமீக்களின் ஒரு பகுதியினர், தூர கிழக்கு நாடுகளில் தஞ்சமடைந்தனர். அவர்களுள் ஒரு குழுவினர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் குடியேறினர். அவ்வாறு குடியேறியோரே இலங்கையில் முதலாவதாகக் குடியேற்றங்களை அமைத்த அரேபிய முஸ்லிம்கள் என நம்பப்படுகின்றது.

இலங்கை வந்த அரேபிய முஸ்லிம்கள் ஆரம்பத்தில் வடக்கு, கிழக்கு, மேற்கு கரையோரங்களில் தம் குடியேற்றங்களை அமைத்தனர். அவர்கள் குடியேறிய பிரதேசங்களில் வாழ்ந்தோர் பெரும்பாலும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தபடியால் அரேபியர் அம்மொழியைக் கற்றதுடன், இந்துப் பெண்களையும் இஸ்லாத்தில் இணைத்து, திருமணமுஞ்செய்து நிரந்தரக் குடிகளாக வாழத்தொடங்கினர். இன்று இலங்கையில் முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்த போதிலும் அங்கெல்லாம் பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை-ஜும்ஆப் பேருரைகளும், இஸ்லாமியப் பிரச்சாரங்களும் தமிழ்மொழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுவதும் இதற்கோர் சான்றாகும். அண்மை நாடான தெனிந்தியாவில் வாழ்ந்த இந்துக்களும் முஸ்லிம்களும் தமிழ் மொழியைப் பேசுபவராக இருந்ததுடன், இலங்கையின் வடபுல மக்களுடன் கலை, கலாச்சார, சமயத் தொடர்புகள் கொண்டிருந்தபடியாலும் இக்கூற்றுப் பிழையாக இருக்க முடியாது. அத்துடன், இலங்கையில் வாழ்ந்த ஆதிக் குடிகளான இயக்கர்களும், தமிழ் மொழியையே பேசியதாகப் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதேநேரம் மலையகத்தில் குடியேறிய முஸ்லிம்களின் சமூகப்பின்னணி, கரையோர முஸ்லிம்களிலிருந்து சற்று வேறுபாடுடையதாக இருந்துள்ளதையும் நாம் அவதானிக்கலாம். மாயரட்டை (மலையகம்)யில் வர்த்த நோக்கமாச் சென்று குடியேறிய முஸ்லிம்கள், அங்குள்ள சிங்களப் பெண்களைத் திருமணஞ் செய்தபடியால், 'உடரட மரக்கல' என அழைக்கப்பட்டனர். அவர்கள் சிங்கள மகக்ளுடன் இரண்டறக்கலந்து வாழ்ந்ததுடன், நன்கு சிங்கள மொழியையும் பேசப் பழகிக் கொண்டபடியால் 'கண்டிய முஸ்லிம்கள்' என்றும் வேறுபடுத்தப்பட்டனர். மலையக இராச்சியம் என்பது மன்னராட்சிக் காலத்தில் 21 பிரிவுகளைக் கொண்டிருந்தது. அதில் 12 பிரதான பிரிவுகள் 'திசாவை' என அழைக்கப்பட்டன. அவைகளாவன, 1) 4 கோரளை 2) 7 கோரளை 3) ஊவா 4) சப்ரகமுவ 5) மாத்தளை 6) 3 கோரளை 7) வலப்பனை 8) உடப்பலாத்தை 9) நுவரகலாவிய 10) வெள்ளவாய 11) பின்தென்ன 12) தமன்கடுவ ஆகிய பகுதிகளை அடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மலையகத்தின் தலைநகராகவிருந்த செங்கடகல, 'செங்கோட்டம்' எனும் தமிழ் பதத்திலிருந்து மருவியதாக நம்பப்படுகின்றது. இந்நகரைப் பிரித்தானியர் 'கெண்டி' எனக் குறிப்பிட்டனர். அதனால் இன்று அது தமிழில் 'கண்டி' என அழைக்கப்படுகின்றது. பொதுவாக நோக்கின் இன்று இலங்கை முழுவதுமே முஸ்லிம்கள் பரவலாக வாழ்ந்துவருவதை நாம் காணலாம்.

முஸ்லிம்கள் தம் குடியிருப்புக்களில், இஸ்லாத்தின் கலாச்சாரச் சின்னமாய் பள்ளிவாசல்களை அமைத்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடத் தொடங்கினர். புதிதாக இஸ்லாத்தினை ஏற்றுக்கொண்டோருக்கு இஸ்லாமிய வழிமுறைகளை (ஷரிஆ) அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், அரபு நாடுகளிலிருந்து இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும் வரவழைத்தனர். அரபிய முஸ்லிம்களுக்கு பாரசீக வளைகுடா நாடுகள், கூபா, பஸரா, எகிப்து, மற்றும் மத்திய தரைக் கடல் நாடுகளுடனிருந்த தொடர்புகள் காரணமாக அந்நாடுகளிலிருந்த அரபியில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க, உரோம அறிஞர்களின் அறிவியல் நூல்களெல்லாம் இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டன. அக்கால முஸ்லிம்மக்கள் அரபுநாடுகளுடன் நேரடியான தொடர்புடையோராகக் காணப்பட்டமையினால், குர்ஆன்-சுன்னா அடிப்படையிலேயே தங்களுடைய வணக்க வழிபாடுகளையுஞ் செய்து வந்தனர். திருமணச் சட்டங்கள், சொத்துரிமைச் சட்டங்கள், வாரிசுச் சட்டங்கள்கூட அவ்வாறே அமைந்து காணப்படன.

கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் பக்தாதுக்கும் (அப்பாஸியக் காலம்) இலங்கைக்குமிடையில் கலாசாரத் தொடர்புகள் ஏற்படத் தொடங்கின. அக்காலத்தில் இலங்கையில் மதப்பற்றுக் குறைந்து வருவதை அவதானித்த அன்றைய அப்பாஸியக் கலீபா, மார்க்கப் பிரச்சாரஞ் செய்யும் நோக்குடன் இப்னு பகாயா என்பவரை இலங்கைக்கு அனுப்பிவைத்தார். அவ்வமையம் கொழும்புநகர், முஸ்லிம்களின் கலாசார, வர்த்தக மத்திய நிலையமாகத் திகழ்ந்தமையால் இப்னு பகாயா அங்கிருந்தவண்ணமே பிரச்சாரப் பணியில் ஈடுபட்டார்.

கி.பி. 1258இல் வட ஆபிரிக்காவைச் சேர்ந்த மங்கோலியர், ஹலாக்குக்கான் என்பன் தலைமையில் படைதிரட்டிவந்து அப்பாஸிய ஆட்சித் தலைநகரான பக்தாதை நிர்மூலமாக்கியதும், இஸ்லாமிய அரசு பல சிற்றரசுகளாகச் சிதறியது. அதனைத் தொடர்ந்து இந்தியாவுக்கு முஸ்லிம்களின் வருகை அதிகரித்ததனால் அரபிய முஸ்லிம்களின் தொடர்பு இலங்கை முஸ்லிம்களுக்கு மேலும் அதிகரித்தது. கி.பி. 1505இல் போர்த்துக்கேயர் முதன் முதலாக இலங்கை வந்தடைந்த போது, அரபிய முஸ்லிம்கள் கொழும்பு நகரில் ஏகபோக உரிமையுடையோராகக் காணப்பட்டனர். கொழும்பு நகருக்குப் பெயர் சூட்டியோரும் முஸ்லிம்களே என நம்பப்படுகின்றது. வரலாற்றாசிரியர் எமேசன் டென்னாட் (Sir Emerson Tennet) என்பவர், ஆரம்பத்தில் கொழும்புநகர் கலந்தோட்ட (Kalantota) எனப் பெயர் பெற்றிருந்ததாகவும் அதனை அரபிய முஸ்லிம்களே கொழும்பு (Colombo) என மாற்றியமைத்தாகவும் குறிப்பிடுகின்றார். எனவே பதினாறாம் நூற்றாண்டு காலத்திலேகூட கொழும்புநகர் முஸ்லிம்கள்



பொது நூலகம் நகர சபை கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசமிருந்ததனால் சுதந்திரமான முறையில் இஸ்லாமியப் பிரச்சாரத்திலும் ஈடுபட முடிந்தது. அரபிய முஸ்லிம்களின் முக்கிய தொழில் வர்த்தகமாக இருந்த போதிலும் அதுவே வாழ்க்கையாக அமையவில்லை. இஸ்லாமிய 'ஷரீஆ' வாழ்க்கையே அவர்களின் குறிக்கோளாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த போர்த்துக்கேயர் (1505-1658) ஒல்லாந்தர் (1658-1796), ஆங்கிலேயர் (1796-1948) ஆகியோர் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டு காலம் இலங்கையை ஒருவர் பின் ஒருவராக ஆட்சிசெய்து வந்துள்ளனர். அவர்கள் சகலரும் சமயத்தால் கிறிஸ்தவர்களாகும். பொதுவாக ஐரோப்பியர்கள் நாடுகாண் பிரயாணங்களில் ஈடுபட்டமைக்கான முக்கிய நோக்கம் தமது கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கேயாகும். அந்தவகையில் முதன்முதலாக இலங்கை வந்த போர்த்துக்கேயர், கரையோரப் பிரதேசங்களிலுள்ள சுதேசிகளை மதமாற்றஞ் செய்வதில் ஈடுபட்டனர். அம்முயற்சியில் அவர்கள் சிங்களவர், தமிழர் ஆகியோர் மத்தியில் ஓரளவு வெற்றியுங் கண்டனர். முஸ்லிம்கள், எல்லாவற்றுக்கும் மேலாக இஸ்லாத்தினை மதித்ததனால் அவர்களிடம் போர்த்துக்கேயரின் தந்திரம் பலிக்கவில்லை. இலங்கையில் முஸ்லிம்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் இஸ்லாமிய நெறிதவறாமல் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். "இலங்கையில் கிறிஸ்தவமதம்" எனும் நூலினை எழுதிய ஹோவ் (Hove) என்பவர் அந்நூலில், "கிறிஸ்தவ சமயத்துக்கு மதமாற்றஞ் செய்யப்பட்ட இலங்கை மக்களின் பட்டியலில் ஒரு முஸ்லிமுடைய பெயரையேனும் காணமுடியவில்லை" என வியந்துரைத்ததை நோக்கின், அன்றைய முஸ்லிம்களின் இஸ்லாமியப் பற்றினை உணரமுடியும். போர்த்துக்கேயர் காலத்தில் சிலாபம், புத்தளம், மன்னார், நீர்கொழும்பு, களுத்துறை, அழுத்கம, பேருவலை, காலி, வெலிகம ஆகிய கரையோரப் பிரதேசங்களிளெல்லாம் முஸ்லிம்கள் கணிசமான அளவு குடியேறி வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

1658ல் இலங்கை வந்த ஒல்லாந்தரும் கரையோரப் பகுதிகளில் கோட்டைகளை அமைத்து ஆட்சிசெய்யத் தொடங்கினர். அவர்களும் போர்த்துக்கேயரைப் போன்று இலங்கையரை மதமாற்றஞ் செய்யும் முயற்சியில் ஈடுபட்டபோதிலும, முஸ்லிம்களைப் பொறுத்தவரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் முயற்சியும் வெற்றியடையவில்லை. இதனால் ஆத்திரமடைந்த ஒல்லாந்தரும் போர்த்துக்கேயரைப் பின்பற்றி முஸ்லிம்களுக்கு எதிரான சட்டங்களை இயற்றினர். 1743ல் முஸ்லிம்களின் நிலங்களைப் பறிமுதல் செய்வதற்கான ஒரு சட்டத்தினைக் கொண்டுவந்தனர். உரோமன்-டச்சுச் சட்டத்தினை இயற்றி அதனுள் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தவும் முயற்சி செய்தனர். முஸ்லிம்கள் தம் மார்க்கக் கடமைகளைச் செய்யாது தடுத்தனர். கோட்டை இராச்சியத்துக்குச் சொந்தமாகவிருந்த கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள், ஒல்லாந்தரின் இம்சைகளைப் பொறுக்கவொண்ணாது சிங்கள மன்னர்களின் கீழிருந்த மலைநாட்டிலும் இலங்கையின் கிழக்குப் பகுதியிலும் குடியேற்றப்பட்டனர். இதன் காரணமாக இலங்கை முழுவதும் முஸ்லிம்கள் வாழவும் இஸ்லாம் பிரகாசிக்கவும் வழியேற்பட்டது.

முஸ்லிம்கள் மதம் மாறவில்லை என்பதற்காக ஒல்லாந்தர், அவர்களுடன் ஆத்திரமடைந்த போதிலும் பௌத்தர்களும் (சிங்களவர்) இந்துக்களும் (தமிழர்) முஸ்லிம்களுடன் சௌஜன்யமாக வாழ்ந்தே வந்தனர். இதற்கான முக்கிய காரணம், இவ்விரு மதத்தினரிடமும் பிறரை மதமாற்றஞ் செய்வதற்கான, தீர்க்கமான வழிவகைகள் இல்லாமையேயாகும். பௌத்தம் ஒரு மதமல்ல. அதுவொரு நாத்திகவாதமாகவே தோற்றமளிக்கிறது. உலகவாழ்வில் திளைத்து அதனை விட்டும் நீங்கித் துறவியாக வாழ்ந்த ஒரு தனிமனிதனின் தத்துவார்த்த சிந்தனை. அது நரகம், சுவர்க்கம், மறுமை, ஆத்மா என்பவைகள் பற்றித் தெளிவுபடுத்தவில்லை. மறுபிறப்பில் மட்டும் நம்பிக்கை கொண்டுள்ளபடியால் இந்து சமயத்தின் ஒரு பிரிவுபோலத் தோற்றமளிக்கின்றது. எனவே மதரீதியாக மன்பதையைக் கவருந்தன்மை எதுவுமே பௌத்த கோட்பாட்டில் இருக்கவில்லை. இந்து சமயமும் ஒரு கடவுட் கொள்கையையும் அதேநேரம் பல கடவுள்களை (அவதாரங்கள்)யுங் கொண்டது. இந்துக்கள் மத்தியில் வர்ணகுலபேதங்களும் அதிகம். ஒருவரை இந்துவாக மாற்றஞ் செய்தால் அவரை எந்தக் குலத்தில், சாதியில் சேர்ப்பது என்பதில் அவர்களுக்குள் பிரச்சினை. ஆகையால் அவர்களும் மதமாற்றஞ் செய்யும் விடயத்தில் தலையிடாமல் முஸ்லிம்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்தபடியால் இஸ்லாம் எழுச்சி பெறுவதற்கு இவ்விரு இனத்தினரும் மறைமுகமாக உதவினர் என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1796இல் இலங்கை வந்த ஆங்கிலேயர் ஆரம்பத்தில் ஒல்லாந்தரிடமிருந்த கரையோரப் பிரதேசங்களைத் தம்வசப்படுத்திய போதிலும், 1815இல் மலையகத்தையும் கைப்பற்றி முழு இலங்கையையும் தமதாக்கிக் கொண்டனர். இலங்கை மக்கள் இன, மத, மொழிவாரியாகப் பிளவுபடுவதற்கும் இன்று இலங்கை யுத்த பூமியாக மாறியிருப்பதற்கும் வித்திட்டவர்கள் ஆங்கிலேயரே. அவர்களின் பிரித்தாளும் தந்திரத்தின் விளைவே, பாரத பூமியும் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேஸ் எனப் பிரிவுபட்டு இன்றும் அவைகள் முட்டிமோதிக் கொண்டிருக்கின்றன. இந்தியா தமது குடியரசு யாப்பில் தம்மை "மதச்சார்பற்ற நாடு" எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் அங்கு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் இனமோதல்கள் இடம்பெறாத நாளே கிடையாது. இது, அங்குள்ள முஸ்லிம்களை ஒடுக்குவதற்காக ஆங்கிலேயர் செய்துவந்த மறைமுகமான சதியாகும்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயர், இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு முஸ்லிம்கள் மத்தியில் சிந்தனாரீதியிலான வேறுபாட்டினை ஏற்படுத்தி ஓரளவு வெற்றியுங் கண்டனர். ஒல்லாந்தரைத் துரத்திவிட்டு இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், ஒல்லாந்தரை விடவும் ஒரு படி மேலாக மதமாற்றஞ் செய்வதில் ஈடுபட்டனர். அவர்களின் வர்த்தக விருத்திக்கும், மதமாற்ற முயற்சிக்கும் முட்டுக்கட்டையாக முஸ்லிம்கள் இருந்தபடியால் இருவழிகளிலும் அவர்களைப் பலமிழக்கச் செய்ய முயற்சித்தனர். இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் "கிறிஸ்தவ சமயத்தைத் தழுவுவோருக்கு ஆங்கிலக் கல்வி புகட்டப்பட்டு அரச உத்தியோகமும் வழங்கப்படும்" எனும் அறிக்கையொன்றினை வெளியிட்டனர். அவற்றினால் கவரப்பட்ட கரையோரச் சிங்களவரும் தமிழரும் மதம் மாறினர். ஆனால் முஸ்லிம்களோ அவற்றுக்கெல்லாம் மசியவில்லை. மாறாக, இஸ்லாத்தில் இணைவோர் தொகையும் நாளுக்குநாள் அதிகரிக்கத் தொடங்கியது. எனவே, வர்த்தகத்துறையில் முஸ்லிம்களை இலகுவாகப் பலவீனப்படுத்த முடிந்தபோதிலும் மார்க்க ரீதியாக அவர்களை ஒடுக்குவது ஆங்கிலேயருக்குக் கஷ்டமாகவிருந்தது.

பிரித்தானியர் ஆட்சியின்போது தீவுமுழுவதும் முஸ்லிம்கள் ஏனைய இன மக்களின் மத்தியில் பரந்து காணப்பட்டனர். அவர்களின் கலை, கலாச்சாரம், பாரம்பரியங்களினால் கவரப்பட்டோர் தினாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தில் இணைந்தனர். இலங்கை வந்த அரேபி முஸ்லிம்களினால் வானியல், புவியியல், மருத்துவம் முதலிய அறிவியற்கலைகள் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டன. இதன் காரணமாக முஸ்லிம்களுக்கு சிங்களவருடனான நல்லுறவு வலுவடையத் தொடங்கியது. இது கண்டு பொறுக்கமுடியாத ஆங்கிலேயர் முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கையில் சலனத்தை ஏற்படுத்தும் சதிவேலைகளில் ஈடுபடத்தொடங்கினர். கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு இஸ்லாம் தடைகல்லாக இருந்ததனால் அதன் வளர்ச்சியை வெளிப்படையாகத் தடுக்கமுடியாது என்பதை உணர்ந்து, மறைமுகமாக முஸ்லிம்கள் மத்தியில் சிந்தனாரீதியான தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கினர்.

பிரித்தானியரிடமிருந்த பைபிள்களில், தீர்க்கதரிசிகளான இப்றாஹீம்(அலை), மூசா(அலை), ஈசா(அலை) முதலானோரின் வரலாறுகள் திரிவுபடுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டினை எழுதிய, போல் (Poul) என்பவரின் திருவிளையாடலே இதுவாகும். ஆனால், மேற்படி நபிமார்களின் வரலாறுகளை அல்குர்ஆன் காரணகாரியத் தொடர்புடன் விளங்கியிருக்கின்றது. இதனை அவதானித்த கிறிஸ்தவர்கள், சர்வதேச ரீதியாக இஸ்லாமியக் கோட்பாட்டினைத் திரிவுபடுத்துவதற்கு முயற்சி செய்யத் தொடங்கினர். காதியானிகள், ஸல்மான் ருஷ்தி, தஸ்லிமா நஸ்ரீன்களெல்லாம் இந்த அடிப்படையில் முஸ்லிம்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட கோடரிக்காம்புகளே. வத்திகான் அரசுகூட கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதாகக் கூறிக்கொண்டு உளகளாவியரீதியில் இஸ்லாத்திற்கு எதிராகவே செயற்பட்டு வருவதை இன்றும் நாம் காணலாம்.

இலங்கையில் இஸ்லாத்தினைப் பலமிழக்கச் செய்வதற்காக, ஓரிறைக் கொள்கையை(தவ்ஹீத்) போதித்த ஏனைய நபிமார்களிலிருந்தும் முஹம்மது(ஸல்) அவர்களையும் அன்னாரின் போதனைகளையும் தனிமைப்படுத்தவும் ஆங்கிலேயர் திட்டந்தீட்டினர். இஸ்லாமியக் கொள்கை மொறோக்கோவிலிருந்து வந்த "முஹம்மதியக் கொள்கை" எனக்கூறி இஸ்லாத்தினை "முஹம்மதிய மதம்" என்றனர். மதபோதகர்களை 'முல்லாக்கள்' என நையாண்டி செய்தனர். முஸ்லிம்களுக்கு 'சோனகர்' என நாமஞ் சூட்டியோரும் ஆங்கிலேயரே. அல்குர்ஆன்-சுன்னா வழிமுறைகளிலிருந்தும் முஸ்லிம்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக ஸியார (கல்லறை) வழிபாட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமளித்தவர்களும் ஆங்கிலேயரே என நம்பப்படுகின்றது. சிவனொளிபாத மலைக்கு (Adam's Peak) தெய்வீகச்சாயம் பூசி "எல்லா மதமும் ஒன்றே" என்ற தத்துவத்தினை உருவாக்கி இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கையைத் தகர்ப்பதற்காக ஆங்கில எழுத்தாளர்களைக் கொண்டு நூல்களையும் கட்டுரைகளையுங்கூட எழுதி முஸ்லிம்களை ஏமாற்றவும் முயற்சி செய்தனர்; அதில் வெற்றியுங் கண்டனர். இக்காரணங்களால் ஆங்கில ஆட்சியின் பிற்பகுதியில் பள்ளிவாசல் செல்லும் மக்கள் தொகையும் குறையத் தொடங்கின.

அல்குர்ஆன்-சுன்னா அடிப்படையில் தாமும் வாழ்ந்து பிற முஸ்லிம்களையும் வாழவழிவகுத்தவர்களை, உலமாக்களை, நல்லறிஞர்களை "இறைநேசர்கள்" (அவுலியாக்கள்) என இஸ்லாம் கோடிட்டுக்காட்டுகின்றது. அவர்கள் தம்வாழ்வில் சிறிதேனும் அல்லாஹ்வை மறக்காமல், அவனது கட்டளைகளிலிருந்தும் அணுவளவும் பிசகாமல் வாழ்ந்த பெருந்தகைகளாகும். இவ்வாறான நல்லடியார்கள் மரணித்ததும் அவர்களின் பெயரால் கல்லறைகள் கட்டி வழிபடும் வழக்கம் ஆங்கிலேயர்காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் சமகாலத்தில் அறிமுகஞ்செய்யப்பட்டது. முஸ்லிம்களின் நம்பிக்கையைக் குழப்பும் நோக்கத்துடன் சில போலி அவ்லியாக்களை (சேஹ்மார்) ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வந்தனர். அவர்களைக் கொண்டு தவறான வழிமுறைகளில் வணக்கவழிபாடுகளை அறிமுகஞ் செய்துவிட்டு மறைந்திருந்து அவதானித்தனர்; வர்த்தக நோக்கமாக வந்த அரபிய முஸ்லிம்களை விரட்டியடித்தனர்; நாடு கடத்தினர். இஸ்லாத்தைப் பரப்பிய உண்மையான இறைநேசர்களின் (சேஹ்) வரலாறுகளையும் சேவைகளையும் இருட்டடிப்புச் செய்தனர். இலங்கையில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் கல்லறைகளைக் கட்டி அப்பாவி முஸ்லிம்களைக் கொண்டு அவைகளுக்கென தனித்தனி வரலாறுகளையும் ஆங்கிலேயர் உருவாக்கினர்.

இன்று இலங்கையில் காணப்படும் ஸியாரங்களில் அடங்கப்பட்டுள்ள அவுலியாக்களின் பெயர்கள் யாவை? அவர்களின் பிறப்பிடங்கள் யாவை? அவர்கள் ஏன் இலங்கைக்கு வந்தனர்? நன்மையை ஏவித் தீமையைத் தடுத்து இஸ்லாத்தினை ஒளிபெறச் செய்வதற்கு என்னென்ன முயற்சிகள் மேற்கொண்டனர்? போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களைத் தொடுத்தால் எம் சகோதரர் சிலருக்கு கோபம் வருமே தவிர ஆதாரங்களைக் காட்டமாட்டார்கள். இருந்தால் தானே காட்ட முடியும். சில அவுலியாக்கள் வெள்ளைத் தாடியுடன் நீண்ட ஜுப்பா, பச்சைத் தலைப்பாகை, பாதரட்சை என்பன அணிந்த நிலையில் மாட்டு வண்டிகளிலும் ஓடங்களிலும் இனந்தெரியாதோரினால் கொண்டுவரப்பட்டு தங்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், சிலர் அரேபியாவிலிருந்து ஆகாயத்தினால் பறந்து வந்ததாகவும், யானையில் (கடலால்) வந்ததாகவும், சில அவுலியாக்கள் தாயத்து, நூல், இஸ்ம் என்பன கட்டி நோய்களைக் குணமாக்கியவர்கள், நீரினால் விளக்கெரித்தவர்கள், மண்ணைச் சீனியாக்கியவர்கள் என்றெல்லாம் கதையளப்பார்களே தவிர எந்த அவுலியா பற்றியும் வரலாற்று ரீதியான ஆதாரங்கள் எதுவும் எவரிடமுமமில்லை. இன்று இலங்கையின் பல பாகங்களிலும் மஸ்ஜிதுகளின் இணைப்பாக "ஸியாரங்கள்" இருப்பதையும் அல்லாஹ்விடம் கேட்பதற்குப் பதிலாக அவைகளின் முன்னால் கையேந்தி நின்று பிரார்த்திப்பதையும் நாம் அன்றாடம் காண்கின்றோம்.

ஸியார தரிசனம் பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது என்பது பற்றி இவ்விடத்தில் நாம் நோக்குதல் அவசியமாகும்.

"கபுறுகள் மீது சாந்து பூசுவதையும், அதன் மேல் கட்டடங் கட்டுவதையும் நபி(ஸல்) அவாகள் தடைசெய்துள்ளார்கள்."

(ஆதாரம் : முஸ்லிம், அபூதாவூத், அகமது, நஸயீ, பைஹகீ)

"எனது அடக்கஸ்தலத்தை விழாக் கொண்டாடும் இடமாக ஆக்கிவிடாதீர்கள்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"கப்றுகளை நோக்கித் தொழாதீர்கள், அதன் மீது அமராதீர்கள்."

(ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸயீ, அகமது)

"அலியே! இந்த நகரத்தில் உயரமாகக் கட்டப்பட்டுள்ள கபுறுகளைத் தரைமட்டமாக்காது விட்டுவிடாதே" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : முஸ்லிம், அகமது.)

இஸ்லாமிய வரலாற்றில் சிறப்பு வாய்ந்த ஹுதைபியா உடன்படிக்கை நடைபெற்ற இடத்திலிருந்த ஒரு மரத்திற்கு மதிப்பளிப்பதற்கு மக்கள் ஆரம்பித்ததை அறிந்த கலிபா உமர்(ரழி) அவர்கள் கொதித்தெழுந்து அம்மரத்தை வெட்டி வீழ்த்துமாறு கட்டளையிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய கூற்றுக்களிலிருந்து ஸியாரங்கள் கட்டுவதற்கோ, அங்கு சென்று வழிபடுவதற்கோ, ஞாபகச் சின்னங்களை வழிபடுவதற்கோ இஸ்லாத்தில் இடம் இல்லை என்பது நன்கு விளங்குகின்றது. அதே நேரம் றஸுலுல்லாஹ் அவர்கள் இரு நோக்கங்களுக்காக கபுறுகளைத் தரிசிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள்.

1. மரணத்தை (மறுமையை) ஞாபகப்படுத்துவதற்காக.
2. எமக்காகவும் கபுருகளில் அடங்கப்பட்டிருப்பவர்களுக்காகவும் பிரார்த்தனை புரிவதற்காக.

"நபி(ஸல்) அவர்கள் தங்கள் தாயாரின் கபுரை ஸியாரத் செய்த போது அழுதார்கள். அவாகளைச் சூழ்ந்திருந்தோரும் அழுதார்கள். என் தாயாருக்காகப் பிழைபொறுக்கத்தேட என் இறைவனிடம் நான் அனுமதி கேட்டேன். அவன் எனக்கு அனுமதி தரவில்லை. கபுரை "ஸியாரத்" செய்யவாவது அனுமதி கேட்டேன். அல்லாஹ் அனுமதி தந்ததான். கபுருகளை நீங்களும் ஸியாரத் செய்யுங்கள்; அது மரணத்தை நினைவுபடுத்தும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம், அஹ்மத், நஸயீ, இப்னு மாஜா, பைஹகீ)

எனவே, கபுருகளில் அடங்கப்பட்டிருப்பவர்களுக்காகப் பிரார்த்திப்பதற்கு எமக்கு அனுமதியுண்டு. இதைவிட்டு விபரந் தெரியாதவாகளின் கபுரடிகளுக்குச் சென்று அவர்களிடம் நாம் உதவி தேடுவதில் (வஸீலா) என்ன நியாயமிருக்கின்றது. இன்றும் நம்மில் எத்தனை பேர் நம்முடைய பெற்றோர்கள் அடங்கப்பட்டிருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களுக்காகப் பிரார்த்திக்கின்றோம் என்பதைச் சற்றுச் சிந்திந்துப் பார்த்தல் வேண்டும். இப்போதாவது இலங்கையில் ஸியார வழிபாடு முஸ்லிம்களைத் திசை திருப்புவதற்காகச் செய்யப்பட்ட சதி என்பது புலனாகின்றதல்லவா? இணைவைத்தலின் (ஷிர்க்) ஆரம்பமும் முஸ்லிம்களை இறைவழிபாட்டிலிருந்து மெல்ல மெல்ல விலகிச் செல்லும் வழியை ஆரம்பித்து வைத்ததும் ஸியார வழிபாடே என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம். நேர்வழி என்பது ஒரு வழிதான் அது அல்குர்ஆன் -சுன்னா கூறும் வழி, இதனையே அல்லாஹ்

"நிச்சயமாக இதுவே என்னுடைய நேர்வழியுமாகும், இதையே பின்பற்றுங்கள். இதுவல்லாது வேறு வழிகளைப் பின்பற்றாதீர்கள். அது என்னுடைய வழியிலிருந்தது மாற்றிவிடும்."

என அல்குர்ஆனில் கூறியுள்ளான்.



15539
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொடரில் 'மத்ஹபு' எனும் கோட்பாடுகளின் தாக்கம் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டமை பற்றியும் நாம் அறிதல் அவசியமாகும். கி.பி.எட்டாம் நூற்றாண்டுக்கும் 11ம் நூற்றாண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் (ஹிஜ்ரி 80-241) நான்கு மத்ஹபுகளான ஹனபி, ஹம்பலி, ஷாபி, மாலிக் என்பன தோன்றின. இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பாலான முஸ்லிம்கள் ஷாபி மத்ஹபையே பின்பற்றுகின்றனர். கொழும்பு, கண்டி முதலிய சில நகரங்களில் ஹனபி மத்ஹபைப் பின்பற்றும் சிறுதொகையினர் காணப்பட்டனர். சட்ட அறிஞர்களெனக் கொள்ளப்படும் சில முக்கிய இமாம்களால் அவர்களுக்குக் கிடைக்கப்பட்ட அல்ஹதீஸ் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வழிமுறைகளையே நாம் 'மத்ஹப்' என்கின்றோம்.

மத்ஹபுடைய எந்த இமாமும் நாங்கள் ஒரு கோட்பாடாக இதனை உருவாக்கியுள்ளோம். நீங்கள் ஏதாவது ஒரு மத்ஹபைப் பின்பற்றித்தான் ஆகவேண்டும் என்று கூறியதற்கு வரலாற்று ஆதாரங்கள் கிடையாது. இமாம் ஷாபி(ரஹ்) அவர்கள்கூட, "குர்ஆனுக்கும், உண்மையான ஹதீதுக்கும் முரணாக எதையும் சொற்களாலோ அபிப்பிராயத்தினாலோ நான் கூறியிருந்தால் அவற்றை விட்டுவிட்டு குர்ஆனையும் ஹதீஸையுமே பின்பற்றுங்கள்" என்றே கூறிச் சென்றுள்ளார்கள். இதேகருத்தையே ஏனைய மத்ஹபுடைய இமாம்களும் கொண்டிருந்தனர். ஆனால், நான்கு மத்ஹபுகளும் தவறுகளுக்கு அப்பாற்பட்டவைகள்; அவைகளுள் ஏதாவது ஒன்றை முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும்; எவரும் மத்ஹபு மாறக்கூடாது அல்லது இன்னொரு மத்ஹபின் தீர்ப்பினைப் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது எனும் கருத்துக்கள் இன்றும் மத்ஹப்வாதிகளிடம் உண்டு. ஏதாவது ஒரு மத்ஹபைப் பின்பற்றாதவர், 'பிரிந்து சென்றவர்' என்ற கூட்டத்தில் சேர்க்கப்படுகின்றார். ஷாபீ. மத்ஹபைப் பின்பற்றுவோர் எகிப்து, தென்னரேபியா, இந்தோனேசியா, மற்றும் கிழக்காசியாவிலுள்ள சில நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றனர். ஆரம்ப காலம் தொட்டு அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகியவைகளின் கூற்றுக்கள் மட்டுமே இஸ்லாம் என நம்பியிருந்த இலங்கை வாழ் முஸ்லிம்களை மத்ஹபுவாதிகளாக மாற்றியமைத்தவர்கள் தென்னிந்திய முஸ்லிம்களே! இன்றும் அங்கு சென்று பார்த்தால் தெருவெல்லாம் மத்ஹபுச் சண்டை. ஒரு தெருவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனபிப் பள்ளி, மறு தெருவில் ஷாபி∴ பள்ளி. ஒரு மத்ஹபு தொழுகையில் சூறாக்களுக்கு முன்னால் பிஸ்மில் சொல்லும்; ஆமீன் கூறும். மற்றொரு மத்ஹபு பிஸ்மில் சொல்லாது, ஆமீன் கூறாது. ஒரு மத்ஹபு குனூத் ஓதும், மற்றைய மத்ஹபு ஓதாது ஒரு மதஹபு மையித்தை அடக்கிவிட்டு "தல்கீன்" ஓதும் மற்றைய மத்ஹபு ஓதாது. இப்படியான வேறுபாடுகள் நிறையவுள்ளன. இன்று இலங்கையில் மத்ஹபுப்பற்று சற்று தணிந்து வருவதையும் நாம் அவதானிக்கலாம்.

இருந்தபோதிலும் மத்ஹபுகளின் தோற்றத்தினால் சில நன்மைகளும் இல்லாமலில்லை.

1. ஆரம்பகாலத்தில் கிடைக்கப்பட்ட ஹதீதுகளைப் பாதுகாக்கவும், சில ஹதீதுகள் பற்றிய தெளிவினைப் பெறவும் மத்ஹபுகள் உதவின.
2. அக்கால இமாம்கள் காலத்தில் ஏற்பட்ட மார்க்கப் பிரச்சினைகளுக்கு இலகுவாகத் தீர்வுகாண முடிந்தது.
3. இஸ்லாம் மார்க்கம், காலத்துக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய என்பதை மத்ஹபுகள் உலகுக்கு எடுத்துக்காட்டின. அதாவது வணக்கவழிபாடுகளை (இபாதத்) உலவியல்ரீதியாக ஏற்றுப் பின்பற்றக்கூடிய சில சட்டதிட்டங்களை இமாம்கள் மத்ஹபுகளின் துணைகொண்டு உருவாக்கியிருந்தனர்.
4. முரண்படுவதுபோன்று தோன்றும் ஹதீதுகளுக்குச் சமநிலைகண்டு சில சட்டதிட்டங்களை உருவாக்கவதற்கு முடிந்தது. சான்றாக, நீர் அருந்தும்போது சிலசந்தர்ப்பங்களில் நின்றநிலையில் அருந்துவதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது ஆகுமான அனுமதி (முபாஹ்)யாகும். அதேநேரம் கீழே உட்கார்ந்தே நீர் அருந்தவேண்டும் என றசூலுல்லாஹ் வலியுறுத்தியுள்ளதால் உட்கார்ந்து அருந்துவது "சுன்னா"வாகும் என்பதைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் முஸ்லிம்கள் 'தரீக்கா' வாரியாகப் பிளவுபட்டுள்ளதையும் நாம் அவதானிக்கலாம். 'தரீக்கா' என்ற சொல்லுக்கு 'வழி' என்பது பொருளாகும். இதனைத் தரீக்காவாதிகள் 'ஞானவழி' என்பர். ஞானவழியைப் பின்பற்றி இறைவனை அடைவதற்கு சைவாகம காண்டங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவைகளையொத்த ஷரிஅத், தரீக்கத், ஹகீகத், ம∴ரிபத் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு படித்தரங்கள் தரீக்காவதிகளிடம் உள்ளன. இந்நான்கு படித்தரங்களையும் அடையாதோர் முஸ்லிம்களல்ல என்பது இவர்களின் கருத்தாகும். இவற்றில் ஊறித்திளைத்தோர் சூபியாக்கள் (ஆத்மஞானிகள்) எனப்படுவர். இப்படித்தரங்களை ஒரு மனிதனால் தானாகவே அடைய முடியாது. பீர் (குருநாதர்) என்பரிடம் 'பைஅத்' எனும் 'உறுதிமொழி' கொடுத்து சீடனாக (முரீத்) மாறி அவர் சொல்வதையெல்லாம் செய்துவந்தால்தான் மேற்கூறிய நான்கு படித்தரங்களையும் அடைய முடியும். "பைஅத்" செய்தவர் தன்னிச்சையாக எதையும் செய்யமுடியாது. "பீர்" எனும் குருவின் கட்டளைப்படியே இயங்கவேண்டும். அதனை மறுத்து ஏதாவது செய்வது பெரும்பாவமாகும். இதுவே தரீக்காக்களின் அடிப்படையாகும். இவ்வாறான தரீக்காக்கள், இறைநேசர்கள் எனும் அவுலியாக்கள் மீது பற்றுள்ளவர்களினாலேயே (ஹுப்புல் அவுலியா) உருவாக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

"தரீக்கா" எனும் வழிமுறை நபி(ஸல்) அவர்கள் காலத்திலோ நாற்பெரும் கலீபாக்கள் காலத்திலோ இருந்ததில்லை. கி.பி. பதினோராம் நூற்றாண்டின் இறுதியிலே அது இஸ்லாத்தில் மெல்ல மெல்ல நுழைந்ததாக நம்பப்படுகின்றது. ஆனால் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்னு அரபி போன்றோரினால் "வேதாந்த மதமே இஸ்லாம்" என நிறுவுவதற்கு மேற்கொள்ளப்பட்ட எத்தனங்களே தரீக்காக்கள் தோன்ற வழிவகுத்தன எனக் கூறப்படுகின்றது. இன்ஷா அல்லாஹ் இவைகள் பற்றிய மேலதிக விளக்கங்களைப் பிறிதொரு இயலில் பெற்றுக் கொள்ளலாம். இன்று இலங்கையில் காதிரிய்யா, ஸாதுலிய்யா, ஜலாலிய்யா, நக்ஷபந்தியா.......... இன்னும் பல தரீக்காக்கள் இருப்பதையும் நாம் காணலாம்.

இவ்வாறாகப் பலவழிகளிலும் பிளவுபட்ட ஒரு சமூகத்தினராக இலங்கை முஸ்லிம்கள் வாழ்வதற்கும் அண்மையிலுள்ள தென்னிந்தியாவுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன என்பதையும் நாம் மறுக்க முடியாது. ஐரோப்பியர் இந்தியாவை ஆட்சி செய்யும் போது கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அங்குள்ள இந்துக் கோயில்களில் மகாபாரதக் கதாப்பிரசங்கம் நடைபெறும் வழக்கமிருந்தது. அதனைக் கேட்பதற்காக இந்துக்கள் பக்திப் பிரவாகத்துடன் கூடியிருப்பர். அவர்களுடன்போய் முஸ்லிம்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து கேட்டுக்கொண்டிருப்பர். இக்காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த சேகு அப்துல் காதர் மரைக்கார் எனும் வள்ளல் சீதக்காதி, கடிகை முத்துப் புலவரின் மாணவரான உமறுப் புலவரை அணுகி, முஸ்லிம்களின் கவனத்தைத் திசை திருப்புமுகமாக நபி(ஸல்) அவர்களின் வரலாற்றினை ஒரு காவியமாக ஆக்கும்படி கேட்டார். உமறுப்புலவரோ இந்துக்கள் வாழ்ந்த சூழலில் இந்து சமயப் புலவர்களுடன் வாழ்ந்தவர். அவர், பெயரளவில் முஸ்லிமாக இருந்தாரே தவிர, இஸ்லாமிய 'ஷரீஆ' பற்றி எதுவும் அறிந்திலர். எனவே அவர் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை பற்றித் தெரிந்தவர்களிடம் கேட்டறிந்து "சீறாப்புராணம்" எனும் காவியத்தை உருவாக்கினார். கம்பராமாயணத்தில் கங்கை நாடு, காவிரி நாடு ஆனது போல, இவர் நபி(ஸல்) அவர்கள் பிறந்த அரேபியாப் பாலைவனத்தினை நெல்விளையும் மருத நிலமாகக் கொண்டு சீறாவைப் பாடினார். அவர், எல்லாப் புலவர்களையும்போல உவமைகளுக்கும் கற்பனைச் சிறப்புக்களுக்கும் முதன்மையளித்து சீறாப்புராணத்தை ஒரு காவியமாக உருவாக்கினாரே தவிர இஸ்லாத்தின் உண்மை வரலாறு கூறும் ஒரு இலக்கியமாக உருவாக்கவில்லை. இதேயமைப்பில் உமறுப்புலவர், "முதுமொழி மாலை" எனும் பிரபந்தங்களையும் பாடினார். இவைகளையறியாத தமிழ்நாடுவாழ் பாமர முஸ்லிம்கள் சீறாப்புராணத்தினூடாக இஸ்லாத்தினை விளங்க முற்பட்டனர்.

இத்தொடரில் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த புலவர்களெல்லாம் எதையெதையெல்லாம் இஸ்லாம் என எண்ணினார்களோ அவைகளையெல்லாம் பாடல்களாக உருவாக்கினர். முகைதீன் புராணம், மிதிறுசாநா, இபுனி ஆண்டார் படைப்போர், சிறாவண்ணம், மஸ்தான் சாஹிபு பாடல்கள், நாகையந்தாதி, புலவராற்றுப்படை, சைத்தூன் கிஸ்ஸா, விறகு வெட்டிக்கிஸ்ஸா, கஸஸுல் அன்பியா, ஞானமணிமாலை, தற்கலை பீர் முஹம்மது அப்பா பாடல் ............ எனப் பல நூல்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளியாகின. இவற்றுள் பெரும்பாலானவைகளில் அத்வைதக் கருத்துக்களும் இணைவைத்தல் தொடர்பானவைகளும் நிறைந்து காணப்பட்டன. அக்கால இந்திய முஸ்லிம்கள் குர்ஆன், ஹதீது, சஹாபாக்கள் வரலாறு ஆகியவைகளைவிட, மேலே கூறப்பட்ட காவியங்களையும் செய்யுட்களையும், பிரபந்தங்களையுமே இஸ்லாத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
நகர சபை
கல்முனை

அடிப்படைகளாக விளங்கியிருந்தனர். அவைகள் யாவும் அப்படியே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டதனால் இலங்கை முஸ்லிம் மக்களின் "தவ்ஹீத்" எனும் ஓரிறைச் சிந்தனைகள் அவைகளினால் மழுங்கடிக்கப்பட்டன. அதன் காரணமாக கடந்த அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் அறிஞர்கள் எனக் கருதப்பட்டோர் கீழ்காணும் விடயங்களையே இஸ்லாமும் அதன் நடைமுறைகளும் என மக்களுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தனர்.

1 கல்வி என்பது இம்மைக்கானது, மறுமைக்கானது என இருவகைப்படும். முஸ்லிம்கள் மறுமைக்கான கல்வியையே கற்கவேண்டும்.

2 ஒவ்வொரு பிள்ளையையும் ஓதப் பள்ளிக்கு அனுப்பி ஓதுவிக்க வேண்டும். அங்கு ஓதமட்டும் தான் பழக்க வேண்டும்.

3 பெண் பிள்ளைகள் பத்து வயதுக்கு மேல் எந்தப் படிப்பும் படிக்கக் கூடாது. எந்த மொழியிலும் பெண்களுக்கு எழுதப் படிப்பிக்கக் கூடாது.

4 பெரிய பிள்ளையானால் (Puberty) பெண்களை வீட்டில் நிறுத்திவிடல் வேண்டும்.

5 ஆண் பிள்ளைகள் குர்ஆன் ஓத, மவ்லூது, கத்தம் பாடமாக்கி தொழுகைக்குரிவைகளும் மனனஞ் செய்தல் வேண்டும். (தனியாக இஸ்லாம் பாடம் இன்றுள்ளது போன்று கற்பிக்கப்படவில்லை. நபி(ஸல்), சஹாபாக்கள் வரலாறுகளை ஹதீதுகளை மட்டும் கொண்டே அறிய முடிந்தது.

6. தமிழ் மொழி காபிர்களின் மொழி. அவற்றினை எழுத வாசிக்கப் பழக்கினால் போதும். ஆங்கிலம் கிறிஸ்தவர்களின் பாசை. அதனைப் படிப்பது ஹராமாகும்.

7. தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ்ஜு ஆகிய கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். அத்துடன் கத்தம், பாதிஹா, மவ்லூது ஆகியவைகளையும் செய்தால் போதும்.

8. கிதாபு (ஹதீஸ் கிரந்தம்) உலமாக்களுக்கு மட்டுமே சொந்தம். ஹதீதையும் அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

9. தமிழில் அல்குர்ஆனை மொழிபெயர்த்தல் கூடாது. ஏனைய மதத்தினருக்கு எமது மார்க்க விடயங்கள் விளங்கக் கூடாது என்பதற்காக 'அரபுத் தமிழ்' சரளமாக வழக்கத்திலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.அரபு எழுத்துள்ள கடதாசிகளை மிதித்தல் கூடாது. அவைகளை முத்தமிட்ட பின் உயரமான இடங்களில் வைத்துவிடல் வேண்டும்.

11.உலமாக்களிடம் கேள்விகள் கேட்கக் கூடாது. பிரசங்கம் செய்தால் வாய்பொத்தியிருந்து அவதானித்தல் வேண்டும். அதற்கு மேல் கேள்வி கேட்டல் சைத்தானுடைய செயலாகும்.

12.பள்ளியில் கொடியேற்றுதல், கந்தூரி கொடுத்தல், நேர்ச்சை கொடுத்தல் ஆகும்.

13. ஸியாரஞ் சென்று கபுறு மூடி பாதிஹா ஓதல் வேண்டும்.

14.அவுலியாக்களின் ஸியாரஞ் செல்லல், நேர்ச்சை செய்தல், உண்டியலில் பணம் போடுதல் என்பன இருபாலாருக்கும் கூடும்.

15. பெண்கள் கர்ப்பிணிகளாக இருக்கும் போது ஏழாம் மாதத்தில் பாத்திமா நாயகி பெயரால் "தலைப் பாதிஹா" ஓதல் வேண்டும்.

16. இஸ்ம் எழுதல், துஆக் கட்டல், தண்ணீர் ஓதிக் குடித்தல், எண்ணெய் ஓதிப் பூசல், நூல் கட்டுதல், மைபார்த்தல், பால்பார்த்தல் என்பன ஆகும்.

17. ஒடுக்கத்துப் புதனில் 'இஸ்ம்' எழுதிக் கரைத்துக் குடித்தல், எண்ணெய் ஓதிப் பூசல், நூல் கட்டுதல், மை பார்த்தல் என்பன ஆகும்.

18. வீடுகளில் நற்பேறுக்காக 'இஸ்ம்' எழுதிப் போத்தல்களில் அடைத்துத் தொங்கவிடல் வேண்டும்.

19. வீட்டில் எவராவது மரணித்தால் அவர் பெயரால் முதலாம் கத்தம் 7ஆம் கத்தம், 40ஆம் கத்தம், வருடக் கத்தம் என்பன கட்டாயம் கொடுத்தல் வேண்டும்.

20. வியாபாரம், விவசாயம் ஆகிய இரு தொழில்களை மட்டுமே முஸ்லிம்கள் செய்தல் வேண்டும்.

21. தலையில் முடிவைத்தல் ஹராம்.

22. தலையில் தொப்பியில்லாமல் திரிவது ஹராம்.

23. காபிர்களை முஸ்லிம் பெண்கள் பார்க்கக் கூடாது.

24. பகல் வேளைகளில் ஆண்கள் பார்க்கக் கூடியதாக தெருவில் பெண்கள் செல்லக் கூடாது.

25. 'இத்தா' இருக்கும் வீட்டின் வேலி பச்சை ஓலையினால் அடைக்கப்பட்டிருக்கும். அவ்வீட்டுக்குள் நாய், பூனை மட்டுமல்ல வைத்தியரும் நுழையக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பெண்கள் பாடக் கூடாது. அவர்களுடைய சத்தம் வேலிக்கப்பால் கேட்கக்கூடாது.

27. தலையில் முடி வைத்தவனை சாட்சிக்கு அழைத்தல் கூடாது. அவன் பிறை கண்டு சொன்னால் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

28. தத்துவ சாஸ்திரம், கணிதம் போன்ற பாடங்களை முஸ்லிம்கள் படிக்கக்கூடாது.

சொல்லப் போனால் இன்னும் நீண்டுகொண்டே செல்லும், மேற்கூறிய நடைமுறைகளின் எச்ச சொச்சங்களை நாம் இன்றும் எமது சமூகத்தில் காண்கின்றோம்.

இவ்வாறான பகைப்புலத்தில் தென்னிந்தியாவில், குறிப்பாக காயல்பட்டணத்தில் அரபுக் கலாசாலைகள் உருவாகின. அவைகளும் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கு (அகீதா) அழுத்தங் கொடுக்காமல் தத்தம் சூழலுக்கேற்ப நூதன அனுஷ்டானங்கள் (பித்அத்) நிறைந்த பாடத்திட்டங்களைத் தயாரித்துப் போதிக்கத் தொடங்கின. அந்நிலைமை இன்றும் தொடர்கின்றது. ஒரு சில கலாசாலைகள் மட்டுமே "தவ்ஹீத்" அடிப்படையில் போதிக்கின்றன. அக்காலத்தில், உலமாக்கள் ஆகவேண்டும் என்ற ஆதங்கத்துடன் இந்தியா சென்ற இலங்கை இளைஞர்கள், அவர்கள் கல்வி கற்ற கலாசாலைகளுக்கு உரித்தான கொள்கைகளையும் கருத்துக்களையும் இலங்கையில் பரவச் செய்தனர். அவர்களுள் சிலர் இஸ்லாத்தினை முன்பு கூறப்பட்டவைகள் போன்று வெறும் சடங்குகளும் சம்பிரதாயங்களுமாக மாற்றிவிட்டனர். இதற்கு இலங்கையிலுள்ள பெரும்பாலான அரபுக் கலாசாலைகள் பலியாகி, இன்றுவரை தடுமாறுகின்றன. இவ்வாறான குழப்ப நிலைகளிலிருந்து நீக்கி, இலங்கை முஸ்லிம்களை தவ்ஹீதின் பக்கம் திசைதிருப்ப முயற்சிக்கும் இஸ்லாமிய அமைப்புக்கள் (Movements) மத்தியிலும் கயிறிழுப்பு.

இலங்கையில் 1950களிலிருந்து இஸ்லாமியப் பிரச்சார இயக்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தங்கள் தடங்களைப் பதிக்கத் தொடங்கின. அவைகளை நாம் இஸ்லாமிய அடிப்படையில் அகீதாவுக்குட்பட்டவைகள், அகீதாவுக்கு அப்பாற்பட்டவைகள் எனப் பிரிக்கலாம். அகீதாவுக்குட்பட்ட இயக்கங்கள் 'தவ்ஹீத்' எனும் ஓரிறைக் கொள்கையை அடிநாதமாகக் கொண்டு இயங்குவதாகக் கூறிக்கொண்ட போதிலும் அவைகள் மத்தியிலும் குத்துவெட்டு; ஆட்சேர்ப்பில் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இலங்கையின் பெரும்பாலான மஸ்ஜித்களின் நிருவாகம் இஸ்லாத்தின் அடிப்படைபற்றி அறியாத, அறியவேண்டுமென அக்கறையற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளபடியால், அவர்களை வசப்படுத்திக் கொண்டு தம் கொள்கையைப் பரப்பும் இஸ்லாமிய அமைப்புக்களையும் காண்கின்றோம். மஸ்ஜிதில் இருவர் சண்டை பிடித்தால் அவர்களின் பின்னால் ஏதோ இரண்டு இயக்கங்கள் ஒளித்துக்கொண்டிருக்கும். எல்லோரும் தாம் வாழும் சமூகத்துக்கு நல்லதையே செய்யத் துடிக்கிறார்கள். ஆனால் நல்லதையே செய்ய வேண்டும் என்ற மனோபாவம் ஏனோ அவர்கள் மத்தியில் உருவாகவில்லை. அகீதாவுக்கு அப்பாற்பட்ட இயக்கங்கள் தெட்டத் தெளிவாக வழிகேட்டில் இருக்கின்றன என்ற உண்மையை, இன்று இலங்கை வாழ் பாமரர்கள்கூட உணரத் தலைப்பட்டுவிட்டார்கள். ஆனால் அவைகளின் பாதிப்பை விட நல்லது செய்யப் புறப்பட அமைப்புக்களின் உள்முரண்பாடுகள் இஸ்லாத்தின் எழுச்சிக்கு ஆபத்தாகவுள்ளன. இது பற்றி, சகல அமைப்புக்களும் கரிசனை செலுத்தி 'த.்.வா' எனும் இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபடல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் இன்று ஏறக்குறைய 75 அரபிக் கலாசாலைகள் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் தத்தம் இஷ்டப்படி பாடத்திட்டங்களை (Syllabus)த் தயாரித்துக் கற்பித்து வருவதும் நோக்கற்பாலது. எல்லாக் கலாசாலைகளையும் இல்லாவிடினும் ஓரளவு ஒத்த கருத்துடைய சிலவற்றையாவது ஒன்றிணைத்து ஒரு பாடத்திட்டமாக்கும் முயற்சி காலத்துக்குக் காலம் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தோல்வியே ஏற்பட்டுவருகின்றது. எம் சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வினை வழங்க முடியாமல் உலமாக்கள் தடுமாறுவதற்குரிய முக்கிய காரணம் அரபிக்கலாசாலைகளில் புகட்டப்படும் மார்க்கக் கல்வியின் தாரதம்மியமே என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

இருந்தபோதிலும் 1970களின் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் சமூக, பொருளாதார, சமய ரீதியாக விளிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். அதாவது எண்ணெய் வளம் கொண்ட அரேபிய நாடுகள் அபரிதமான வருமானத்தை ஈட்டத் தொடங்கின. மூன்றாம் மண்டல நாடுகள் பல, செலவுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானமில்லையே எனப் பரிதவிக்க அரபுநாடுகளில் ஆடம்பர மாளிகைகளும் அடுக்குமாடிக் கட்டங்களும், பாலை நிலத்தை மூடிச் சோலைகளும், பாதைகளும் தொழில்நுட்பக் கூடங்களும், வெளிநாட்டுப் பொருட்களும் பாலைநிலப்பட்டணங்களை அதிநவீன பட்டணங்களாக மாற்றின. இவ்வளர்ச்சியின் காரணமாக இலட்சக்கணக்கானவர்கள் தொழில்வாய்ப்புத் தேடி மத்திய கிழக்கு நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினர். வேலையின்றி, வீடின்றித் தவித்த இலங்கை போன்ற நாட்டு மக்களுக்கு மத்திய கிழக்கின் செல்வச் செழிப்பு பெரியதோர் வரப்பிரசாதமாக அமைந்தது. அரபு நாடுகள் முஸ்லிம் நாடுகளாகையால் பிறநாட்டு முஸ்லிம் தொழிலாளர்களுக்கு அங்கு தனிப்பட்ட சலுகைகள் காட்டப்பட்டன. அதன் காரணமாக இலங்கை முஸ்லிம்களும் இளைஞர், முதியோர், கற்றோர், கல்லாதோர் என்ற பாகுபாடின்றி அங்கு படையெடுக்கத் தொடங்கினர். இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு உயர்ச்சியை மத்திய கிழக்கு வருமானம் ஓரளவு சமாளித்தது என்பதை நாம் மறுக்க முடியாது.

எனினும் மத்திய கிழக்குத் தொழில்வாய்ப்புக் காரணமாக ஏற்பட்ட ஏனைய விளைவுகளையும் அதாவது சமூகவியல் தாக்கங்களையும் சிறிது சிந்தித்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் தாயோ தந்தையோ அல்லது இருவருமோ வெளிநாடு செல்வதால் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள், பள்ளிப்படிப்பைப் பூர்த்தி செய்யாமல் இளைஞர்களும் யுவதிகளும் தொழில் தேடிப் படையெடுப்பதனால் சமூகத்தில் ஏற்படும் மூளைசாலிகள் இழப்பு, பணிப்பெண்களாக அராபியர் இல்லங்ளில் முஸ்லிம் பெண்கள் வேலை செய்வதால் விளையும் சில சீர்கேடுகள், உழைத்த பணத்தை நுகர்வுத் தேவைகளுக்காகச் செலவு செய்வதால் ஏற்படும் சேமிப்புக் குறைவும் முதலீட்டு வாய்ப்பின்மையும் இவ்வாறான எத்தனையோ சமூக, பொருளாதார அம்சங்களைப் பற்றி ஆழமான ஆய்வும் செய்யப்படாததனால், இப்பிரச்சினைகள் பற்றி முடிவாக எதையுமே கூறமுடியாதுள்ளது. இருந்தும் நாம் மேலெழுந்தவாரியாக நோக்கின் பல கசப்பான உண்மைகளை ஜீரணித்தேயாக வேண்டியுள்ளன.

குழந்தைகளின் பராமரிப்புக் குறைவு, கணவன் மனைவி உறவில் ஏற்படும் உடைவுகள், வேலைவாய்ப்பு முகவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடல்களினால் ஏற்படும் ஏமாற்றமும் கடன் பழுவும், பணிப்பெண்களாகச் செல்வோரின் பரிதாப நிலை, ஆசிரியர்களும் மாணவர்களும் தொழில் தேடிச்செல்வதனால் பாடசாலைகளின் தரக்குறைவும் நிர்வாகச் சீர்கேடுகளும் - இவ்வாறு பல்வேற பாதகமான விளைவுகளை இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்துக்கு மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது. இவைகளை நோக்கும் போது அவ்வேலைவாய்ப்பு ஒரு வரப்பிரசாதமா அல்லது சாபக்கேடா என்ற வினா எழுகின்றது.

இவ்வாறான பின்னணிகளிலிருந்தும் 1970களில் பின்னர் இலங்கையில் இஸ்லாமிய விளிப்புணர்வு ஏற்பட்டதையும் சகலரும் ஏற்றுக்கொள்வர். பழைய பள்ளிவாசல்களைப் புனர்நிர்மாணஞ் செய்வதும் புதிய பள்ளிவசல்களைக் கட்டுவதும், தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு போன்ற மார்க்கக் கடமைகளில் அதிகளவு பற்றும், த.்.வா இயக்கங்களின் பெருக்கமும், மகாநாடுகளும், கருத்தரங்குகளும், புலமைப் பரிசில்கள் பெற்று மத்திய கிழக்கு நாடுகள் சென்று அங்குள்ள அரபுக் கலாசாலைகளில் மார்க்கக் கல்வி கற்று நாடு திரும்பிய உலமாக்கள் "தவ்ஹீத்" அடிப்படையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவருவதும், இலங்கையிலுள்ள 'தவ்ஹீத்' சார்ந்த அமைப்புக்கள் அடிக்கடி மகாநாடுகளும் கருத்தரங்குகளும் நடத்துதல், நூல் வெளியீடுகள் செய்தல், நவீன சிந்தனையாளர்களின் எழுத்துப் பணியின் அதிகரிப்பு, குர்ஆன்-ஹதீஸ் அடிப்படையில் இஸ்லாத்தினை விளங்க வேண்டும் என இன்றைய முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சிந்தனைப் பிடிப்பு யாவுமே இவ்வுணர்வின் வெளிப்படைத் தோற்றங்களே. சுருக்கமாகக் கூறின் இன்றைய இலங்கை மக்கள் மத்தியில் குர்ஆன்-ஹதீஸ் அடிப்படையிலான தவ்ஹீத் சிந்தனை வலுப்பெற்று வருகின்றது. என்றே கூறலாம். இக்காத்திரமான சூழலைப் பயன்படுத்தி இஸ்லாமி இயக்கங்களும் புத்தி ஜீவிகளும் தங்களுக்கிடையிலான உள்முரண்பாடுகளை மறந்து 'த.்.வா' எனும் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டால் இஸ்லாத்துக்கு எதிராக உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வரும் தடைகளைத் தகர்த்தெறிந்து எதிர்காலத்தில் காத்திரமான "அல்குர்ஆன்-சுன்னா" அடிப்படையிலானதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். இலங்கை வாழ் முஸ்லிம் அரசியல்வாதிகளும் தாம் சார்ந்த கட்சிகள், அதன் கொள்கைகள் யாவற்றுக்கும் மேலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியக் கோட்பாடே மேலானது, அதுவே நிரந்தர மோட்ச வாழ்வுக்கு வழிவகுப்பது எனும் எதார்த்தத்தினைப் புரிந்து இஸ்லாம் அதன் தூயவடிவில் எழுச்சி பெறுவதற்கான வடிகால்களையும் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் உலகளாவிய ரீதியில் இஸ்லாத்துக்கு எதிராக எழுந்துள்ள பகைமையுணர்வுகளையும் ஓரளவாவது தணிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*****

REFERENCE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்லீ:. ஜமாஅத்

இந்தியாவின் தலைநகரான டில்லிக்கு அருகில் ஒரு புகையிரத நிலையம். "ஹஸரத் நிஜாமுதீன் ரயில்வே" என அது அழைக்கப்பட்டது. அதற்குப் பக்கத்திலேயே நிஜாமுதீன் அவுலியா என்பவரின் அடக்கத்தலம் (ஸியாரம்) இருந்தது. அதனாலேயே அ:.து அப்பெயரைப் பெற்றது. ஸியாரத்தில் அற்புதங்கள் நடைபெறுவதாகக் கதைகட்டப்பட்டிருந்ததால் முஸ்லிம் மக்கள் ஒவ்வொரு கிழமையும் வியாழன் பின்னேரம் வெள்ளியிரவு, புகையிரதம் மூலமும், கால்நடையாகவும் அங்கு வந்து குவிந்தவண்ணமிருந்தனர். அவர்களுக்கு இறைஞானம் பற்றியோ தொழுகைபற்றியோ எவ்வித தெளிவுமில்லை. அவைகளை அறியவேண்டும் என்ற அவாவுமிருக்கவில்லை.

புகையிரத நிலையத்திலிருந்து ஸியாரஞ் செல்லும் வழியில் "வங்காளவாலா" மஸ்ஜித் இருந்தது. அங்கிருந்துதான் மவுலானா இல்யாஸ்(ரஹ்) தம்முடைய பிரச்சாரப் பணியை ஆரம்பித்தார். ஸியாரம் நோக்கிச் செல்லும் மக்களை அன்பாகவும் ஆதரவாகவும் அழைத்து, தொழுகையின் மான்மியம் பற்றியும், தஹஜ்ஜுத் தொழுகை, ஜுமிராத், இ:.திகாப் ஆகியவைகளின் மகத்துவம் பற்றியும் விளக்கப்படுத்தி, "அல்லாஹ்விடம் மட்டும் உங்களுடைய தேவைகளைக் கேளுங்கள், அவன்மட்டுமே பிரார்த்தனை செய்யத் தகுதியுடையவன், கப்ருகளில் (மண்ணறை) அடக்கப்பட்டுள்ளவர்கள் உங்களைப் போன்ற மனிதர்களே! அவர்களிடம் கேட்டு நீங்கள் எவற்றையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஸியாரத் செய்வதைத் தவிர்த்து, தொழுகைக்காகப் பள்ளிவாசல் வாருங்கள்" என அன்பாகவும் ஆதரவாகவும் அழைப்பு விடுத்தார்கள். மவுலானாவின் உருக்கமான வேண்டுகோளினால் கவரப்பட்ட மக்களின் ஒரு கூட்டத்தினர் பள்ளிவாசலை நோக்கி நகர்ந்தனர். அவர்களை மவுலானா இல்யாஸ்(ரஹ்) வழிப்படுத்தி, தொழுவதற்கும் பள்ளியில் தரிப்பதற்கும்(இ:.திகாப்) பயிற்றுவித்தார். இதுவே தப்லீ:. ஜமாஅத்தின் தொடக்க வரலாறாகும்.

1930களில் "தரிக்கே ஈமான்" என்ற பெயருடன் மவுலானாவினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரச்சார இயக்கம், 1939இல் "தப்லி:. ஜமாஅத்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயருடன் டில்லி மேவாத் பகுதியில் இயங்கத் தொடங்கியது. டில்லியிலிருந்து சுமார் அறுபது மைல்களுக்கப்பால் மேவாத் என்ற பிரதேசம் இருந்தது. அங்கு மாட்டு வண்டி மூலமே போக்குவரத்து நடைபெற்றது. ஒருநாளைக்கு ஒருதடவை மட்டுமே பஸ்(Bus) போக்குவரத்து இருந்தது. அங்குவாழ்ந்த மக்கள் சகலரும் கூலிவேலை செய்யும் ஏழைவிவசாயிகளாகும். அவர்கள் டில்லிச் சூழலுக்குச் சென்று கூலிவேலை செய்தே பிழைப்பு நடாத்திவந்தனர். அவர்கள் நிலை அவ்வாறிருக்க டில்லியைச் சூழவுள்ள தேவபந்த், ஸஹரான்பூரி, லக்னோ ஆகிய பகுதிகளில் இஸ்லாம் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டது. ஆனால் அது மேவாத் பிரதேசம் வந்து சேரவில்லை. எனவேதான் மவுலானா இல்யாஸ்(ரஹ்) அவர்கள் மேவாத் பகுதியில் முதன்முதலாக தமது பிரச்சாரப்பணியை ஆரம்பித்தார். இக்காலகட்டம் உலகளாவியரீதியில் இஸ்லாத்துக்கு ஒரு சோதனைக்காலமாகக் காணப்பட்டது. 1917இல் விளாடிமிர் லெனின் தலைமையில் ரஷ்யாவில் ஏற்பட்ட மாக்ஸியப் புரட்சி இஸ்லாமியத் தத்துவங்களை ஒழிப்பதில் பகிரங்கமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தது. முஸ்லிம் நாடாகிய துருக்கியில் முஸ்தபா கமாலின் தலைமையில் இஸ்லாம் திரிபடைந்து துருக்கியமயமாக்கப்பட்டிருந்தது. பொதுவாக 1924களில் இஸ்லாம் உலகளாவியரீதியில் நலிவடைந்து விட்டது என்றே கூறலாம். இவ்வாறான பின்னணியிலேயே மவுலானா இல்யாஸ்(ரஹ்), தப்லீ:. வேலையை ஆரம்பித்தார். மவுலானாவின் அயராத முயற்சியினால் தப்லீ:. இயக்கம் வளர்ச்சியடைவதைக் கண்ட கிறிஸ்தவ உலகம் கிலிபிடித்தாடியது. இஸ்லாமிய உலகுக்கெதிராகச் சிலுவை யுத்தத்தினை ஆரம்பித்து தொடர்த்தேர்ச்சியாக நாசவேலைகளில் ஈடுபட்டுவந்த கிறிஸ்தவ சன்னியாசிகள் மனம்புழுங்கினர். இருந்த போதிலும் இஸ்லாமியப் பிரச்சாரம் எண்திக்கும் பரவத் தொடங்கியது.

தப்லீ:. இயக்கத்தில் ஈடுபடுவோர் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளை மவுலானா இல்யாஸ்(ரஹ்), ஆறு அம்சங்களுக்குள் அடக்கியிருந்தார். அவைகளை மவுலானா ஆஷிகே இலாஹி சாஹிப் என்பவர் உருது மொழியில் எழுத, திண்டுக்கல் ஷரிபுத்தீன் என்பவர் "ஆறு நம்பர்கள்" என்ற தலைப்பில் தமிழ்மொழியாக்கஞ் செய்துள்ளார். இ:.து தப்லீ:. ஜமாஅத்தினரின் வழிகாட்டி நூலாகும். இந்நூலிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுவிடயங்களையும் அடிக்கடி மனனஞ்செய்வது ஒவ்வொரு தப்லீ்.
தொண்டரினதும்(கார்க்கூன்) கடமையாகும். அவைகளாவன.

1. கலிமா.
2. தொழுகை.
3. கல்வியும் தியானமும்.
4. முஸ்லிம்களுக்கு மரியாதை செய்வது.
5. எண்ணப்பரிசுத்தம்(இஹ்லாஸ்).
6. சன்மார்க்க விடயத்தில் காலத்தை ஒதுக்குவது. அதாவது சிறிது காலம் தமது மனைவி மக்கள், உற்றார் உறவினர், சொத்துக்கள் சகலதையும் துறந்து கூட்டங்கூட்டமாக வெளியூர் சென்று மேற்கூறிய திட்டங்களைத் தானும் அனுஷ்டித்துப் பிறரையும் அனுஷ்டிக்கச் செய்தல் என்பனவாகும்.

இவர்கள்"கஸ்த்து" எனும் ஊர்ச் சுற்றுலாச் செல்வர். அதாவது, தொழுகைக்கு முன்னர் ஊருக்குட் சென்று, தாம் செய்யும் பிரச்சாரங்களில் கலந்து கொள்ளுமாறும் தம்முடன் வருமாறும் மக்களை அழைப்பதை இப்பதம் குறிக்கிறது. இவ்வாறு மக்களை அழைக்கும் போது மக்களுடன் தொடர்பு கொண்டு பேசுவர் "முதகல்லிம்" என அழைக்கப்படுவார். கஸ்த்து இருவகைப்படும். அவைகளாவன. குஸு"ஸி(விசேடமானது), உமீமி (பொதுவானது) என்பனவாகும். ஒவ்வொரு கஸ்த்தின் பின்னரும் பள்ளிவாசலில் நடைபெறும் பிரசங்கத்தின் (பயான்) இறுதியில் தம்முடன் வெளியூர் செல்வதற்கு ஜமாஅத்தினரைத் திரட்டாமலிருக்க முடியாது. ஒவ்வொரு பிரதேசப்பிரிவிலும் தப்லீ். ஜமாஅத்தினருக்கென ஒரு மத்திய நிலையம் (மர்க்கஸ்) காணப்படும். அங்கு வியாழன் பின்னேரம் வெள்ளியிரவு ஒன்றுகூடி வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவர். இந்த இரவு "ஜுமைரா" எனப்படும். "ஜுமைரா" என்றால் உருதுவில் வியாழக்கிழமையைக் குறிக்கும்.

புதிதாக தப்லீ். இயக்கத்தில் சேர்பவர்கள் ஆயுளில் ஒரு முறை 4மாதம் (3சில்லா) ஊரைவிட்டு வெளியேறி ஜமாஅத் வேலைக்குச் செல்லல் வேண்டும். பழையவர்கள் பிரதிவருடமும் ஒரு சில்லாச் செல்ல வேண்டும். மிகுதி எட்டு மாதங்களை பகலின் பாதியை தொழிலிலும் பகலின் மறுபாதியை பள்ளியிலும் வழக்கமாகக் கழிக்கின்றனர். இவ்வாறு இயந்திரமாக இவர்கள் இயங்குவதனால்



155 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள், சஞ்சிகைகள் வாசிக்கவோ உலக விவகாரங்கள் பற்றி அறியவோ வாய்ப்பில்லை. எனவேதான் தினமும் தொழுகையின் பின்னர் "த:்.லீம்" வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டனர் போலும்.

ஏலவே புத்தக வியாபாரத்தில் பெயர்போன மவுலானா ஸக்கரியாவிடம் (மவுலானா இல்யாஸின் சகோதரரின் புதல்வர்) நூல்கள் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இஸ்லாத்தின் சிறப்புகளை (பளாயில்) மட்டும் கொண்டதாக தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்ஜு எனும் தலைப்புக்களில் மாத்திரம் ஒன்றுதிரட்டி நூலைத் தொகுக்கும் படி மவுலானா இல்யாஸ்(ரஹ்), ஸக்கரிய்யா மவுலானாவுக்குக் கூறினார். அக்காலகட்டத்தில் ஸக்கரியா மவுலானா(ரஹ்) ஸஹ்ரான் பூரிலுள்ள மதிரசாக்களில் ஹதீஸ், தப்ஸீர்க்கலை ஆகிய பற்றிப் போதித்து வந்ததனால் அவர் ஷைகுல் ஹதீஸ், ஷைகுல் தப்ஸீர் என மக்களால் அழைக்கப்பட்டார். துரதிஸ்டவசமாக அக்காலத்தில் "சூபித்துவம்" பிரபல்யமடைந்திருந்த படியால் மவுலானா ஸக்கரியாவும் சூபித்துவத்தினால் பாதிப்படைந்திருந்தார். இதனால் அவர் த:்.லீம் கிதாபுகளைத் தொகுக்கும் போது குர்ஆன், ஹதீஸ் ஆகியவைகளுக்கு சூபித்துவக் கண்ணோட்டத்தில் விளக்கங்கொடுத்தார். இதனாலேயே த:்.லீம் நூல்களில் கற்பனைச் சம்பவங்கள், இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் என்பன இடம்பிடித்துள்ளன போலும்.

தப்லீ:். ஜமாஅத்தினரின் தலைமையகம் டில்லி நகரிலேயே உண்டு. அதன் தலைவர் "ஹஸரத் ஜீ" என அழைக்கப்படுகிறார். மவுலானா இல்யாஸ்(ரஹ்) அவர்களை தாபகத்தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட தப்லீ:். ஜமாஅத்தின் அடுத்த தலைவராக இல்யாஸ் மவுலானாவின் மகன் யூசூப் மவுலானாவும் அதன் பின்னர் யூசூப் மவுலானாவின் மகன் ஹாரூன் மவுலானாவும் நியமிக்கப்பட்டனர். ஹாரூன் மவுலானா அமீரானதையிட்டு ஸக்கரியா மவுலானா அதிருப்தி தெரிவித்ததனால் ஏககாலத்தில் இருவரும் அமீர்களாக(தலைவர்கள்) நியமிக்கப்பட்டனர். இங்கு முஸ்லிம்களின் தலைமைத்துவம் வாரிசு அடிப்படையில் நியமிக்கப்படுவதையும் "ஒருவர் அமீர்" என்ற ஜனநாயக மரபு தகர்க்கப்படுவதையும் நாம் அவதானிக்கலாம். இம்மரபு டில்லி மர்க்கஸில் தொடர்ந்து சென்றது.

1950ல் டில்லியிலிருந்து தென்னிந்தியாவுக்கு விஜயஞ்செய்த மவுலானா அப்துல் மலீக் எம்.ஏ. அவர்களினாலேயே தமிழ்நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்லீ. வேலை ஆரம்பிக்கப்பட்டது. அவர் அங்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது, மக்கள் மத்தியில் தப்லீ. பற்றிய வாதப்பிரதிவாதங்கள் ஏற்படத் தொடங்கின. அவர் எதனையும் அசட்டை செய்யாமல் பிரச்சாரத்திலீடுபட்டார். எவரையும் கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை. மவுலானா இல்யாஸினால் வகுக்கப்பட்ட ஆறுதிட்டங்களின் அடிப்படையிலேயே சொற்பொழிவாற்றினார். வினாஎழுப்பியோரை விழித்து "இவ்வேலையில் சிறிது காலம் ஈடுபட்டு வாருங்கள், விடை கிடைத்து விடும்" எனக்கூறி மடக்கினார்.

முதன் முதலாக தமிழ்நாடு-திண்டுக்கல்லில் ஒரு மகாநாடு(இஜ்திமா) நடைபெற்றது. அதில் வடஇந்தியாவிலிருந்தும் பலர் கலந்து கொண்டனர். அங்கு தப்லீ.கின் கோட்பாடுகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டன. மகாநாட்டின் இறுதியில் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் வடஇந்தியாவுக்கும் ஜமாஅத்துக்கள் சென்றன. மீண்டும் அனைத்திந்திய இஜ்திமாவொன்று 1958 மே 4,5,6 திகதிகளில் திண்டுக்கல்லில் நடைபெற்றது. அதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆசியா நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். மவுலானா இல்யாஸின் புதல்வர் முகம்மது யூசுபும் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இந்தியாவைப் பொறுத்தவரையில் கற்றோர் மிகக்குறைவாகையால் பாமரமுஸ்லிம்கள் வாழும் பட்டி தொட்டியெல்லாம் தப்லீ. ஜமாஅத்தினர் தங்களுடைய முத்திரையைப் பதித்துள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் 1952இல் சிங்கப்பூரிலிருந்து இந்தியா செல்லும் வழியில் இங்குவந்த மவுலானா அப்துல் மலிக்கினாலேயே தப்லீ. பணி அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. இவர் கொம்பனித்தெரு வேகந்தைப் பள்ளிவாசலில் சில தினங்கள் தங்கியிருந்து சொற்பொழிவாற்றினார். ஆனால் 1953ல் இந்தியாவிலிருந்து வந்த மவுலானா தாவூத்மேவாத்தி என்பவரே தப்லீ. கை சிறந்த முறையில் இலங்கையில் அறிமுகஞ் செய்தவராகக் கருதப்படுகின்றார். இவரின் முயற்சியினால் 1953 நவம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை வேகந்தைப் பள்ளிவாசலில் மகாநாடொன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இலங்கையின் முதலாவது அமீராக கே. முகம்மது அலி ஹாஜியார் தெரிவு செய்யப்பட்டார். அவரது காலத்தில் கண்டியிலும் பின்னர் நாட்டின் பலபாகங்களிலும் இஜ்திமாக்கள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது அமீராக முகம்மது அலி ஹாஜியார் நியமிக்கப்பட்ட போதிலும் 1956ம் ஆண்டு முதலாக நீண்டகாலம் அமீராகவிருந்த பெரிய அமீர்ஷா எம்.ரீ.எம். ஹனிபா ஹாஜியாரையே தப்லீ.:.கின் முன்னோடியாகக் கொள்ளலாம். அக்காலகட்டத்தில் இலங்கையின் மஸ்ஜித்கள் கல்லறைக்காவலர்களினால் சூழ்ந்து காணப்பட்டன. ஸியாரங்களை வைத்து வாழ்க்கை நடாத்திய அவர்கள் தப்லீ.:.கின் வளர்ச்சிகண்டு வாழவொண்ணாது கச்சைகட்டிக்கொண்டு எதிர்க்கத்தொடங்கினர். அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்து இஸ்லாமியச் சொற்பொழிவுகளில் ஈடுபட்டுவந்த மவுலானா கலீலுர்ரஹ்மான் அவர்களைக்கூட தப்லீ.:. ஜமாஅத்துக்குப் பூரண ஆதரவு கொடுத்தமைக்காக மேமன் பள்ளிவாசல் நிர்வாகிகள் நாடுகடத்தவும் தீர்மானித்தனர்.

ஹனீபா ஹாஜியார் அக்காலகட்டத்தில் கொழும்புத் துறைமுகத்தில் ஒப்பந்தக்காரராக (Contractor) வேலை பார்க்கும் பெருந்தனவந்தராகக் காணப்பட்டார். தமது தொழிலைப் பொறுத்தவரையில் தம்முடன் பல அடியாட்களையும் வைத்திருந்தார். ஆனால் அவர் எவருமே எதிர்பாராத வண்ணம் தமது பழைய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, தப்லீ.:. இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பெரும்பாடுபடத் தொடங்கினார். அச்சமயத்தில் ஜமாஅத்தின் தலைமைப்பீடம் கொள்ளுப்பிட்டிப் பள்ளிவாசலுக்கு மாற்றப்பட அங்கும் ஹனீபா ஹாஜியாரே அமீராக நியமிக்கப்பட்டார். அதுகண்டு கொழும்பிலுள்ள திருச்சபையினரும் இஸ்லாத்துக்கு எதிராகச் சதிசெய்வதிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்ட ஹனீபா ஹாஜியார் இரவு பகலென்றும்பாராமல் இயக்க வளர்ச்சிக்காக உழைக்கத் தொடங்கினார்.

கொள்ளுப்பிட்டிப் பள்ளிவாசல் தலைமைப்பீடமாகமாறிய சந்தர்ப்பத்தில் அப்பள்ளியின் இணைப்பாக இருந்து வந்த ஸியாரத்தில் வியாழன் பின்னேரம் தொடக்கம் இரவு பத்துமணிவரை மக்கள் திரள்திரளாகவந்து வழிபடும் வழக்கமிருந்தது. தொழுகைக்கு வருவோர் தொகையைவிட ஸியாரத் செய்வோரின்தொகை மிகைத்துக் காணப்பட்டது. ஆனால் ஹனீபாஹாஜியாரின் முயற்சியினால் தொழுவோர் தொகை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. தரீக்காக்கள், ஸாவியாக்கள் வீறாப்பு ஹனீபாஹாஜியாரிடம் பலிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வரலாற்றினைப் பொறுத்தவரையில் நீண்டகாலம் அமீர்பதவியை வகித்த பெருமை ஹனீபா ஹாஜியாரையே சாரும். அவர் மரணித்ததும் தலைமைப்பீடம் சம்பந்தமான சர்ச்சைகள் ஏற்படத் தொடங்கின. எவ்வளவோ முயற்சி செய்தும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஜமாஅத்தின் பணிகளை நகர்த்திச் செல்ல முடியவில்லை. அதன் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்களைக் கொண்ட இயக்கமாக தப்லீஃ. இயங்கிவருகின்றது. ஹனீபா ஹாஜியாரின் மறைவின் பின்னர் போட்டித் தவிர்ப்புச் செய்யும் நோக்கத்துடன் ஐவர் ஒரே நேரத்தில் அமீர்களாக நியமிக்கப்பட்டனர். அதில் இருவர் மறைந்து விட்டதனால் இன்று மூவர் அமீர்களாக இருந்துவருகின்றனர். அதில் இருவர் பெரும் தனவந்தர்களாகவும். இன்னமொரு துர்ப்பாக்கியநிலை என்னவெனில் இவர்களுள் ஒருவர்கூட உலமாவாக(மார்க்க அறிஞர்) இல்லை என்பதாகும். இன்று ஜமாஅத்தின் தலைமையகம் கொழும்பு கிராண்ட்பாஸ் பள்ளிவாசலில் செயற்பட்டு வருகின்றது.

1996இல் புத்தளத்தில் ஆரவாரமற்ற முறையில் நடைபெற்ற அகில இலங்கை இஜ்திமா, தப்லீஃ. ஜமாஅத்தின் வளர்ச்சியின் ஒருமைல்கல்லாக அமைந்திருந்தது. குறிப்பாக இலங்கைவாழ் பாமரமுஸ்லிம்களை தொழுகையின்பால் ஈர்க்கும் பணியை இவ்வியக்கம் செய்து வருகின்றது என்பதில் கருத்து வேறுபாடில்லை. வெள்ளிக்கிழமைகளில் லெப்பைமார்களின் உளறல்களைக் கேட்டுக்கொண்டு அரைத்தூக்கத்தில் ஜும்ஆத்தொழுதுவிட்டுக் கலையும் இடங்களாகக் காணப்பட்ட பள்ளிவாசல்களை ஏறக்குறைய அரைநூற்றாண்டுக்குள் தொழுகைக்காக மக்கள் அதிகமதிகம் கூடும் இடங்களாக மாற்றியமைத்ததில் தப்லீஃ. ஜமாஅத்துக்குப் பெரும்பங்குண்டு.

உலகின்கண் எந்தவொரு சீர்திருத்த அமைப்பை எடுத்து நோக்கினாலும் காலப்போக்கில் அவற்றின்போக்கு மாறுபட்டுள்ளதையும், முழுமையாக உருமாறியுள்ளதையும் நாம் வரலாற்றில் நிறையக் காணலாம். அல்குர்ஆனுக்கு முன்னர் அருளப்பட்ட வேதங்கள் யாவும் உலகை நல்வழிப்படுத்திச் சுவர்க்கத்துக்கு வழிகாட்டும் நோக்கத்துடனேயே அல்லாஹ்வினால் அருளப்பட்டன. ஆனால் காலப்போக்கில் அவைகளே மக்களை நரகத்துக்கு அழைத்துச் செல்லும் கருவிகளாக உருமாறிவிட்டன. இதற்குச் சான்றாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிஈஸா(அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இஞ்சில் வேதத்தினைக் கூறலாம். இன்று உலகில் காணப்படும் மக்கட்தொகையில் பெரும்பாலானவர்கள் பின்பற்றுவது கிறிஸ்தவமதமாகும். அவர்கள் தங்கள் குரவராக ஈஸா(அலை) (இயேசு) அவர்களைக் கொள்கின்றனர். விசித்திரம் என்னவென்றால் நாளை மறுமைநாளில் ஒவ்வொரு தீர்க்கதரிசியின் பின்னாலும் அவர்களின் கூட்டத்தினர் (Followers) செல்வர். ஆனால் ஈசா(அலை) பின்னால் குறிப்பிட்ட சிலரே செல்வர். காரணம், உலகில் வாழும்போதே மக்கள் அன்னாருடைய போதனையை -ஓரிறைக் கொள்கையை (தவ்ஹீத்) திரிபுபடுத்தி வழிபட்டமையேயாகும். இந்த அடிப்படையிலேயே இன்றுகூட இஸ்லாத்தின்பால் காதல்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்களெல்லாம் தத்தம் நோக்கங்களிலிருந்து விலகி மக்களை வேறுவழியில் அழைத்துச் செல்வதை நாம் காணமுடிகின்றது. எனவே, அதிகமான மக்கட்தொகையினரால் ஈர்க்கப்பட்டுள்ளது என்பதற்காக ஒரு இயக்கம் முற்றுமுழுவதும் நேர் வழியில் இருப்பதாக, இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிட முடியாது. அவ்வியக்கத்தின் வரலாற்றுப் பின்னணி கொள்கை, நோக்கம், அது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் முதலியவைகளைக் காய்தல், உவத்தலின்றி ஆய்வு செய்யும்போதே யதார்த்தத்தினை உணரமுடியும்.

தப்லீ∴ இயக்கமானது முஸ்லீம்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை உண்மை முஸ்லிம்களாக வாழச் செய்யும் உயரிய நோக்கினைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். பெயரளவில் முஸ்லிம்களாக இந்துகொண்டு அல்லாஹ்வை மறந்து அனாச்சாரத்தில் திளைத்துக் காணப்பட்ட மக்களைக்கண்டு பச்சாதாபப்பட்டு மவுலானா இல்யாஸ்(ரஹ்) அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கத்தின் தாக்கத்தினால் புத்துயிர் பெற்றவர்கள் சமாதிவழிபாட்டை விட்டும் நீங்கி அல்லாஹ்வின் சந்நிதியில் சிரந்தாழ்த்தினார்கள். இதனால் பள்ளிவாசல்கள் பக்தர்களினால் நிரம்பிவழிந்தன. நபி(ஸல்) அவர்கள் மீதுள்ள மதிப்பும் மரியாதையும் மேலும் அதிகரித்தன. இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட மக்கள் தங்கள் பொருளையும் உழைப்பையும் தியாகஞ் செய்கின்ற நிலை ஏற்பட்டது. உலமாக்களினால் மட்டுமே இஸ்லாத்தினைச் சொல்லமுடியும் என்ற நிலையையும் மாற்றியமைத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளெல்லாம் தப்லீ∴. ஜமாஅத்தினால் முஸ்லிம் சமூகத்துக்குக் கிடைத்த நற்பயன்கள் எனக் கொண்டாலும், மவுலானா இல்யாஸ்(ரஹ்), அவர் புதல்வர் மவுலானா முகம்மது யூசுப்(ரஹ்) முதலானோரின் மறைவுக்குக் பின்னர் இந்த ஜமாஅத் தம் உயர்நோக்கிலிருந்து படிப்படியாக விலகிச் சென்றுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமை நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தலாகும். இந்த அடிப்படையில் தப்லீ∴. இயக்கத்தின் தாபகர் மவுலானா இல்யாஸ்(ரஹ்) தம் ஜமாஅத்துக்கு ஆதாரமாக,

"உங்களில் ஒரு கூட்டம் நன்மையின் பால் அழைக்கவும், நல்லவை கொண்டு ஏவவும், தீமையை விட்டுத் தவிர்க்கவும் இருத்தல் வேண்டும். அவர்களே வெற்றியடைந்தவர்கள்" (3:104)

"(விசுவாசங் கொண்டோரே) மனிதர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தவர்களிலெல்லாம்) மிக மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். (ஏனெனில்) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகின்றீர்கள், தீமையை விட்டும்(அவர்களை) விலக்குகிறீர்கள்" (3:110) ஆகிய அல்குர்ஆன் வசனங்களையும்,

"நன்மையைப் பரப்பியும் தீமையைத் தடுத்துக் கொண்டும் இருங்கள். அவ்வாறு செய்யாவிட்டால் அல்லாஹ் உங்கள் மீது வேதனையை அனுப்பிவிடுவான். அச்சமயம் நீங்கள் கேட்கும் (துஆப்)பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது"

போன்ற ஹதீதுகளையும் சுட்டிக்காட்டினார். அடிப்படையில் மவுலானா இல்யாஸ்(ரஹ்), அன்று பள்ளிவாசலை நிரப்பிய மக்களுக்கு தொழுகையை மட்டுமல்ல இணைவைத்தல்(ஷிர்க்) நூதன அனுஸ்டானங்கள்(பித்அத்), ஏனைய வணக்க வழிபாடுகள் பற்றியெல்லாம் அல்குர்ஆன், சுன்னா ஆதாரங்களுடன் தெளிவுபடுத்திப் புடம்போட்ட முஸ்லிம்களையும் பிரச்சாரகர்களை (தாயி)யும் உருவாக்கினார். ஆனால் இன்று நடப்பதென்ன! தொழுதால் மட்டும் போதும் என்றளவுக்கு ஜமாஅத்தினரின் பணி சுருங்கிவிட்டது. நன்மை சிலவற்றை மட்டும் ஏவி, அவைகளை அனுஷ்டிக்கும் முறையையோ, அவைகள் சம்பந்தமான சட்டதிட்டங்களையோ மக்களுக்குச் சொல்லிக் கொடுக்காமல், தெளிவான இணைவைத்தலை மக்களுக்கு இனங்காட்டிக் கொடுக்காமல், நூதன அனுஷ்டானங்களைத் தடுக்காமல், பாவச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களைத் தடுத்துப் பிரச்சாரஞ் செய்யாமல் நபிமார்களினதும் தோழர்களினதும் வழியில் நாங்களும் இருக்கின்றோம் நீங்களும் வாருங்கள் என மக்களை அழைப்பது எவ்வளவு மடைமையானது.

"யார் இவ்விடயத்தில் (மார்க்கத்தில்) அதில் இல்லாத ஒன்றைப் புதிதாக உண்டாக்குகின்றார்களோ! அது (அவர்களிடமிருந்து) மறுக்கப்படும்" (புகாரி முஸ்லிம்) எனும் பொன் மொழிக்கேற்ப மேற்கூறிய குற்றச்சாட்டுக்களை அறிவு ஜீவிகள் இன்றைய தப்லீஃ. ஜமாஅத்தினர் மீது சுமத்துவதை நாம் காணலாம்.

தொழுகை சுவர்க்கத்தின் திறவுகோலாக இருப்பதனால் அதுமட்டும் வணக்கம் (இபாதத்) என்ற முடிவுக்கு நாம் வந்து விடக்கூடாது. ஸக்காத், நோன்பு, ஹஜ்ஜு மற்றும் நேர்மையான வர்த்தகம், கொடுக்கல் வாங்கல், திருமணம், குடும்பவாழ்க்கை, குழந்தைவளர்ப்பு யாவற்றுக்கும் மேலாக குர்ஆன்-ஹதீஸைப் படித்து விளங்குதல் யாவும் இபாதத்துக்களே! வளர்ந்து வரும் நவீன உலகுக்கு முகங்கொடுக்க வேண்டியது இன்றைய ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். நவீனத்துவம் என்ற போர்வையில் "ஜாஹிலிய்யத்" (அறியாமை) இன்று எல்லாத் துறைகளிலும் புகுந்து விட்டது. எனவே அதனைத் தத்தம் சக்திக்கேற்ப தட்டிக்கேட்க வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்புமாகும். ஏது எப்படிப் போனாலும் பரவாயில்லை. நாம் தொழுகையை மட்டும் கடைப்பிடித்துக் கொண்டு பள்ளிவாசலுடன் தமது வாழ்க்கை வட்டத்தைச் சுருக்கிக் கொள்வோமென ஒவ்வொரு முஸ்லிமும் நினைத்துக் கொண்டு வாழாவிருந்தால் இன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் நிலையென்ன என்பதை நடுநிலை நின்று சிந்தித்தல் வேண்டும்.

தப்லீஃ. ஜமாஅத்தினர் "கலிமாவின் நோக்கம்" பற்றிய விடயத்திலும் ஏனையவர்களிலிருந்து வேறுபடுவதையும் நாம் அவதானிக்கலாம். "பொருளுக்குச் சக்தியில்லை" எல்லாவற்றையும் அல்லாஹ் பார்ப்பான். என்ற கருத்துடையோராக இவர்கள் இருந்துவருகின்றனர். "அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும், அவன் அல்லாதவற்றினை வணங்கக் கூடாது. எனும் கலிமாவின் சரியான நோக்கம் பற்றிப்பேசாமல் மாறாக, எல்லாம் அல்லாஹ் மூலமே நடைபெறும், என்ற நம்பிக்கையூட்டி மட்டுமே மக்கள் மத்தியில் பிரச்சாரஞ் செய்கின்றனர். இந்த அடிப்படையிலேதான் "எல்லாவற்றையும் அல்லாஹ் பார்த்துக்கொள்வான்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறுங்கள் நாலுநாள், நாற்பதுநாள், ஒருவருடம் ஜமாஅத்தில் போவோம்" என்கின்றார்கள். இவர்கள் ஷிர்க், பித்அத் பற்றியெல்லாம் பேசாமல், கண்டிக்காமல் இவ்வாறு வெளியேறுமாறு அழைத்துக் கொண்டு "நாங்கள் நபிமார்களின் வேலையைச் செய்கின்றோம்" எனக் கூறிவதனாலேயே கடும் விமர்சனத்துக்குள்ளாகின்றனர்.

அல்லாஹ்வின் தத்துவம் பற்றி அல்குர்ஆனில் அல்லாஹ்வினாலேயே பல இடங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சான்றாக.

"வானங்களையும், பூமியையும் படைத்து சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தித் தந்தவர் யார்? என்று அவர்களிடம் கேட்டால் அல்லாஹ் என்று அவர்கள் உறுதியாக (பதில்)க் கூறுவார்கள். பிறகு எவ்வாறு அவர்கள்(அல்லாஹ்வை வணங்குவதை விட்டும்) திருப்பப்படுகிறார்கள்" (29:61)

"நபியே! அவர்களை யார் படைத்தது என்று நீர் அவர்களிடம் கேட்டால் அல்லாஹ் என்று திண்ணமாகக் கூறுவார்கள். எனவே, எவ்வாறு (அவனைவிட்டும்) அவர்கள் திருப்பப்படுகிறார்கள்" (44:87) ஆகிய திருவசனங்களைக் கூறலாம்.

இவ்வசனங்கள் அக்காலத்தில் மக்காவில் வாழ்ந்த இணைவைப்போரை(முஷ்ரிக்) விழித்துக் கூறப்பட்டன. இங்கு நோக்கற்பாலது என்னவெனில், சகலதையும் படைத்தது அல்லாஹ் என்பதை இணைவைப்போரும் ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதேயாகும். இருந்தும் அவர்கள் விக்கிரகங்களையே வழிபட்டனர். அவைகள் தங்களுக்காக மன்றாடுபவை எனக் கூறினர். பொதுவாக அக்கால முஸ்ரிக்குகள், யாவும் அல்லாஹ்வைக் கொண்டு நடைபெறுவதாகக் கூறிக்கொண்டு இணைவைத்தனர். எனவே கலிமாவின் நோக்கம் சகலதும் அல்லாஹ்வைக் கொண்டு நடைபெறுகின்றன என்பதல்ல. அப்படி நம்புவதானால் நபி(ஸல்) அவர்கள் இஸ்லாத்தினை எத்திவைப்பதற்காகச் சொல்லொணாத் துன்பங்கள் அனுபவித்திருக்க வேண்டியதில்லை. மக்கா முஸ்ரிக்கீன்கள் அன்னாரை எதிர்க்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது.

"நிச்சயமாக பொருட்களுக்கு எவ்வித சக்தியுமில்லை. யாவும் அல்லாஹ்வின் சக்தியைக்கொண்டே நடைபெறுகின்றன" என நம்புவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாய கடமையாகும். இதை மறுப்பவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபிராவான் என்பது உண்மையே. ஆனால் இதுதான் கலிமாவின் நோக்கமல்ல என்பதை நாம் இவ்விடத்தில் தெளிவாகப் புரிந்து கொள்ளல் வேண்டும். "அல்லாஹ்வை வணங்க வேண்டும், அல்லாத எதையுமே வணங்கக் கூடாது" என்பதை உலகுக்கு எத்திவைப்பதற்காகவே நபி(ஸல்) ஈறாக இலட்சத்துக்கு மேற்பட்ட நபிமார்களும் அனுப்பப்பட்டார்கள். இதனை நாம் அறிந்தும் உணராமல் எல்லாவற்றையும் அல்லாஹ் பார்த்துக் கொள்வான் என்று கூறுவதுடன் நின்றுவிடுவதில் எவ்வித கருத்துமேயில்லை.

அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனிடத்திலும் சில திறமைகள் தேங்கிக் கிடக்கின்றன. அவைகளை வெளிக்கொணர்வதற்குரிய வாய்ப்புக்களும் இன்று நிறையவுள்ளன. முயற்சியிருந்தால் அத்திறமைகளைப் பயன்படுத்துவது சிரமமான காரியமல்ல. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானியாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, மனிதசமுதாயத்திற்குச் சிறந்ததோர் உதாரணமாகும். மானியப் பொருளாதார அமைப்பினைக் கொண்டிருந்த அந்நாட்டின் நிலத்துக்கடியில் இரும்பு, நிலக்கரி, தாதுப்பொருட்கள், நிலநெய் முதலிய கனியங்கள் தாராளமாக இருப்பதைப் பிரித்தானிய மன்னனும் பிரதானிகளும் அறிந்தனர். அத்துடன், குடியேற்றநாடுகளை வைத்திருந்த பிரித்தானியாவுக்கு வளர்ந்துவரும் சனத்தொகைக்கேற்ப புதியவகைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதையெல்லாம் உணர்ந்த மன்னன் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய நவீன கருவிகளைக் கண்டுபிடிப்பவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் பாராட்டுக்களும் வழங்கப்படும் என அறிக்கை விடுத்தான். உடனே அந்நாட்டு மக்கள் புதியவைகளைக் கண்டுபிடிப்பதில் போட்டி போடத்தொடங்கினர். விளைவு அங்கு பெரும் கைத்தொழில் புரட்சியொன்றே உருவாகி உலகெல்லாம் வேகமாகப் பரவத்தொடங்கியது. ஆனால் தப்லீ·. ஜமாஅத்தினரோ மனிதன் என்றவகையில் அவர்களிடம் எவ்வளவோ திறமைகள் நிறைந்திருந்தும் அவைகளை, செயற்பாடுகள் மூலமோ எழுத்து மூலமோ வெளிக்கொணர்வதற்கு முயற்சிப்பதில்லை.

மாறாக த·லீம் கிதாபுகளில் உள்ளவைகள் மட்டும் நமக்குப் போதும், ஏனையோரின் விளக்கங்கள் எமக்குத் தேவையில்லை எனக் கூறிக் கொண்டு நல்லறிஞர்களின் நூல்களைக்கூட வாசிப்பதிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைக் தவிர்த்துக் கொள்கின்றனர். தங்களுக்கென நூலகங்கள் இல்லாவிட்டாலும் அவர்கள் வாழ் கிராமங்களிலுள்ள பொதுநூலகங்களில் பக்கத்திற்கூடத் தலைவைத்தும் தூங்க மாட்டார்கள். இஃது அவர்கள் மத்தியில் காணப்படும் பெரியதோர் குறைபாடாகும். தம்செயற்பாடுகளை ஆறு இலக்கங்களுக்குள் கட்டுப்படுத்திக் கொள்வதனால் இஸ்லாதினை முழுமையாக விளங்கி இபாத்தில் ஈடுபடுகின்றனர் எனவும் கூறமுடியாதுள்ளது.

தப்லீஃ இயக்க இரண்டாவது உலகத் தலைவராகவிருந்த மவுலானா யூசுப்(ரஹ்) அவர்கள், தம் சொற்பொழிவுகளில் "முஸ்லிம்கள் மத்தியிலுள்ள இயக்கங்கள் இஸ்லாத்துக்கு அல்லது முஸ்லிம்களுக்கு ஏதோர்வகையில் சேவை செய்கின்றன. அவர்களது சேவையை நாமும் மதித்து நடக்க வேண்டும். எங்கள் நிகழ்ச்சியொன்றும், அவர்களது நிகழ்ச்சியொன்றும் ஒரேயிடத்தில் நடைபெற்றால் அவர்களுக்காக நாம் விட்டுக்கொடுத்து எங்களது நிகழ்ச்சிகளை மாற்றிக்கொள்ளல் வேண்டும். மற்றவர்களின் நல்ல நிகழ்ச்சிகளில் நாமும் கலந்து கொள்ளல் வேண்டும் எனக் கூறியது நினைவு கூரத்தக்கது. மவுலானா இல்யாஸ்(ரஹ்)கூட, ஜமாஅத்தின் அசல் நோக்கம் நபி(ஸல்) அவர்கள் கொண்டுவந்த சன்மார்க்க விதிமுறைகளைப் பூரணமாகக் கற்றுக்கொடுப்பதேயாகும் என விதந்துரைத்துள்ளார். ஆனால் இன்று நடப்பதென்ன என்பதை ஜமாஅத்தின் முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து பார்த்தல் அவசியமாகும். அத்துடன் மார்க்கக் கல்விகற்ற உலமாக்களையும் தப்லீஃகில் ஈடுபடுத்தும்படி மவுலானா அவர்கள் கூறியுள்ளார்கள். இன்று உலமாக்கள் ஒதுங்கிருப்பது மட்டுமன்றி ஏன் எதிராக விமர்சிப்பதில் ஈடுபட்டுக் வருகின்றார்கள் என்பதையும் நன்கு சிந்தித்தல் வேண்டும்.

தப்லீஃ ஜமாஅத்தினர் தம்முன்னுள்ளவர்களைக் காப்பியடிப்பதில் காட்டும் அக்கறையும் இன்று இவ்வியக்கத்தினை உலமாக்கள், புத்திஜீவிகள் எதிர்ப்பதற்கும் ஒரு காரணமாகும். மஸ்ஜித்களில் பேசுவதற்கு எழும்புபவர்கள் அல்குர்ஆன், சுன்னாவை ஆதாரம் காட்டாமல் தாம் செவியேறல்கள் மூலம் கேட்டவைகளை "அவர் சொன்னார், இவர் சொன்னார்" எனக்கூறுவதும் தவிர்க்கப்படவேண்டியவைகளாகும். மேலும் அவர்களின் தஃலீம் நூல்களில் போலி ஹதீதுகளும், பகுத்தறிவுக்கொவ்வாத கதைகளும்

15539


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவியிருப்பதையும் அவதானிக்கலாம். சான்றாகச் சிலவற்றைத் தருவது பொருத்தமாகும்.

"முகம்பதிப்னு ஸிமாஆ(ரஹ்) என்ற பெரியார் சிறந்த ஆலிமாக இருந்தார். இவர் இமாம் அபூயூசுப்(ரஹ்) இமாம் முகம்மது(ரஹ்) ஆகிய இரு இமாம்களின் மாணவராவார். அன்னார் தம்முடைய 130வயதில் காலமாகும்வரை ஒவ்வொரு நாளும் 200ரக்அத் நபில் தொழுதுகொண்டிருந்தார்களாம்" 40 ஆண்டுகள் வரை தொடர்ந்து முதல் தக்பீர் தவறாமல் நான் தொழுது வருகிறேன் ஒரே நேரத்தைத் தவிர என்றார்களாம். இவ்வாறாக தொழுகையின் சிறப்பு பக்கம் 26ல் வரலாறொன்று நீண்டுகொண்டு செல்கின்றது. இது சாத்தியப்படுமா எனச் சிந்தித்தல் வேண்டும். ஒரு நாளைக்கு 24மணி நேரத்தில் தொழக்கூடாத நேரங்கள், மலசலம் கழிப்பது, 6-8 மணித்தியாலங்கள் தூங்குவது, உண்ணல், பருகுதல், ஐவேளைத் தொழுகையும் அவைகளுக்கான சுன்னத்தான தொழுகைகளைத் தொழல், மனைவி மக்களுடன் மகிழ்ச்சியாக இருத்தல், உழைத்தல்....... முதலியன தவிர்ந்து 200 ரக்கத்துக்கள் நபில் தொழுவது என்பது கற்பனைக்கெட்டாத விடயமே. இதைவிடவும் அதிசயம் என்னவென்றால் ஹஸரத் ஜைனுல் ஆபிதீன் அவர்கள் ஒவ்வொருநாளும் ஆயிரம் ரக்கஅத்துக்கள் நபில் தொழுததாக (பக்கம் 160)வும் இமாம் ஷாபி.'.(ரஹ்) அவர்கள் ரமழான் மாதத் தொழுகையில் அறுபது தடவை குர்ஆனை ஓதிமுடிப்பார்கள் (பக்கம் 132)எனவும் எழுதப்பட்டிருப்பதாகும். இவைகள்போன்று இன்னும் சிலவற்றையும் குறிப்பிடலாம்.

1 40 நாட்கள் இஷாவுக்குச் செய்த வுழுவுடன் ஸுபஹு தொழுத பெரியார், இவர் இரவில் தூங்குவதில்லை. (அமல்களின் சிறப்பு பக்கம் 119)

2 ஒரு சப்பாணிப் பெண் அயல்வீட்டுக்கு வந்த வாலிபரின் பொருட்டால் துஆக் கேட்டாராம், கால் சரியாகிவிட்டதாம். (அமல். சிறப்பு பக்.124)

3 செய்யது வம்சத்தைச் சேர்ந்த ஒரு பெரியார் 15 ஆண்டுகள் உறங்காமல் ஒரேவுழுவில் 12 நாட்கள் எல்லாத் தொழுகையையும் தொழுதாராம் அதில் 10 நாட்கள் எதுவும் சாப்பிடாமல் இருந்தாராம். (அமல். சிறப்பு. பக்.126)

4 "கஷ்ப்" எனும் (ஞானசிருஷ்டி) உள்ளவர் உலகில் வாழும்போதே சுவர்க்கம், நரகத்தைக் காணலாம். (திக்ரின் சிறப்பு பக்.667)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 நபி(ஸல்) அவர்களின் மலம், சிறுநீர், இரத்தம் அனைத்தும் பரிசுத்தமாகும். எனவே அவற்றினைச் சாப்பிடுவது, குடிப்பது என்பதால் எவ்விதமான கேள்விக்கும் இடமில்லை. (அமல். சிறப்பு. சஹாபாக்கள் வரலாறு பக்.1198)

இவ்வாறாக முஸ்லிம்களை ஆசைகாட்டி அமல் செய்யத்தூண்டிய த.்.லீம் தொகுப்பாளர்கள் இறுதித்தூதர் நபி(ஸல்) அவர்களையும் விட்டு வைக்கவில்லை. "இப்ரீஸ்" என்ற நூலில் பக்கம் 77ல் நபி(ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்தை அடையும் ஆற்றல் நபி அவர்களின் சந்ததிகளுக்கு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. நபி(ஸல்) அவர்களோ, வேறு எவருமே அடையமுடியாத உயர் அந்தஸ்த்துக்குச் சொந்தக்காரராக இருந்தவர்கள்.

"(நபியே) நாம் உம்மை அகிலத்தாருக்கெல்லாம் அருளாகவே அனுப்பியுள்ளோம்" என அல்லாஹ்வினால் சிலாகிக்கப்பட்ட நபியை, த.்.லீம் கிதாபுகளின் சொந்தக்காரர்கள் ஏன் இவ்வாறு மட்டமாகக் கருதினார்களோ தெரியாது.

மேற்படி த.்.லீம் கிதாபுகளிலுள்ள குறைபாடுகள் சம்பந்தமாக ஜமாஅத்தார் மத்தியில் நீண்ட நாட்களாக வாதப்பிரதிவாதங்கள் இடம் பெறாமலில்லை. பிழைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் பெரும் தாழ்வுச் சிக்கல்கள் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஏனெனில் மேற்படி த.்.லீம் கிதாபுகளை எழுதியவர்கள் இன்று நம்மத்தியில் உயிருடனில்லை. அவைகள் இன்று உயிருடனுள்ள எவரினாலும் தொகுக்கப்படவுமில்லை. அக்கிதாபுகளிலுள்ள பிழைகள் பல முறை டில்லித் தலைமையகத்துக்கு பல உலமாக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுமுள்ளன. அப்படியிருந்தும் தொடர்ந்தும் பள்ளிவாசல்களில் வாசிக்கப்படுகின்றன. எனவே அல்குர்ஆன், சுன்னாவை விளங்கிய நல்லறிஞர்களைக் கொண்ட குழுக்களை நியமித்து த.்.லீம் கிதாபுகளிலுள்ள ஆதாரமற்றவைகளையும் கருத்து முரண்பாடுள்ளவைகளையும் நீக்கிவிட்டுச் சேர்க்க வேண்டியவைகளைச் சேர்த்தால் ஜமாஅத்தினர் பல குற்றச் சாட்டிலிருந்து நீங்கலாம். ஜின்களையும் மனிதர்களையும் அல்லாஹ் படைத்த நோக்கம் அவனை வணங்குவதற்காகவன்றி வேறில்லை எனும் கூற்றை தப்லீ.் ஜமாஅத்தினர் ஏற்றுக் கொள்பவர்களென்றால் இவ்வாறான தவறுகளிலிருந்து அவசரமாக நீங்குவதற்கு முயற்சித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் கர்நாடக உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் த∴லீம் கிதாபில் உள்ளவை குர்ஆன், ஹதீதுக்கு முரணானவை, அவை பள்ளிவாசல்களில் வாசிக்கக்கூடாது எனத் தீர்ப்பளித்தது. இலங்கை வக்பு சபையில் நடந்த ஒரு வழக்கில் தப்லீ∴ ஜமாஅத்தினர் த∴லீம் வாசித்தல், பயான் செய்தல் ஆகியன உட்பள்ளிகளில் செய்யக்கூடாது. வெளிப்பள்ளியில் நம்பிக்கையாளர் சபையினரின் அனுமதியுடன் தேவையானால் செய்யலாம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மலேசியா அரசாங்கம் தப்லீ∴ ஜமாஅத்தை முழுமையாகவே தடைசெய்துள்ளது. சவூதி அரேபியாவில் நீண்டகாலமாக பிரதம மார்க்கத்தீர்ப்பாளராக (முப்தி)இருந்து வந்த, அண்மையில் காலஞ்சென்ற அஷ்ஷேஹ் அப்துல் அஸீஸ் பின் பாஸ்(ரஹ்), ஒரு மார்க்கத்தீர்ப்பில்(பத்வா)இந்தத் தப்லீ∴ வேலை றசூல்மார் செய்த வேலை என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. (காலம் ஒதுக்கி) வெளிக்கிழம்புவது ஏன் என்று அவர்களுக்கும் புரியாது. இது றசூலுல்லாஹ் செய்த வேலையுமல்ல எனக்கூறியுள்ளார்கள். இவைகளையெல்லாம் நாம் இங்கு சுட்டிக்காட்டுவது தப்லீ∴ ஜமாஅத்தினைப் பூண்டோடு அழித்து விடவேண்டும் என்பதற்காகவல்ல. தங்களிடமுள்ள பிழைகளை உணர்ந்து தூயவழியில் அழைப்புப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதற்காகவே.

பாமரர்கள் ஒருவர்மீது அல்லது ஒரு குழுவினர்மீது பற்றுவைத்து விட்டார்களென்றால் சொல்லும் விடயம் எங்கிருந்து வருகின்றது எனச் சிந்திக்காமல் நம்பிக்கை கொண்டு விடுவார்கள். எனவே அவர்கள் முன்னால் வைக்கப்படும் விடயங்கள் திடகாத்திரமுடையதாக இருத்தல் வேண்டும். தொழுகையையும் அத்துடன் மறுமையையும் பற்றிமட்டும் எந்நேரமும் பேசி மக்களை அலுப்படையச் செய்யாமல் உலகவாழ்வின் அவசியம்பற்றியும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் விளக்குதல் வேண்டும்.

1970களின் பின்னர் இலங்கைவாழ் முஸ்லிம்கள் சமயவிவகாரங்களில் விழிப்புணர்ச்சியடைந்த போதிலும் இவற்றுக்கெல்லாம் பல்லாண்டுகள் முன்னரே தப்லீ∴ இயக்கம் பிரச்சாரப்பணியில் (த∴வா) ஈடுபடத்தொடங்கிவிட்டது என்ற உண்மையை நாம் மறுப்பதற்கில்லை. அவ்வியக்கத்தின் அயராத முயற்சியினாலேதான் இன்று பள்ளிவாசல்களுக்கு மக்கள் திரள்திரளாக வருகின்றனர் என்பதையும் மறுக்கமுடியாது. அவ்வியக்கத்தின் பிரச்சாரமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொது நூலகம் நகர சபை கல்முனை

இல்லாதிருந்தால் புதிதாகக் கட்டப்பட்ட பெரும்பாலான பள்ளிவாசல்கள் தொழுவாரற்று வெறிச்சோடிக் கிடந்திருக்கும். வழிதவறிப்போன எத்தனையோ பாமரமுஸ்லிம்களை நெறிப்படுத்தி இஸ்லாமியப் பண்புள்ளவர்களாக மாற்றியதில் முன்னோடியும் இவ்வியக்கமே என்பதையும் ஏற்றுக்கொள்கின்றோம். அதேநேரம் தொழுகை, நோன்பு, மரணம், மறுமை என்பனபற்றி வலியுறுத்துகின்ற வேளையில் இவ்வுலக வாழ்விலும் முஸ்லிம்கள் ஏறு நடைபோடவேண்டியதை ஏனோ இவ்வியக்கம் வலியுறுத்தத் தவறுகின்றது.

தப்லீ:. இயக்கப் பிரச்சாரகர்களின் பேச்சினைப் பல சந்தர்ப்பங்களில் அவதானித்திருக்கின்றோம். ஒருவரின் ஒரு மணித்தியாலப்பேச்சில் ஒருசில நிமிடங்களே இவ்வுலக வாழ்வுபற்றியும் அதன் அவசியம்பற்றியும் பேசப்படும். இவ்வுலகவாழ்வின் பிரச்சினைகளுடன் போராடி வாழ்வதற்கு ஏன் இவ்வியக்கம் வழிகாட்டத்தவறுகின்றது என்பது புரியவில்லை. மறுமைக்குரிய விளைநிலமாக இம்மையைக் கொள்ளும்படி இஸ்லாம்கூற, இவ்வுலக வாழ்வைவிட்டும் ஓடியொழித்து மரணவாழ்க்கைக்காக தயாரவது மட்டுமே சிறந்த வழியென தப்லீ:. ஜமாஅத்தினர் போதனைகள் இருப்பதாகப் பலர் கூறக் கேட்டிருக்கின்றோம். மரணத்தைப் பற்றியும், மறுமைஉலகைப் பற்றியும் மட்டும் சதாசிந்தித்துக் கொண்டிருந்தால் பல்லினமக்கள் வாழும் இலங்கைபோன்ற ஒரு நாட்டில் முஸ்லிம்கள் உயிரோட்டமுள்ள ஒரு சமூகமாக வாழ்வது எப்படி என்பதையும் நாம் சிந்தித்தல் வேண்டும்.

சமூகத்தின் பிணிகளைக்கண்டு சகிக்கமுடியாமல்தான் நபி(ஸல்) அவர்கள் ஹிராக்குகையில் ஒதுங்கியிருந்து சிந்தனையிலீடுபட்டார்கள். அவர்களுக்கு "வஹி" எனும் வேதவெளிப்பாடு முதன்முதலில் அங்கிருந்துதான் கிடைத்தது. "இக்ரஹ்" என்ற தொடரையுடைய அல்குர்ஆனின் முதல் வசனம் வெளியானதும் குகையை விட்டு வெளியேறிய இறைதூதர் (ஸல்) அவர்கள் மறுபடியும் அங்கு ஒதுங்கவில்லை. மாறாக வாழ்க்கையை ஒரு போராட்டமாகக் கொண்டுதான் அவர்கள் வாழ்ந்து மறைந்தார்கள். இந்த எதார்த்தத்தினை நாம் ஏன் மறந்து விடுகின்றோம். இதையே தப்லீ:.கின் தாபகர் மவுலானா இல்யாஸ் அவர்களும், "தப்லீ:.கின் அசல் நோக்கம் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து கொண்டுவந்த சன்மார்க்க விதிகளைக் (தொழுகையை மட்டுமன்றி) கற்றுக் கொடுப்பதேயாகும். எனக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்லீ·. இயக்கம் தமக்குரிய அத்திவாரத்தினைச் சாதகமாக்கி எத்தனையோ அரிய சாதனைகளைப் புரியமுடியும். அதற்கேற்ப அதன் பிரச்சார முறைமை விசாலமடைய வேண்டும். உதாரணமாக இலங்கையில் இன்று நிலவும் அரசியல் பிரச்சினைகளுக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு எவ்வாறு அமையவேண்டும், இனங்களுக்கிடையே எற்பட்டுள்ள இடைவெளியை இல்லாமற் செய்வதற்கு எவ்வாறு பாடுபடல் வேண்டும், இவைகள் போன்ற பிரச்சினைகள் பற்றியும் தப்லீ·. ஜமாஅத்தினர் கலந்துரையாடினாலென்ன! அவைகள் இறைசேவையாகாதா! இஸ்லாமிய விழிப்புணர்வு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் அரசியல் சீர்திருத்தம், பொருளாதார வளர்ச்சி, சமூகஅபிவிருத்தி என்றவாறு பல கோணங்களில் அதன் தாக்கத்தினை ஏற்படுத்த, முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இலங்கை போன்ற நாடுகளில் ஏன் அது மார்க்கக் கடமைகளை வலியுறுத்துவதுடன் அமைதிகாண்கிறது. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஒரு முஸ்லிமின் முழுவாழ்வுமே வணக்கம் (இபாதத்) அல்லவா? தப்லீ·. ஜமாஅத்தினரை நோக்கி இவ்வாறான வினாக்களைத் தொடுப்பது அவசியம் எனக்கருதுகின்றோம். வாசகர்களும் ஏற்பர் என்பதும் எமது நம்பிக்கையாகும்.

❋❋❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்இயது அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா.

1948ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22ஆந்திகதி இஷாத் தொழுகையைத் தொடர்ந்து கண்டி-குருநாகல் வீதியிலுள்ள பரகஹதெனிய எனும் கிராமத்தில் வரலாற்று நிகழ்ச்சியொன்று இடம் பெற்றது. அக்கிராமத்திலுள்ள பொல்வத்தை என்னுமிடத்தில் அமைந்திருந்த சேஹ் யூசுப் வலியுல்லாஹ் என்பவரின் கல்லறையை (ஸியாரம்) ஒரு குழுவினர் சூழ்ந்து நின்று "அல்லாஹு அக்பர்" தக்பீர் முழக்கத்துடன் தரைமட்டமாக்கிக் கொண்டிருந்தனர். அத்துடன் நின்றுவிடாமல் அக்கிராமத்தின் இன்னொரு புறத்தில் காணப்பட்ட தெமடகொல்ல அவுலியா என்பவரின் ஸியாரத்தையும் அடித்து நொருக்கினர். இதுகண்டு கொதித்தெழுந்த ஸியாரப்பற்றுடையோர் "புனித தலங்கள் தகர்க்கப்படுகின்றன" எனக் கோசமிட்டுக்கொண்டு குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தனர். வழக்கு. சிறிது காலம் நடைபெற்றது. ஈற்றில் சமாதான முயற்சியொன்றினைத் தொடர்ந்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்நிகழ்வே இலங்கையில் தௌஹீத் கோட்பாடு(ஓரிறைக் கொள்கை) காலூன்றுவதற்குக் காலாக அமைந்தது எனக் கூறலாம்.

இறுதித்தூதர் முகம்மது நபி(ஸல்) அவர்களுடன் இஸ்லாம் பூர்த்தியாகிவிட்டது. அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் ஆகிய இரண்டினையும் தவிர்ந்த ஏனைய கண்டுபிடிப்புக்களை முஸ்லிம்கள் கடைப்பிடிக்கக் கூடாது. நபி(ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் இஸ்லாத்தில் எவையெவையெல்லாம் நன்மைதரும் எனப்புகுத்தப்பட்டனவோ அவைகளெல்லாம் நிராகரிக்கப்படவேண்டியவை. அல்லாஹ்வுக்கு இணையாக வணக்கத்தில், உதவி தேடுவதில், நம்பிக்கை கொள்வதில் வேறு எவரையும் பங்காளியாக்கக் கூடாது. அல்லாஹ் அல்லாது வேறு மகான்களின் மண்ணறைகளை வழிப்படுவது, கொடியேற்றுவது, கந்தூரி வழங்குவது போன்ற சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் இஸ்லாத்தில் இடமில்லை. அல்லாஹ் அல்லாதோருக்கு நேர்ச்சை செய்வதும், அதனை நிறைவேற்றுவதும் இணைவைப்பதற்குச் (ஷிர்க்) சமமாகும். இவ்வாறு பிரச்சாரம் செய்தமைக்காக "வஹ்ஹாபி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பட்டஞ்சூட்டப்பட்ட அஷ்ஷெய்ஹ் அப்துல் ஹமீத் பக்ரி (தர்வேஸ் ஹாஜியார்) எனும் சீர்திருத்தவாதியே மேற்படி புரட்சிகர நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவராகும். அன்னாரினால் தாபிக்கப்பட்டதே "ஜம்இயது அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா" எனும் அமைப்பாகும். இன்று இலங்கையில் தவ்ஹீதுத் ஜமாஅத் எனும் அடைமொழியுடன் சில இயக்கங்கள் காணப்பட்ட போதிலும் கொழும்பு நகரைத் தலைமையாகக் கொண்டு செயற்படும் ஜமாஅத்துத் தவ்ஹீத், ஜம்இயது ஸபாப் முஸ்லிமி சிறிலங்கா (AMYS), அல்ஹிதாயா ஆகியவைகளும் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முகம்மதியாவுமே. இஸ்லாத்தின் மூலாதாரங்கள் முழுக்கமுழுக்க அல்குர்ஆனும், அல்ஹதீதுமே எனும் கொள்கையுள்ளவைகளாகும். இருந்தபோதிலும் நிறுவன ரீதியாக, முழுமையான ஒரு கட்டமைப்பின்கீழ் தவ்ஹீத் ஜமாஅத் எனச் சிலாகிக்கப்படுவதும், தவ்ஹீத்கோட்பாடு இலங்கையில் பரவுவதற்கு முன்னோடியாக இருந்துவருவதும் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முகம்மதிய்யாவே. அதுமட்டுமன்றி அடிக்கடி பலராலும் பலகோணங்களிலும் விமர்சிக்கப்படுவதும் இவ்வியக்கமே. எனவேதான் இவ்வியக்கம்பற்றி இங்கு சிறப்பாக ஆராய வேண்டியுள்ளது.

உலகின்கண்ணுள்ள எந்தவொரு அமைப்பினை எடுத்து நோக்கினாலும் அந்த அமைப்புக்கும் அதன் தாபகரின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும், பண்புகளுக்கும், உணர்வுகளுக்குமிடையில் தொடர்புகள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அந்த அடிப்படையில் அப்துல் ஹமீத் பக்ரி(ரஹ்) தம் இளம்பராயத்திலேயே அல்குர்ஆனையும், அல்ஹதீதையும் நேசிக்கத் தொடங்கியவர்.

"நான் உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டையும் நீங்கள் பற்றியொழுகுங்காலமெல்லாம் வழிதவறமாட்டீர்கள். அவையாவன. அல்குர்ஆனும் எனது வழிமுறையுமாகும்" (மு.அத்தா) எனும் பொன்மொழியினால் கவரப்பட்டு சத்தியத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டவர். தனது சத்தியப்பாதையில் பல கரடுமுரடான அனுபவங்களைப்பெற்று தவ்ஹீதின் எழுச்சிக்காகப் பாடுபட்ட அவர் ஒரு யுகபுருடனாக ஆராயப்பட வேண்டியவர். ஆனால் அவர்வாழ்ந்த காலப்பின்புலம், அவருடைய வாழ்க்கையை கோணல்மாணல் நிறைந்த பாதையாகக் காட்ட முயற்சித்துள்ளமை வருந்தத்தக்க செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் ஹமீத் பக்ரி 1909 ஜுலை 27ம் திகதி பரகஹதெனியாவில் சாதாரண குடும்பமொன்றில் மூன்றாவது புதல்வராகப் பிறந்தார். அன்றைய சூழலில் அக்கிராமத்தில் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. எனவே தமது ஏழுவயது வரை அங்குள்ள குர்ஆன் மதிரசாவில் கற்றுவிட்டு, அண்மையிலுள்ள தல்கஸ்பிட்டி கிராமம் சென்று தமது மார்க்கக் கல்வியைத் தொடர்ந்தார். பத்தாவது வயதில் அலுத்கம அல்மத்ரசதுல் உலூமியாவில் சேர்ந்து அரபுக்கலைகள் பயிலத் தொடங்கி சிறிது காலம் கற்றுவிட்டு 1920ல் காலிக்கோட்டை ஜிப்ரியா அரபுக்கலாசாலையில் இணைந்து அரபுமொழி, அரபு இலக்கியம், இலக்கணம் என்பன பயில்வதில் கவனஞ் செலுத்தினார். இருந்த போதிலும் அங்கிருந்த பாடத்திட்டத்திலும்(Syllabus) கற்பித்தல் முறையிலும் அவர் திருப்தியுறவில்லை. இளம் வயதினராக இருந்தும் கேள்வி ஞானம் நிறைந்த அவர், தம்ஆசிரியர்களுடன் அடிக்கடி முரண்பட்டு ஜிப்ரிய்யா கலாசாலையிலிருந்து வெளியேறினார்.

எவ்வாறாயினும் இஸ்லாமிய வழியில் தம்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல் வேண்டும் எனும் ஆதங்கத்துடனிருந்த அப்துல் ஹமீத் பக்ரி, தனது சிறிய தந்தையின் தயவுடன் இந்தியா சென்றார். அங்கும் அவர் பல அரபுக்கலாசாலைகளை அனுகியபோதிலும் அவைகளினால் அவருடை கல்வித்தாகம் பூர்த்திசெய்யப்படவில்லை. எதனை இலக்காகக் கொண்டு அலைந்து திரிந்தாரோ அத்"தவ்ஹீத்" பற்றிய தெளிவு அவருக்குக் கிடைக்கவில்லை. அன்று தென்னிந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய பொதக்குடி அந்நூறுல் முகம்மதிய்யா அரபுக்கலாசாலையில் புகட்டப்பட்ட கல்வித்திட்டங்கூட ஷிர்க்கும், பித்அத்தும் கலந்த கலவையாகவே காணப்பட்டது. எனவே அங்கிருந்தும் வெளியேறிய அப்துல் ஹமீத் பக்ரி, எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியில் இந்தியாவின் தலைநகரான டில்லி சென்று ஜாமிஆ தாருஸ்ஸலாம் அரபுக்கலாசாலையில் இணைந்து கொண்டார். அங்கு தம் உள்ளந்தேடியலைந்த சத்தியத்தைக் கற்றுக்கொள்ள வாய்ப்பிருந்ததை அவர் அறிந்து ஆனந்தக்கண்ணீர் வடித்தார். அங்குள்ள பாடவிதானம் அரபுமொழி, இலக்கணம், சட்டக்கலை, தர்க்கவியல், ஹதீஸ், தப்ஸீர்க்கலை ஆகியவைகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டமையினால் உரியகாலம்வரை தங்கியிருந்து மார்க்கக்கல்வி பயின்றார். அவர் இந்தியாவில் கற்றுக்கொண்டிருக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்விரிவுரையாளர் ஒருவரினால் "தர்வேஸ்" எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். "தர்வேஸ்" எனும் ஹிந்திச் சொல்லின் பொருள், மணிமுத்து, யாசகன், பரதேசி என்பனவாகும். ஆனால் அவரைச் சேர்ந்தோர் பார்வையில் மணிமுத்தாக வாழ்ந்த அவர், மரணிக்கும் வரை "தர்வேஸ் ஹாஜியார்" என்றே அழைக்கப்பட்டார். இன்று இலங்கையில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவருடைய நாமம் உச்சரிக்கப்படுவதை நாம் காணலாம்.

1930இல் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அப்துல் ஹமீத் பக்ரி, ஐந்து வருடகாலங்கள் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று இங்குவாழ் முஸ்லிம்மக்களின் எதார்த்த நிலையைக் கண்டறிந்தார். பின்னர் 1936இல் இந்தியா, பாகிஸ்தான் வழியாக மத்தியகிழக்கு சென்று மக்கா, மதினா, றியாத் ஆகிய நகரங்களில் தங்கி இஸ்லாமியக் கலைகளைத் துறைபோகக் கற்றார். இவ்வாறான அரிய வாய்ப்பினை ஏறக்குறைய பத்து வருடங்கள் பெற்றார். அக்காலகட்டத்தில் சிறந்த இஸ்லாமிய அறிஞர்களான காலஞ்சென்ற அப்துல் அஸீஸ் பின் பாஸ், முகம்மதலி ஹரக்கான், இப்றாகீம் பின் அப்துல் மலிக், அப்துல்லத்தீப் ஆலி சேய்க் முதலானோரிடம் கற்கும் அரியவாய்ப்பும் அவருக்கு சவூதி அரேபியாவில் கிட்டியது. அதன்பின்னர், தாம் கற்ற கல்வியினைக் கொண்டு மார்க்கப்பிரச்சாரம் (த.ஃவா) செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் 1947 செப்டம்பர் 27ந்திகதி இலங்கை வந்தடைந்தார்.

அப்துல் ஹமீத் பக்ரி வந்தடைந்தகாலை இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாம் என விளங்கிக் கொண்டிருந்தவைகள் இயல் ஒன்றில் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ள முழுக்கமுழுக்க இணைவைத்தலுடன் தொடர்பான கருமங்களும் (ஷிர்க்) பித்அத் எனப்படும் நூதன அனுஷ்டானங்களுமே. எனவே இலங்கை வந்து சேர்ந்த அவரை இருபணிகள் காத்திருந்தன. ஒன்று இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல்குர்ஆன் சுன்னாவழியில் வாழ்வதற்கு மக்களை அழைப்பது. மற்றையது சடங்குகளும் சம்பிரதாயங்களும் இஸ்லாத்தில் இல்லாதவை என மக்களுக்கு விளக்குவது. உண்மையிலேயே அன்னார் இருவழிகளிலும் வெற்றிகண்டார் என்றே கூறவேண்டும். நுனிப்புல் மேய்ந்த சிலர் அப்துல் ஹமீத் பக்ரி ஷிர்க், பித்அத் ஆகியவைகளை விளக்குவதிலும் அவைகளைப் பற்றி விவாதிப்பதிலுமே காலத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தினார் எனக்குறை கூறுவதுமுண்டு. அதுதவறான கருத்தாகும். மாறாக தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ்ஜு தொடர்பான அழைப்புப் பணிகளிலும், சமூகப்பணிகளிலும் (Social activities) ஈடுபட்டார் என்பதை அவருடைய வரலாற்றினை நுணுகி ஆராய்ந்தோர் புரிந்து கொள்வர்.

இவர், முகம்மது பின் அப்துல் வஹ்ஹாப்(ரஹ்) அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஸலபிய்யாப் பிரச்சாரத்தினால் (த:.வதுல் ஸலபிய்யா) கவரப்பட்டவராகும். பதினெட்டாம் நூற்றாண்டில் இஸ்லாமிய உலகில் சிந்தனைக் குறைபாடும் ஒருவகைப் பிற்போக்கும் நிலவிய காலத்தில் இச்சீர்திருத்த அமைப்புத் தோற்றம் பெற்றது. தூய இஸ்லாமிய நம்பிக்கை (அகீதா)யை வேண்டியே இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. தவ்ஹீதின் உண்மைப் பொருளை எல்லாவகையான இணைவைத்தலிலுமிருந்து வேறுபடுத்தித்தூய முறையில் இப்பிரச்சாரம் முன்வைக்கப்பட்டது. முகம்மது பின் அப்துல் வஹ்ஹாப், ஹம்பலி மதுஹபைச் சார்ந்தவராக இருந்த போதிலும் தமது மார்க்கத் தீர்ப்புகளின் போது எந்த மதுஹபையும் சார்ந்திருக்கவில்லை. குர்ஆன் சுன்னாவை மட்டுமே பின்பற்றும் படியே மக்களை வலியுறுத்தி வந்தார். இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கையில்(அகீதா) ஆதாரங்களற்ற விடயங்கள் நுழைவதைக் கடுமையாகக் கண்டித்தார். அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் அவனுடைய தூதர் முகம்மது நபி(ஸல்) அவர்கள் கூறியபடியே அல்லாஹ்வுக்கு இருப்பதாக உறுதிப்படுத்தி எல்லாவகையான வணக்கங்களையும் இறைவனுக்கே செலுத்துதல் (தவ்ஹீதுல் உலூஹிய்யா) வேண்டும் என்றார். நூதனவணக்கங்களுக்கு ((பித்அத்) எதிரான பிரச்சாரத்தில் மும்முரமாக ஈடுபட்டார். இவைகளைக் கருத்திற் கொண்டே அப்துல் வஹ்ஹாப் அவர்களின் பிரச்சாரத்தினை "வஹ்ஹாபிய்யா" எனச் சிலர் அழைக்கத் தொடங்கினர். இன்றும் இஸ்லாத்தின் பால் தூயவழியில் அழைப்பினை மேற்கொள்வோரை "வஹ்ஹாபி" என்று நையாண்டி செய்வதை நாம் காணலாம்.

நாடு திரும்பிய அப்துல் ஹமீத் பக்ரி, தமது சொந்தக் கிரமத்தில் தமது பணிகளை ஆரம்பித்த போதிலும் அயற்கிராமமான பாணகமுவவே சகலதுக்கும் தோதானது என்பதை உணர்ந்து அங்கு சென்றார். அக்காலகட்டத்தில் பாணகமுவக் கிராமமும் அறியாமையில் மூழ்கிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

காணப்பட்டது. ஆனால் அப்துல் ஹமீத் பக்ரி அவர்களின் நாளாந்த அணுகுமுறைகளின் காரணமாக அவ்வூரிலிருந்து 750 குடும்பங்களில் அரைவாசிக்குக் குறையாதோர் அவரின் ஜம்இயாவில் இணைந்து கொண்டனர். 1951ல் அங்கு சிறிய மஸ்ஜித் ஒன்றை அமைத்துத் தனது பணியைத் தொடர்ந்தார். இத்தொடரில் 1968இல் அங்கு ஒரு சிறிய அரபுக்கல்லூரியும் தாபிக்கப்பட்டு அஃது 1979வரை நிலைத்திருந்தது. அன்னாரின் மரணத்தின் பின்னர் அங்கிருந்த சிறிய மஸ்ஜித் உடைக்கப்பட்டு குவைத் "பைத்துஸ் ஸக்காத்" நிறுவனம் ஜம்இய்யது அன்ஸாரிஸ் சுன்னதில் முகம்மதியாவின் அனுசரணையுடன் பல இட்சம் ரூபா செலவில் புதிய மஸ்ஜித் ஒன்று நிர்மாணித்து அது 1994 டிசம்பர் 4ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. இன்று அந்த மஸ்ஜித், பாணகமுவ பிரதான வீதியில் கம்பீரமாகத் தோற்றமளித்துக் கொண்டிருப்பதை நாம் காணலாம்.

அல்ஹாஜ் அப்துல் ஹமீத் பக்ரி 1949வாக்கில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கல்முனைப் பிரதேசஞ் சென்று அங்கு தவ்ஹீத் பிரச்சாரப்பணியினை ஆரம்பித்தார். தம்முடன் ஒன்றாகக்கற்று தவ்ஹீதை விளங்கிக் கொண்ட சில நண்பர்களின் அழைப்பின் பேரில் அங்கு அவர் சென்றாலும் அஃது அல்லாஹ்வின் மாபெரும் ஏற்பாடொன்றே என்று அடிக்கடி அவர் கூறிக்கொண்டிருப்பார். தம் உலமாக்களுடன் சேர்ந்து கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஆகிய கிராமங்களில் அழைப்புப் பணியில் (தஃவா) ஈடுபட்டார். அக்காலகட்டத்தில் கல்முனைப் பிரதேசம் தவ்ஹீத், ஷிர்க், பித்அத் எல்லாமே ஒன்று சேர்ந்து இஸ்லாத்தின் அசலையும் நகலையும் பிரித்தறியவொணாது தடம்புரண்டு கொண்டிருந்தது. தவ்ஹீத் கோட்பாட்டினை அறிந்த உலமாக்கள் சிலர்கூட பெரும்பான்மை மக்களின் கருத்துக்களுக்குக் கோல்கொடுத்து, தீமைக்குத் தோழர்களாகத் தப்புத்தாளம் போட்டுக்கொண்டிருந்த காலமது. ஆனபோதிலும் அப்துல் ஹமீத் பக்ரி அவர்களின் அயராத முயற்சியினால் படிப்படியாக ஆதரவாளர்கள் அதிகரிக்கத் தொடங்கினர். அதேநேரம் எதிரான கருத்துடையோரின் தொல்லையும் குறையவில்லை. அதன்காரணமாக அவர் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் பல பாதிப்புக்குள்ளானார். ஏறக்குறைய இருவருடகாலம் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் தம் அழைப்புப் பணியைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தபோதிலும் அவருக்கு எதிரான அடாவடித்தனங்களும் தொடர்ந்தன. அதன் காரணமாக அவரது ஜமாஅத்தினர் தனியாகப்பிரிந்து இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் தனியாருடைய இல்லங்களிலேயே தொழுகை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தமும் உருவாகியது. இச்செயலானது பல நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தியமையினால் ஜம்இயாவினர் தற்காலிகமாகப் பள்ளிவாசலொன்றை அமைத்தனர். அப்பள்ளிவாசல் இருமுறை எதிரிகளால் நிர்மூலமாக்கப்பட்டது. ஆனாலும் அவருடைய முயற்சி வீண்போகவில்லை.

எந்தளவுக்கு எதிர்ப்புகள் அதிகரித்தனவோ அந்த அளவுக்கு தவ்ஹீதை விளங்கிக் கொண்டோர் தொகையும் கல்முனைப் பிரதேசத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. இவ்வாறான தொடர்த்தேர்ச்சியான வளர்ச்சி காரணமாக இன்று கல்முனைக் குடிக்கிராமத்தின் மத்தியில் பல இலட்சம் ரூபாச் செலவில் மாபெரும் ஜூம்ஆ மஸ்ஜித் ஒன்று நிறுவப்பட்டு பிரச்சாரப்பணி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் கல்முனை, மாளிகைக் காட்டில் அதாவது தாம் திருமணஞ் செய்த இல்லத்தில் "தாருத் தவ்ஹீத்" எனும் பெயரில் ஒரு மதிரசாவை ஆரம்பித்தார். அங்கு ஏறக்குறைய 100 மாணவர்கள் கற்றனர். 1951இல் அம்மதிரசா கல்முனைக்குடிக்கு மாற்றப்பட்டது நாளடைவில் ஏற்பட்ட ஆளணிப்பற்றாக்குறை காரணமாக அம்மதிரசா இயங்குவது தடைப்பட்டது.

அப்துல் ஹமீத் பக்ரி தம் ஜம்இயா தடம்பதித்த இடங்களிலெல்லாம் சிறுசிறு அறிவுமையங்களை (Study Circles) நிறுவினார். அங்கெல்லாம் தமக்கு ஆதரவானவர்களின் உதவியுடன் குர்ஆன் ஓதும் பயிற்சியும், ஹதீஸ், பிக்ஹு வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. தனது த'.வாப்பணியின் ஆரம்பகாலகட்டத்தில் 1948இல் தமது தாயகமான பறகஹதெனியவில் ஒரு சிறிய மதிரசாவையும், தொழுகைக்கூடத்தையும் பொல்வத்த எனும் பகுதியில் நிறுவினார். இன்று அங்கு பிரதான வீதியில் ஜாமிஉத்தவ்ஹீதும், தாருத்தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடமும், ஜம்இய்யது அன்ஸாரிஸ் ஸுன்னத்தி முஹம்மதியாவின் தலைமையகமும் அப்துல் ஹமீத் பக்ரி அவர்களின் கனவை நனவாக்கிக் கொண்டிருப்பதை நாம் காணலாம். 1980லிருந்து ஜம்இயாவின் தலைமைப் பொறுப்பையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபுக்கலாசாலையின் அதிபர் பதவியையும் ஏற்று அளப்பரிய சேவையாற்றிவரும் சகோதரர் அஷ்ஷேய்க் N.P.M. அபூபக்கர் சித்தீக் அல்மதனி அவர்களின் அயராத முயற்சியினாலும், அன்னாருக்குத் தோள்கொடுத்து உழைத்துவரும் சகோதரர் A.L. கலீலுர் ரஹ்மான்M.A. அவர்களின் சேவையினாலும் ஜம்இயா தேசியரீதியாகப் பொலிவு பெற்றுவருவதை நாம் இன்று அவதானிக்கலாம்.

அப்துல் ஹமீத் பக்ரி தம் பிரச்சாரப்பணிக்கு உதவியாக 1955இல் "உண்மை உதயம்" எனும் சஞ்சிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவும் கடமையாற்றி ஜம்இயாவின் பிரச்சாரப்பணியை விருத்தி செய்தார். அவரின் மறைவினைத் தொடர்ந்து மர்ஹும் S.M. அபூபக்கர்(ஆப்தீன்புலவர்) மௌலவி பாஸில் S.M. முஸ்தபா மவுலானா, S.M.மூசா(B.A) ஆகியோர் ஆசிரியர்களாகச் செயலாற்றினர். இன்று அதன் ஆசிரியராக தாருத்தவ்ஹீத் அஸ்ஸலபியாவின் பழைய மாணவர் S.H.M. இஸ்மாயில்(ஸலபி) B.A.(Hons) கடமையாற்றுகின்றார். ஆரம்பத்தில் முத்திங்கள் இதழாக வெளிவந்த "உண்மை உதயம்" இன்று இருமாதங்களுக்கு ஒரு முறை வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதுதவிர சமூகத்தில் அவ்வப்போது தினவெடுக்கும் பிரச்சினைகளுக்கேற்ப கீழ்காணும் நூல்களையும் பிரசுரங்களையும் அப்துல் ஹமீத் பக்ரி வெளியிட்டார்

* அஸ்ஸித்குல் ஹக் அலா தஹ்ரிபத்தில் காதியானிய்யா. (அரபு)
* சத்தியப்போர்வையில் அசத்தியம் வளர்க்கும் அஹமதியாக்களுக்கு அல்லமா அப்துல் ஹமீதின் ஆணித்தரமான பதில்.
* விசமிகளுக்கோர் கிருமிநாசினி.
* தப்லீ:. எதிர்ப்பாளர்களுக்கு மறுப்பு.
* இஸ்லாமும் இலஞ்சமும் (தமிழாக்கம்)
* புராதனச் சின்னங்களை கௌரவிப்பது இவ்வாறல்ல.
* மவ்லூது ஓதலாமா? (தமிழாக்கம்)
* ஏகத்துவத்தின் இரகசியங்கள் (தமிழாக்கம்).

1971இல் நிரந்தரப் பிரசாவுரிமைபெற்று மக்காசென்ற அப்துல் ஹமீத் பக்ரியின் குடும்பத்தினர் தற்பொழுதும் அங்கு சிறப்பாக வாழ்கின்றனர். பல வழிகளிலும் திட்டமிட்டு தமது வாழ்க்கையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து தவ்ஹீத் பிரச்சாரத்திற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அவர், 1976 மேமாதம் 9ஆந்திகதி ம.'ரிப் தொழுகையின் பின்னர் மக்கா நகரில் மரணமாகி அங்கேயே நல்லடக்கஞ் செய்யப்பட்டார். "கல்விக்கு உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை" என்ற பொய்யாமொழிக்கியைய அன்னவர் மரணித்தாலும் உலகம் அழியும்வரை அவருடைய சாதனைகள் வரலாற்றில் பதியப்பட்டிருக்கும், அறிஞர்களான இப்னுதைமியா(ரஹ்), அவர்களைப் போல தவ்ஹீத் கோட்பாட்டினை நிலைபெறச் செய்வதில் எமது நாட்டில் தனிமனிதனாக நின்று பங்காற்றியவர் தர்வேஷ்ஹாஜியார் என அழைக்கப்பட்ட அஷ்ஷேய்க் அப்துல் ஹமீத் அல்பக்ரி என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

1981இல் ஜம்இய்யது அன்ஸாரிஸ் சுன்னத்தியாவின் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட அஷ்ஷேய்ஹ் அபூபக்கர் சித்தீக் அல்மதனி என்ன நோக்கத்துக்காக அப்துல் ஹமீத் பக்ரி ஜம்இயாவை உருவாக்கினாரோ அவற்றினை நிறைவேற்றுவதில் கவனமாக இருப்பதை நாம் இன்று அவதானிக்க முடிகின்றது. தங்களுடைய ஜம்இயா அல்குர்ஆன், சுன்னா ஆகிய இரண்டினையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாகவும், அவ்விரண்டுக்கும் ஏற்புடையதாக இமாம்கள், அறிஞர்கள் கருத்துக்கள் இருப்பின் அவைகளையும் ஏற்றுக்கொள்வதாகவும் அதே நேரம் இமாம்களைப் பின்பற்றியாகவேண்டும் என்ற பிடிவாதப்போக்கினையும் சரியோ பிழையோ ஒரு மத்ஹபைப் பின்பற்றியாக வேண்டும் என்ற கருத்தினையும் வன்மையாக எதிர்ப்பதாகவும் கூறுகின்றனர். மேலும் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் அழுத்தங்கொடுப்பதனால் இப்னு தைமியா(ரஹ்), முகம்மது பின் அப்துல் வஹ்ஹாப்(ரஹ்) ஆகியோரைப் பின்பற்றுவோர் என்றகருத்தில் "வஹ்ஹாபிகள்" எனும் அடைமொழிகொண்டு தாம் தம் எதிரணியினரால் அழைக்கப்படுவதையும் வன்மையாகக் கண்டிக்கின்றனர். ஏனைய இமாம்களையும், அறிஞர்களையும் எவ்வாறு கண்ணியப்படுத்துகிறோமோ அவ்வாறே மேற்படி இமாம்களையும் மதிப்பதாகக் கூறுகின்றனர்.

தொழுகையில் நெஞ்சில் "தக்பீர்" கட்டுதல் பிஸ்மிலை மௌனமாக ஓதுதல், விரலசைத்தல், கூட்டு "துஆ" ஓதுவதைத் தவிர்த்தல் போன்ற சுன்னாவுடன் தொடர்புடைய விடயங்களை மேற்படி ஜமாஅத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதுபடுத்தி சமூக ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிப்பதாக ஏனையோர் குற்றஞ்சுமத்துவதை அவதானிக்கலாம். அவைகள் பற்றி வினவியபோது, இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கை(அகீதா) பற்றி இலங்கையில் அதிகமதிகம் பேசிவருபவர்கள் தாங்களே. அதைச் சிலாகித்துக் கூறுவதற்கு இன்று ஆளில்லை. முஸ்லிம்கள் முடியுமான அளவு சுன்னாவை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்கிறோம். அதற்காக எதிர்க்கருத்துடையோர் எங்கள் மீது திட்டமிட்டுச் சுமத்தும் குற்றச்சாட்டுக்களே மேலே கூறப்பட்டவைகள். நாங்கள் நடாத்தும் மாநாடு(இஜ்திமா)களிலும் கருத்தரங்குகளிலும் இஸ்லாமிய அகீதா பற்றியே தெளிவாகப் பேசிவருகின்றோம். த.்.வாப்பணியைப் பொறுத்தவரையில் கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்தேடி அலையாமல், அல்குர்ஆன், சுன்னா வழியைப் பின்பற்றுவதுடன் அவைகளின் தத்துவங்களை மக்களுக்குத் தெளிவா எடுத்துரைத்தல் அவைகளுக்கு முரணான கோட்பாடுகளை முற்றாகப் புறக்கணித்தல், என்ன துன்பங்கள், துயரங்கள் ஏற்பட்டாலும் இஸ்லாத்தினை அதன் தூயவடிவில் மக்ளுக்கு எத்திவைத்தல் ஆகிய பணிகளைச் •செய்வதில் தாங்கள் முடியுமான அளவு உறுதியாக இருப்பதாகவும் இந்த ஜமாஅத்தினர் கூறுகின்றனர். இவர்களின் பிரச்சாரப்பணியினைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

1 முகம்மது நபி(ஸல்) அவர்கள் உயிருடன் வாழும் போதே இஸ்லாம் முற்றுப் பெற்று விட்டது. அதன் அடிப்படை மூலாதாரங்கள் குர்ஆனும் சுன்னாவுமே. அவை இரண்டினையும்தவிர வேறு எந்தமனிதருடைய கண்டுபிடிப்புக்களையோ, அபிப்பிராயங்களையோ முஸ்லிம்கள் பின்பற்றக்கூடாது.

2 நபி(ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் இஸ்லாம் மார்க்கத்தில் எவையெல்லாம் நன்மைதரும் எனக்கருதிப் புதிதாகச் சேர்க்கப்பட்டனவோ அவைகளனைத்தும் தெளிவான பித்அத்துக்களே!

3 வணக்கத்தில் அல்லாஹ்வுக்கு இணையாக யாரையாவது பங்காளியாக்குவது பெரும்பாவமாகும். இதனை அவன் என்றுமே மன்னிக்கமாட்டான். மகான்கள், அவுலியாக்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களிடம் உதவிதேடுவதும் பெரியோர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸியாரங்கள் மீது பற்றுவைத்து கந்தூரி கொடுத்து விழாக் கொண்டாடுவதும் மன்னிக்கமுடியாத பெருங்குற்றங்களாகும். ஸியாரங்களில் குறித்த நாளில் ஒன்றுகூடி மவ்லூது, றாத்திபு ஓதுவதும் இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டவைகளாகும்.

4 அல்லாஹ் அல்லாதோருக்கு நேர்ச்சை செய்தல், கல்லறைகளைக் கட்டுதல், அங்குசென்று இறைஞ்சுதல், பிரார்த்தனை செய்தல், கொடியேற்றுதல் யாவும் நூதன வழிபாடு(பித்அத்)களாகும்.

5. "கத்தம்" என்ற பெயரில் குர்ஆனை (கூலிகொடுத்து) ஓதி அதன் நம்மைகளை மரணித்தவர்களுக்குச் சேர்க்கலாம் என்பது மடமையாகும்.

ஜம்இய்யது அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதியாவின் அனுசரணையுடன் பரகஹதெனியாவில் இயங்கிவரும் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாவில் இன்று ஏறக்குறைய 250 மாணவர்கள் தீவின் நாலாதிசைகளிலுமிருந்து இங்கு வந்து கற்கின்றனர். இங்கு இஸ்லாமியக் கல்வியுடன், பாடசாலைக்கல்வியும் (School Subjects) புகட்டப்படுகின்றன. இக்கலா பீடத்தின் கல்வித்திட்டம் ஏழுவருடங்களை அடக்கியது. மாணவர்கள் தம் இஸ்லாமியக் கல்வியைக் கற்றுக்கொண்டு நாலாவது வருடத்தில் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைக்கும் ஆறாவது வருடத்தில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கும் தோற்றுவர். ஏழாவது வருடம் மவுலவி ஆலிம் பரீட்சை முடிந்ததும் சர்வகலாசாலை சென்று தம்உயர்கல்வியைத் தொடருகின்றனர். வருடாவருடம் பத்துக்கு மேற்பட்டோர் சர்வகலாசாலைகளுக்கதத் தெரிவாகின்றனர். இங்கிருந்து இதுவரை எழுபதுக்கு மேற்பட்டோர் மவுலவி ஆலிம்களாக வெளியேறியுள்ளனர். பத்துப்பேருக்குக் குறையாதோர் புலமைப்பரிசில் பெற்று மதினாப்பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கின்றனர். இக்கலாசாலையிலிருந்து வெளியேறிய மூவர் சர்வகலாசாலையில் அரபு- இஸ்லாமிய நாகரீகத்துறை விரிவுரையாளர்களாகக் கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

மார்க்கக் கல்வியைப்போன்று உலோகாதயக்கல்விக்கும் அவர்களுடைய கலாசாலை முக்கியத்துவம் வழங்குவதுபற்றி வினவிய போது இங்கிருந்து தவ்ஹீத் அடிப்படையில் கற்றுவெளியேறும் மவுலவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிம்கள் வருமான நோக்கத்துக்காக ஷிர்க், பித்அத் நிறைந்த சாக்கடையில் விழுந்துவிடாமல் தம் ஜீவனோபாயத்துக்காக ஒரு நிரந்தர தொழிலைத் தேடிக்கொண்டு பிரச்சாரப்பணியில் ஈடுபடல்வேண்டும் என்பதற்காகவே அதற்கேற்ப பாடத்திட்டத்தை உருவாக்கிக் கற்பிப்பதாகக் கூறுகின்றனர். சமூகவியல் நோக்கில் நோக்கும் போது இவர்களின் கருத்துச் சரியானதே. சில உலமாக்கள் தவ்ஹீத், தவ்ஹீத் என முழங்கிவிட்டு அதற்கு முரணான செயற்பாடுகள் நிறைந்த பள்ளிவாசல்களில் "கதீப்"மார்களாகக் கடமைபுரிந்து கொண்டு தவ்ஹீதக்கே முரணாகப்பிரச்சாரஞ் செய்வதை நாம் தினந்தம் நோக்கும் போது அவர்களின் கூற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. மேற்படி ஜம்இயாவினர் பிரச்சாரப்பணி (த'.வா)யுடன் மட்டும் நின்றுவிடாமல் சமூகசேவை (Social service) நடவடிக்கைளிலும் ஏனைய இயக்களைவிட ஒருபடி முன்னேற்றகரமாககச் செயலாற்றுவதை நாம்காணலாம்.

- பள்ளிவால்கள், அனாதை இல்லங்கள் என்பன அமைத்துக் கொடுத்தல், தேவையோடு நாடிவருவோருக்கு சிறியவீடுகள், பொதுக்கிணறுகள் அமைத்துக் கொடுத்தல்.
- நோன்பு காலங்களில் "இப்தார்" நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நோன்பு திறக்கச் செய்வதுடன் அவ்வைபவங்களின்போது மார்க்க அறிஞர்களைக் கொண்டு விசேட சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்து நடாத்துதல்.
- பிரதிவருடமும் ஹஜ்ஜுப் பெருநாளைத் தொடர்ந்து "உழ்ஹியா"க் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்தல்.
- வருடாந்தம் நாடளாவியரீதியில் மகாநாடுகளும் (இஜ்திமா) நடாத்தப்படுகின்றன. அத்துடன் காலத்தின்தேவைகருதி அடிக்கடி நூல் வெளியீடுகளும் செய்யப்படுகின்றன.
- ஜம்இயாவினால் நிரந்தரப் பிரச்சாரகர்கள்(தாஈ) நியமிக்கப்பட்டு நாடளாவியரீதியில் மார்க்க உபன்னியாசங்களும் மார்க்க விளக்க வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன.
- தந்தையை இழந்த அனாதை ஆண் சிறுவர்களுக்கு உதவும் திட்டத்தின்கீழ் "தாருல் ஈமான் லில் அய்தான்" எனும் அனாதையில்லம் நடாத்தப்படுகின்றது. இதில் சேர்த்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படும் மாணவர்களுக்கு உணவு, உடை மற்றும் ஏனைய சகலதும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

நாடளாவியரீதியில் முஸ்லிம் அனாதைச் சிறுவர், சிறுமியர் இனங்காணப்பட்டு அவர்களின் கல்விக்காகவும் வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொள்ளவும் மாதாந்த உபகார நிதி வழங்கப்படுகின்றது. இன்று இந்நிதியை 1150 அனாதைகள் பெற்றுப்பயனடைகின்றனர்.

- சர்வகலாசாலைகளில் கற்கும் சகலதுறை முஸ்லிம் மாணவ மாணவிகளுக்கும் உபகார நிதியாகக் கணிசமானதொரு தொகை வழங்கப்படுகின்றது.
- தாருத்தவ்ஹீத் அஸ்ஸலபியியாவில் கல்விகற்று வெளியேறிய மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் கணனி (Computer)ப் பயிற்சி வகுப்புக்கள் ஜம்இயாவின் தலைமையகத்தில் நடாத்தப்படுகின்றன.
- 1983இலிருந்து அகதிகளுக்கு உதவும் பணியில் ஈடுபட்டாலும் 1990களிலிருந்து இற்றைவரை, குறிப்பாக வடக்கிலிருந்து புலம்பெயர்ந்தோர் நலன்கருதி தற்காலிகக் கொட்டில்கள், சிறிய வீட்டுத்திட்டங்கள், தனிவீடுகள், மதிரசாக்கள், பொதுக்கிணறுகள் முதலியன அமைத்துக் கொடுக்கின்றனர்.

இவ்வாறாக சமூகசேவையில் ஈடுபட்டுக் கொண்டு "தவ்ஹீத்" பிரச்சாரத்தில் ஈடுபடும் முன்னோடி இயக்கமாக அன்ஸாரிஸ் ஸுன்னதில் முகம்மதியாத் திகழ்ந்தபோதிலும் தங்களுடைய தேவைகளுக்கும் சேவைகளுக்கும் தேவையான பெருவாரியான நிதியை எங்கிருந்து பெற்றுக் கொள்கின்றனர் என்ற ஐயப்பாட்டுடன் இந்த ஜம்இயாவைச் சிலர் நோக்குவதையும் பிழையாக விமர்சிப்பதையும் நாம் காண்கின்றோம். இவர்கள் தங்களின் சேவையின் தேவைக்கான நிதியின் ஒரு பகுதியை மத்திய கிழக்கு நாடான குவைத்(Kuwait) அரசின் நிதிநிறுவனமான "பைத்துஸ்ஸக்காத்" மூலம் பெற்றுக் கொள்கின்றனர். இந்நிறுவனத்தின் மூலமே குவைத் நாட்டின் வருமானம் திரட்டப்பட்டு, அந்நாட்டின் தேவைகளுக்காகச் செலவு செய்வதுடன் எஞ்சியபகுதி தார்மீக அடிப்படையில் முஸ்லிம் நாடுகளுக்கும், முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளுக்கும் வழங்கப்படுகின்றது.

மேலும், குவைத் நாட்டின் பல இஸ்லாமியப் பிரச்சார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை
கல்முனை

நிறுவனங்கள் காணப்பட்டபோதிலும் ஜம்இய்யது அத்துறாப் அல் இஸ்லாமி எனும் ஸலபிய்யா அமைப்பு பிரச்சாரப்பணியில் முன்னோடியாகக் காணப்படுகின்றது. அது பொதுமக்களிடமிருந்து நிதியை வசூலித்து பல முஸ்லிம் நாடுகளில் அனாதை நிறுவனங்கள் நடாத்துதல், புலமைப்பரிசில்கள் வழங்குதல், பள்ளிவாசல்கள், பொதுக்கட்டடங்கள், கிணறுகள் அமைத்துக் கொடுத்தல், இஸ்லாமியப் பிரச்சாரகர்(தாஈ)களுக்கான வேதனம் வழங்க முஸ்லிம் நாடுகளுக்கு உதவுதல், பைத்துஸ்ஸக்காத்தைப் போன்று இப்தார், உழ்ஹிய்யா நிகழ்ச்சிகளுக்கு முஸ்லிம் நாடுகளுக்கு உதவுதல் முதலியவைகளைச் செய்கின்றது. அந்நிறுவனத்திலிருந்தும் மேற்படி ஜம்இயா உதவியைப் பெறுகின்றது.

மேற்படி இருதாபனங்களின் உதவியைப் பெற்றும், தம்சுய முயற்சியினாலும் ஜம்இயது அன்ஸாரிஸ் ஸுன்னதில் முகம்மதியா தம் நிதித்தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நாம் காணலாம். ஜம்இயாவின் அனுசரணையுடன் இயங்கும் அரபுக்கலாசாலையில் பயிலும் ஒரு மாணவனிடம் (அனாதை தவிர்ந்து) தலா 500ரூபா அறவிடப்பட்டபோதிலும் ஒரு மாணவனுக்கு மாதமொன்றுக்கு உணவு, மற்றும் கல்வித்தேவைகளுக்காக ஏறக்குறைய 2000ரூபா செலவு செய்வதை அவதானிக்க முடிகின்றது. குவைத் நாடானது பள்ளிவாசல்கள், பொதுக்கட்டடங்கள், வீடு, கிணறு முதலியன கட்டிக்கொடுப்பதற்காக உதவி வழங்கிய போதிலும் அந்நிதியில் எஞ்சிய பகுதியைக் கொண்டே மாணவர்களின் செலவு குறைநிரப்பப்படுவதாக ஜம்இயா நிர்வாகிகள் மூலம் அறியமுடிகின்றது.

இவ்வாறாக அல்குர்ஆன்-சுன்னா அடிப்படையில் ஓரிறைக் கொள்கையை (தவ்ஹீத்) உயிர்ப்பித்துக் கொண்டு இந்த ஜம்இயாவானது பொதுச்சேவையில் ஈடுபட்டபோதிலும் குறைபாடுகளும் இல்லாமலில்லை. இலங்கையில் சில இஸ்லாமிய அமைப்புக்கள் முதியோர் இளைஞர் பாகுபாடின்றிப் பலரின் ஒத்துழைப்பினைப் பெற்றும், சில நிறுவனங்கள் முழுமையாக இளைஞர்களின் ஆதரவினைப் பெற்றும் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டுவருகின்றன. ஆனால் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முகம்மதிய்யா, பிரதேசரீதியான நிரந்தரப்பிரச்சார அமைப்புக்களை தற்பொழுது உருவாக்கி வருவதனால் இவர்கள் தங்களுடைய தலைமையகப் பிரச்சாரக் குழுவினரின் தயவுடனேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பல இடங்களுக்குஞ் சென்று "த.'.வா" முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் 1970களின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுவரும் "தவ்ஹீத்" சிந்தனை வளர்ச்சிக்குத் தீனிபோடுவதற்கு இவர்களின் பிரச்சாரப்பணி போதாதென்றே கூறவேண்டும்.

இவ்வமைப்பினர், வணக்கவழிபாடுகளுக்கு அழுத்தங்கொடுத்துப் பேசுமளவுக்கு இலங்கையின் அரசியல், பொருளியல், சமூகவியல் தொடர்பான சமகாலப்பிரச்சினைகள் பற்றிப் பேசுவதும் குறைவு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இஸ்லாத்தின் ஐம்பெரும்கடமைகள் பற்றி வலியுறுத்தும் இவர்கள் நவீன பிரச்சினைகள் பற்றியும் சிந்தித்தல் அவசியமாகும். அத்துடன் பிறமத்தினர்களும் இஸ்லாத்தினால் கவரப்படுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளல் வேண்டும்.

இந்நிறுவனத்தினர் குறிப்பிட்ட சில பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களை மையமாகக் கொண்டு பிரச்சாரப்பணியில் ஈடுபடுவதாகக் குறைகூறுவோருமுண்டு. நடுநிலை நின்று நோக்கின் இக்கூற்றினையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. எமது நாட்டைப்பெறுத்தவரையில் ஒருபக்கம் "தவ்ஹீத்" சிந்தனை வளர்ச்சியடைந்து வருகின்ற போதிலும் மறுபக்கத்தில் பெரும்பாலான மக்கள் நூதன வணக்கவழிபாடுகளில் (பித்அத்) மூழ்கியுள்ளனர் என்பதையும் மறுக்க முடியாது. இன்று இலங்கையின் பெரும்பாலான மஸ்ஜித்களின் தலைமைத்துவங்கள் அல்குர்ஆன்-சுன்னாவை விளங்காத மரபுவழி சார்ந்தவைகளாகும். அவர்களுக்கு ஒத்திசைவாகச் சில உலமாக்கள் இருப்பதும் கண்கூடு. இந்நிலையில் அவர்கள் சகலரையும் எதிர்த்து "தவ்ஹீத்" பிரச்சாரத்தில் ஈடுபடுவது சிரமமாகும். எனவேதான் இன்றையச் சூழ்நிலையில் குறிப்பிட்ட இடங்களில்மட்டும் பிரச்சாரத்தில் ஈடுபடுவோராகக் காட்சியளிக்கின்றனர். எது எப்படியிருந்த போதிலும் இலங்கையைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடு(அகீதா) பற்றித் துணிகரமாகப் பேசுவதில் முன்னோடியாக ஜம்இய்யது அன்ஸாரிஸ் ஸுன்னதில் முகம்மதிய்யாவினர் இருந்து வருகின்றனர் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமாஅத்துல் முஸ்லிமீன்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறுகளில் இலங்கையில் குறிப்பாக வடமேல்மாகாணத்தில் முஸ்லிம்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்திய செய்திகள் இரண்டு, இலங்கையின் வடபகுதியிலிருந்து புலம்பெயர்ந்த ஏறக்குறைய தொண்ணூறாயிரம் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் அங்குவந்து அகதிகளாகக் குடியேறியமை ஒன்று. அப்பிரதேசத்தில் "ஜமாஅத்துல் முஸ்லிமீன்" என்ற பெயரில் ஒரு அமைப்பினர் (ஜம்இயா) தோன்றி, மார்க்கப்பிரச்சாரத்தில் ஈடுபட்டது. மற்றொன்று. அதாவது இலங்கையிலுள்ள சகலமுஸ்லிம்களும் ஒருகட்டமைப்பின் (ஜமாஅத்) கீழ், ஒரு தலைமைத்துவத்தை ஏற்று (அமீர்) அதற்குக் கட்டுப்பட்டு இயங்க வேண்டும். அவ்வாறு இயங்குபவர்களே உண்மையான விசுவாசிகள். அவர்களையே அல்லாஹ் முஸ்லிம் கூட்டாக (ஜமாஅத்துல் முஸ்லிமீன்) என ஏற்றுக் கொள்கின்றான். அதுதவிர்ந்த ஏனைய அமைப்புக்களெல்லாம் வழிகேடானவை. சுவர்க்கஞ்செல்ல ஆசைப்படுபவர்கள் ஜமாஅத்துல் முஸ்லிமீன்களாகிய எங்களுடன் வந்து சேருங்கள். ஆட்சியதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது. இலங்கையிலுள்ள இணைவைத்தல் அரசுக்குக் கட்டுப்படாதீர்கள். புகைப்படம் எடுக்காதீர்கள். தேசிய அடையாளஅட்டை தேவையில்லை. அதனைக் கிழித்தெறியுங்கள். ஜமாஅத்துல் முஸ்லிமீன் கோட்பாட்டினை ஏற்றுக்கொண்ட உங்களுடன், உங்கள் மனைவியர்கூட ஒத்துவராவிட்டால் அவர்களையும் விவாகரத்துச் செய்யுங்கள். உங்கள் குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வியைமட்டும் புகட்டுங்கள். இவைகளுக்குக் கட்டுப்பட்டு அமீர் ஒருவரிடம் உடன்படிக்கை செய்து(பைஅத்) தூயவாழ்வுவாழ எங்களுடன் வந்து சேருங்கள் என்பன அடங்கிய தீவிரப்போக்குகளுடன் அறைகூவலிட்ட ஒரு இயக்கமாக ஜமாஅத்துல் முஸ்லிமீன் இலங்கையில் அறிமுகமாகியது. இதன் இலங்கை அமீர், சகோதரர் மவுலவி உமரலி என்பவராகும். இக்கொள்கையை விசாலிப்பதில் அன்னாருடன் சகோதரர் மவுலவி நதீர் என்பவர் தோள்கொடுத்து வருகின்றார். இவ்வமைப்பின் இலங்கைத் தலைமையகம் புத்தளம்- ஏத்தாளையில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்பினால் கவரப்பட்டவர்கள் புத்தளம், குருநாகல், கொழும்பு, அனுராதபுரம் மற்றும் கிழக்குமாகாணத்தின் சில பிரதேசங்களிலும் காணப்படுகின்றனர். எனவே, இன்று இலங்கையிலுள்ள ஏனைய இஸ்லாமிய இயக்கங்களை (Islamic movments)யெல்லாம் சர்ச்சைக்குள்ளாக்கியிருக்கும் இவ்வமைப்பின் உண்மைத் தன்மையினை அறிதல் காலத்தின் கட்டாய தேவையாகும்.

"யூர்கள் 71 கூட்டங்களாகப் பிரிந்தனர், அதில் ஒரு கூட்டம் சுவர்க்கமும் 70 கூட்டங்கள் நரகமும் செல்லும், கிறிஸ்தவர்கள் 72 கூட்டங்களாகப் பிரிந்தனர். அதில் ஒன்று சுவர்க்கமும் 71 கூட்டத்தினர் நரகமும் செல்லும். இந்த முகம்மதுடைய ஆத்மா யார் கையிலுள்ளதோ அவன்மீது ஆணையாக எனது கூட்டம் 73 பிரிவுகளாகப் பிரியும். அதில் ஒன்று சுவர்க்கஞ் செல்லும், 72நரகஞ் செல்லும், நபி(ஸல்) அவர்களிடம் அந்தக்கூட்டம் யார்? என வினவப்பட்டபோது அவர்கள்தான் "ஜமாஅத்" எனும் கூட்டமைப்பாகும். என்றார்கள். (ஆதாரம் இப்னுமாஜா) இந்தப் பொன்மொழியின் அடிப்படையில் இன்று இலங்கையிலுள்ள அமைப்புகளுள் றசூலுல்லாஹ் வினால் கட்டியங்கூறப்பட்ட அமைப்பு, "ஜமாஅத்துல் முஸ்லிமீன்" மட்டுமே. அவர்களே சுவர்க்கம் புகத்தகுதியுடையோர்: ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த சகலரும் வழிகேடர்கள். ஏனெனில் எங்களுடைய அடிப்படை மூலாதாரங்கள் அல்குர்ஆனும் சுன்னாவுமே. ஏனைய இயக்கங்கள் யாவும் ஒரு தனிநபரின் அல்லது ஒரு இமாமின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை. பொதுவாக உலகில் தோன்றிய எந்தவோர் கொள்கையை எடுத்துக்கொண்டாலும் அது மனிதசமூகத்துக்குச் சேவைசெய்யும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கும். ஆனால், காலப்போக்கில் அது ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் மறைந்து அதனை ஏற்படுத்தியவரின் இலட்சியமாக மாறிவிடுகின்றது. எங்களுக்கும் ஏனைய இயக்கங்களுக்குமிடையில் இஸ்லாத்தின் தூணாகிய தொழுகை முதற்கொண்டு வேறுபாடுகள் காணப்படுகின்றன. அத்துடன் ஒரு முஸ்லிம் ஒரு அமீருக்குக் கட்டுப்பட்டும் அவரைப்பின்பற்றுவதாக வாக்குறுதி செய்தும் கொள்ளல் வேண்டும். அவ்வாறு செய்யாதவன் ஒரு முஸ்லிமாக இருக்கமுடியாது என்றும் இவ்வமைப்பினர் கூறுகின்றனர்.

ஜமாஅத்துல் முஸ்லிமீன் மட்டுமே அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்டது. ஏனைய இயக்கங்களெல்லாம் வழிகேடானவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இவர்கள் கூறுவதுடன் நின்றுவிடாமல், அதற்கான ஆதாரங்களையும் அல்குர்ஆன்- சுன்னா ஒளியில் காட்டுவதற்கு விளைகின்றனர்.

"அவன்தான் (இதற்கு) முன்னர் உங்களுக்கு முஸ்லிம் எனப் பெயரிட்டான். இ(வ் வேதத்)திலுந்தான் (அவ்வாறே) உங்களுக்குப் பெயர் கூறப்பட்டுள்ளது. இது ஏனெனில் நம்முடைய இத்தூதரே உங்களுக்குச் சாட்சியாக இருப்பதேயாகும்." (22:78)

"விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அவனைப் பயப்படவேண்டிய முறைப்படி பயப்படுங்கள். மேலும் நிச்சயமாக (முற்றிலும் அவனுக்குத் கீழ்ப்படிந்து) முஸ்லிமாகவே தவிர நீங்கள் மரணித்துவிட வேண்டாம்."(3:102)

"மேலும் நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய அல்குர்ஆன் எனும்) கயிற்றைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக்கொண்டு) நீங்கள் பிரிந்து விடவேண்டாம். உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப்பாருங்கள். நீங்கள் (ஒருவருக்கொருவர்) விரோதிகளாகப் (பிரிந்து) இருந்த சமயத்தில் அவன் உங்கள் இதயங்களுள் (இஸ்லாத்தின் மூலம்) அன்பையூட்டி ஒன்று சேர்த்தான். ஆகவே அவனுடைய அருளாள் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். (அதற்கு முன்னர்) நீங்கள் நரகக்கிடங்கில் இருந்தீர்கள். அதிலிருந்தும் அவன் உங்களை இரட்சித்துக் கொண்டான். நீங்கள் நேர்வழிபெறும் பொருட்டு அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவுபடுத்தினான். (3:10) "(விசுவாசிகளே!) உங்களில் ஒரு கூட்டத்தினர் தோன்றி அவர்கள் (மனிதர்களை) நன்மையின்பால் அழைத்து, நல்லதை ஏவித் தீயசெயல்களிலிருந்து (அவர்களை) விலக்கிக் கொண்டிருக்கவும். இத்தகையோர்தான் வெற்றிபெற்றோர்" (3:104)

மார்க்கத்தைப்பற்றித் தெளிவாக அறிவித்த அல்லாஹ் அந்த மார்க்கத்தைப் பின்பற்றியவர்களை"முஸ்லிம்" எனப்பெயரிட்டுள்ளதுடன் அவர்கள் ஒரேவளையத்தினுள் இருத்தல் வேண்டும், பிரிந்துவிடக்கூடாது என்பதையும் கூறியுள்ளதாக இவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இன்று முஸ்லிம்கள் "மத்ஹபு"வாரியாகவும் இயக்கவாரியாகவும் பிரிந்திருக்கின்றனர். இப்பிரிவினைகள் பற்றி அல்லாஹ்வும் அவனுடைய றசூலும் முன்னறிவிப்புச் செய்துள்ளதாகவும் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"(விசுவாசிகளே!) மார்க்கத்திலிருந்து நூஹ்வுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கு அவன் மார்க்கமாக்கி இருக்கிறான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹிமூலம் அறிவித்ததும் இப்றாஹீம், மூஸா, ஈசா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் (என்னவென்றால்) நீங்கள் (ஏகதெய்வக் கொள்கையையுடைய சத்திய) மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள் (என்பதேயாகும்.) ஆகவே இணைவைத்துக் கொண்டிருப்போர்களுக்கு அவர்களை எதன்பால் நீர் அழைக்கின்றீரோ அது பழுவாகத்தெரிகிறது. அல்லாஹ், தான் நாடியவர்களைத் தம்பக்கம் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். அவன் பக்கம் மீள்வோருக்கு நேர்வழிகாட்டுகின்றான்." (42:13)

இணைவைக்கும் "குப்ர்" ஆட்சி நடைபெறும் நாட்டில் ஜமாஅத்துல் முஸ்லிமீன் பிரிந்திருக் முடியாது. ஒரு தலைமைத்துவத்தின்கீழ் இருந்தல் வேண்டும். பிரிவோர் "ஷிர்க்" (இணைவைத்தல்) வாதிகளாகும். "ஒரு நாட்டில் இயக்கப்பிரிவுகள் அதிகமாகவிருந்து ஜமாஅத்துல் முஸ்லிமீன் இருக்காவிட்டால் தனித்திருந்து ஒரு மரத்தின் வேரையாவது கட்டிப்பிடித்துக்கொண்டிரு" என்ற பொன்மொழியைக் கூறுவதுடன், இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் மக்காவில் (காபிர்களுடன் வாழும்போதே) ஜமாஅத்துல் முஸ்லிமீன் இருந்தது. இதையே மக்காவில்வைத்து உமர்(ரழி) அவர்களும் "ஜமாஅத் (கூட்டமைப்பு) இல்லாமல் இஸ்லாம் இல்லை. தலைமைத்துவம் இல்லாமல் ஜமாஅத் இல்லை." என்றதாக இவர்கள் கூறுகின்றனர்.

ஒரு ஆட்சியில் முஸ்லிம்கள் ஜமாஅத்தாக இருக்கும்போது முஸ்லிம்கள் மத்தியில் பிரிவினை இருப்பது "ஷிர்க்" (இணைவைத்தல்) ஆகும். ஒரு முஸ்லிம் ஆட்சி அல்லாத "குப்ர்" நாட்டில் ஜமாஅத்துல் முஸ்லிமீனை ஆரம்பிக்கக் குறைந்தது மூன்றுபேர் போதும். இதில் ஒருவர் அமீராக இருப்பார். இந்த உண்மையை ஏற்றுக்கொண்டால் இன்று இலங்கையிலுள்ள ஏனைய இயக்கங்களெல்லாம் வழிகேடானவைகளாகும். இவ்வாறு நாங்கள் பகிரங்கமாக உண்மையைச் சொல்வதனாலேயே அவ்வியக்கங்கள் "குப்ர்" நாட்டில் ஜமாஅத்துல் முஸ்லிமீன் இருக்கமுடியாது என வாதாடுவதாக ஜமாஅத்துல் முஸ்லிமீன் அமைப்பினர் கூறுகின்றனர்.

ஒரு நாட்டில் முஸ்லிம் ஜமாஅத்துக்கு முழு ஆட்சியதிகாரங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும் என்றும் சொல்ல முடியாது. மக்காவில் றசூலுல்லாஹ் வாழ்ந்த காலத்தில் ஜமாஅத்துல் முஸ்லிமீன் இருந்தது. அதிலிருந்து பிரிந்தோர் முஸ்ரிக் (இணைவைப்போர்) என் அழைக்கப்பட்டனர். மதினாவில் றசூலுல்லாஹ் காலத்தில் முஸ்லிம் ஜமாஅத் இருந்ததற்காக எல்லாமே செய்ய முடியும் என்பது பொருளல்ல. உதாரணமாக ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு நபி(ஸல்) அவர்கள் தம்தோழர்களுடன் "உம்ரா"ச் செய்யும் நோக்குடன் மக்காவை நோக்கிப் புறப்பட்டு ஹுதைபிய்யா என்ற இடத்தைச் சென்றடைந்தபோது மக்காக்காபிர்கள் மக்காவினுள் நுழையவிடாது தடுத்து "முஸ்லிம்கள் இவ்வருடம் மக்காவினுள் நுழையமுடியாது. அடுத்த வருடம் வாருங்கள். வரும்போது நிராயுதபாணிகளாக வரவேண்டும். மூன்று தினங்களுக்கு மேல் இங்கு தங்கவோ பிரச்சாரஞ் செய்யவோகூடாது." எனக் கூறித் திருப்பிவிட்டனர். அப்பொழுது றசூலுல்லாஹ்வினால் காபிர்களின் உத்தரவினை மறுக்கமுடியாதிருந்தது. "என ஜமாஅத்து முஸ்லிமீன்கள் கூறுகின்றனர்.

மதினாவில் தோற்றுவிக்கப்பட்டதே ஜமாஅத்து முஸ்லிமீன், அது மக்காவில் உருவாகியிருந்தால் நபி(ஸல்) அவர்கள் முஸ்லிம்களை அபீசீனியா(எதியோப்பியா) போன்ற நாடுகளுக்கு (ஹிஜ்ரத்) அனுப்பியிருக்க மாட்டார்கள். தாமும் தாயிபுக்கோ, மதினாவுக்கோ சென்றிருக்கமாட்டார்கள். றசூலுல்லாஹ் மதினா சென்றதும் ஜமாஅத்துல் முஸ்லிமீனை உருவாக்குவதற்கேயாகும். "பைஅத்" பற்றிய எந்த வசனமுங்கூட மக்காவில் இறங்கவுமில்லை. அங்கு றசூலுல்லாஹ்வுக்கு தலைமைத்துவப்பொறுப்பு எதுவும் பொறுப்பாக்கப்படவுமில்லை. தொழுகையானது மக்காவில் வைத்து இறக்கப்பட்டாலும் அதுகூட அங்கு ஜமாஅத்தாகத் தொழப்படவுமில்லை. ஜூம்ஆவுக்கான மஸ்ஜிதும் முதன்முதலாக மதினாவிலேயே கட்டப்பட்டது. மக்காவில் வைத்து முஸ்லிம்கள் காபிர்களினால் கொடுமைப்படுத்தப்பட்டபோது றசூலுல்லாஹ் அவர்கள் முஸ்லிம்களைப் பார்த்து "பொறுமையாக இருங்கள்" என்றுமட்டுமே சொன்னார்கள். மக்காவில் ஒரு தலைமைத்துவ அமைப்பு இருக்குமானால் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார்கள். ஆனால் மதினாவில் ஜமாஅத்துல் முஸ்லிமீன் இருந்தது என எதிர்க்கருத்துடையோர் வாதாடுகின்றனர்.

ஜமாஅத்துல் முஸ்லிமீன் எனும் ஓரமைப்பு உலகில் எங்குமேயில்லை என்றுகூறலாம். சவூதிஅரேபியாவில் அல்குர்ஆன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னா ஆட்சி நடைபெறுவதாகக் கூறுவதுமுண்டு. அக்கூற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அங்கு ஆட்சியாளர் தெரிவு இஸ்லாமியக் கோட்பாடின் அடிப்படையில் நடைபெறுவதில்லை. அங்குமட்டுமல்ல மத்திய கிழக்கிலேயே ஒருவகையான மன்னராட்சியே நடைபெறுகின்றது என எதிர்வாதமிடுவோர் கூறுகின்றனர்.

"பைஅத்" செய்தல் என்பது ஜமாஅத்து முஸ்லிமீன் அடுத்த கோட்பாடாகும். முஸ்லிம் ஜமாஅத்தினர் அதன் தலைவருக்கு(அமீர்) கட்டுப்படல்வேண்டும். அப்பொழுதுதான் ஒரு கட்டமைப்பான ஜமாஅத்தை உருவாக்கமுடியும். முஸ்லிம்கள் அத்தலைவருக்கு வாக்குறுதியளித்து அவருடைய கூற்றுக்குச் செவிமடுத்து பாவமில்லாத காரியங்களில் அவருக்கு வழிப்படல் வேண்டும். "பைஅத்" எனும் வாக்குறுதியின்றி இஸ்லாம் இல்லை என முஸ்லிம் ஜமாஅத்தினர் கூறுகின்றனர். இதற்கான ஆதாரங்களை ஹதீதுகளிலிருந்து முன்வைக்கின்றனர்.

"யார் அமீருக்குக் கட்டுப்படுகின்றாரோ நிச்சயமாக(அவர்) எனக்கு வழிபட்டுவிட்டார். யார் அமீருக்கு மாறுசெய்கின்றாரோ நிச்சயமாக (அவர்) எனக்கு மாறுசெய்துவிட்டார்." (முஸ்லிம்)

"யார் அமீரின் கட்டுப்பாட்டிலிருந்து கையைஉருவாக்கிக் கொள்கின்றாரோ அவர் தான் ஒரு முஸ்லிம் என்பதற்கு(எவ்வித) ஆதாரமுமில்லாத நிலையில் அல்லாஹ்வைச் சந்திப்பார். யார் தன் கழுத்தில் வாக்குறுதி (பைஅத்) இல்லாமல் மரணிக்கின்றானோ அவன் அறியாமை (ஜாஹிலிய்யாத்) மரணமாக மரணிக்கின்றான்." (முஸ்லிம்)

இவ்வாறாக அமீருக்கு "பைஅத்" செய்து முஸ்லிம் ஜமாஅத்துடன் இணைந்த பின்னர் அமீரிடம் தெளிவான இணைவைத்தல் (குப்ர்) தெரிந்தாலன்றி ஜமாஅத்திலிருந்து வெளியேறினால், அவ்வாறு வெளியேறிவர் மதம்மாறியவராவார் என்று கூறி,

"யார் ஜமாஅத்திலிருந்து ஒருசாண் அளவு வெளியேறுகின்றானோ அவன் இஸ்லாத்தின் வளையத்தினை (கயிற்றை) தன் கழுத்திலிருந்து களைந்(எறிந்து)து விட்டான். (மீண்டும் பைஅத் செய்து) அவன் சேர்ந்தாலே தவிர" (ஹாக்கிம்) எனும் ஹதீதையும் ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

"தலைமைப்பொறுப்பு குறைஷிகள் இருவர் இருக்கும்வரையும் அவர்களை விட்டும் நீங்கிவிடாது." (புகாரி) "அதுமட்டுமின்றி அந்நாளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் அல்லாஹ்வின் ஆட்சியாளரை (கலீபாவை)க் கண்டால் அவர் உன் உடம்பைச் சிதைத்தாலும் உன் பொறுப்புக்களை எடுத்துக்கொண்டாலும் அவரைப் பின்பற்றிக்கொள்" (அஹ்மத், அபூதாவூத்) ஆகிய ஹதீதுகளின் அடிப்படையில் ஆட்சியதிகாரம் உள்ளவர்களிடம் "பைஅத்" செய்ய வேண்டும் எனும் கருத்து இஸ்லாத்தின் ஆரம்பகாலந்தொட்டு காணப்பட்டது. அவ்வடிப்படையில் பாகிஸ்தானில் வாழ்ந்த, குறைஷி வமிசத்தைச் சேர்ந்தவரிடம் (சகோ. மசூத் அஹமத்) பைஅத் செய்து செயற்படுவதாக முஸ்லிம் ஜமாஅத்தினர் கூறுகின்றனர்.

இஸ்லாத்தில் பிரிவினை இல்லை. முஸ்லிம்களைக் கூறுபோடும் மத்ஹபு(கோட்பாடு)களும் இயக்கங்களும் வழிகேடானவைகள் என்கின்றனர். முஸ்லிம் சமூகத்தில் நீண்டகாலமாக பலபிரிவுகள், மத்ஹபுகள் என்ற பெயரில் உலவிவருகின்றன. அதிலும் குறிப்பாக ஹனபி, மாலிக், ஷாபி., ஹம்பலி ஆகிய நான்கும் தங்களை "அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்" எனக் கூறிக்கொண்டு, முஸ்லிம்களைக் கூறுபோட்டுச் செயற்பட்டு வருகின்றன. அல்குர்ஆனை அதன் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வரிவிடாமல் ஆராய்ந்து பார்த்தாலும் நேர்வழி ஒன்றேயொன்றுதான். அது அல்லாஹ் காட்டியவழி. இதர வழிகள் அனைத்தும் மனிதர்களினால் தம்மனோவிச்சைப்படி தோற்றுவிக்கப்பட்டவை.

நேர்வழி நான்கு என்று சொல்வதற்கு குர்ஆனிலிருந்தும், ஹதீதிலிருந்தும் ஒரு ஆதாரத்தையேனும் பார்க்கமுடியவில்லை. யாவும் ஊகங்களும் சொந்த அபிப்பிராயங்களுமே. இதனை நபி(ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸ் சந்தேகத்துக்கிடமின்றி தெளிவு படுத்துகின்றது. "நாங்கள் நபி(ஸல்) அவர்களோடு இருந்தோம். அவர்கள் கீழே ஒரு நேர்கோடு போட்டார்கள். அதன் வலதுபக்கம் இரண்டு கோடுகளையும், இடது பக்கம் இரண்டு கோடுகளையும் போட்டார்கள். பின்னர் நடுக்கோட்டில் கையைவைத்துக் கொண்டு "இதுவே அல்லாஹ்வின் நேர்வழி" என்றார்கள். பின்னர் நிச்சயமாக இதுவே என்னுடைய நேர்வழியாகும். இதனையே பின்பற்றுங்கள். இதர வழிகளைப்பின்ற்ற வேண்டாம். அவை உங்களை அவனுடைய வழியிலிருந்தும் பிரித்துவிடும். "நீங்கள் பயபக்தியுடையவர்களாக ஆவதற்கு இவ்வாறு அவன் உங்களுக்குப் போதிக்கிறான். (6:153) எனும் ஆயத்தை ஓதிக்காட்டியதாக நபித்தோழர்கள் கூறினார்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இறைவசனத்தையும் பொன்மொழியையும் ஆதாரமாகக்கொண்டு நபி(ஸல்) போதனையை மதித்து நடப்பவர்கள், நிச்சயமாக மத்ஹபுகள் வழிகேடானவை. அவற்றை எடுத்து நடப்பது எம்மை அல்லாஹ்வின் பாதையைவிட்டும் வழிதவறச் செய்பவை என்பதைத் தெட்டத்தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். அல்லாஹ்வின் கட்டளையையும் நபி(ஸல்) அவர்களின் போதனையையும் புறக்கணித்துவிட்டு, மனித அபிப்பிராயங்களை எடுத்துநடப்பவர்கள் மட்டுமே மத்ஹபுகளைப் பின்பற்றி நடக்கமுடியும் என்ற கருத்துக்கு முழுமையாக உடன்பட்டவர்களாக ஜமாஅத்துல் முஸ்லிமீன்கள் உள்ளனர்.

ஆகுமான (ஹலால்), ஆகாதவை (ஹராம்) விடயத்தில் மத்ஹபுகளுக்கிடையில் வேறுபாடுண்டு. ஒரு மத்ஹபு ஹலால் என்பதை இன்னொரு மத்ஹபு ஹராம் என்கிறது. இவ்வாறு கருத்து வேறுபாடுடைய மத்ஹபுகளை ஏன் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். புதிதாக இஸ்லாத்தினை ஏற்ற ஒருவன் இப்பிரிவினைகள்கண்டு குழம்பிவிடமாட்டானா?

குர்ஆன், ஹதீஸ் இரண்டுமே இஸ்லாம் என்பதை அவனுக்கு விளக்குவது எவ்வளவு சிரமமாகும். அவைகள் இரண்டும் பூரணத்துவமற்றவைகளா? நாயகத்தோழர்களின் இஸ்லாம் குறைபாடுடையதா? இவைகளைவிடப் பிற்கால இமாம்களின் மார்க்கத்தீர்ப்புக்கள் (பத்வா) மட்டுந்தானா இஸ்லாம்? இதன்காரணமாக முஸ்லிம்கள் பல பிரிவுகளாகப் பிரிந்துவிட்டனரே, இஸ்லாத்தில் பிரிவினைக்கு இடமுண்டா? அப்படியானால்,

"அல்லாஹ்வின் கயிற்றை எல்லோரும் பலமாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள், பிரிந்து விடாதீர்கள்" (3:103)

"மேலும் எவர்கள் தங்களிடம் தெளிவான அத்தாட்சிகள் வந்தபின்னரும் கருத்து வேறுபட்டுப்பிரிந்து விட்டார்களோ அத்தகையவர்களுக்கு மகத்தான வேதனையுண்டு" (3:105)

"நிச்சயமாக தங்கள் மார்க்கத்தைப் பலகூறுகளாகக் கூறுபோட்டு, பலகூட்டங்களாகப் பிரிந்து சென்றவர்களுக்கும் உமக்கும் எவ்விதத்தொடர்பும் கிடையாது" (6:159) ஆகிய வசனங்களின் கருத்துத்தான் என்ன? என்றெல்லாம் ஜமாஅத்துல் முஸ்லிமீன் அமைப்பினர் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாஅத்து முஸ்லிமீன்கள் இஸ்லாமிய வரலாறு (Islamic History) முழுவதையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்வதில்லை. நபி(ஸல்) அவர்கள் உயிர்வாழும் காலத்தில் அல்குர்ஆன் உடனுக்குடன் நாயகத்தோழர்களின் உள்ளத்தில் பதியப்பட்டதுடன் ஏறக்குறைய எழுத்துருவும் ஆக்கப்பட்டுவிட்டது. 3ஆவது கலிபா உதுமான்(ரழி) ஆட்சியின் முற்பகுதியில் அமைதியான சூழல் காணப்பட்டமையினால் அக்காலத்திலேயே குர்ஆன் தொகுக்கபட்டும் விட்டது. அதுபோன்று நபி(ஸல்) அவர்கள் மரணித்துச் சிறிது காலத்தின்பின்னர், உமையயக்கலிபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆட்சியின்போதே ஹதீஸ் தொகுக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஹதீஸ்கள் தொகுக்கப்படும்போது அவைகள் தூய்மையானதா (ஸஹீஹ்) பலவீனமானதா(ஹஸன்) போலியானதா(ழயீப்) என அறிவிப்பாளரின் தரத்திற்கேற்ப இனங்காணப்பட்டு மத்ன், ராவி, இஸ்னாத் ஆகிய துறைகள் பற்றி ஆராய்ந்து முஹத்திஸீன்கள் எனும் அறிஞர்கள் அல்ஹதீதைத் தொகுத்தார்கள். அல்குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் பிற்பட்ட வரலாற்றுச் சம்பவங்களைச் சரிகாண்பதற்கு இவ்வாறான வழிமுறைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக பகுத்தறிவு ரீதியாகச் சரியானவைகள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளவைகளெல்லாம் வரலாறுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதுமட்டுமன்றி இஸ்லாமிய வரலாற்று நூல்கள் பலவற்றை அந்நியமத அறிஞர்களே எழுதியுமுள்ளனர். ஆனால் ஹதீதுவிடயத்தில் அறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட அறிவிப்பாளர் தொடருக்கே(ராவி) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதன்காரணமாக இலட்சக்கணக்கான ஹதீதுகளிலிருந்து சிலஆயிரம் ஹதீதுகள் மட்டுமே இஸ்லாமிய மூலாதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவ்வாறு தரங்காணும் வழிமுறை, வரலாறுகளை எழுதுவதில் பின்பற்றப்பட்டமையினால் இஸ்லாமிய வரலாறானது இறையச்சம் (தக்வா) உள்ளவர்களைக்கூட இன, குலவெறியர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும், கொலைகாரர்களாகவுமே சித்தரித்துக்காட்டுகின்றது.

"ஒரு முஸ்லிம்குழு இன்னொரு முஸ்லிம் குழுவுடன் சண்டையிடுதல் இணைவைத்தலுக்குச் சமமானது" என்ற கருத்தில் நபி(ஸல்) அவர்கள் "உங்களில் சிலர் சிலரது கழுத்துக்களை வெட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து விடுவதன்மூலம் எனக்குப்பிறகு காபீர்களாக ஆகிவிடாதீர்கள்." என்று கூறினார்கள். (புகாரி)

ஆனால் வரலாற்று நூல்களைப் புரட்டிப்பார்த்தால் இஸ்லாமிய வரலாறானது கொலைக்கழுங்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன. பிற்கால வரலாற்றுச் சம்பவங்களை அறிவிப்போரினது தரம்பற்றிய ஆராய்ச்சி அவசியமில்லை என உணரப்பட்டதனால் வரலாற்றினை எழுதியவர்கள் தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள் காலத்தவர்களின் நன்னடத்தைகள்மீது கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டுச் சேறுபூசுகின்றார்களே இவைகளை நாம் நம்ப வேண்டுமா என முஸ்லிம் ஜமாஅத்தினர் கேட்கின்றனர். எனவே இஸ்லாமிய வரலாற்றினையும் ஹதீதைப்போன்று மத்ன், ஸனத், ராவி ஆகியவைகளைக் கவனத்திற்கொண்டு தொகுக்கவேண்டும் என்பது இவர்கள் கருத்தாகும். இப்பணியினை தாங்கள் தொடருவதாகவும் கூறுகின்றனர்.

பொதுவாக முஸ்லிம் ஜமாஅத்தினரின் கொள்கைகளைக் கீழ்க்காணுமாறு தொகுத்துக் கூறலாம்.

1. அல்லாஹ் அவன்மீது நம்பிக்கை கொண்டோருக்கு "முஸ்லிம்கள்" எனப் பெயர் சூட்டியுள்ளான். அல்லாஹ் சூட்டிய அப்பெயரை மாற்றி, அதில் குளறுபடி செய்யாமல் இயங்கிவரும் ஒரேயொரு அமைப்பு ஜமாஅத்துல் முஸ்லிமீன் மட்டுமேயாகும்.
2. ஈமான்கொண்டோருக்கு அல்லாஹ் "முஸ்லிம்கள்" எனப் பெயரிட்டதுபோன்று அவர்களின் அமைப்புக்கு "ஜமாஅத்துல் முஸ்லிமீன்" எனப் பெயரிட்டுள்ளான்.
3. இஸ்லாத்தின் கடமைகளைப் பேணி அதில் எவ்வித கூட்டலும் குறைத்தலுமின்றி அவைகளுக்குரிய அந்தஸ்தைக் கொடுக்கும் ஜமாஅத், ஜமாஅத்துல் முஸ்லிமீன் மட்டுமேயாகும்.
4. ஜமாஅத்துல் முஸ்லிமீனில் மட்டுமே தூய்மையான இஸ்லாம் மார்க்கம் (தூயவழிபாடு) இருக்கிறது. ஏனெனில் இந்த ஜமாஅத்தில் வேறு எந்த அறிஞர்கள், இமாம்களின் ஆதாரமற்ற தீர்ப்புக்கள், வரலாற்றுச் சம்பவங்கள், இஜ்மா∴, கியாஸ் போன்றவைகளுக்கு இடமில்லை. குர்ஆனும் ஹதீதுமே மார்க்க ஆதாரங்களாகக் கொள்ளப்படும்.
5. ஜமாஅத்துல் முஸ்லிமீன் மட்டுமே அந்த ஜமாஅத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையையும் ஏற்கமறுப்பது இறை நிராகரிப்பு (குப்ர்) எனத் தீர்ப்புவழங்குகிறது.

6. யூதர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரைப்பின்பற்றி நபி(ஸல்) அவர்களின் உம்மத்தினர் பல பிரிவுகளாகப் பிரிந்து, ஒவ்வொருபிரிவும் மக்களை நரகத்தின்பால் அழைப்புவிடும்காலத்தில் எந்தப்பிரிவினருடனுஞ் சேராது ஒரு கூட்டத்துடன் மட்டும் சேர்ந்திருக்குமாறு இறைதூதரினால் கட்டளையிடப்பட்ட அந்த ஜமாஅத், ஜமாஅத்துல் முஸ்லிமீன் மட்டுமே. வேறு எந்த இயக்கத்துடனும் சேர்ந்திருக்கும்படி நபி(ஸல்) அவர்கள் கூறவில்லை.

7. உம்மத்துக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்திருக்கும் காலத்தில் ஜமாஅத்துல் முஸ்லிமீனுடன் இணைந்திருக்கும்படி நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். எனவே எந்த நிலையிலும் ஜமாஅத்தைவிட்டுப் பிரிவதற்கு இஸ்லாத்தில் எவ்வித அனுமதியுமில்லை. அதில் சேராமல் மரணிப்பது அறியாமை (ஜாஹிலிய்யா) மரணமாகும்.

8. தங்களுடைய இயக்கத்திலன்றி வேறுஇயக்கங்கள், மத்ஹபுகள் ஆகியவைகளில் இருப்பது இஸ்லாத்தினை விட்டும் பிரிந்திருப்பதற்குச் சமனாகும்.

9. அல்லாஹ்வும் அவனுடைய றசூலும் ஒரு அமீருக்கு வழங்கியிருக்கும் அந்தஸ்தை அதேமுறையில் வழங்குவது ஜமாஅத்துல் முஸ்லிமீன்மட்டுமே.

10. இஸ்லாத்தினை ஏற்கவிரும்பும் ஒருவர் ஜமாஅத்துல் முஸ்லிமீனுள் நுழைந்து அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு, அமீருக்குக் கட்டுப்பட்டு விசுவாசமாக நடக்க முன்வந்தால் அதற்கு அடையாளமாக அமீரிடம் உறுதிபூணல் (பைஅத்) கடமையாகும்.

இன்று இலங்கையில் ஜமாஅத்துல் முஸ்லிமீன் பலரின் வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் இயங்கிவருவதை அவதானிக்கலாம். முஸ்லிம்கள் கூட்டமைப்பினைக்கொண்ட ஆட்சி இலங்கை போன்ற ஒரு"குப்ர்" நாட்டில் உருவாகமுடியாது. நபி(ஸல்) அவர்கள் மக்காவில் வாழும்போது முஸ்லிம்களின் கூட்டமைப்பு (ஜமாஅத்) ஒன்றை உருவாக்க முடியவில்லை. மதினா நகர்சென்று மஸ்ஜிதுந் நபவியை அமைத்த பின்னரே ஆட்சியதிகாரமுடைய முஸ்லிம் ஜமாஅத் ஒன்றை உருவாக்க முடிந்தது. இந்த நிலையில் இலங்கையில் எவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாஅத்துல் முஸ்லிமீன் உருவாகமுடியும் என எதிர்க்கருத்துடையோர் கேட்கின்றனர். ஆட்சியதிகாரமற்ற இலங்கையில் (குப்ர் நாட்டில்) ஜமாஅத்துல் முஸ்லிமீன் இருக்க முடியாது. அதாவது ஒரு குப்ர் நாடும் ஜமாஅத்துல் முஸ்லிமீனும் ஒன்றாக இருக்க முடியாது. காபிருடைய ஆட்சி நடைபெறும் நாட்டில் இறைநிராகரிப்பும் குழப்பங்களுமே(பித்னா) காணப்படும். பித்னாவுக்கு எதிரான போராட்டம் நபி(ஸல்) அவர்கள் மதினா சென்ற பின்னரே ஆரம்பமாகியது. மக்காவில் இருந்தது தனிநபர் கூட்டேயன்றி ஜமாஅத்து அல்ல.

ஜமாஅத்துல் முஸ்லிமீன் அல்லாஹ்வினால் தோற்றுவிக்கப்பட்டதாகும். அதன்பணி நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தலாகும். அது பூமிக்கே அதிபதியானது. எவருக்கும் பயந்ததொரு அமைப்பல்ல. இணை வைத்தலுக்கு எதிராகப் போராடும் ஒரு மாபெரும் தாபனமேயன்றி ஒரு சிறு முஸ்லிம் குழுவல்ல. தம்மால் பாதுகாப்பும் உத்தரவாதமும் வழங்கப்பட்ட கூட்டத்தையே அல்லாஹ் "ஜமாஅத்" என்கின்றான். மக்காவில் இறங்கிய எந்த அல்குர்ஆன் வசனம் மூலமும் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படவில்லை. அது தொடர்பான குர்ஆன் வசனங்கள் மதினாவிலேயே இறங்கின. ஆரம்பத்தில் மக்கா ஒரு "குப்ர்" நாடாகக் காணப்பட்டமையினால் அங்கு முஸ்லிம்கள் தனிமனிதர்களாகவே வாழமுடிந்தது. ஜமாஅத்துல் முஸ்லிமீனை உருவாக்குவதென்பது பெரியதோர் விடயமாகும். அதற்காக நபி(ஸல்) அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். நாமும் அயராது பாடுபட்டு உழைத்தால் எதிர்காலத்தில் உலகில் உருவாக்க முடியும். அண்மைக்காலமாக அரபியத்தேசியவாதம் வளர்ச்சியடைந்து வருவதனால் ஜமாஅத்துல் முஸ்லிமீன் உலகளாவிய ரீதியில் உருவாவதற்குரிய காலமும் வெகுதூரத்திலில்லை. அதைவிட்டு இன்று தம்மை ஜமாஅத்துல் முஸ்லிமீன் எனக்கூறிக் கொள்பவர்கள் அது உருவாவதற்கு மூன்றுபேர் மட்டும் இருந்தாலும் போதும் எனக்கூறி ஏனையோரை காபிர்(இறைநிராகரிப்போர்) என்பது காத்திரமான செயலல்ல என எதிரணியினர் வாதாடுகின்றனர்.

அதேநேரம் ஜமாஅத்துல் முஸ்லிமீன் அமைப்பைச் சேர்ந்தோர் "நீங்கள் பிரியாதீர்கள்" (வலாதத்தபற்றகூன்) என அல்லாஹ் மக்காவில்வைத்தே குறிப்பிட்டுள்ளான். மக்காவில் வைத்து முஸ்லிம்களுக்கு ஐங்காலத்தொழுகை விதிக்கப்பட்டபோதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகளின் இம்சையினால் பகிரங்கமாகத் தொழுவதற்கு வாய்ப்பிருக்கவில்லையே தவிர ஜமாஅத்தாகத் தொழக்கூடாது என்பது பொருளல்ல. அதேபோன்று நபி(ஸல்) அவர்கள் மக்காவில் அர்க்கம்(ரழி) அவர்கள் வீட்டில் வைத்துத் தம்தோழர்களிடம் "பைஅத்" பெற்றதற்கும் ஆதாரமுண்டு என வாதிடுவதுடன் ஜமாஅத்துல் முஸ்லிமீனும் இல்லையென்றால் பிரிவினையும் "ஷிர்க்" என்றால் சுவர்க்கஞ் செல்வோர் யார்? நம்நாட்டில் ஜமாஅத்துக்கள் (தப்லீ., தவ்ஹீத், ஜமாஅதே இஸ்லாமி....) எனப் பெயர்தாங்கிப் பல இயக்கங்கள் உள்ளனவே அவைகளின் நிலை என்ன? என்று எதிர்வாதம் புரிகின்றனர்.

இலங்கையில் காபிர்களுடைய ஆட்சி நடைபெறுவதனாலும் இயக்க மோகமும் மோதல்களும் காணப்படுவதனாலும் ஜமாஅத்துல் முஸ்லிமீன் உருவாக முடியாதுள்ளது. பொதுவாக எல்லா இஸ்லாமிய நிறுவனங்களும் முஸ்லிம் ஜமாஅத் ஆட்சி உருவாகவேண்டும் என்பதில் கருத்தொருமித்தேயுள்ளன. ஆனால் ஜமாஅத்தே முஸ்லிமீனின் கொள்கையை முழுமையாக முன்வைக்கக்கூடிய குழுக்கள் எங்கும் உருவாகவில்லை எனச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். மேலும் அவர்கள் மனிதன் (முஸ்லிம்) தனியே இருக்காமல் கூட்டாகச் சேர்ந்து வணக்கங்களையும் (அமல்) சேவைகளையும் செய்வதற்காக உருவாக்கப்பட்டனவே இயக்கங்களின்றி சமூகத்தைக் கூறுபோடுவதற்காகவல்ல என்று கூறித் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் ஜமாஅத்துல் முஸ்லிமீன் தேவையில்லை என்று எவருமே கூறவில்லை.

ஜமாத்துல் முஸ்லிமீன்கள் "பைஅத்" பற்றிக் கொண்டிருக்கும் கருத்தையும் எல்லோரும் ஏற்பதில்லை "பைஅத்" எனும் உறுதிமொழி அவசியங்கருதி இருவருக்கும் இடையில் அல்லது இரு குழுக்களுகிடையில் தற்காலிகமாகச் செய்யப்படும் ஒப்பந்தமேயன்றி நிரந்தரமானதொன்றல்ல. இதற்குச்சான்றாக சில வரலாற்று நிகழ்வுகளையும் கூற முடியும்.

நபி(ஸல்) அவர்கள் மரணித்ததும் ஆட்சித் தலைவராக யாரை நியமிப்பது என்பது பற்றி சர்ச்சை ஏற்பட்டது. ஈற்றில் அபூபக்கர்(ரழி) அவர்களை நியமிப்பதென நாயகத் தோழர்கள் தீர்மானித்தனர். இதனை அபூபக்கர் (ரழி) அவர்களிடம் கூறிய போது "நீங்கள் சகலரும் உறுதிமொழி வழங்கினால் நான் ஏற்றுக் கொள்வேன் என்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி அங்கிருந்தோர் உறுதிமொழி (பைஅத்) யளித்துக் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஹுதைபிய்யா உடன்படிக்கை தொடர்பாக உதுமான்(ரழி) அவர்கள் மக்காக் குறைஷிகளிடம் சென்றிருந்த போது அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்ற செய்தி பரவியதும் நபி(ஸல) அவர்கள் தம் தோழர்களை அழைத்து "ஒன்றில் வெற்றி அல்லது மரணம் வரும்வரை பின் வாங்குவதில்லை" என சத்தியச் செய்து எனக்கு வாக்குறுதி தாருங்கள் எனக்கூறிய போது, அங்கிருந்த எல்லாத் தோழர்களும் றஸுலுல்லாஹ்வின் கையைப்பிடித்து வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் சம்பவம் நடந்து மூன்றாம் நாள் உதுமான்(ரழி) அவர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள். அத்துடன் வாக்குறுதியும் (பைஅத்) முடிந்து விட்டது. இதிலிருந்து ஒரு பிரச்சனை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டால் பைஅத்தும் முடிந்து விடும் என்கின்றனர்.

ஆனால் அல்லாஹ்வின் தூதர் என்ற வகையில் முஹம்மத் நபி(ஸல்) அவர்களிடம் சிலர் பைஅத் செய்தனர். இது சற்று வித்தியாசமானது. அதாவது களவு செய்த, விபச்சாரத்தில் ஈடுபட்ட சிலர், இனி அவ்வாறான தவறுகள் செய்யமாட்டோம் என உறுதி அளித்தனர். இவை அல்லாஹ்விடம் செய்வதற்குச் சமமானவை எனக்கருதப்பட்டது. இதை ஏன் ஒரு தனி மனிதனிடம் செய்ய வேண்டும் என ஜமாஅத்துல் முஸ்லிமீன் அமைப்பினரை நோக்கிப் பலரும் கேட்கின்றனர்.

இலங்கையிலுள்ள மேற்படி ஜமாத்தினர் எடுத்தற்கெல்லாம் தீவிரம் காட்டுவதும் அவர்களை ஏனையோர் எதிர்ப்பதற்கும் முக்கிய காரணமாகும். முஸ்லிம் ஜமாத் கோட்பாட்டினை மக்கள் முன் விளங்கப்படுத்தி பொறுமையுடன் அழைப்புப் பணியை மேற் கொள்வதற்குப் பதிலாக தம்முடன் ஒத்துவராதவர்களை ஆரம்ப கால காரிஜீன்கள், போன்று திடீரென "காபிர்" எனக் கூறிவிடுகின்றனர். மேலும், மறுமை வாழ்வுக்குக் கொடுக்கம் அழுத்தத்தினை இம்மை வாழ்வுக்கும் கொடுக்கத் தவறி விடுகின்றனர். இம்மை வாழ்க்கையை மறுமை வாழ்க்கையின் விளை நிலமாகக் கொண்டு தான் றஸுலுல்லாஹ் தம் வாழ்க்கையை அமைத்திருந்தார்கள்.

முஸ்லீம்களைப் பொறுத்த வரையில் முஸ்லிம் ஜமாத் உருவாக வேண்டும் என்பதை எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாடுடையவர்களாகவே காணப்படுகின்றனர் ஆனால் எவ்வாறு உருவாக்குவது என்பதிலே தான் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இதற்கான முடிவினை காலம் தான் தீர்மானிக்க வேண்டும்.

தப்லீக் ஜமாத்தினரைப் போன்று இலங்கை ஜமாஅத்துல் முஸ்லிமீன்களும் ஆளணி பற்றாக்குறை, நிதி பெறும் வழிகளுக்கான வெளிநாட்டு தொடர்பின்மை, ஆன்மீக வாழ்க்கை மட்டும் இலக்காக கொண்ட வாழ முனைதல் போன்ற காரணங்களினால் சமூக சேவை **(Social Activities)** யில் ஈடுபாடில்லாமல் இருப்பதையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது.

✻✻✻✻✻

REFERENCE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜமாஅதே இஸ்லாமி

1953 ஆம் ஆண்டு மே மாதம் எட்டந் திகதி, பாகிஸ்தானிலுள்ள லாகூர் சிறைச்சாலையில் விசாரனையொன்று ஆரம்பமாகி பதினோராந் திகதி முடிவடைகின்றது. 'பாகிஸ்தான் ஆளும் முஸ்லிம் லீக், தயாரிக்கும் அரசியல் யாப்பு முழுமையாக அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகியவைகளை மூலாதாரமாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆட்சியாளர்கள் கூறுவது போன்று யாப்பானது மதச்சார்பற்றதாக இருத்தல் கூடாது' எனும் கருத்துப்பட 'த டெய்லி தஸ்னீம்' எனும் பத்திரிகையில் அறிக்கை விட்டதற்காகவும், அன்றைய ஆட்சியாளரின் செல்லப் பிள்ளைகளாக - பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பொம்மைகளாகவிருந்த காதியானிகளுக்கு எதிராக 'காதியானிகள் பிரச்சினை' எனும் நூலை எழுதி வெளியிட்டமைக்காகவும் மவுலானா ம.்.தூதி(ரஹ்) அவர்களுக்கு எதிராக நடைபெற்ற விசாரனையே அது. விசாரனை முடிவில் மவுலானா அவர்களுக்கு, பத்திரிகையில் அறிக்கை வெளியிட்ட குற்றத்திற்காக ஏழுவருடச் சிறைத் தண்டனையும், காதியானிகளுக்கு எதிராக நூல் எழுதிய குற்றத்திற்காக மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. இம்முடிவு கேட்டு அங்கு கூடி நின்ற மக்கள் ஆத்திரமடைந்த நிலையில் மவுலானா அவர்களை நோக்குகின்றனர். அகன்ற நெற்றி, அறிவு நிறைந்த கூரிய கண்கள், வெண்ணிற தாடி கொண்டு விசாரனைக்காக கூண்டில் நின்ற மவுலானா ம.்.தூதியின் வதனத்திலிருந்து ஒரு மெல்லிய புன்முறுவலுடன் "மிக்க நன்றி" என்ற வார்த்தை மட்டுமே வெளியேறியது. அதே நேரம் இந்நிகழ்வானது இஸ்லாமிய உலகை பெரும் உலுக்கு உலுக்கிவிட்டது.

1953 மே மாதம் பன்னிரண்டாந் திகதி பத்திரிகைகளெல்லாம் இது பற்றி கொட்டை கொட்டையாக எழுதத் தொடங்கின. மவுலானாவுக்கு இத்துன்பியல் முடிவினை ஏற்படுத்திக் கொடுத்த பாகிஸ்தான் ஆளுநர் குலாம் முகம்மதுவைத் திட்டித் தீர்த்தன. சூழவுள்ள நாடுகளிலிருந்து மட்டுமன்றிப் பிற நாடுகளிலிருந்தும் பாகிஸ்தான் ஆளுநர், பிரதமர், படைத்தளபதி ஆகியோரை நோக்கி ஆயிரக்கணக்கான தந்திகள் பறந்து வருகின்றன. கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடிருப்பினும் மவுலானா ம.்.தூதியின் குணவியல்புகளினால் ஆகர்சிக்கப்பட்ட ஷீஆத் தலைவர் முஹம்மது அல்கஸ்லி, எகிப்தின் இ.்.வானுல் முஸ்லிமீனின் தலைவர் முப்தி செய்யது அமீன் அல் ஹுஸைனி ஆகியோரிடமிருந்தெல்லாம் கண்டன அறிக்கைகள் பாகிஸ்தான் ஆளுநருக்கு வருகின்றன. மவுலானாவுக்கு வழங்கிய தீர்ப்பானது உலகத்தினை இந்தளவுக்கு உலுக்குமென எதிர்பாராத பாகிஸ்தான் அரசு நிலைகுலைந்து தடுமாறுகின்றது. ஈற்றில் மவுலானாவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை, ஆயுள் தண்டனையாக மாற்றப்படுகின்றது. அப்பொழுதும் கண்டனங்கள் சிறிதும் குறையவில்லை. பின்பு வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட்டு உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி இருவருடங்களின் பின்னர் 1955 ஏப்ரல் 29 ஆந் திகதி மவுலானா ம.்.தூதி(ரஹ்) புன்முறுவல் பூத்த முகத்துடன் சிறையிலிருந்து வெளியேறுகின்றார். இம்மாபெரும் மனிதரே இன்றைய ஜமாஅதே இஸ்லாமியின் தாபகத் தலைவராகும்.

மவுலானா ம.்.தூதி(ரஹ்), ஹைதராபாத்திலுள்ள அவ்ரங்கபாத் எனும் கிராமத்தில் 1903 செப்டம்பர் மூன்றாந் திகதி பிறந்தார். அவரின் தந்தை சிறந்த அறிஞராகத் திகழ்ந்தமையினால் அன்னாரிடமே மவுலானா ஆரம்பத்தில் அரபு, பாரசீகம் ஆகிய மொழிகளைக் கற்றதுடன் சட்டக்கலை (பிக்ஹு) யிலும் தேர்ச்சி பெற்றார். தனது பதினைந்தாவது வயதில் தந்தையை இழந்தார். இருபத்தியைந்தாவது வயதில் இந்திய உபகண்டத்தில் புரையோடிக் காணப்பட்ட காந்தியவாதத்தினை எதிர்த்து "ஜிஹாத்" எனும் நூலை எழுதி வெளியிட்டார். இந்தியா சுதந்திரமடைந்ததும் ஒரு முஸ்லிம்நாடு (பாகிஸ்தான்) உதயமாவதைப் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் விரும்பாமல் காதியானிகளைத் தம் வசமாக்கிக் கொண்டு இஸ்லாத்துக்கு எதிராகக் குழிபறிக்கத் தொடங்கினர். ஆனால் இளம் வயதிலேயே இஸ்லாமியப் பற்றுக் கொண்ட மவுலானா ம.்.தூதி(ரஹ்) "முஸ்லிம்களுக்கு இஸ்லாம்தான் வாழ்க்கைத் திட்டமாக அமைய வேண்டும்" எனும் இலட்சியத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாகப் பத்தரிகைகளில் எழுதத் தொடங்கினார். அன்னாருக்குத் தம்பணியைத் தொடர ஒரு அமையம் காலத்தின் தேவையாயிற்று. அதன் அடிப்படையில் 1947 இல் ஹைதராபாத்-லாகூரில் மவுலானா ம.்.தூதியினால் தாபிக்கப்பட்டதே ஜமாஅதே இஸ்லாமியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம்வயதிலேயெ எழுத்துத் துறையில் பிரவேசித்த மவுலானா, பத்திரிகைக் குழுவொன்றினை அமைத்து அக்குழுவின் நோக்கம் இஸ்லாத்தினை எத்திவைத்தலும், இஸ்லாமிய எழுச்சிக்காகப் போராடுவதுமாகும் எனச் சூழுரைத்தார். 1933 இல் இவர் தமது 'தர்ஜுமதுல் குர்ஆன்' எனும் சஞ்சிகையில் எழுதிய கட்டுரைகள் மிகமுக்கியமானவை. இச்சஞ்சிகை மூலம் அன்னாரின் சிந்தனை இந்தியா முழுவதும் பரவியது. மவுலானான அல்குர்ஆன், அல்ஹதீஸ், இஸ்லாமிய சட்டக்கலை, தத்துவக்கலை, பொருளியல் முதலிய சகல துறைகளிலும் புலமையுடையோராகத் திகழ்ந்தார். ஆன்மீகம், ஒழுக்கவியல் பற்றியெல்லாம் எழுதினார். அவரின் முயற்சியினாலேயே பாகிஸ்தான் குடியரசுச் சட்டக்கோவையின் முன்னுரையில் "இஸ்லாமியப் போதனைகளுக்கமைய பாகிஸ்தானின் இறைமை முழுமையாக அல்லாஹ்வுக்கே உரியது" எனும் வாக்கியம் பொறிக்கப்பட்டது. 1971 இல் பாகிஸ்தான் பிரிபட்டபோது (பாகிஸ்தான்-வங்காளதேஸ்) இவர் மிகவும் கவலையடைந்தார். 27-02-1979இல் இஸ்லாமியத் தொண்டுக்கான "மலிக்பைஸல்" விருதினைப் பெற்ற மவுலானா ம:.தூதி(ரஹ்) 22-09-1979 இல் இடம்பெற்ற சத்திரசிகிச்சையொன்றின் பின்னர் நியூயோர்க்கில் மரணமானார்.

மவுலானா ம:.தூதி(ரஹ்) ஆரம்பகாலத்திலிருந்தே ஜமாஅத் எனும் கூட்டமைப்பு பற்றி வலியுறுத்தி வந்துள்ளார். நபிமார்கள், தோழர்கள், இமாம்கள், இறைநேசர்கள் முதலானோர் தூய இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்தது போலவே ஜமாஅதே இஸ்லாமியும் அழைக்கின்றது. ஒரு தனிப்பட்ட மனிதனால் இஸ்லாத்தினை முழுமையாக விளங்கிப் பின்பற்ற முடியாது. அவனை அறியாமலே இறைநிராகரிப்பு (குப்ர்) அறியாமை (ஜாஹிலியத்) என்பன புகுந்தவிடும். எனவே ஒரு முஸ்லிம் தம்கடமையை உணர்ந்து அவைகளை நிறைவேற்றி மார்க்கத்தைப் பின்பற்ற ஜமாஅத் எனும் கூட்டமைப்பு அவசியமாகும் என்றார். ஆதாரமாக மவுலானா, "எவன் ஒரு சாண் அளவேனும் ஜமாஅத்தை விட்டு விட்டு வெளியேறி விடுகின்றானோ நிச்சயமாகத் தனது சமூகத்திலிருந்து அவன் இஸ்லாத்தின் வளையத்தைக் கழற்றிவிட்டான்." எனும் தொடருடைய பொன்மொழியைக் குறிப்பிட்டு நீங்கள் எங்களுடைய ஜமாஅத்தில் சேருங்கள், அல்லது வேறொரு ஜமாஅத்தில் இணையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாவிடில் நீங்கள் தானாகவே முன்வந்து ஒரு ஜமாஅத்தை ஆரம்பியுங்கள். ஏதோவொரு வழியைப் பின்பற்றினாலே மார்க்கம் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும் என இஸ்லாமிய இளைஞருலகுக்கு அறிவுரை வழங்கினார்.

மனிதன் இறையச்சமின்றி எந்தச் செயல்கள் ஷரீஆவுக்கு முரணானவைகள் எனத் தெரிந்தும் அவைகளைச் செய்து கொண்டும் எந்தச் செயல்கள் நன்மையானவை என ஆதிமுதல் அறிந்திருந்தும் அவைகளைப் புறக்கணித்தும் வருகின்றோனா அப்பொழுதே பிரச்சினைகள் தோன்றுகின்றன. இந்த அவலநிலையை இல்லாமற் செய்த ஜமாதே இஸ்லாமி நாட்டு மக்களின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பித் தாமாகவே நற்காரியங்களைச் செய்யக் கூடிய உணர்வுகளை அவர்களுள் தோற்றி வைப்பதாக கூறுகின்றது. இந்த அடிப்படையில் இவ்வியக்கங்களின் முக்கிய குறிக்கோள் அல்லாஹ்வை மட்டும் வணங்கக்கூடிய ஒரு முக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதாகும். "வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ் மட்டுமே. அவனுடைய இறுதித் தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களாகும்" என்ற கலிமாவை ஏற்று றஸூலுல்லாஹ்வின் சுன்னாவைப் பின்பற்றி முழு மனிதனாகவாழ உதவுவதாகும்.

இறையச்சம், இறைவணக்கம் கொண்ட தூய நிலைஎன்பன முஸ்லிம்கள் மத்தியில் உருவாக்குதல் வேண்டும். இறைவனின் அன்பையும், அருளையும் பெற்றுத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவனையே வணங்க வேண்டும். இணைவைத்தல் கூடாது. மற்றவர்களின் உரிமைகள், கடமைகள் ஆகியவைகளை மதித்து நடத்தல் வேண்டும். எவருக்கும் அநீதி விளைவிக்கக்கூடாது. இன பேதம் இருக்கக் கூடாது. நாட்டிலிருந்து வறுமை, வேலையின்மை, அறியாமை மற்றும் மனிதவர்க்கத்துக்கு தாழ்வு ஏற்படும் சகலதும் நீக்கப்படல் வேண்டும். மது, சூது, வட்டி போன்றவைகளின் தீமைகளிலிருந்து மனிதன் விடுபடல் வேண்டும். தூய்மையான சிந்தனை ஏற்படல் வேண்டும். உண்மை, வாய்மை, நேர்மை, என்பன மேலோங்க வேண்டும். சகலருடைய அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படல் வேண்டும். இம்மை வாழ்வின் மூலமே மறுமைப் பேற்றினை அடைதல் வேண்டும். போன்ற விழுமியங்களையே கலிமா அடக்கியுள்ளபடியால், அதே விளக்கங்களையே தாங்களும் கொண்டிருப்பதாக ஆரம்பகால ஜமாத்தினர் கூறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், சகலரும் சகோதரத்துவமும் அன்பும், பரஸ்பரம் கலந்தாலோசிக்கும் உயர்பண்பும், கட்டுப்பாடும் குறைகளை விமர்சனஞ்செய்து நல்லதைத்தேடும் விசால உள்ளமும் உடையோராகவும் எல்லா விடயத்திலும் அல்லாஹ்வை சார்ந்திருத்தலுடன் மறுமை பற்றிய கவலை, களங்கமற்ற ஒழுக்கப்பண்பு பொறுமை, விவேகம், அன்பு ஆகியன உடையோராகவும் அகந்தை, பகட்டு, தூய்மையற்ற சிந்தனையற்றோராகவும் ஜம்இய்யா உறுப்பினர் ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும்மெனவும் மவுலானா ம:்.தூதி வலியுறுத்தினார்.

மேற்படி நோக்கங்களை அடையும் நோக்குடனேயே ஜம்இய்யா தோன்றிய இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பயிற்சிப் பாசறைகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் என்பன நடாத்தியும், நூலகங்கள் உருவாக்கியும் நவீன சாதனங்களின் துணைகொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தேவையான முடிவுகள் யாவும் ஜம்இய்யாவின் மத்திய அமைப்பு முதல் பிரதேச அமைப்புக்கள் வரை ஜனனாயக முறையிலேயே எடுக்கப்படுகின்றன. சீர்திருத்தமானது தனிமனிதனில் ஆரம்பமாகி குடும்பம், ஏனைய முஸ்லிம்கள் என விசாலித்துச் செல்வதாகவும் இவ்வமைப்பினர் கூறுகின்றனர். கல்வியானது ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, பயிற்சிக்களங்கள், முதியோர் கல்வி எனப் பரவலாக்கப்பட்டுள்ளது. அல்குர்ஆன், சுன்னா, இஸ்லாமியவரலாறு என்பன அவ்வப்பிரதேசத்தில் வழக்கிலுள்ள மொழிகள்மூலம் அச்சிட்டு விநியோகிக்கப்படுகின்றன. முஸ்லிம் தனியார் சட்டம், வக்புச் சட்டங்கள் என்பன பாதுகாக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் மத்தியில் தோன்றிய பிரச்சினைகள் 'ஷரீஅத்' அடிப்படையில் தீர்த்துவைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் "சமரசம்" எனும் தமிழ் சஞ்சிகை வெளியிடப்பட்டு த:்.வாப்பணி நடைபெறுகின்றது) தாமாகவும் மக்களின் ஒத்துழைப்புடனும் "பைதுல்மால்" எனும் பொது நிதியங்கள் நிறுவி வட்டியில்லாக் கடன், விதவை, நோயாளி மற்றும் ஏழைஎளியோருக்கு உதவுதல் போன்ற இன்னோரன்ன சேவைகளையும் ஜம்இய்யா செய்துவருகின்றது.

இலங்கையில் ஜமாஅதே இஸ்லாமி 1947 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதனை இங்கு அறிமுகஞ் செய்து முதலாவது அமீராக (தலைவர்) இருந்தவர், காயல்பட்டணத்தைச் சேர்ந்த அல்ஹாஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஏ. ஜெய்லானி என்பவராகும். அவர் "தர்ஜுமதுல் குர்ஆன்" சஞ்சிகை விற்பனைக்காக இலங்கை வந்தவராகும். கொழும்பிலுள்ள பள்ளிவாசல்களில் குர்ஆன் விளக்கம், மவுலானா ம.்.தூதியின் சிந்தனைகள் பற்றிய சொற்பொழிவுகள் ஆகியன நடாத்துவதிலும் ஈடுபட்டார். இவ்வாறான ஈடுபாடுகள் காரணமாக இலங்கையின் இலங்கையின் அமீராக நியமிக்கப்பட்டு ஆறு வருடங்கள் கடமையாற்றினார்.

ஆரம்ப காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அல்குர்ஆன் என்பது "ஓதுவதற்காக மட்டுமே உரியது" எனும் தவறான பதிவு இருந்தது. அவ்வாறான சூழலில் ஜமாஅதே இஸ்லாமியினர் குர்ஆன்-ஹதீஸ் வகுப்புக்களை நடாத்திய போது 'இதென்ன புதிய வழிமுறையொன்றைக் கொண்டு வந்துவிட்டார்கள்' எனக் கூறிப் பலர் எதிர்த்தபோதிலும் படிப்படியாக அவ்வெதிர்ப்புக் குறையத் தொடங்கியது. ஆயினும் இன்றும் தப்லீ.். ஜமாஅத்தினரின் சில மஹல்லாக்களில் இது விடயமாக இரு பிரிவினர்களுக்குமிடையே பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருபதையும் நாம் காணலாம்.

இயக்க ஆரம்பத்தில் இலங்கையில் அதன் வளர்ச்சி குறுகிய நிலைப்பாடுடையதாகவே காணப்பட்டது. சான்றாக ஈரானியப் புரட்சி (1976) நடைபெற்றபோது, 'அது இஸ்லாமியப் புரட்சி தானே ஏன் ஆதரவு நல்கக் கூடாது' என்ற கருத்து அன்றைய அமீர் யூசுப் ஹாஜியார் உட்பட ஜம்இய்யாவைச் சேர்ந்த பலரிடம் காணப்பட்டது. அதன் காரணமாக அமீருடன் சேர்ந்து பலர் ஜமாஅத்திலிருந்து பிரிந்து சென்றதைக் கூறலாம். அவ்வாறு சென்றோருள் சிலர் தப்லீ.். ஜமாஅத்துடன் இணைந்தனர். பின்னர் (அகீதாவுக்கு முரணான) ஈரானின் அடிப்படைக் கோட்பாட்டினை விளங்கிக் கொண்டு மீண்டும் சிலர் ஜமாஅத்தில் இணைந்து கொள்ள ஜம்இய்யா புதியதோர் தலைமைத்துவத்துடன் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இருந்தும் இன்று கூடச் சில கொள்கைச் சகோதரர்கள் 'ஷீயா' சார்புச் சஞ்சிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவதும் வருந்தத்தக்க செயலே.

இலங்கையிலுள்ள ஜமாஅதே இஸ்லாமியினர் தாங்கள் 'அஹ்லுல் ஸுன்னத் வல் ஜமாஅத்' கொள்கையிலிருந்து வேறுபட்டவர்களல்ல. ஏகத்தவ அழைப்பு, குர்ஆன், சுன்னா ஆகியவைகளைப் பின்பற்றல், மனித வாழ்வில் ஷரீஆவை நடைமுறைப்படுத்தல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களையே தாங்களும் கொள்கையாகக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். மவுலானா ம.்.தூதி(ரஹ்) "இஸ்லாம் என்பது வெறும் தத்துவார்த்த சிந்தனையைக் கொண்டதல்ல. அது ஒரு பூரண வாழ்கைத் திட்டமாகும்." என்ற கருத்துடையவர். எனவேதான் தமது பிரச்சாரப் பணியினை மனிதனின் சிந்தனையைத் தூய்மைப்படுத்தல், தனிநபர் சீர்திருத்தம், சமுதாயச் சீர்திருத்தம் ஆகிய படித்தரங்களில் முன்னெடுத்துச் சென்றார். அத்துடன் அவருடைய முயற்சிகள் இந்திய மக்களின் இனவாத சிந்தனைக்கு எதிரானதானவும் மேற்கத்திய நாகரிகத்தின் ஆதிக்கத்திற்கு எதிரானதாகவும் இருந்ததை அவதானிக்கலாம்.

இணைவைத்தல் (ஷிர்க்) எனும் பீடையை நீக்குவதில் மவுலானா ம.்.தூதி அவர்கள், காலஞ்சென்ற அறிஞர் அஷ்ஷெய்க் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப்(ரஹ்) அவர்கள் கொண்ட பற்றுதியில் தாக்கமடைந்திருந்ததையும் அவருடைய சொற்பொழிவுகள், சிந்தனைகள், நூல்கள் மூலம் அறியலாம். இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களாக அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகியவைகளைக் கொள்வதுடன் அடிப்படை நம்பிக்கைக்கு முரணற்ற முறையிலமைந்த இமாம்களுடைய கருத்துக்களை ஏற்பதிலும் உறுதியுடையோராகக் காணப்பட்டார். இவ்வாறான சிந்தனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஜம்இய்யாவினை வளர்ப்பதற்கு ஜம்இய்யா உறுப்பினர்கள் தம் கொள்கையில் பலமானவர்களாக இருந்தால் மட்டும் போதாது, தமது தனிப்பட்ட பண்புகளிலும் நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல் வேண்டும். பிரச்சார ஒழுங்குகளும் நேர்த்தியானதாக, கவனக்குறைவும் பொடுபோக்குமற்றதாக இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. மேற்படி ஜம்இய்யாவின் சிந்தனைகளைத் தாங்களும் நடைமுறைப்படுத்தி வருவதாக இலங்கை ஜமாஅதே இஸ்லாமி கூறுகின்றது. ஜம்இய்யாவானது சிறந்த பிரச்சாரகர்களை உருவாக்கும் நோக்குடன், மாதம்பை என்னுமிடத்தில் ஆண்களுக்கான அரபிக்கலாசாலை (இஸ்லாஹியா) ஒன்றையும் பெண்களுக்காக புத்தளத்தில் ஒரு கலாசாலையும் நடாத்திவருகின்றது. இவையிரண்டிலும் க.பொ.த.(சாதாரண) பரீட்சை சித்தியடைந்த இருநூறுக்கும் குறையாத மாணவ மாணவியர் கற்கின்றனர். இங்கு மார்க்கக் கல்வியைக் கற்று வெளியேறிய பலர், இலங்கையின் சர்வகலாசாலைகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் தம் உயர் கல்வியைத் தொடர்கின்றர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
நகர சபை

ஜமாஅதே இஸ்லாமியின் தலைமையகம் ஆரம்பத்தில் "தாருல் அர்க்கம்" என்ற பெயரில் கொழும்பு-தெமட்டகொட வீதியில் இயங்கி வந்தது. இன்று அது ஜம்இய்யாவின் நிர்வாக வசதி கருதி ஜமாஅதே இஸ்லாமி புத்தக நிலையம் அமைந்துள்ள கட்டத்தின் இரண்டாவது மாடியில் செயற்பட்டுவருவதை நாம் காணலாம். ஜமாஅதே இஸ்லாமி புத்தக நிலையம், ஜம்இய்யா உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி, இலங்கை வாழ் பெரும்பாலான இளைஞர்களின் அறிவுப் பசிக்குத் தீனிபோடும் மையமாகவும் பிரகாசிப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்த ஜம்இய்யாவானது பிரச்சார (த.'.வா) நோக்குடன் தகுதியான எழுத்தாளர்களின் நூல்களையும், மவுலானா ம.'.தூதியின் சிந்தனைத் துளிகளைச் சிறுசிறு கைநூல்களாகவும் அடிக்கடி வெளியிடுவதையும் நாம் அவதானிக்கலாம்.

ஒரு இயக்கத்தின் வளர்ச்சியில் பெரும்பகுதி அதன் தலைமைத்துவத்தின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது என்பதை யாவரும் அறிவர். அல்ஹாஜ் யூசுப் அவர்களின் பின்னர் நீண்ட காலத்துக்கு ஜமாஅதே இஸ்லாமியின் தலைமைப் பதவியை அலங்கரித்தவர் சகோதரர் மவுலவி ஏ.எல்.எம். இப்றாஹீம் அவர்களாகும். ஈரானியப் புரட்சியின் (1976) போது முஸ்லிம்கள் மத்தியில் ஈரானுக்கு ஆதரவு கொடுப்பதா இல்லையா எனும் சர்ச்சை ஏற்பட்ட போது அது இலங்கை ஜமாஅதே இஸ்லாமியையும் வெகுவாகப் பாதித்தது. அதனால் சீர்குலைந்த ஜம்இய்யாவை மீண்டும் ஒரு கட்டமைப்பின் கீழ்க் கொண்டவந்த பெருமை சகோதரர் மவுலவி இபுறாஹீம் அவர்களையே சாரும். அத்துடன் அவர் சிறந்ததோர் சிந்தனையாளராகையால் பல நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும் இஸ்லாமிய உலகுக்கு உதவினார். இவருடைய காலத்தில் பெரும்பாலான புத்திஜீவிகளும் இளைஞர்களும் ஜம்இய்யவினால் கவரப்பட்டனர்.

இன்றைய அமீராகிய ஹஜ்ஜுல் அக்பர் அவர்களும் ஜம்இய்யாவை வழிநடாத்தும் அளவுக்கு தலைமைப் பண்புகள் நிறைந்தவராகவும் சிறந்ததொரு இளம் பிரச்சாரகராகவும் (தாயீ) காணப்படுகின்றார். இவருடைய ஆற்றொழுக்குப் போன்ற பேச்சும் நவீன சிந்தனைகளும் இன்றைய இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. இதன் காரணமாக, கொள்கைப்பிடிப்பும் சிந்தனைத்தெளிவுமுள்ள அன்னாரின் தலைமைத்துவத்துக்கு இயக்கத் தொண்டர்கள் கட்டுப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்குவதை நாம் அவதானிக்க முடிகின்றது. இவர் தன்னை இயக்கத்தின் முழு நேர ஊழியனாக அர்ப்பணித்து சகல இடங்களுக்குஞ் சென்று சொற்பொழிவுகள், குத்பாப் பேருரைகள் நடாத்துவதுடன் முடியுமான அளவு தனிப்பட்டவர்களையும் சந்தித்துப் பிரச்சாரத்தில் (த.'.வா) ஈடுபடுவது தனிச்சிறப்பாகும்.

ஜமாஅதே இஸ்லாமியின் சமூகசேவையை (Social Activities) இருவகையாக வகைப்படுத்தலாம். ஒன்று அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவை, மற்றயது பொதுச் சேவை இதில் அகதிகள், எழைகளுக்கு உதவுதல், முஸ்லிம் மாணவ மாணவியரின் கல்வியை மேம்படுத்த உதவுதல் என்பன அடங்கும். இவையிரண்டும் பொதுவாக முஸ்லிம் சகோதரர்கள் வாழும் பகுதிகளில் செய்யும் சேவைகளாகும். வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகள், செல்வந்தர்கள், இயக்க உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் நிதிகள் ஆகியவைகளைக் கொண்டு கிணறு, பள்ளிவாசல், நூலகங்கள், தேவையான ஏழை எளியோருக்கு வீடுகட்டிக் கொடுத்தல், கல்விக்கான உதவி, பெண்களுக்கான தொழிற்பயிற்சி ஆகியவைகளை மற்றொரு சேவையாகச்செய்து வருகின்றனர்.

அகில இலங்கை ஜமாஅதே இஸ்லாமியினர் பிரச்சாரப்பணி, பொதுப்பணி ஆகிய இரண்டிலும் சிறந்து விளங்கிய போதிலும் ஏனைய இயக்கங்களைப் போன்று விமர்சனத்துக்குள்ளாவதையும் நாம் காணலாம். மக்கள் மத்தியில் ஒரு கொள்கையைப் பரப்புவதனால் ஒரு இயக்கம் (Movement) அவசியமாகும். மனிதன் சில விடயங்களை அறிந்திருந்தாலும் அவைகள் பற்றி அலட்சியமாக இருத்தல் அல்லது மறந்துவிடல் இயற்கையாகும். இவ்வாறான பலவீனங்களிலிருந்து அவர்களை மீட்க வார்த்தைகளை விட கருத்து மேடைகளாலும் பயிற்சிப் பாசறைகளாலுமே முடியும். இயக்கமானது ஒரு இலட்சியத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அவ்வாறான இலக்கையடையச் செய்யப்படும் முயற்சிகள் தனிப்பட்டதாக இல்லாமல் கூட்டாகத் தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். இவ்வாறான இயக்கத்தின் நோக்கங்கள் ஈமான், இஸ்லாம், தவ்ஹீத், ஜிஹாத், இஸ்லாமியப் பிரச்சாரம் ஆகியவைகளை உள்ளடக்கியதாக இருத்தலும் கட்டாயமாகும் எனக் கூறும் இவர்கள் இயக்கங்களைப் பொறுத்தவரையில் ஒரு புரிந்துணர்வு அவசியம் எனவும் குறிப்பிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கை (அகீதா) தொடர்புடைய பல இயக்கங்கள் இலங்கையில் இருப்பதில் தவறில்லை. ஆனால் அவைகள் குர்ஆன்-சுன்னா அடிப்படையில் எடுக்கவேண்டியதை எடுத்து, தவிர்க்க வேண்டியதைத் தவிர்த்து நடந்தால் நாட்டில் பிரச்சினை ஏற்பட வழியில்லை. அவைகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு நல்கத் தயாராக இருக்கிறோம் எனத் தங்களுடைய ஜம்இய்யாவின் அடிப்படைக் கொள்கை பற்றிக் கூறும்போது குறிப்பிடுகின்றனர். இவ்வடிப்படையில் அண்மையில் (1998) நடைபெற் புத்தள மகாநாட்டில் ஒரு நிகழ்வாக "ஹைர உம்மத்" என்ற பெயரில் இஸ்லாமிய இயக்கங்களின் ஒன்றுகூடல் ஒன்றை ஒழுங்கு செய்து, ஏறக்குறைய எல்லா இயக்கங்களிலிருந்தும் 200 பிரதிநிதிகளை அழைத்திருந்தனர். துரதிஸ்டவசமாக மிகவும் சொற்ப தொகையினரே சமூகமளித்திருந்தனர். அவர்களும் தங்களை அழைத்தவாகளின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, அபிப்பிராயங்களைத் தெரிவிக்காமல் கலைந்து சென்றனர். இலங்கையிலுள்ள இஸ்லாமிய இயக்கங்கள் அடிப்படையில் பிரிவினைப் போக்கும் பிடிவாதமும் கொண்டிருப்பதனால் இப்படியான முயற்சிகள் தொடர்ந்து தோல்வியைத் தழுவி வருவது வரலாற்றுண்மையாகும். மேற்படி மகாநாட்டின் சூடு தணிவதற்கிடையில் அதற்குப் பதிலடி கொடுக்கும் நோக்குடன் 17-10-1998 அன்று புத்தள நகரில் அரசியல் சாயம்பூசிய ஒரு அமைப்பு தமது கொள்கை மகாநாடு என்ற போர்வையில் ஒரு கூட்டத்தினைக் கூட்டியதையும் அடிதடியுடன் கலைந்ததையும் அது தொடர்பாக 20-10-1998 நாளிதழ்களில் பொறுப்புவாய்ந்த இரு முஸ்லிம் அமைச்சர்கள் காரசாரமான அறிக்கைகள் விட்டதையும் இஸ்லாமிய நெஞ்சங்கள் மறந்திருக்க முடியாது.

கருத்துப்பரிமாற்றம் இருவகைப்படும். ஒன்று உண்மையை (ஹக்) விளங்கும் நோக்குடன் உடன்பாடான முறையில் நடைபெறுவது. மற்றையது ஒருவருடைய கருத்தைப் பிறருக்குத் திணிக்கும் நோக்குடன் வெட்டிப் பேசுவது. இன்று இலங்கையிலுள்ள இயக்கங்களைப் பொறுத்தவரையில் உண்மையை அறியும் நோக்குடன் கருத்துப்பரிமாற்றஞ் செய்யவிளையும் இயக்கங்கள் மிகவும் அரிதே. நம் நாட்டில் "தவ்ஹீத்" அடிப்படையிலுள்ள இயக்கங்கள் பலவுள்ளன. அவைகளாலேயே சிலவிடயங்களில் ஒரு உடண்பாட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமுடியாதுள்ளது. (உ+ம் :பிறைகாணல்). அரசியலதிகாரத்துடனிருக்கும் தலைவர்கள் கூட - பாவம் சூனியங்கள். எதையோவெல்லாம் இஸ்லாம் என விளங்கிக் கொண்டிருப்பவர்கள். இவ்வாறான பின்னணிகளின் மத்தியில் இயக்க ஒருமைப்பாடு என்பது முயற்கொம்பாகவேயுள்ளது.

மவுலானா ம.ஃதூதி(ரஹ்) இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களாக அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகியவைகளைக் கொள்வதுடன் அவையிரண்டுக்கும் முரணற்ற முறையிலமைந்த இமாம்களின் கருத்துக்களை ஏற்பதிலும் உறுதியுடையோராகக் காணப்பட்டார். ஆனால் இலங்கை ஜமாஅத்தினர் சில விடயங்களை (இபாதத்) "சின்ன சின்ன விடயங்கள் என ஒதுக்கிவிடுவதையும் சில வேளைகளில் இடத்துக்கேற்ப அதேவிடயங்களுக்கு (உ+ம் : கூட்டுப்பிரார்த்தனை) அழுத்தங் கொடுப்பதையும் அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமன்றி இன்று இவ்வியக்கத்தினர் முன்னோர்களின் கருத்துக்களுக்குக் கொடுக்கும் அழுத்தத்தை விட நவீன சிந்தனையாளர்களான மவுலானா ம.ஃதூதி(ரஹ்), செய்யது குத்ப்(ரஹ்), யூசுப் கர்ளாவி ஆகியோரின் கருத்துக்களுக்கு அழுத்தங் கொடுப்பதாகப் பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. புத்தள மகாநாட்டின் போது (ஜமாஅதுத் தலபா-1997) மேற்படி அறிஞர்களின் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வு அங்கு சமூகமளித்த ஏனையோர்களினால் மட்டுமன்றி இயக்கத் தொண்டர்களினாலும் விமர்சிக்கப்பட்டது. இதுபற்றி ஜம்இய்யாவின் உயர்மட்ட உறுப்பினர்களிடம் அணுகிய போது, அதனை அவர்கள் மறுக்கின்றனர். மவுலானா ம.ஃதூதி(ரஹ்) இஸ்லாத்துக்கு மாறான தற்காலக் கொள்கைகளின் தவறுகளைப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியவர். தற்காலப் பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் தீர்வுகளை தர்க்கரீதியாக விளக்கியவர். அதனாலேயே அவரைக் கெளரவிக்கிறோம், அவருடைய நூல்களைப் படிக்கின்றோம். அதுபோல தற்கால அறிஞர்களின் நூல்களையும் படிக்கின்றோம். அதேபோன்று நாங்கள் எல்லா இமாம்களையும் மதிக்கின்றோம். மாறாக அவர்கள் தவறு செய்தால் தவிர்த்துக் கொள்கின்றோம். அதற்காக நாங்கள் அவர்களைத் தரக்குறைவாகக் கணித்து விமர்சிக்கின்றோம். என்பது கருத்தல்ல, உண்மையான கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றோம் அதற்காக எங்களை கண்மூடிக்கொண்டு பின்பற்றுவோர் என்ற கருத்தில் 'தக்லீத்' வாதிகள் என யாரும் குறைகூற முடியாது என்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பள்ளிவாசல்களை மையமாகக் கொண்டு த∴வாப்பணியில் ஈடுபடுவது மிகக்குறைவாகும். இதில் உண்மை இல்லாமலுமில்லை. ஜம்இய்யாவின் முன்னோடிப் பிரச்சாரகர்கள் பலர் அகீதா பற்றிப் பேசுவதற்குப் பதிலாக அதிகமதிகம் நவீன அரசியல், பொருளியல், போராட்டங்கள் பற்றிப் பேசிவருவதனால் துடிப்புள்ள இளைஞர்கள் இலகுவாகக் கவரப்படுகின்றனர். அவர்களின் முனைப்பான போக்குகளினால் பல இடங்களில் பெற்றோர் பிள்ளைகள், மற்றும் சகோதரர்களுக்கிடையே கூட அடிக்கடி கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதையும் நாம் காணலாம். உணர்ச்சிகள் தூண்டப்பட்ட சில இளைஞர்கள் ஏனைய இயக்கத்தினருடன் பகிரங்கமாக மோதிக் கொள்வதுமுண்டு. இவ்விடயத்தில் உயர்மட்ட உறுப்பினர்கள் விழிப்பாக இருப்பது பொருத்தமானது எனக் கூறப்படுகின்றது. மேலும், ஜம்இய்யாவினால் அரசியல், பொருளியல், சமூகவியல் தொடர்பாக பிரயோகிக்கப்படும் வார்த்தைகளும் பாமரர்களுக்கு மயக்கந்தரக் கூடியவைகளாகவுள்ளன.

இளைஞர்களையும் மத்தியவர்க்கத்தினரையும் பற்றிய கரிசனைபோன்று முதியோர் விடயத்தில் ஜமாஅத்தினருக்கு அக்கறை குறைவென்றும் கூறப்படுகின்றது. ஒரு சமுதாயத்தைப் பொறுத்தவரையில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். அவர்களே எதிர்காலச் சமுதாயச் சிற்பிகள். இருந்தபோதிலும் குர்ஆன்-ஹதீஸ் அடிப்படையில் 'இபாதத்' செய்ய மக்களைத் தூண்டும் ஒரு இயக்கம் எல்லா மட்டத்திலுள்ளோர் மீதும் அக்கறை செலுத்தல் வேண்டும். இன்று நகர்ப்புறங்களில் மட்டுமன்றிக் கிராமப்புறங்களிலும் வாழ்கின்ற முதியோர்களில் பெரும்பாலானவர்கள் நாளாந்த இபாதத்துடன் தொடர்புடைய கடமைகளைச் செய்ய முடியாமலும் செய்யத் தெரியாமலும் தடுமாறுகின்றனர். இவர்கள் விடயத்தில் ஜமாஅதே இஸ்லாமியின் கரிசனை மிகக்குறைவு எனக் கூறப்படுகின்றது.

இன்று இவ்வியக்கம் நாட்டுக்குநாடு வித்தியாசமான அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகின்றது. உதாரணமாக பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் ஒரு அரசியற்கட்சியாக மட்டும் இன்று செயற்படுவது போன்று தோற்றமளிக்கின்றது. அண்மைய இந்திய-பாகிஸ்தான் அணுஆயுத உற்பத்தி விவகாரத்தின்போது (செப்டம்பர் 1998) பாகிஸ்தான் ஜமாஅதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமித் தலைவர் குவாஸி ஹுஸைஸன் அகமது "அமெரிக்காவுக்கு அடிபணிந்து அணுத்தடை ஒப்பந்தத்தில் (CTBT) கைச்சாத்திட்டால் பாகிஸ்தான் பாராளுமன்றம் தகர்க்கப்படும்" எனச் சூளுரைத்தமையைக் கொண்டு அவ்வமைப்பின் அரசியல் வல்லமையினை அறிய முடிகின்றது. இவ்வியக்கம் முஸ்லிம்கள் சிறுபான்மையாகவாழும் நாடுகளில் த∴வா∴ பணி பற்றி தெளிவாகப் பேசுகின்றது. அதேபோன்று இலங்கையிலும் பேசினாலும் சில வேளைகளில் எதைப் பற்றிப் பேசுகிறது என்பது பற்றி மயக்கம் ஏற்படுகின்றது.

இவ்வியக்கம்சார் இளைஞர்கள் சிலர் தமது ஜமாஅத் மீதுள்ள அதீதபற்றின் காரணமாக இதர சகோதர அமைப்புக்களைப் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் மட்டந்தட்டிவருவது தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். கடந்த சிலவருடகாலமாக தமிழ்நாட்டில் சகோதரர் P. ஜெய்னுலாப்தீன் உலவி (PJ)யின் வழிகாட்டலில் இயங்கிவரும் "முஸ்லிம் முன்னேற்றக் கழகம்" அந்நாட்டின் அரசியல், சமய, சமூகச் சூழலுக்கேற்ப "தவ்ஹீத்" அடிப்படையில் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டு பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களின் ஆதரவையும் பெற்றுவருகின்றது. இந்தியா, தம்மை மதச்சார்பற்ற நாடு என முத்திரை குத்திக்கொண்டு இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராகக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் காடைத்தனங்களுக்கு ஆப்புவைக்கும் சிறந்ததோர் அணுகுமுறையைக் கொண்டு வளர்ச்சியடைந்து வருகின்றது. அம்முன்னணிக்குச் சேறுபூசும் வகையில் 1998 செப்டம்பர் "அல்ஹஸனாத்" இதழில் 'மொஸையாவின் வருகைா இது......' என்ற தலைப்பில் விமர்சனக் கட்டுரையொன்று வெளியானது. உண்மையில் அக்கட்டுரையை எழுதியவர் விமர்சனத்துக்குப் பதிலாகக் காழ்ப்புணர்வுடன் புலம்பியிருக்கின்றார். இவ்வாறு நுனிப்புல்மேயும் சிலர் செய்யும் தவறுகள் ஒரு காத்திரமான நிறுவனத்தின் ஆரோக்கியத்தைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதை ஜமாஅத்தினர் உணர்ந்துகொள்ளல் வேண்டற்பாலது.

இவ்வாறான சில குறைபாடுகள் காணப்பட்டபோதிலும் அண்மையில் (1998-10-3,4) புத்தளத்தில் இளைஞர்களைக் கருப்பொருளாகக் கொண்டு நடாத்தப்பட்ட பதினோராவது தேசிய மகாநாடு இலங்கையில் ஜமாஅதே இஸ்லாமியின் வளர்ச்சிக்குச் சிறந்ததோர் வெட்டுமுகமாகும். அம்மகாநாட்டின் முக்கிய நோக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் அணியானது பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் இஸ்லாமிய இளைஞர் மத்தியில் இஸ்லாத்தின் தூதினை எத்திவைப்பதெனக் கூறப்பட்டது.

1. நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்குதல்.
2. இளைஞர்கள் மத்தியில் இஸ்லாமிய சமூகம் பற்றிய விளிப்புணர்வை ஏற்படுத்ததல்.
3. முஸ்லிம் இளைஞர்களிடத்தில் தலைமைப் பண்பினை வளர்த்தல்
4. மார்க்கப்பற்றுள்ள இளைஞர்களை உருவாக்குதல்.
5. இளைஞர்கள் மத்தியில் ஒழுக்கவிழுயங்களை, ஆளுமை போன்ற இயல்புகளை வளர்த்தல்.

அன்றைய மகாநாட்டில் தீவின் எண்திசையிலுமிருந்து ஏறக்குறைய நாலாயிரம் இளைஞர்கள் கலந்துகொண்டனர். பெரும்பாலான இளைஞர்களை ஒன்று திரட்டுவதில் இது ஜமாஅதே இஸ்லாமிக்குக் கிடைத்ததோர் வெற்றியாகும். ஏனைய ஜம்இய்யாக்களுடன் சௌஜன்யமாக நடந்து இஸ்லாத்தின் எழுச்சிக்கு தங்களால் முடியுமான பங்களிப்பினை இவ்விளைஞாகள் செய்யவேண்டுமென ஜம்இய்யாவும் இஸ்லாமிய உலகும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷீயாக்கள்

அரபு-இஸ்ரவேல் யுத்தத்தின்போது இலங்கைவாழ் முஸ்லிம்கள் அனைவரும் ஈரான் நாட்டுக்கு ஆதரவு. வளைகுடா யுத்தத்தின்போது ஈராக்கிற்கு ஆதரவு. இஸ்லாத்தினை நையாண்டி செய்த ஸல்மான் ருஷ்திக்கு மரணதண்டனை விதித்தபோது மீண்டும் ஈரானுக்கு ஆதரவு. மீலாத்விழாக் கொண்டாடலாமா கூடாதா என்ற சர்ச்சை நீண்டகாலமாக முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வருகையில், அன்னை பாத்திமா(ரழி)யின் பிறந்ததினக் கொண்டாட்டத்தினை அண்மையில் ஷீயா சார்புடையோர் அறிமுகஞ் செய்துவைத்தபோது இலங்கை முஸ்லிம்கள் கண்ணை மூடிக்கொண்டு அதற்கும் ஆதரவு. இவ்வாறான தளம்பல் நிலைமைகளை விளங்கிக் கொள்வதற்கு ஷீயாக்களின் தோற்றம், வளர்ச்சி, அது இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கையில்(அகீதா) ஏற்படுத்திவரும் தாக்கம், அவ்வியக்கம் பற்றி இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் கிலேசம் ஆகியனபற்றி நாம் ஓரளவு அறிந்து கொள்ளல் அவசியமாகும். ஆரம்பத்தில் ஒரு வரலாற்று இயக்கமாக உருவானபோதிலும் இன்று இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கையையே உசுப்பத் தொடங்கிவிட்டது. எனவேதான் இவ்வியக்கம் "அகீதா"வுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக விமர்சிக்கப்படுகின்றது.

நபி(ஸல்) அவர்களின் பின்னர் அன்னாரின் குடும்பத்தைச் சோந்தோரே ஆட்சிக்கு அருகதையுடையவர்கள் என்ற கருத்து முக்கிய நபித்தோழர்களான அம்மார் இப்னு யாசிர், அபூதர் அல் கிப்பாரி, ஸல்மான் பாரிஸி, உபை இப்னு க'ப்(ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரிடமும் அரபியரல்லாத முஸ்லிம்கள் மத்தியிலும் வலுத்துக் காணப்பட்டது. ஆனால் அதற்குப் பொருத்தமான ஆதாரங்கள் அல்குர்ஆனிலோ, சுன்னாவிலோ தென்படவில்லை. அபூபக்கர், உமர்(ரழி) ஆகியோர் கலிபாக்களாகத் தெரிவு செய்யப்பட்டதும் அலி(ரழி) அவர்களும் ஏனைய தோழர்களும் எவ்வித விசாரணையுமின்றி ஏற்றுக்கொண்டனர். அதேநேரம் மூன்றாவது கலிபா உதுமான்(ரழி) அவர்களின் ஆட்சியின் பிற்பகுதியில் உருவான அமைதியற்ற சூழ்நிலையே ஷீயா இயக்கம் உருவாவதற்கு வழிகோலியது எனலாம். உதுமான்(ரழி) கலிபாவாகத் தெரிவு செய்யப்பட்டதும் அரபியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலிருந்த வம்சமுரண்பாடுகள் வளர்ச்சியடையத் தொடங்கின. கி.பி. 656இல் உதுமான்(ரழி) குழப்பவாதிகளினால் கொலைசெய்யப்பட்டதும் நிலைமை முற்றியது. இவ்வாறான பின்னணியின் மத்தியிலேயே அலி(ரழி) அவர்களும் கலிபாவாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

உதுமான்(ரழி) அவர்களைக் கொலைசெய்தோரை அலி(ரழி) கண்டுபிடித்துத் தண்டனை வழங்குவாரென மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறு செய்தால் முஸ்லிம்கள் மத்தியில் நிரந்தர விரிசல் ஏற்பட்டுவிடுமென அஞ்சியே அலி(ரழி) அவர்கள் கொலையாளியைக் கண்டு பிடிப்பதில் பூரண சிரத்தை எடுக்கவில்லை. எனவே, அதன் தொடராக அக்கால முஸ்லிம்கள் மத்தியில் உள்நாட்டு யுத்தங்களாக "ஜமல்" யுத்தமும் "ஷிப்பின்" யுத்தமும் நடைபெற்றன. ஷிப்பின் யுத்தத்து முடிவானது முஸ்லிம்களை ஷீயாக்கள், கவாரிஜீன்கள், சுன்னீக்கள்(சுன்னத் ஜமாஅத்) எனக் கூறுபோட்டது. இதில் அலி(ரழி) அவர்களை சார்ந்தோரே ஆரம்பகால "ஷீயாக்கள்" என அழைக்கப்பட்டனர்.

இஸ்லாத்தின் தனித்துவத்தினைச் சீரழிக்கும் நோக்குடன் பல சிந்தனைப் பிரிவுகளும், கோட்பாடுகளும் தினாந்தம் தோற்றம் பெற்று வருவதனை நாம் காண்கின்றோம். இந்த அடிப்படையிலும் முதன்முதலாக உருவானது ஷீயாப்பிரிவே. ஷீயாக்களின் கேந்திர நிலையமாக அன்று கூபா(ஈராக்) விளங்கியது. ஷீயாக்கள் பாரசீகத்திலிருந்து கூபாவிலும் அதைச் சூழவும் குடியேறியவர்களாகும். மதத்துக்கும் ஆட்சிக்கும் தலைவர் "இமாம்" என்பவராகும் எனும் கருத்துடையோர் இவர்கள். "மவாலிகள்" என அழைக்கப்பட்ட அரபியரல்லாத முஸ்லிம்களும் சாதாரண முஸ்லிம்களுமே இவ்வியக்கத்தின் முக்கிய ஆதரவாளர்களாகும். ஆனால் இதன் தலைமை அரபிய உயர்பிரிவினரான ஹாஸிம் குலத்தினிடமே (றசூலுல்லாஹ்வின் வம்சம்) இருந்தது. பாரசீகர்கள் பல நூற்றாண்டுகாலமாகப் பரம்பரையாட்சிக்குப் பழக்கப்பட்டவர்கள். எனவே அவர்களின் ஆதரவைப்பெற விரும்பும் எந்த இயக்கமும் பாரசீகரின் தேசிய மரபுகளை ஏற்றுக் கொள்வதாக இருத்தல் வேண்டும். ஷீயா இயக்கத் தலைவர்கள் அவ்வாறு ஏற்றுக் கொண்டபடியினாலேயே கூபாவாசிகளையும் அவர்களைச் சூழவிருந்த அரபியரல்லாத அதிருப்தியாளர்களையும் சேர்த்து அலி(ரழி)யின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரால் ஒரு அணியைத் திரட்டி அவருடைய சந்ததியினருக்கு ஆட்சியுரிமை வழங்கவேண்டும் என்ற கொள்கையை உருவாக்க முடிந்தது.

இவ்வாறாக அலி(ரழி)யையும் குடும்பத்தினரையும் மையமாகக் கொண்டு ஷியாப்பிரிவு உருவாவதற்கான காரணங்களையும் அறிதல் அவசியமாகும். அலி(ரழி) அவர்கள் அரபிகளுக்கு, அரபியல்லாதோருக்கு எனப் பாரபட்சம் காட்டாதவர். விசுவாசிகள் சகலரும் நாடு, இனம் என்ற பாகுபாடின்றிச் சரிசமமானவர்கள் என்ற இஸ்லாமியக் கொள்கையைக் கண்டிப்பாகப் பின்பற்றியவர். நீதி செலுத்துதல், அரச நியமனம் வழங்குதல் போரில் கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பங்கீடு செய்தல் எதிலுமே பாரபட்சமின்றி நடந்து கொண்டவர். சான்றாக இங்கு ஒரு சம்பவத்தையே குறிப்பிடலாம். ஒரு நாள் இரண்டு பெண்கள் அலி(ரழி)யிடம் வந்து பொருளுதவி கோரினார்கள். அப்பொழுது அலி(ரழி) தமது பணியாளரை அழைத்து அவ்விருவருக்கும் உணவுத்தானியமும், உடையும் சிறிது பணமும் கொடுக்கும்படி கூறினார். ஆனால் அந்த இருவருள் ஒரு பெண், தான் அரபியாகவும் மற்றப்பெண் அரபியல்லாதவராகவும் இருப்பதால் தனக்குச் சிறிது அதிகமாக வழங்கவேண்டுமெனக் கோரினார். அப்பொழுது அலி(ரழி) கையில் சிறிது மண்ணை எடுத்து அதைப்பார்த்துக் கொண்டு “அல்லாஹ் பயபக்தியையும் தமக்குக் கீழ்படிதலையுந்தவிர வேறு எந்தக் காரணத்துக்காகவும் யாருக்கும் சலுகை கொடுக்கிறானா என்று நான் அறியேன்” எனக்கூறி அப்பெண்களைக் கண்டித்தார்கள். ஆளுநர் விடயத்திலும் அலி(ரழி) மிகவும் கண்டிப்பாக நடந்து கொண்டார். ஆளுநர்பற்றி எவரினாலாவது புகார் கூறப்பட்டால் அவைகளைப் பற்றித் தனியே விசாரிப்பார். குற்றம் நிரூபிக்கப்பட்டால் பதவியிலிருந்து நீக்கிவிடுவார். சிறைக்கு அனுப்பவும் தவறவில்லை. அடிமைகளுடன்கூடக் கண்ணியமாக நடந்து கொண்டார்.

அதேநேரம் உமையாக்கள் குறிப்பாகத் தங்களுடைய வம்ச ஆட்சியையும் பொதுவாக அரசியலதிகாரத்தையும் நிலைநாட்ட விரும்பினர். அலி(ரழி)யின் சமத்துவப்போக்கை விரும்பாத குறைஷிக்குல உயர்குடிகளான தல்ஹா, சுபையிர்(ரழி) போன்றோரும் முஆவியாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர். சமூகத்தில் அரபியரினால் பாதிக்கப்பட்ட அரபியல்லாதோர் இவைகளையெல்லாம் கவனிக்கத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் முஆவியா(ரழி) ஈராக்கில் தமது அதிகாரத்தை நிறுவி அரபியல்லாதோரையும் (மவாலி) ஏழைகளையும், அடிமைகளையும் (திம்மி) துன்புறுத்தினார். அலி(ரழி)க்கும் உமையாக்களுக்கும் இடையேயுள்ள இவ்வேறுபாட்டினை மக்கள் தெளிவாக உணர்ந்திருந்தனர். மேலும் அலி(ரழி)யின் கொலை உமையாக்களின் சதி எனவும் சிலர் கருதினர். இந்நிகழ்வுகளெல்லாம் அலி(ரழி)யின் பெருமையை மேலும் உயர்த்தின. எனவே உமையாக்களின் அடக்குமுறை ஆட்சியை ஒழிப்பதற்காக அலி(ரழி)யின் கொடியின்கீழ் மவாலிகளும் ஏனையோரும் சேர்ந்து போராட்டம் நடாத்த முயன்றதால் அன்னாரின்பேரில் "ஷீயா" எனும் வலுவானதொரு பிரிவே வரலாற்றில் உருவாகிவிட்டது எனலாம்.

ஷீயாப்பிரிவை ஒரு மதப்பிரிவாக மாற்றியமைத்தவன் அப்துல்லா இப்னு ஷபா என்பவனாகும். இவன் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே யூதனாகவிருந்துகொண்டு இஸ்லாத்தினை ஏற்றதாக நடித்து முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கையைக் குழப்புவதற்குக் கங்கணங்கட்டிக்கொண்டிருந்தவன். நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னர் அலி(ரழி)யே ஆட்சியின் வாரிசாக வரவேண்டும் என்றும் அலி(ரழி)யை முதலாவது இமாமாக ஏற்பது முஸ்லிம்களின் கடமை என்றும் பிரச்சாரஞ் செய்தவன். அலி(ரழி) தெய்வாம்சம் பொருந்தியவர். ஒரு அவதார புருஷர் என அளவுக்கதிகமாகப் புகழ்ந்தவன். இவன் தமது கொள்கையைப் பரப்புவதற்கு முஸ்லிம்கள் மத்தியில் அப்பொழுது ஏற்பட்டிருந்த பாரசீகச் செல்வாக்கு சாதகமாக அமைந்தது எனலாம்.

அப்துல்லாஹ் இப்னு ஷபா, பஸரா நகரை மத்தியதலமாகக் கொண்டு, "அலி தெய்வீகத் தன்மையுடையவர்" எனும் கருத்தினைப் பரப்பத் தொடங்கினான். அதன்காரணமாக அவன் அங்கிருந்து விரட்டப்பட்டதும் கூபாவுக்குச் சென்றான். அங்கிருந்தும் வெளியேற்றப்பட எகிப்து சென்று தனக்கு ஆதரவாகப் பெருங்கூட்டமொன்றைத் திரட்டிக் கொண்டான். அலி(ரழி)க்கு ஆதரவாகப் பல ஹதீதுகளைப் புனைந்து இஸ்லாமியக் கோட்பாட்டினை மாசுபடுத்தும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டான். அத்துடன் ஓய்ந்துவிடாமல் அலி(ரழி) மரணிக்கவில்லை, உலகம் அநீதியினால் நிரம்பியிருப்பதனால் அதனை நீதியினால் நிரப்புவதற்கு அவர் மீண்டும் வருவார் எனும் "மீளுதல்" (அர்ரஜ்உ) எனும் கோட்பாட்டையும் பிரச்சாரஞ் செய்தான். இவனுடைய பிரச்சார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியே ஷீயாப்பிரிவை இயக்கரீதியாக மாற்றி அதனை ஒரு தீவிரசக்தியாகவும் ஆக்கியது எனலாம். இதிலிருந்து யூதர்கள் ஆரம்பகாலந்தொட்டே இஸ்லாத்தினை அழிப்பதற்கு முயற்சி செய்து வந்துள்ளனர் என்ற எதார்த்தத்தினையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

கர்பலா யுத்தத்தில் (கி.பி. 680.10.10) நகுலுல்லாஹ்வின் பேரர் ஹுஸைன்(ரழி) கொல்லப்பட்டவுடனேயே ஷீயா இயக்கம் மிகவேகமாகப் பரவத்தொடங்கியது. அலி(ரழி) அவர்களின் மூத்த புதல்வர் ஹஸன்(ரழி) தமது கலிபாப்பதவியை முஆவியாவிடம் விட்டுக் கொடுத்தபோது, முஆவியா தமது மரணத்தின் பின்னர் அடுத்த கலிபாவைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையை முஸ்லிம்களிடம் விட்டுவிட வேண்டும். தமக்கு வாரிசாக எவரையும் நியமிக்கக் கூடாது எனும் நிபந்தனை வைக்கப்பட்டது. முஆவியா(ரழி) அந்நிபந்தனையையும் மீறித் தமது புதல்வர் யஸீதை வாரிசாக நியமிக்க வழிசெய்து விட்டார். இதனைக் கண்ட முஸ்லிம் பிரமுகர்கள் பலர் கொதிப்படைந்தனர்.

கலிபாவாக நியமிக்கப்பட்ட யெஸீது, இளைஞராகவும் பரந்து விரிந்த இஸ்லாமியப் பேரரசை நிர்வகிக்கும் அனுபவமற்றவராகவும் காணப்பட்டார். இயல்பாகவே மனமுதிர்ச்சியற்றவராகவும் எதிரிகளைச் சமாளிக்கும் விவேகமற்றவராகவும் இருந்துங்கூட, எல்லோரும் தமக்கு உடனடியாகக் கீழ்படிய வேண்டும் என எண்ணினார். ஆனால் அதற்குத் தலையசையாத ஹுஸைன்(ரழி) அவருக்கு விசுவாசப் பிரமாணஞ் செய்ய (பைஅத்) மறுத்தார். இந்கிடையில் அவரது தந்தையின் இராச்சியத் தலைநகரான கூபாவிலுள்ள அலி(ரழி) ஆதரவாளர்கள் பலரிடமிருந்து அவரை அங்கு வந்து யெஸீதுக்கு எதிராகத் தலைமையை ஏற்கும்படி அழைப்பு வந்தது. யெஸீதின் ஆட்சியை விரும்பாத ஹுஸைன்(ரழி) ஒரேமுடிவாகத் தம் குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு மக்காவிலிருந்து கூபா நோக்கிச் செல்லும் வழியிலே கர்பலா நிகழ்வு இடம்பெற்று ஹுஸைனும் ஆதரவாளர்களும் உயிரிழந்தனர். சாதாரணமாகப் பார்க்கப்போனால் பலமுள்ள ஒரு (உமைய்ய) இராணுவத்துக்கும் ஒரு சிறிய கிளர்ச்சிக் குழுவுக்குமிடையே இடம்பெற்ற சம்பவமாகக் கர்பலா நிகழ்வு தோன்றினாலும் ஷீயாப்பிரிவுக்கு ஒரு ஒற்றுமைப் பலத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டது. "ஹுஸைனுக்காகப் பழிவாங்குவோம்" என்ற கோசம் பாரசீகத்தைச் சேர்ந்த மவாலிகளிடமிருந்து உக்கிரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழத்தொடங்கியது. அதேநேரம் உமைய்யாக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கலிபாப்பதவியை மதரீதியாகவும் சிந்தனைரீதியாகவும் முக்கியமுள்ளதாகக் கருதவில்லை. அதை முற்றிலும் அரசியல் கோணத்திலேயே நோக்கினர். விசுவாசிகள் சகலரும் இனம், நாடு என்ற அடிப்படையில் சரிசமமானவர்கள் என்ற கருத்துக்கு எதிராக உமைய்ய வம்ச ஆட்சியை நிலை நிறுத்துவதில் மட்டுமே சிரத்தையாக இருந்தனர். இதன்காரணமாக கலிபா உமர் இப்னு அப்துல் அஸீஸை (2ஆம் உமர்)த் தவிர ஏனைய உமைய்யாக் கலிபாக்கள் ஷீயாக்களைப் பலவழிகளிலும் துன்புறுத்தத் தொடங்கினர். உமைய்யாக்களினால் வெறுக்கப்பட்ட ஷீயாக்கள், கி.பி. 750இல் ஆட்சிக்குவந்த அப்பாசியர்களுக்கு ஆதரவு நல்கினர்.

உமைய்யாக்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதானால் உமைய்யாக்களுக்கெதிரான கிளர்ச்சி இயக்கங்களுக்குத் தலைமை தாங்கிய அரபியர், மற்றும் அரபியரல்லாதோரின் ஆதரவைப் பெறுவதற்காக சட்டப்படி ஆட்சியதிகாரத்தில் பங்கு தருவதாகவும் முஸ்லிம்கள் என்ற வகையில் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதாகவும் வாக்களிக்க வேண்டியிருந்தது. எனவே, "எதிரியின் எதிரி எனக்கு நண்பன்" என்பதற்கியைய ஷீயாக்களுடன் சேர்ந்து கொண்டு உமைய்ய ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் அப்பாசியர் ஒத்துழைத்தனர். ஷீயாக்களின் தலைமைப் பிரச்சாரகரும் பாரசீகத்தைச் சேர்ந்த அரபியல்லாதவருமான அபூமுஸ்லிம் அல் குரசானியின் ஆதரவைப் பெற்று உமைய்யாக்களை ஒடுக்க அப்பாசியர் தங்கள் நுண்மதியையும் அரசியல் சாணக்கியத்தையும் பயன்படுத்தத் தொடங்கினர். அதில் வெற்றியும் பெற்றனர். அப்பாசியர் கி.பி. 750இல் உமைய்யாக்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி டமஸ்கஸிலிருந்த ஆட்சித் தலைநகரை பக்தாதுக்கு மாற்றியுங் கொண்டனர்.

அப்பாசிய ஆட்சி உருவாவதற்கு ஷீயாக்கள் உதவிநல்கியபோதிலும் அந்த உறவானது நீண்டகாலம் நீடிக்கவில்லை. உமைய்யாக்களை வீழ்த்துவதற்காகவே அப்பாசியர் ஷீயாக்களுடன் சேர்ந்திருந்தனர். அது வெறும் அரசியல் தந்திரமே. விரைவிலேயே அப்பாசியர் தம்முன்னாள் கூட்டாளிகளுக்கு எதிரிகளாகமாறி அவர்களைக் கொடுமைப்படுத்தத் தொடங்கினர். கலிபா மஃமூன் அல் ரஷீதின் ஆட்சியின்போது மட்டுமே ஷீயாக்கள் ஓரளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாக இயங்கினர். கி.பி.758இல் கலிபா ஹாதியின் ஆட்சியின் போது ஷீயாக்கள் பெரும் கலகமொன்றை உருவாக்கினர். அதன்காரணமாக அவர்கள் ஒடுக்கப்பட்டதும் தப்பியோடிய இத்ரீஸ் என்பவர் மொரோக்கோ நாடு சென்று "பர்பர்" இன மக்களின் அனுசரணையுடன் இத்ரீஸ்வம்ச ஆட்சியை அங்கு நிறுவினர். அதே காலப்பிரிவில் இஸ்மாயிலிகள் (பாதிமீக்கள்) கெய்ரோ நகரைக் கட்டியெழுப்பினர்.

இஸ்லாமிய நேர்பாதையிலிருந்து ஷீயாக்கள் எவ்வாறு தடம்புரண்டுள்ளார்கள் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு அவர்களின் முக்கிய பிரிவாகிய இஸ்மாயிலிய்யாக்கள் பற்றியும் அறிதல் அவசியமாகும். இவர்கள் போராக்கள், பாத்திமீக்கள் என்றும் அழைக்கப்படுவர். இன்று அவர்கள் இந்தியாவிலும் கொழும்பு நகர்ப்புறத்திலும் அதிகமதிகம் காணப்படுகின்றனர். இப்பிரிவினை நிறுவியோர் தங்கள் கொள்கையில் அரபிய அம்சங்களை பாரசீக-கிரேக்க தத்துவங்களில் முழுமையாக ஒன்றிணைப்பதில் வெற்றிகண்டனர். இறுதியாக மேற்கு ஆபிரிக்காவிலும் எகிப்திலும் ஆட்சியை (பாத்திமிய்யாக் கிலாபத்) நிறுவினர்.

மதிநுட்பமுடைய இஸ்மாயிலிகள் முஸ்லிம் உலகம் முழுவதும் தம்பிரச்சாரகர்களை அனுப்பி இரகசியமான முறையில் போதனைகளில் ஈடுபட்டனர். அல்குர்ஆனில் கூறப்படுவதை உருவகமாகக் கொண்டு பொருள் காணவேண்டும் என்பது இவர்களுடைய கொள்கையாகும். அதன் வசனங்களில் அமைந்துள்ள பொருளைக் கண்டறிவதன் மூலம்தான் இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ள முடியும் என்றும் அதை அறியும் வழியை அறிந்தோருக்கன்றி மற்றவர்களுக்கு உண்மையை மறைத்துவைக்கும் திரையாகவே அல்குர்ஆனின் புறவடிவம் அமைந்துள்ளது என்றும் கூறினர். அதாவது அல்குர்ஆன் சூக்குமக்கருத்துக்கள் நிறைந்ததொன்று. அதனைச் சாதாரண மக்களினால் விளங்கிக்கொள்ள முடியாது எனக்கூறித் தம் கொள்கைக்கேற்ப அல்குர்ஆனுக்கு விளக்கங் கொடுத்தனர். இக்கூற்றினை முஸ்லிம்களாகிய எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அக்கால அரபிகள் (றசூல் காலம்) ஓரளவு நாடோடி வாழ்க்கை வாழ்ந்தாலும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் தங்களுக்கென ஒரு தத்துவ முறையையோ சிந்தனை மரபையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கிக் கொள்ளவில்லை என்பது உண்மையே. ஆனால் அவர்களுடைய உயர்ந்த சாதனையாக இஸ்லாம் மார்க்கம் ஒன்றே இருந்தது. அவர்கள் தங்களுடையது எனப் பெருமையாகக் கூறிக்கொள்ளக்கூடிய ஒரே நூலாக அல்குர்ஆன் காணப்பட்டது. அது மதநெறியில் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்ததாலும் எழுத்தறிவு அதிகமற்ற, பண்பாட்டில் உயர்ந்திராத சாதாரண மக்களை நோக்கிக் கூறப்பட்டதாக இருந்தாலும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாக எளிய மொழியில் அமைந்து நுட்பமான தத்துவ விசாரணைகளைத் தவிர்த்திருந்தது. இதையே அல்லாஹ்வும்,

"(நம்முடைய தூதராகிய) அவருக்கு நாம் கவிதையை (இயற்றி)க் கற்றுக் கொடுக்கவுமில்லை, அது அவருக்கு அவசியமானதுமல்ல. இது நல்லுபதேசமும் தெளிவான குர்ஆனுமே தவிர (வேறு) இல்லை" (36:69) எனக் கூறுகின்றான்.

எனவே, அல்குர்ஆன் எதார்த்த நோக்குக் கொண்ட அரபு மக்களை நோக்கிப் புறப்பட்டதாக இருந்ததால் அதன் நோக்கு முறை அகநோக்காகவன்றிப் புறநோக்காகவே இருந்தது. இதற்கு மாறாக இஸ்மாயிலீக்கள் அல்குர்ஆன் அகநோக்குமட்டுமே கொண்டது என இஸ்லாத்தினை கிரேக்க தத்துவஞானத்துடன் இணைத்து, குறிப்பாக பிளேட்டோவின் கருத்துக்களைப் பெருமளவில் எடுத்துக் கொண்டு இஸ்லாத்துக்குப் புதிய முறையில் பொருள்கூற முயன்றனர். பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது என்பதை விளக்குவதற்குக்கூட அவர்கள் அல்குர்ஆனையும் புறக்கணித்து பாரசீகக் கருத்துக்களையே பயன்படுத்தினர். இஸ்மாயிலிய்யாப் பிரிவின் தலைவர்களாகவந்த ஷீயா அறிஞர்களான மைமூன் அல்குதா, அவருடைய புதல்வர் அப்துல்லா பின் மைமூன் ஆகியோரெல்லாம் பாரசீகர்களே. அவர்கள் கிரேக்க தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு இரகசியக் கோட்பாடுகளைப் போதித்தனர். அல்குர்ஆனின் உட்பொருளை அலி(ரழி)யிடம் தெய்வீக ஞானத்தைப் பெற்ற பரம்பரைகளான இமாம்களே அறிவர் என நம்பினர்.

இமாம்கள் மறைந்திருந்து பிரச்சாரஞ் செய்யும் முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். அதற்கேற்ப இமாமிய்யாப் பிரிவை ஆக்கிக் கொண்டனர். உயர்ந்த தலைவராக "இமாம்" இருந்தார். அவருக்குக் கீழ் உதவியாளர்களும், பல்வேறுவகையான அழைப்பாளர்(தாயீ)களும் இருந்தனர். அவர்களுக்கு உதவியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்டவர்கள் (மாதூன்கள்) எதிரிகளை உடைப்பவர்கள் (முகாதிர்கள்) ஆகியோர் இருந்தனர். இவர்கள் சகலரும் இரகசியமாகவே பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இஸ்மாயிலிகளின் உட்பிரிவுகளுள் ஒன்று கராமேத்தியாகும். இது கி.பி. 874இல் ஹமதான் கர்மத் என்பவரினால் நிறுவப்பட்டது. கராமேத்திகள் மிகவும் புரட்சிகரமான போக்குடையவர்கள். இதனால் பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டனர். இவர்கள் அரபியா, சிரியா, ஈராக் ஆகிய பிரதேசங்களில் கொலையும் கொள்ளையும் நடாத்தி முஸ்லிம் உலகுக்குப் பெரும் நாசத்தை ஏற்படுத்தினர். அப்பாசியக் கலிபா முக்தரின் ஆட்சியின்போது ஒரு தடவை ஹஜ் யாத்திரை சென்றோரைத் தாக்கி கொன்று குவித்ததாகவும் கூறப்பட்டது.

இக்காலகட்டத்தில் (11ஆம் நூற்றாண்டு) ஷீயா இயக்கம் பல இடங்களிலும் எழுச்சியடையத் தொடங்கியது. "புவைஹித்" எனும் ஷீயா ஆட்சியாளர்கள் பாரசீகத்தைத் தம் ஆளுகையின் கீழ்க் கொண்டுவந்தது மட்டுமன்றி பக்தாதிலும் ஆட்சி செய்தனர். ஈரான், எகிப்து ஆகிய பகுதிகளில் சுன்னத் ஜமாஅத்தை (சுன்னி)ச் சேர்ந்தத ஐயூபி, ஸெல்ஜுஹி குழுவினர்களின் ஆட்சி காணப்பட்ட போதிலும் அங்கெல்லாம் ஷீயா செல்வாக்கும் அதிகரித்துக் காணப்பட்டது. பொதுவாக கி.பி. 12ஆம் 13ஆம் நூற்றாண்டுகளில் ஷீயா இயக்கம் படிப்படியாக வளரத் தொடங்கியது.

கி.பி. 1258இல் அப்பாசிய ஆட்சியாளர்களின் தலைநகரான பக்தாத், மங்கோலியரின் படையெடுப்பினால் வீழ்சியடைந்தது. அதன்பின்னர் இஸ்லாமிய உலகினை ஆட்சி செய்த "ஸபவீக்கள்" என்போரின் ஆட்சிக்காலம் வரலாற்றில் தெளிவில்லாத ஒரு மயக்கநிலை உருவாகியது. கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் ஸபவீக்களினால் ஷீயாக்களின் இஸ்னா அஸ் அரீயா எனும் கோட்பாடே இமாமிய்யாக் கோட்பாட்டுக்கு வித்திட்டது எனலாம்.

கர்பலா நிகழ்வின்போது உமைய்யப் படையினரால் ஹுஸைன்(ரழி) அவர்களின் தலை கொய்யப்பட்டு அவருடைய மனைவி, மகன் செயினுலாப்தீன் ஆகியோருடன் கலிபா யெஸீதின் அரண்மனைக்கு அனுப்பப்பட்டது. இதுகண்டு அதிர்ச்சியடைந்த கலிபா யெஸீத், ஹுஸைன்(ரழி) அவர்களின் மனைவிக்கும் மகனுக்கும் பாதுகாப்பு வழங்கினார். செயினுலாப்தீனின் பரம்பரையில் பிற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜஃபர் சாதிக் என்றொருவர் பிறந்தார் அவரை மறைந்திருந்து பிரச்சாரஞ் செய்யும் முதலாவது இமாமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே இமாமிய்யாக் கோட்பாடு எனக் கூறப்படுகின்றது.

இமாமிய்யாக் கோட்பாட்டுக்கு அடிமையானவர்களே இன்றைய ஈரானிய மக்கள். இன்று உலகுக்கு இமாமிய்யாக் கோட்பாட்டினை ஏந்திச் செல்லும் முக்கிய நாடாக ஈரானும் அந்நாட்டின் விடிவெள்ளியாக காலஞ்சென்ற ஆயத்துலாஹ் கொமெய்னியும் காணப்படுவது உலகறிந்த விடயமாகும்.

மத்திய காலத்தின் ஷியாக்கள் மத்தியில் எண்ணில்லாப் பிரிவுகள் காணப்பட்ட போதிலும் அவைகளெல்லாம் வழக்கிழந்து இமாமிய்யாப் பிரிவு மட்டுமே இன்று முதன்மை பெற்றுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இது நீண்டகால வரலாற்றினைக் கொண்டதாகையால் பல்வேறு தத்துவங்களின், சிந்தனைகளின் தாக்கத்தினை அக்கோட்பாட்டில் காணமுடிகின்றது. பாரசீகர்கள் தங்களுடைய மன்னர்களைக் கடவுளின் அவதாரங்கள் எனவும் எண்ணியிருந்தனர். அவ்வாறான அந்தஸ்தினையே இமாமீக்கள் தங்களுடைய இமாம்களுக்கு வழங்கியிருப்பதை நாம் காணலாம். எனவேதான் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தமது நச்சுக் கருத்துக்களைப் பவ்வியமாகப் பரப்பிவரும் இமாமிய்யாப் பிரிவினர், "மதவிவகாரங்கள் சகலதுக்கும் இமாமே மத்தியஸ்ர்" என்கின்றனர். "இமாம்களை ஏற்றுக்கொள்வது நம்பிக்கை (ஈமான்)யிலிருந்தும் உள்ளது. இமாம் புனிதமானவர், பாவஞ் செய்யாதவர், தேவையுள்ளவர்களே தவறு செய்வர், ஆனால் இமாம்களோ உலகின் எல்லாவற்றுக்கும் அதிபதிகளாக இருப்பதனால் தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள். இமாமுக்கு வழிப்பட்டு நடத்தல் முஸ்லிம்களின் கடமையாகும். இமாம் பதவியானது மார்க்கத்தின் ஒரு பாகம்" என இக்கோட்பாட்டினை வரையறை செய்யலாம்.

இக்கோட்பாடானது அரசின் தோற்றம் பற்றிய தெய்வீக உரிமைக்கோட்பாட்டினை முழுமையாக ஒத்திருப்பதை நாம் காணலாம். "தஸவ்வுப்" எனப்படும் சூபித்துவவாதம் தோன்றுவதற்கு வழிசமைத்ததும் இக்கோட்பாடே. ஆரம்பகால சூபித்துவ ஷெய்குகள் ஷியாக் கொள்கையுடையோராகக் காணப்பட்டமை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஷீயாக்கள் செல்வாக்குப் பெற்றிருந்த மத்தியாசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளான கூபா, பஸரா, பல்க், ஸமர்க்கந்த், பக்தாத் ஆகிய நாடுகளில் பெரும்பாலான சூபிகள் வாழ்ந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இமாமீக்கள் இஸ்லாமிய நம்பிக்கை (அகீதா)யிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளார்கள் என்பதை அவர்களின் நூல்களிலிருந்தே விளங்கிக் கொள்ளலாம்.

"ஷியாக்களின் 12 இமாம்களும் தாங்கள் எப்போது மரணிப்பர் என்பதை அறிவர். அவர்கள் தாம் விரும்பிய நேரத்தில் மரணிப்பர்கள்."

"இந்த 12 இமாம்களிடமும் மலக்குகள் வந்து எல்லா விபரங்களையும் கூறிச் செல்வர்."

"எந்த மனிதனின் பேச்சாயினும், பறவைகள், மிருகங்கள் மற்றும் உயிரினங்களின் பேச்சாயினும் எல்லாவற்றையும் 12 இமாம்களும் அறிவர்."

(கி.பி. 883இல் ஈராக்கில் ஸாமர்ரா என்னுமிடத்திலிருந்து திடீரென மறைந்த முகம்மது என்பவரே இமாமிய்யாத் தொடரில் 12ஆவது இமாம் என இவர்கள் நம்புகின்றனர்)

இவ்வாறாக, இஸ்லாமிய ஷரீஆவுக்கு முரணான நம்பிக்கையுடையவர்களை நாம் என்னென்று கூறுவது எனச் சிந்தித்தல் ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். காலஞ்சென்ற ஆயத்துல்லாஹ் கொமெய்னியின் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் எதிரான புரட்சியை இஸ்லாமியப் புரட்சி-ஸியோனிஸ்டுகளுக்கு எதிரான புரட்சி என்றெல்லாம் வர்ணிக்கின்றோம். ஆனால் அவர் இஸ்லாமிய அகீதாவிலிருந்து எவ்வாறு நெறிபிறழ்வடைந்துள்ளார் என்பதனை அறிய இமாம்பற்றி அவரே தன் வாயினால் கூறியுள்ள கீழ்காணும் கூற்றுக்களை வாசியுங்கள்.

"12 இமாம்களுக்கும் இருக்கக்கூடிய ஆன்மீக அந்தஸ்தை மலக்குகள், நபிமார்கள் கூட அடைய முடியாது என்பது நமது கொள்கையாகும். ஏனெனில் 12 இமம்களும் இவ்வுலகம் படைக்கப்படுவதற்கு முன்னரே ஒளியாக அர்ஷுக்கு அடியில் இருந்தவர்கள். மேலும் 12 இமாம்களும் நபிமார்கள் - மலக்குகள் அடைய முடியாத விஷேஷநிலை அல்லாஹ்விடம் தங்களுக்கு இருப்பதாகக் கூறினார். இதுவே நமது அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும்." (நூல் - விலாயத்தே பக்கீஹ் தர்குர்ஸே ஹுகூமதே இஸ்லாமி. பக்கம் 58)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலக்குகளையும் நபிமார்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் கொச்சைப் படுத்தி அவர்களுக்கெல்லாம் மேலானவர்களாக இமாம்களைக் காட்டுகின்றார் கொமெய்னி.

"அபூபக்கரும், உமறும் அலி(ரழி) அவர்களுக்குச் செய்த தீமைகளுக்கு மன்னிப்புக் கேட்காமலே மரணித்தனர். அவர்கள் இருவர்மீதும் அல்லாஹ்வின் சாபமும் மலக்குகளின் சாபமும் உண்டாகட்டும்" எனக் கூறும் ஷீயாக்கள், "உலக இறுதிநாளின்போது மஹ்தி(அலை) தோன்றிய பின்னர் அலி, ஹஸன், ஹுஸைன்(ரலியல்லாஹு அன்ஹும்) ஆகிய இமாம்கள் மீண்டும் உலகில் தோன்றுவார்கள். அவர்களின் எதிரிகளான அபூபக்கர், உமர், உதுமான்(ரழி) முதலானோர் உலகுக்குக் கொண்டுவரப்பட்டுக் கழுவேற்றப்படுவார்கள்" என்கின்றனர்.

ஷீயாக்கள் நாயகத்தோழர் ஒருசிலரைத் தவிர ஏனையோரை முஸ்லிம்கள் என்றே ஏற்றுக் கொள்வதில்லை. றசூலுல்லாஹ்வின் மரணத்தின் பின்னர் உலகளாவியரீதியாக ஏற்பட்ட அனைத்துத் தீமைகளுக்கும் அடிப்படையானவர்கள் அபூபக்கர், உமர் போன்றோரே. அன்னையர்களான ஹப்ஸா(ரழி), ஆயிஷா(ரழி) ஆகிய இருவரும் றசூலுல்லாஹ்வினால் ஒதுக்கி வைக்கமுடியாமல் சகித்துக் கொண்டிருந்த படுமோசமான பெண்களாவர். பெண்ணினத்தின் எல்லாத் தீமைகளுக்கும் வீழ்ச்சிக்கும் இவர்களே காரணம் என நாக்கூசாமல் கூறுகின்றனர். இம்மைக்கும் மறுமைக்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்டவர்கள் றசூலுல்லாஹ் அவர்கள். அன்னாரின் பாசறையில் வாழ்ந்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள் நாற்பெரும் கலிபாக்கள். மு.:மீன்களின் தாய்மார்களாகக் கட்டியங் கூறப்பட்ட (உம்மஹாதுல் மு.:மினீன்)வர்கள் மானபியின் மனைவியர்கள். இவர்கள் யாவரையுமே உதாசீனஞ் செய்யும் ஷீயாக்களை என்னென்பது.!

மேலும் ஷீயாக்கள் அல்குர்ஆனிலுள்ள எல்லாப் போதனைகளையும் ஏற்றுக்கொள்வதில்லை. தற்போதுள்ள குர்ஆன், உண்மையான குர்ஆனின் 1/3 பகுதியாகும். அது அபூபக்கர், உமர் (றலியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரினதும் விருப்பத்திற்கேற்ப மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது என்கின்றனர். தங்களுடைய கொள்கைக்கு ஒத்துவராத ஹதீஸ்களையும் மறுக்கின்றனர். "புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்கள் யாவும் பொய்யும் புனைதலுமாகும். இவைகளுக்கும்


பொது நூலகம் நகர சபை கல்முனை
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றசூலுல்லாஹ்வின் சுன்னாவுக்கும் எவ்வித தொடர்புமில்லை. அபூபக்கர், உமர்(ரழி) ஆகியோரின் பெயர்கள் ஹதீஸ் அறிவிப்புக்களில் இடம்பெற்றிருப்பதனால் அவைகள் யாவும் பொய்யும் புரட்டும் மறுக்கப்படவேண்டியவைகளுமாகும் எனக்கூறி இவைகளுக்குப் பகரமாக ஷீயா அறிஞர் அபூஜ.'.பர் ய.'.கூப் அல்குலைனி அர்ராஸி எழுதிய "உஸ"லுப்காபி" எனும் நூலை மதிக்கின்றனர். ஷீயாக்களில் தீவிரப்போக்குடையோர் ஏனைய முஸ்லிம்களை "காபிர்" என்கிறனர். அதாவது ஈரானில் வாழும் ஷீயாக்கள் மட்டுமே முஸ்லிம்கள் மற்றவர் எல்லோரும் காபிர் அல்லது நயவஞ்சகர் எனத் தீர்ப்பளிக்கின்றனர். இவ்வாறாக இவர்கள் இஸ்லாமிய வழிக்கப்பால் தூரஞ் சென்றமையினாலேயே கடந்தகால இஸ்லாமிய ஆட்சியாளர்களும் அறிஞர்களும் ஷீயாக்களை ஓரங்காட்டினர் போலும்.

இன்று ஈரானில் இரண்டு கோடி சுன்னத் ஜமாஅத்(சுன்னி) முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் அந்நாட்டின் எல்லைப்புறப் பிரதேசங்களான ஸிதான், பாலுஸிஸ்தான், ஹரகஸ்தான், குர்திஸ்தான், குரஸான், அஸர்பைஸான், பாரிஸ்பூசகர், அர்தபீல் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். அவர்கள் ஈரானியப் புரட்சியின்பின்னர் பல இன்னல்களையும் அனுபவித்துள்ளனர். சுன்னத் ஜமாஅத் அறிஞர்கள் பலர் சிறையிலிட்டும் தூக்கிலிட்டும் கொல்லப்பட்டனர். பல பள்ளிவாசல்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இருநூறாண்டு பழமைவாய்ந்த மஷ்றதிலுள்ள ஜும்ஆ மஸ்ஜித் இடிக்கப்பட்டது. பல பள்ளிவாசல்கள் அரசுடைமையாக்கப்பட்டன. சுன்னத் ஜமாஅத் முஸ்லிம்களின் விகிதாசாரத்திற்கேற்ப சட்டமன்றப் பிரதிநிதித்துவமோ உயர் உத்தியோகங்களோ, சிவில், இராணுவ, பொலிஸ் பதவிகளோ அங்கு வழங்கப்படவில்லை. பொருளாதாரத் துறையிலும் பல நெருக்கடிகள் காணப்பட்டன. அரசியல் யாப்பானது ஈரானிய அரசியல் தலைவராக வருபவர் சுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருக்க முடியாது. அவர் அடிப்படையில் பாரசீகராகவும், ஈரானியப் பிரஜையாகவும் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. இவ்வாறாக நபிவழி செல்வோரை மதரீதியாகவும், கலை கலாசார, பொருளாதார ரீதியாகவும் ஈரானில் ஓரங்காட்டிவரும் ஷீயாக்களை இன்றைய முஸ்லிம்கள் இனங்காணாமலிருப்பது புதுமையிலும் புதுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷீயாக் கொள்கையானது ஒரு தனிமனித வழிபாடுடையது. அதன்காரணமாகவே தரீக்காக்களின் தோற்றம், சூபித்துவத்தின் பேரில் வஹ்ததுல் வுஜூதின் எழுச்சி ஆகியவைகளுக்கு வித்திட்டவர்கள் ஷீயாக்களே எனக்கொள்ளப்படுகின்றனர். இவர்கள் அலி(ரழி)க்குக் கொடுத்த அந்தஸ்த்து எவருக்குமே கொடுக்கவில்லை. ஷீயாக்கள் இமாம் எனும் தனிமனிதனுக்கு சகல நடவடிக்கைகளிலும் முக்கியத்துவம் கொடுப்பதனாலேயே இன்று ஷீயா சார்புடையோர் இல்லங்களில் மறைந்த ஆயத்துல்லா கொமெயினியின் புகைப்படம் மாட்டப்பட்டு மரியாதை செய்யப்படுகின்றது. பாத்திமா நாயகியின் அடக்கஸ்தலத்திலிருந்தும், கர்பலா மைதானத்திலிருந்தும் மண்ணை எடுத்து உரொட்டி போல் செய்து தம் பைகளில் வைத்திருக்கும் வழக்கமும் அவற்றின்மேல் சிரம்வைத்து சுஜூது செய்யும் வழக்கமும் ஷீயாக்களிடமுண்டு. ஆனால் இவர்கள், இஸ்லாத்தின் முக்கிய வணக்க வழிபாடுகளான தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஸகாத் அறவிடல், விநியோகித்தல், மற்றும் ஜிஹாத், பெண்கள் 'ஹிஜாப்' எனும் ஆடை அணிதல் போன்றவிடயங்களில் சுன்னத் ஜமாஅத் முஸ்லிம்களுடன் சிறுமாற்றங்களுடன் ஒத்துப்போனபோதிலும் முக்கியமான அடிப்படைகளில் வெகுதூரம் விலகிச்செல்வதனாலேயே முஸ்லிம்களிலிருந்து ஓரங்காட்டப்படுகின்றனர்.

இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகின் எங்கெல்லாம் தௌஹீத் கோட்பாடு எழுச்சிபெற்று வருகின்றதோ அங்கெல்லாம் மீலாத்விழாக் கொண்டாடுவதற்கும் எதிர்ப்பு அதிகரித்து வருவதை நாம் காணலாம். இ்.து இவ்வாறிருக்க ஷீயாக்கள் பின்னணியாக இருந்து கொண்டு பாத்திமா நாயகியின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கும் ஊக்கமளிப்பதை நாம் பரவலாகக் காணலாம். அலி(ரழி) அவர்களின் பின்னர் அன்னாரும் பாத்திமா நாயகிக்கும் பிறந்தோரின் சந்ததியிலுள்ளோரே இமாம்களாக வருவதற்குத் தகுதியுடையவர்கள் என்பது ஷீயாக்களின் வாதம். அந்த அடிப்படையில் ஷீயாக்கள் பாத்திமா நாயகியைப் புகழ்வதில் ஈடுபட்டுள்ளனர். றசூலுல்லாஹ்வையும், மனைவியர்களையும், தோழர்களையும் தூற்றி நூல் வெளியிட்டமைக்காகவே ஷீயாக்கள் ஸல்மான் ருஷ்திக்கு மரணதண்டனை விதிக்கவேண்டும் என்ற பிரகடனத்தை வெளியிட்டனர். அதேவேலையைத்தான் ஷீயாக்களும் செய்துவருவதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஸல்மான் ருஷ்தியும் அவர்களும் ஒன்றேயன்றி வேறில்லை.

இஸ்லாமிய வரலாற்றில் தொடர்ந்து சர்ச்சையைக் கிழப்பிவரும் ஆயிரம் வருடம் கடந்த ஷீயாப்பிரச்சினையானது அண்மைக் காலமாக இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்திவருவதை நாம் காணலாம். இலங்கையின் எண்திசைகளிலும் பரந்துவாழும் முஸ்லிம்கள் மத்ஹபு ரீதியாகவும் இயக்கரீதியாகவும், தரீக்காரீதியாவும் பிளவுபட்டுள்ளபோதிலும் சந்தர்ப்பத்திற்கு சுன்னத் ஜமாஅத் என்ற மகுடத்தின்கீழ் ஒன்றுபட்டுவிடுகின்றனர். எனவே அவர்கள் அனைவரையும் ஷீயாக்கள் தங்களுடைய அகீதாவுக்கு முரணானவர்கள் எனக்கருதி அவர்கள் மத்தியில் சிந்தனாரீதியிலான தாக்கத்தினை ஏற்படுத்திப் படிப்படியாக எல்லோரையும் தம்முடைய வழிக்குக் கொண்டுவர முயற்சி செய்து வருகின்றனர். அதற்காக அவர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சுன்னத் ஜமாஅத் எனக் கூறிக்கொள்ளும் சில உலமாக்களை வசப்படுத்திக் கொண்டு அவர்கள் உதவியுடன் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தந்திரத்தினை பாமரமக்கள் இனங்கண்டுகொள்ள முடியாமல் ஏமாறுகின்றனர்.

அண்மைக்காலமாக இலங்கையில் ஷீயாக்களின் செயற்பாடுகள் படிப்படியாக முனைப்படைந்து வருவதையும் அவதானிக்கலாம். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கிலங்கையில் அரபுக்கலாசாலை ஒன்று நிறுவி அதற்கு(ஈரான்) நிதியுதவி வழங்கப்படுகின்றது. 1996இல் இருந்து பட்டமளிப்பவிழா நடாத்தப்பட்டு அங்கிருந்து மவுலவிகள் வெளியாகின்றனர். திறமையான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கி ஈரானில் "கும்" எனும் இடத்திலுள்ள கலாசாலைக்கு உயர்கல்விக்காகவும் அனுப்புகின்றனர். பாடசாலைகளிலும், மதிரசாக்களிலும் (குர்ஆன்) கற்கும் மாணவ மாணவியருக்கும் சீருடை, பர்தா ஆகியவைகள் இலவசமாக வழங்குகின்றனர்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், கைநூல்கள் (Booklet) துணை கொண்டு தமது கொள்கையைப் பரப்புகின்றனர். "தூது" என்பது ஷீயாக்களது முழுநேரப் பிரச்சார ஏடாகும். "அல்-இஸ்லாம்", மற்றும் "எழுச்சிக்குரல்" ஆகிய பத்திரிகைகளும் காலத்துக்குக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு ஆதரவாக ஆக்கங்களை வெளியிடுகின்றன. ஆயத்துல்லாக் கொமெய்னியின் இமாமிய்யாக் கொள்கையைப் பிரபல்யப்படுத்தும் நோக்குடன் குத்ஸ்தினம், ஆசுறா தினம், பாத்திமா நாயகி பிறந்த தினம், கர்பலா தினம் தொடர்பான விழாக்கள் நடாத்துவதுடன், கொமெய்னியின் புரட்சி ஒரு இஸ்லாமிய்யப் புரட்சி என்பதைப் பறைசாற்றுவதற்காக கொமெய்னியின் மரண ஊர்வலம், ஆவேசஉரைகள் என்பன அடங்கிய வீடியோ, ஓடியோ நாடாக்கள் வெளியிட்டு மக்களைக் கவர்ந்தும் வருகின்றனர்.

"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நேர்மையான கூற்றையே கூறுங்கள்.(அவ்வாறு நீங்கள் செய்தால்) அவன் உங்களுடைய செயல்களை உங்களுக்குச் சீர்படுத்துவான், உங்களுடைய குற்றங்களை மன்னிப்பான், மேலும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்படிகின்றாரோ அப்போது அவர் திட்டமாக மகத்தான வெற்றியடைந்துவிட்டார்." (33:70,71) எனும் கூற்றுக்கியைய இலங்கைவாழ் முஸ்லிம்கள் (உலமாக்கள் உட்பட) தங்களுக்கு மத்தியிலுள்ள சில்லறைப் பிரச்சினைகளில் சமூகநிலை கண்டு உசார் நிலை அடையாவிட்டால் ஷீயாக்கள் தம்முடைய இலக்கை அடைந்துவிடுவர் என்பது திண்ணமாகும்.

*****

REFERENCE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதியானிகள்

1974ஆம் ஆண்டு, பாக்கிஸ்தானில் சுல்பிக்தார் அலி பூட்டோவின் ஆட்சிக்காலம், அந்நாட்டின் தேசியஅரசுப் பேரவையான பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் ஆதரவுடன் ஏகமனதாக ஒரு சட்டம் இயற்றப்படுகின்றது. "காதியானிகள் முஸ்லிம்களல்லாத ஒரு சிறுபான்மைச் சமூகத்தினரே. அவர்கள் இஸ்லாமிய வட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாகையால் 'காபீர்கள்' ஆகும். அவர்கள் தங்கள் வணக்கஸ்தலங்களை 'மஸ்ஜித்' என அழைக்கக்கூடாது. தங்களுடைய மதத்தவர்களுக்கு அமீருல்மு. ்.மினீன், கலிபத்துல்மு. ்.மினீன் போன்ற வார்த்தைகளைப் பிரயோகிக்கக்கூடாது. மீர்ஷாக்குலாமின் தோழர்களுக்கு அஸ்ஹாபு, றலியல்லாஹு போன்ற அடைமொழிகள் பயன்படுத்தக்கூடாது. அவர்கள் தங்கள் வணக்கஸ்தலங்களிள் பிரார்த்தனை செய்வதற்காக பாங்கு(அதான்) சொல்லக்கூடாது. அங்கு இஸ்லாத்தின் தூயகலிமாவைப் பாவித்து அதன் புனிதத்தன்மைக்கு ஊறுவிளைவிக்கக்கூடாது." எனும் கட்டளைகள் அடங்கியதே அச்சட்டமாகும். அச்சட்டத்தினை மீறுவோறுக்கு மூன்று வருடங்கள்வரை சிறைத்தண்டனை வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

பாக்கிஸ்தான் இஸ்லமிய அறிஞர்களான முப்தி மஹ்மூத், மவுலானா அபுல் அ. ்.லா ம. ்.தூதி, ஸாஹிர் ஹுஸைன் குறைஷி, குலாம் தஸ்தகீர் அஹமது ஆகியோரெல்லாம் அச்சட்டத்தினை வரவேற்றனர். இவ்வாறாக, பாகிஸ்தான் அரசினால் மட்டுமன்றிச் சகல முஸ்லிம்களினாலும் கண்டனத்துக்குள்ளாகி வரும் ஒரு இயக்கமே காதியானியாகும். அவ்வியக்கத்தினை அதன் ஆதரவாளர்கள் "அஹ்மதிய்யா" என அழைக்கின்றனர். அதன் தாபகர் மிர்ஷாகுலாம் அகமது என்பவராகும். அவ்வியக்கம் எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதிருந்தே சர்ச்சைக்குரிய ஒன்றாக இஸ்லாமிய அடிப்படைக்கு(அகீதா) ஒத்துவராத ஒன்றாக இருந்து வருகின்றது.

மிர்ஷாக்குலாம் அகமது, கி.பி. 1835 இல் பஞ்சாப் மாநிலத்தின் காதியான் எனும் சிற்றூரில் பிறந்தார், தமது இளம் வயதிலேயே அல்குர்ஆனையும் அவரின் தாய்மொழியான பார்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் எழுதப்பட்ட நூல்களையும் கற்க ஆரம்பித்தார். பத்துவயதை எட்டியதும் அரபுமொழியைக் கற்கத்தொடங்கியதுடன் தம் பதினேழாவது வயதில் அரபுஇலக்கணம், தர்க்கவியல், மருத்துவம் ஆகிய கலைகளைத் தம்தந்தையிடம் கற்றுத்தேறினார். பின்னர் அவர் தன்னை ஒரு சீர்திருத்தவாதி (1885) என்றும் உலக இறுதிநாளில் வெளியாகும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) (1891) என்றும் ஒரு நபி(1901) என்றும் பிரகடனப்படுத்தினார். ஈற்றில் தமது 69வது வயதில் 1908மே 26ஆந்திகதி மரணித்துத் தம் சொந்தக்கிராமமான காதியானில் அடக்கஞ் செய்யப்பட்டார். அவர் மரணித்ததும் இயக்கத்தின் தலைவர்களாக முறையே மவுலானா ஹக்கீம் நூர்தீன்(1908) மீர்ஷாக்குலாமின் புதல்வர் மீர்ஷா பஷீருத்தீன் மஹ்மூத் (1914) மீர்ஷாகுலாமின் பேரர் மீர்ஷா நாஸிக் அகமது, மீர்ஷா தாஹிர் அகமது ஆகியோர் வாரிசுமுறைப்படி நியமிக்கப்பட்டனர். காதியானிகளின் தலைமையகம் பஞ்சாப்பிலுள்ள ரப்லா நகரிலிருந்து பாதுகாப்புக்கருதி இலண்டன் மாநகருக்கு மாற்றப்பட்டுள்ளது.

இஸ்லாத்தினை ஒடுக்குவதற்காக அதன் எதிரிகள் இருவழிகளைப் பின்பற்றுகின்றனர். ஒன்று ஆயுதகலாசாரத்தின் மூலம் முஸ்லிம் உலகுக்கு அழிவை ஏற்படுத்துவது, மற்றையது சிந்தனாரீதியிலான கலாசாரச் சீரழிவை ஏற்படுத்துவது. இருபதாம் நூற்றாண்டில் மேற்கத்தேயவாதிகளினால் உருவாக்கப்பட்டுள்ள சல்மான் ருஷ்தி, தஸ்லிமா நஸ்ரின் முதலிய கோடரிக்காம்புகள்போல பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியரினால் இஸ்லாமிய கலாசாரத்தினைச் சீரழித்து இஸ்லாமிய நம்பிக்கைக்கு(அகீதா) எதிராக ஊட்டி வளர்க்கப்பட்ட ஒருவரே மீர்ஷாக்குலம் ஆகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி, அங்குள்ள முஸ்லிம் மக்கள் இஸ்லாத்தின் அடிப்படைபற்றி விளங்கிக் கொள்ளாத காலமாகும். எனவே அவர்கள் இமாம்கள், சேஹ் மார்களின் கருத்துக்களைக் கண்மூடிக்கொண்டு பின்பற்றத்தொடங்கினர். அதேகாலகட்டத்தில் அங்கு பிரித்தானியரின் அரசியல் ரீதியான முதல்தர எதிரியாகவும் முஸ்லிம்கள் காணப்பட்டனர். இதனைக் கருத்திற்கொண்ட அவர்கள் முஸ்லிம்களின் சமயப்பலவீனத்தை அறிந்து மிர்ஷாகுலாமை இந்திய முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு சக்தியாகப் பயன்படுத்தத் தொடங்கினர். அவரினால் உருவாக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹமதிய்யாக் கோட்பாடு நாளாவட்டத்தில் இந்தியாவில் மட்டுமல்ல பாகிஸ்தான், இலங்கை முதலிய அண்டைய நாடுகளுக்கும் பரவத்தொடங்கியது.

இன்று இலங்கையில் தூய இஸ்லாமிய நம்பிக்கைக்கு (அகீதா) எதிராக, சவாலாகக் காணப்படும் கோட்பாடுகளுள் இக்கோட்பாடும் ஒன்றாகும். நபி ஆதம்(அலை) காலந்தொட்டு இற்றைவரை பல்லாயிரக்கணக்கான வருடங்களாக, பல கரடுமுரடான பாதைகளைக் கடந்து, உலகின் எண்திசைகளிலும் தனக்கே உரித்தான நேரிய பாதையை அமைத்து இஸ்லாம் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறாக இஸ்லாம் கடந்துவந்த வரலாற்றினை கவிஞர் அல்லாமா இக்பாலும் தனது ஷிக்வா ஜவாபே ஷிக்வாவில்,

"உனக்காகவே போர்க்களத்தில் அணிவகுத்தோர்"
நாங்கள் மட்டுந்தானே!
சில சந்தர்ப்பங்களில் கட்டாந்தரையிலும்
சில நேரங்களில் கடல்நீரிலும் களமமைத்துச்
சமர் புரிந்தோம்.
ஐரோப்பாவின் வோலயங்களிலும் நின்று
சில சந்தர்ப்பங்களில் பாங்கு (அதான்) முழங்கினோம்.
ஆபிரிக்காக் கண்டத்தின் பழுக்கக் காய்ந்த
சுடுமணலிலும் உன்திருநாமம் ஒலித்தோம்.
மகிதலம் ஆழ்வோரின் மகோன்னதம் எதுவும்
எங்கள் கண்களை மயக்கிவிடவில்லை!
வாளாயுதத்தின் நிழலிலும் நாங்கள்
திருக்கலிமா புகன்றுவந்தோம்.
எனச் சிலர் சிலாகிக்கின்றனர்.

இவ்வாறாகக் களம் கண்ட இஸ்லாத்தின் உண்மையான தத்துவங்களை இன்றைய இளந்தலைமுறையினர் அறிந்து விளங்கி அதன்படி அமுல்படுவதற்கு பிரயத்தனம் மேற்கொள்ளல் வேண்டும் என்ற அவாவிலேயே இத்தொடரில் காதியானிகள் இஸ்லாமிய வழிமுறைகளிலிருந்து வேறுபடுமாற்றை முடியுமான அளவு இவ்வியலில் விளக்க விளைந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இறுதிநபியல்ல, அவர்களுடன் இஸ்லாமிய "ஷரிஅத்" முற்றுப்பெற்றுவிட்டாலும் இஸ்லாத்தின் கொள்கைகளை உயிர்ப்பிப்பதற்காக அவர்களின் பின்னரும் காலத்துக்குக்காலம் நபிமார்கள் தோன்றுவார்கள். நபித்துவத்தின் வாசல் எப்பொழுதும் திறந்தேயிருக்கும். நபி(ஸல்) அவர்களின் பின்னர் ஆயிரம் நபிமார்கள் வருவர். மஸீஹ் (மஹ்தி) ஆகிய எனக்கும் 'வஹி' எனும் வேதவெளிப்பாடு உண்டாகும். அந்த வஹியைக் கொண்டு குர்ஆனுடைய சட்டங்களை மாற்றுவேன். சில சட்டங்களை அதிகரிப்பேன். நான் ஷரீஅத் (மார்க்கச்சட்ட விதிகள்) உடையவன்" என அஹமதிய்யா தாபகர் மிர்ஷாகுலாம் கூறியுள்ளார்.

அதாவது காதியானிகள் நபி(ஸல்) அவர்கள், இறுதித்தூதர் (காத்தமுன்னபியீன்) என்பதை மறுப்பதுடன் அன்னாரின் பின்னரும் உலக இறுதிவரை நபிமார்கள் வருவார்கள் எனக்கூறி மிர்ஷாக்குலாமும் அப்படிப்பட்ட ஒரு நபியே என வாதிடுகின்றனர். மிர்ஷாகுலாமை 'ஒரு நபி' என நம்பாதோர் காபிராகும். அவர்களைப் பின்பற்றித் தொழவோ, அவர்களுடன் திருமண உறவு வைத்துக்கொள்ளவோ கூடாது என்றும் கூறுகின்றனர். மறுமை நாள் நெருங்கும்போது ஈசா(அலை) மஹ்தி(அலை) ஆகியோர் மீண்டும் உலகில் தொன்றுவதாக ஹதீதுகள் உள்ளன எனக் கூறுவதால் நபி(ஸல்) அவர்களை இறுதிநபி எனக்கூறுவது பொருத்தமற்றது என்கின்றனர். மேலும் நபி(ஸல்) அவர்களின் 'மிஃ. றாஜ்' எனும் நடுநிசிப்பயணம் ஒரு கனவைப் போன்றதே. நபி அதாம்(அலை) அவர்களும் சுவர்க்கத்திலிருந்து பூமிக்கு இறங்கவில்லை. மாறாக, பூமியில் ஒரு சோலையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்றெல்லாம்கூறி இஸ்லாத்தின் அத்திவாரத்தினையே தகர்தெறிய முயற்சித்தனர்.

அதுமட்டுமன்றி, ஈமானின் அடிப்படையானது ஆறு காரியங்களை உள்ளடக்கியது என்பதையே குர்ஆனும் நபிவாக்கும் எமக்குக் கற்றுத்தருகின்றன. அதாவது அல்லாஹ்மீதும் அவனது வேதங்கள், மலக்குகள், தூதுவர்கள், இறுதிநாள் என்பனமீதும், நன்மை-தீமை என்பன அல்லாஹ்வின் புறமிருந்து வருபவை எனவும் நம்புவதுதான் ஈமானா(நம்பிக்கை)கும். மாறாக முஹம்மது நபி(ஸல்) அவர்களே இறுதநபி என நம்புவதுதான் இஸ்லாம் என்றும் கலிமாவின் கருத்துமென்றால் அது ஏன் ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படவில்லை. கலிமாவிற்கூட மாநபியை அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் (அப்துஹூ வரசூலுஹூ) நம்பும்படியும் குறிப்பிடப்படுகின்றனவேயொழிய 'இறுதித்தூதர்' (காத்தமுன்னபி) என நம்பும்படியும் கூறவில்லையே என காதியானிகள் வாதிடுகின்றனர். அதாவது இஸ்லாத்தில் இறுதிநபித்துவக் கொள்கை இல்லை. 'காதம்' எனும் அரபிப் பதத்தின் கருத்து அகராதிப்படி முத்திரை, சாட்சி, சிறந்தது என்பனவேதவிர 'இறுதியானது' என்பதல்ல. எனவே தொடர்ந்தும் நபிமார்கள் வருவார்கள்; ஆனால் நபி(ஸல்) அவர்களின் மார்க்க நடைமுறைகளை (ஷரீஅத்) இரத்துச் செய்யும் எந்த நபியும் வரமாட்டார்" மேற்கூறிய கருத்தக்களையே காதியானிகள் "இறதிநபி" பற்றிய கொள்கைக்குக் கொண்டிருக்கின்றனர். வஹ்ததுல் வுஜூதின் தந்தை (அத்துவைதம்) எனக்கொள்ளப்படும் முஹ்யித்தீன் இப்னு அரபியும் தனது புத்ஹாதுல் மக்கிய்யா எனும் நூலில், "எல்லா நபித்துவமும் முடிந்துவிடவில்லை. ஆயினும், ஷரீஅத்தைக் கொண்டுள்ள நபித்துவம் மட்டுமே முடிவடைந்துவிட்டது என்பதே உண்மை. உலக இறுதிநாள்வரை மக்களின் நபித்துவம் தொடர்ந்துகொண்டேயிருக்கும்" என காதியானிகளின் கொள்கைக்குக் கோல்கொடுத்துச் சிலாகித்துள்ளார்.

இஸ்லாம் என்பது ஒரு நேரிய பாதையாகும். அது நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றி உலகுக்கு விளக்குவதில் நிகரற்ற நூலாக அல்குர்ஆன் காணப்படுகின்றது. அல்குர்ஆன் ஒரு தெய்வீகத்தன்மையுடைய நூல். அதிலுள்ள கருத்துக்களுக்குச் சொந்தக்காரன் அல்லாஹ்வேயன்றி முகம்மது நபியோ வேறுயாருமோவல்ல என நம்பினால் மட்டுமே ஒரு முஸ்லிமினால் இஸ்லாமியத் தத்துவங்களை விளங்கிக்கொள்ள முடியும். அல்குர்ஆன் அருளப்பட்ட காலை நபி(ஸல்) அவர்கள் வாழ்ந்த சூழல், உலகின் அன்றைய எதார்த்தநிலை, அல்குர்ஆனின் கருத்துக்கள், அதன் அமைப்பு, நடை ஆகியவைகளை ஒரு பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் நோக்கினாற்கூட அல்குர்ஆன் ஒரு வான்மறைதான்; தெய்வீக நூல்தான் என்ற முடிவுக்குவர முடியும். எனவே காதியானிகளின் இறுதிநபி பற்றிய கோட்பாட்டினை ஒவ்வொன்றாக ஆராய்வதைவிட அல்குர்ஆனிலும் அதன் விரிவுரையாகிய சுன்னாவின் நிழிலும் ஒட்டுமொத்தமாக விளங்கிக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதித் தூதர். அவர்களுடன் இஸ்லாமிய ஷரிஅத் முற்றுப்பெற்றுவிட்டது; உலகுக்கு வந்த நபிமார், ரசூல்மார் தொடரில் இறுதியானவராகவும் பொதுவானவராகவும் இருப்பவர், நபி(ஸல்) அவர்களே எனும் அசைக்கமுடியாத நம்பிக்கையுடையோராக முஸ்லிம்கள் இருக்கின்றனர். இதற்கான ஆதாரங்கள் அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் நிறையவுள்ளன. சான்றாக,

"உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முஹம்மது தகப்பனாக இருக்கவில்லை. எனினும் அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களுக்கு(க் கடைசி) முத்திரையாகவும் (இறுதியாகவும்) இருக்கின்றார். அன்றியும் அல்லாஹ் ஒவ்வொரு பொருள்களைப் பற்றியும் நன்கறிந்தோனாகவும் இருக்கின்றான்." (33:40)

"எவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறார்களோ அவர்கள் நபிமார்கள், சத்தியவான்கள் (அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்த) ஷஹீதுகள், நல்லடியார்கள் ஆகியோர்களிலிருந்து எவர்கள்மீது அல்லாஹ் அருள் செய்கின்றானோ அத்தகையோருடன் (சுவனத்தில்) இருப்பார்கள். தோழமைக்கு இவர்கள் அழகானவர்கள்." (4:69)

"உங்களுக்குத் தூதுவர் எதைக் கொடுத்தாரோ அதை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். அவர் உங்களை எதைவிட்டும் தடுத்தாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்."(59:07)

ஆகிய அல்குர்ஆன் வசனங்களைக் கூறலாம். இக்கூற்றுக்கள் அல்லாஹ்வினால் உலகுக்கு அனுப்பப்பட்ட நபிமார்களில், ரசூல்மார்களில் நபி(ஸல்) அவர்கள் இறுதி நபியாகவும் ரசூலாகவும் தோன்றியவர்கள் ஆவார்கள். உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்குமுரிய பொதுவான, இறுதிநபியாக இருப்பதனால் அவர்களுக்குப் பின்னர் நபிமார்களோ ரசூல்மார்களோ வரமாட்டார்கள்; வரவேண்டிய தேவையுமில்லை என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. நபி(ஸல்) அவர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பனூ இஸ்ராயீல் கூட்டதினரக்கு தொடர்ந்து நபிமார்கள் வருபவர்களாக இருந்தார்கள். ஒரு நபி இறந்துவிட்டால் அதற்குப் பகரமாக இன்னொரு நபி வருவார். ஆனால் எனக்குப் பின்னால் எந்த நபியும் கிடையாது." (புகாரி, முஸ்லிம்)

"எனக்குப் பின்னல் எந்த நபியுமில்லை, ரசூலுமில்லை (திர்மிதி)

"நபி(ஸல்) அவர்கள் அலி(ரழி) அவர்களைப் பார்த்து, மூசாவுடன் ஹாருனுக்கு என்ன தொடர்பு இருக்கின்றதோ அதே தொடாபு தான் உனக்கும் எனக்குமுள்ள தொடர்பாகும். ஆனால் எனக்குப் பின்னர் எந்த நபியும் இல்லை என்றார்கள்."

(புகாரி, முஸ்லிம்)

எனத் தெளிவுபடுத்தியிருக்கும் போது காதியானிகளின் "இறுதிநபி பற்றிய கோட்பாடு" எத்துணை மடைமையானது என்பதைச் சிந்தித்தால் புரியும். நபி(ஸல்) அவர்கள் மறைந்ததும் இஸ்லாமிய உலகின் முதலாவது கலீபாவாக அபூபக்கர்(ரழி) தெரிவுசெய்யப்பட்டார்கள். அன்னாரின் இரண்டரை வருட ஆட்சியினுள் முஸைலமா, அஸ்வத் அன்ஸி, துலைஹா, ஸஜ்ஜாஹ் ...... இவ்வாறாகப் பலர் தோன்றி நபித்துவத்துக்காக வாதாடினர். அவர்களை ஒடுக்குவதிலேயே கலீபாவின் காலம் கழிந்தது. ஆனால் அவர்கள் எவருமே அல்குர்ஆனின் கருத்துக்களைத் தமக்குச் சாதகமாகத் திரிபுபடுத்திக் கொண்டு போராடவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டுமே அவர்களுடைய நோக்கமாக இருந்தது. மாறாக, காதியானிகள் அல்குர்ஆனின் சில கருத்துக்களைத் தம் கொள்கைக்குச் சாதகமாகக் கூட்டியும் குறைத்தும், அதேபோன்று ஹதீதுகள் சிலதை மறுத்து, புனையப்பட்ட ஹதீதகளை ஆதாரங் காட்டியும் தம் இறுதிநபிக் கோட்பாட்டை நிறுவ முயற்சித்தனர். அஃது வெற்றியளிக்கவில்லை என்பதை உணர்தல் வேண்டும்.

நபி ஈசா(அலை) மரணித்தவிட்டார்; அவர் வானுலகுக்கு உயர்த்தப்படவில்லை; அவருடைய பதவியே உயர்த்தப்பட்டது என்பது காதியானிகளின் மற்றுமொரு கொள்கையாகும். அதாவது ஈசா(அலை) அவர்கள் தந்தையின்றிப் பிறந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் உயர்த்தப்பட்டார் என்பதை மறுக்கின்றனர். ஈசா நபி, மரணித்துவிட்டார் என்பதை நிறுவினாலே உலக இறுதிநாளில் தோன்றும் மஹ்தி(அலை) தாமே என்பதை நிரூபிக்க முடியும் என்பது மிர்ஷாகுலாமின் கருத்தாகும். ஆனால் முஸ்லிம்கள் நபி ஈசா(அலை) உலக இறுதிநாளில் வருவார்கள் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஈசா(அலை) மரணித்துவிட்டார் என்பதை நிறுவுவதற்கு காதியானிகள் பல முயற்சிகள் மேற்கொண்டனர். அல்குர்ஆனில் வரும் "ஈசா நபி உயர்த்தப்பட்டார்" என்ற வசனத்துக்கு "ஈசா நபி மரணித்துவிட்டார்" என்ற விளக்கத்தைக் கொடுத்தால்தான் ஹதீஸில் வரும் ஈசப்னு மரியமும் மிர்ஷாகுலமும் ஒன்றே என்பதை நிரூபிக்க முடியும் என்பது காதியானிகளின் எண்ணமாகும். இதற்காக அவர்கள், சிலுவையில் அறையப்பட்ட ஈசா(அலை) இறந்தவிட்டார் என நம்பி மூன்று மணித்தியாலங்களின் பின்னர் அவர் காஷ்மீருக்குத் தப்பியோடி 125 வயது வரை அங்கு வாழ்ந்து சிறிநகரில் அடக்கஞ்செய்யப்பட்டார் (மஸீஹே ஹிந்துஸ்தானி நூல்) எனக் கூறினார்.

அதே நேரம் இந்நிகழ்வு பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகின்றது.

> "(ஈசாவை நோக்கி) ஈசாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றிக் கொள்பவனாகவும், உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்பவனாகவும் நிராகரிப்போரி(ன் அவதூறி)லிருந்து உம்மைப் பரிசுத்தமாக்கி வைப்பவனாகவும், உம்மைப் பின்பற்றுவோரை, நிராகரிப்போர் மீது மறுமைநாள் வரையில் மேலாக ஆக்குபவனாகவும் இருக்கின்றேன். அதன் பின்னர் உங்களுடைய 'திரும்புதல்' என்னிடமே இருக்கிறது. அப்போது எதில் நீங்கள் மாறுபட்டவர்களாக இருந்தீர்களோ அதில் நான் உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பேன் என்று அல்லாஹ் கூறியதை நினைவுகூறுவீராக." (3:55)

மேலும், சூறா அந்நிஸாவில் 157 ஆவது வசனம் ஈசா(அலை) கொலை செய்யப்படவுமில்லை; சிலுவையில் அறையப்படவுமில்லை; வேறொருவர் "அறையப்பட்டார்" என உறுதியாகக் கூறுவதுடன் நின்றுவிடாமல் மாறாக "அல்லாஹ் அவரைக் தன்னளவில் உயர்த்திக் கொண்டான்" எனத் தொடர்ந்து கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி(ஸல்) அவர்களும் ஈசா(அலை) வருகை பற்றிக் கீழ்க் காணுமாறு விளக்கமாகக் கூறினார்கள்.

"எனது சமூகத்தில் ஒரு கூட்டத்தினர் எப்பொழுதும் சத்தியத்திற்காக "ஜிஹாத்" செய்து கொண்டிருப்பர். மறுமைநாள் வரை அவர்கள் மிகைத்தே வருவார்கள். பின்னர் ஈசப்னு மரியம் இறங்குவார். அப்பொழுது முஸ்லிம்களின் தலைவர் எங்களுக்குத் தொழவைத்துக் கொடுங்கள் என அவர்களை அழைப்பர். அதற்கு அவர்கள் 'இல்லை', சிலர் சிலர் மீது தலைவர்களாக இருக்கின்றீர்கள். (தலைமைத்துவம் உங்களுக்குரியதாகும்) இது அல்லாஹ் இச்சமூகத்தினருக்கு வழங்கியிருக்கும் கண்ணியமாகும்." என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

"எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன்மீது ஆணையாக மர்யமுடைய மகன் உங்களிடம் நீதி செலுத்துபவராக, தீர்ப்பு வழங்குபவராக இறங்குவார்; சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார்; ஜிஸ்யா (ஆள்வரி)வை நீக்குவார். வாங்குவதற்கு எவரும் இல்லாத அளவு செல்வம் கொளிக்கும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

ஈசா நபி ஏனைய நபிமார்களைப் போன்று சாதாரனமாக வாழ்ந்து மரணித்துவிட்டார். குர்ஆனின் கூற்றுப்படி அவருடைய பிறப்புத்தான் அசாதாரணமானதே தவிர மரணம் சாதாரணமானது. ஈசா நபி தந்தையின்றிப் பிறந்தார் என்பதற்காக இரண்டாயிரம் வருடம் வானத்தில் வாழ முடியும் என்று குர்ஆன் கூறவில்லை. எல்லோரையும் போலத்தான் வாழ்ந்து மடிந்தார் என காதியானிகள் கூறிய கூற்றுக்கலெல்லாம் அல்குர்ஆன், சுன்னா ஆகியவைகளின் முன்னால் எடுபடவில்லை என்பதை மேற்கூறிய கூற்றுக்கள் மூலம் அறியலாம்.

நபி ஈசா(அலை) அல்லாஹ் அளவில் உயர்த்தப்படவில்லை என்பதை நிறுவுவதற்காக காதியானிகள், ரசூலுல்லாஹ்வின் 'மி.'ராஜ்' எனும் விண்ணுலக யாத்திரையும் ஆதம் (அலை) அவர்கள் சுவர்க்கத்திலிருந்து பௌதீக உடலுடன் உலகுக்கு இறங்கியதையும் மறுக்கின்றனர். இதற்குக் காரணம், இந்த இரு நிகழ்வுகளையும் உண்மையென ஒப்புக்கொண்டால் அதேயடிப்படையில் ஈசா(அலை) தம் உடலுடன் அல்லாஹ் அளவில் உயர்த்தப்பட்டமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக்கொள்ள வேண்டிவரும் என்ற தப்பான எண்ணமேயாகும். எனவேதான் ஆதம்(அலை) புவியில் ஒரு பூஞ்சோலையிலிருந்து வெளிப்பட்டார் என்றும் 'மி.'ராஜ்' சென்றமை நபி(ஸல்) அவர்களின் கனவில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியே எனவும் வாதிக்கின்றனர்.

அதே நேரம் மி.'ராஜ் பற்றி அல்குர்ஆன்,

"தன் அடியாரை (க.'பாவாகிய) சிறப்புப்பெற்ற பள்ளியிலிருந்து (பைதுல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு இரவின் ஒரு பகுதியில் பிரயாணஞ் செய்வித்தானே அத்தகையவன் மிகப்பரிசுத்தமானவன். (மஸ்ஜிதுல் அக்ஸாவாகிய) அது எத்தகையதென்றால் நாம் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்கின்றோம். நம்முடைய அத்தாட்சியை அவருக்குக் காண்பிப்பதற்காகவே அழைத்துச் சென்றோம். நிச்சயமாக (உமதிரட்சகனாகிய) அவனே செவியேற்பவன்; பார்ப்பவன்." என விளக்குகின்றது.

எனவே, நபி(ஸல்) அவர்கள் தனது பௌதீக உடலுடனேயே மி.'ராஜ் சென்றனர் என்பது வெள்ளிடைமலையாகும். சர்வவல்லமையுடைய அல்லாஹ்வினால் தஜ்ஜால் எனும் கொடியவனை விலங்கிட்டுப் பாதுகாத்து உலக இறுதிநாளில் வெளிப்படுத்த முடியுமானால், ய.'ஜூஜ், ம.'ஜூஜ் கூட்டத்தினரை உலக இறுதிநாள் நெருங்கும்வரை இரு மலைகளுக்கிடையில் அடைத்துவைத்திருக்க முடியுமானால் ஏன் அவனால் ஈஸா நபியை அவருடைய சொந்த உடலுடன் பாதுகாக்க முடியாது என்பதை நாம் சிந்தித்தல் வேண்டும்.

உலக இறுதிநாளில் வெளிவரும் இமாம் மஹ்தி(அலை) அவர்களும் மிர்ஷாக்குலாம் அகமதுவும் ஒருவரே. ஈசா(அலை) மரணித்துவிட்டபடியால் மஹ்தி(அலை) தோன்றிவிட்டார். அவர்தான் மிர்ஷாகுலாம் என காதியானிகள் வாதிடுகின்றனர். 'காதிஆ' எனும் ஊரில் இமாம் மஹ்தி அவர்கள் தோன்றுவார்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி) அறிவித்ததாகவும், ஹிஜ்ரி 1210 கழிந்ததும் அல்லாஹ் இமாம் மஹ்தியை தோற்றுவிப்பானென நபி(ஸல்) அவர்கள் கூறியதாக உபைதுல் யமாமா(ரழி) அறிவித்தாகவும் இரு போலி ஹதீதுகளை இதற்கு ஆதாரமாகக் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக மஹ்தி(அலை) அவர்களின் வருகை பற்றி ஸஹீஹான ஹதீதுகள் பின்வருமாறு அறியத்தருகின்றன.

"எனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஆட்சிசெய்யும்வரை இவ்வுலகம் முடியாது. அவரது பெயர் எனது பெயரை ஒத்ததாக இருக்கும்" என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத்(ரழி) அறிவிக்கிறார்கள். (திர்மிதி, அபூதாவூத்)

"மஹ்தி என் சந்ததியில் தோன்றுவார். அவர் அகன்ற நெற்றியும் நீண்ட மூக்குமுடையோராகவும் இருப்பார். உலகில் கொடுமையும் அநீதியும் நிரம்பியிருப்பதைப் போன்று அவர் நீதியிலும் நேர்மையிலும் உலகை நிரப்புவார் என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஸயீத் அல் குத்ரி(ரழி) அறிவிக்கிறார்கள்.

எனவே, எதிர்காலத்தில் உலக இறுதிநாளில் பிறக்கவுள்ள மஹ்தி(அலை) என்பவர் நபி(ஸல்) அவர்களின் வாக்கின்படி பாத்திமா நாயகியின் பரம்பரையிலிருந்தே தோன்றவேண்டும். அவருடைய பெயர் முஹம்மது(ஸல்) அவர்களின் பெயரை ஒத்ததாகவும் இருத்தல் வேண்டும். ஆனால், காதியானிகள் கூறும் மஹ்தி (மிர்ஷாக்குலாம்) பாரசீகப் பரம்பரையைச் சேர்ந்தவராகவும் இறுதி நபித்துவத்தை மறுப்பவராகவும் இருக்கின்றார். அவர் எப்பொழுதோ பிறந்துவிட்டார் என்பதையும் நாம் புரிந்துகொள்ளல் வேண்டும்.

உலக அழிவுக்கு முன்னர் கீழ்காணும் அடையாளங்கள் ஏற்படும் என நபி(ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

"புகைமூட்டம், தஜ்ஜால், அதிசயப் பிராணி, சூரியன் மேற்கிலிருந்து உதிப்பது, ஈசா(அலை) இறங்கிவருவது, யஃஜூஜ் - மஃஜூஜ் வெளியாவது அரேபியத் தீபகற்பத்தில் ஒன்று என மூன்று நிலச்சரிவுகள் ஏற்படுவது. இவற்றுள் இறுதியாக, யெமனிலிருந்து புறப்படும் தீப்பிளம்பு மக்களை விரட்டிச் சென்று ஒன்றுசேர்த்தல் ஆகிய பத்து அடையாளங்களை நீங்கள் காணும்வரை அந்நாள் வராது" என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஹுதைபா(ரழி) அறிவித்துள்ளார்கள். (முஸ்லிம்)

மேற்கூறிய அடையாளங்கள் ஏற்பட்ட பின்னரே ஈசா(அலை) இறங்குவார்; மஹ்தி(அலை) தோன்றுவார் என முஸ்லிம்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புகின்றனர். ஆனால் காதியானிகளோ மஹ்தி(மிர்ஷாக்குலாம்) பிறந்து விட்டார் என்பதை நிரூபிப்பதற்காக பத்து அடையாளங்களும் உலகில் தோன்றிவிட்டன என்கின்றனர்.

இறுதிநாள் அடையாளங்களுள் மிக முக்கியமானவைகள் தஜ்ஜாலினதும், ய'.ஜூஜ்-ம'.ஜூஜ் கூட்டத்தினரதும் வெளிப்பாடாகும். இவ்விரு அடையாளங்களுக்கும் காதியானிகள் பின்வருமாறு விளக்கங் கொடுக்கின்றனர். நபி(ஸல்) அவர்கள் தஜ்ஜால் எனக் குறிப்பிட்டது கிறிஸ்தவ சக்திகளையாகும். அவைகள் இன்று பலம்பெற்று, செல்வாக்குப் பெற்றுள்ளன. இந்தச் சக்திகள் விஞ்ஞானத்திலும் தொழிநுட்பத்திலும் முன்னேறி வறியவர்களுக்கு உதவுதல் எனும் போர்வையில் உலகத்தில் மதமாற்றஞ் செய்வதில் ஈடுபட்டு வருகின்றன என காதியானிகள் கூறினர். ஆனால் நபி(ஸல்) அவர்கள் தஜ்ஜாலுக்குரிய அடையாளங்களாக பின்வருபவைகளைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. ஒருகண் (இடது) ஊனமுற்றவனாக இருப்பான்.
2. அவனுடைய இருகண்களுக்குமிடையில் "காபிர்" என எழுதப்பட்டிருக்கும்.
3. ஊனமுற்ற கண்ணின் மூக்கையொட்டிய ஓரத்தில் கடினமான தசைக்கட்டியொன்று தென்படும்.
4. ஊனமடையாத மற்றக்கண் பச்சைநிறக் கண்ணாடிக் கற்கள் போன்று அமைந்திருக்கும்.
5. அதிக வெண்ணிறமுடையவனாகவும் கனத்த உடலமைப்புடையவனாகவும் இருப்பான்.
6. தலைமுடி மரத்தின் கிளைகள் போலிருக்கும். அடர்த்தியான முடியுடையவனாக இருப்பான்.
7. பரந்த நெற்றியும் குள்ளமான தோற்றமும் கால்களின் இடைவெளி விரிந்தவனாகவும் இருப்பான்.

(ஆதாரம் : முஸ்லிம், அகமது, திர்மிதி, அபூதாவூத், தப்ராணி)

இந்த அடையாளங்கள் யாவும் தஜ்ஜால் என்பது ஒரு தீயசக்தி என்பதை உருவாக்கிக் காட்டுவதற்காகவல்ல. இவைகள் ஒரு தனிமனிதனையே குறிக்கின்றது. நபி(ஸல்) அவர்களின் பல அறிவிப்புகளின்படி அவன் இன்னும் உலகின் ஓரிடத்தில் விலங்கிடப்பட்டு உயிரோடுள்ளான். இறுநாளின்போது வெளிவருவான். இதுவே தஜ்ஜால் பற்றிய முஸ்லிம்களின் நம்பிக்கையாகும்.

பொது நூலகம்
நகர சபை
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ய.்.ஜூஜ் - ம.்.ஜூஜ் கூட்டத்தினர் பற்றியும் விசித்திரமான கருத்தினை வெளியிட்டனர். இக்காலத்தின் மிகப்பெரிய வல்லரசுகளான அமெரிக்காவையும் ரஷ்யாவையுமே இது குறிக்கும். இவைளே 1948இல் மத்திய கிழக்கில் யூதநாட்டை (இஸ்ரேல்) உருவாக்கியதன் மூலம் தமது ஆதிக்கத்தினை நிறுவின என்றனர். அதேநேரம் இக்கூட்டத்தினரின் தோற்றமும் சக்தியும் பற்றிப் பொன்மொழிகள் பின்வருமாறு தெளிவாகக் கூறுகின்றன.

"அவர்களின் முகங்கள் அகன்றதாகவும் கேடயம்போல் (வட்டமாகவும்) கண்கள் சிறியனவாகவும் முடி செம்பட்டையாகவும் அமைந்திருக்கும்." (அஹ்மது, தபராணி)

"ய.்.ஜூஜ் - ம.்.ஜூஜ் கூட்டத்தினர் ஆதம்(அலை) அவர்களின் சந்ததிகளாகவும் இருப்பர். அவர்கள் விடுவிக்கப்பட்டால் மக்களின் வாழ்க்கையைப் பாழாக்குவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம் அல்லது அதற்கும் அதிகமான சந்ததிகளை உருவாக்காமல் மரணிப்பதில்லை." (தப்ராணி)

தஜ்ஜால் வருகை, ய.்.ஜூஜ் ம.்.ஜூஜ் கூட்டத்தினர் வருகை ஆகிய இரு அடையாளங்களும் இதுவரையில் நடந்தேறிவிட்டதாக எவருமே கற்பனை பண்ண முடியாது. ஆனால் மிர்ஷாக்குலாமோ தாமே மஹ்தி என்பதை நிரூபிப்பதற்காக மேற்காணும் பொன்மொழிகளையெல்லாம் பொய்யாக்கியுள்ளார் என்பது தெளிவாகிறதல்லவா!

மேலும், மஹ்தி(அலை) அவர்கள் அரபியாவில் அன்னை பாத்திமா(ரழி) அவர்களின் பரம்பரையில் தோன்றுவார்கள் என நபி(ஸல்) அவர்களினால் முன்னறிவிப்புச் செய்யப்பட்டிருக்க, காதியானிகள் கத்ஆ (பஞ்சாப்) என்ற இடத்தில் பார்சிய வம்சத்தில் பிறந்துள்ளதாக (மிர்ஷாக்குலாம்)க் கூறுகின்றனர். காதியானிகள் மத்தியில் இவ்வாறான தில்லுமுல்லுகள் ஏராளமாகவுள்ளன. இன்று இவர்கள் உலகின் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் ஏனைய இஸ்லாமிய நிறுவனங்களின் எதிர்ப்புக்களுக்கும் நெருக்குதல்களுக்கும் ஆளாகிவருவதை நாம் செய்தியூடகங்கள் மூலம் தினாந்தம் காண்கின்றோம். அதற்கு முக்கியகாரணம், இவர்கள் இஸ்லாமிய அகீதாபற்றித் தெளிவானதொரு கொள்கையை முன்வைக்காமையால் அவர்களின் இன்றையத் தலைவர்களிடம் எதிரணியினர் கேட்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்குக் காத்திரமான விடையளிக்க முடியாமையாகும். இதனால்தான் என்னவோ காதியானிகள் தம்ஆற்றாமை காரணமாக, தம்முடன் பொருதுவோரை எடுத்ததற்கெல்லாம் "முபாஹலா"ச் செய்வோம் வாருங்கள் என அழைக்கின்றனர்.

"முபாஹலா" என்பது இருசாரார் விவாதம் புரிந்து உண்மை தெளிவானதும் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்போருடன் சத்தியவழியிலுள்ளோர் அழிவுச்சத்தியம் செய்தலைக் குறிக்கும். இச்சத்தியம் உருவாகிய பின்னணியை இவ்விடத்தில் நாம் அறிவது பொருத்தமானதாகும். நபி(ஸல்) அவர்கள் காலத்தில் நஜ்ரான் நாட்டைச் சேர்ந்த அறுபதுபேர் அடங்கிய ஒரு கிறிஸ்தவக்குழுவினர் நபியவர்களிடம் வந்தனர். அவர்களுள் சிறந்த அறிஞர்களாகக் காணப்பட்ட இருவர் கிறிஸ்தவர்களின் திரித்துவக்கடவுட் கொள்கையை நிரூபிக்கும் நோக்கத்துடன் நபி(ஸல்) அவர்களுடன் நீண்ட நேரம் விவாதித்தனர். நபி(ஸல்) அவர்கள் அல்குர்ஆனிலிருந்து பல ஆதாரங்களைக் காட்டிய போதிலும் கிறிஸ்தவப் பாதிரிகள் ஏற்றுக் கொள்ளாது பிடிவாதமாக விவாதத்தைத் தொடர்ந்தனர். அப்பொழுது அல்லாஹ்,

"(நபியே!) இதுபற்றி உண்மையான அறிவு உம்மிடம் வந்தபின், இதைப்பற்றி உம்முடன் எவரும் தர்க்கித்தால் நீர் கூறுவீராக! வாருங்கள் நாம் எங்களுடைய புதல்வர்களையும் உங்களுடைய புதல்வர்களையும் எங்களுடைய பெண்களையும், உங்களுடைய பெண்களையும் எங்களையும் உங்களையும் அழைத்து, பிறகு நாம் பிரார்த்திப்போம், பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபத்தை ஆக்குவோம்" (3:61) எனும் வசனத்தை இறக்கி நபியுல்லாஹ்வுக்கு கிறிஸ்தவர்களை அழிவுச் சத்தியத்திற்கு (முபாஹலா) அழைக்கும்படி கட்டளையிட்டான். ஆனால் கிறிஸ்தவர்களோ இவ்வசனம் இறங்கியதும் வாயடைத்து நின்றனர். நபி(ஸல்) அவர்கள் விவாதித்தவர்களை நோக்கி,

"வாருங்கள் எங்களது பிள்ளைகளையும் உங்களது பிள்ளைகளையும் எங்களது மனைவியர்களையும் உங்களது மனைவியர்களையும் இங்கு அழைத்துக் கொண்டு வந்து அவர்களுடன் நீங்களும் நாங்களும் இருந்து "பொய் சொல்வோர் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக" என்று சத்தியஞ் செய்வோம் என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதித்தவர்களோ சத்தியஞ் செய்யப்பின்வாங்கினர். கூடவிருந்த பாதிரிகள் சிலர், சத்தியஞ் செய்யலாமே எனக் கூறியபோது, "முஹம்மது உண்மை நபியாக இருக்கின்றார் சாபத்துக்குச் சத்தியஞ் செய்தால் அல்லாஹ்வின் சாபம் நமக்கு ஏற்பட்டு விடும்" எனக் கூறிவிவாதத்திலீடுபட்ட கிறிஸ்தவ அறிஞர்கள் பின்வாங்கினர். இந்த உண்மையை உணர்ந்தும் உணராதவர்கள்போல காதியானிகள், கூட்டாகக் குடும்பத்துடன் செய்ய வேண்டிய முபாஹலாவை இன்று மலினப்படுத்தி, எடுத்ததற்கெல்லாம் தனிநபரைக்கூட "வாருங்கள் முபாஹலாச் செய்வோம்" என அழைத்தவண்ணமுள்ளனர். இதனை இலங்கை, இந்தியா, ஆகிய நாடுகளிலிருந்து வெளியாகும் சஞ்சிகைகளில் அடிக்கடி சந்திக்க முடிகின்றது. மேலும் இவர்கள் 1997ஆம் ஆண்டினை "முபாஹலா ஆண்டு" என்றே பிரகடனப்படுத்தியிருந்தனர்.

காதியானிகள், கபுறுவணக்கம், அவுலியாக்களிடம் உதவி தேடல், கத்தம்-பாத்திஹா ஓதுதல், மௌலூது - ராத்திபு ஓதுதல் அன்னிய கலாச்சாரத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல் போன்ற நூதனவழிபாடு (பித்அத்)களிலிருந்து விலகி நடந்தபோதிலும் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கு(அகீதா) முரணாக,

- முகம்மது நபி(ஸல்) இறுதி நபியல்ல.
- ஈசா(அலை) தமது ஸ்தூல சரீரத்துடன் விண்ணுலகு ஏகவில்லை.
- ஆதம்(அலை) பௌதீக நிலையில் வானத்திலிருந்து இறக்கப்படவில்லை.
- ஈசா(அலை) மரணித்து விட்டார்.
- றசூலுல்லாஹ்வின் "மி'.றாஜ்" ஒரு கனவே.
- மிர்ஷாக்குலாமுக்கும் "வஹி" எனும் வேதவெளிப்பாடு வந்தது.
- மஹ்தி(அலை) பிறந்து விட்டார். அவரும் மிர்ஷாக்குலாமும் ஒன்றே.
- உலக இறுதிநாளுக்குரிய அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன.
- காதியானிகள் அல்லாத சகலரும் காபிர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைகளுக்கு (அகீதா) முரணான கொள்கையுடையோராக இருப்பது மட்டுமல்லாமல் தம் கொள்கைக்கு ஒத்துவராத அல்குர்ஆன்-அல்ஹதீஸ் வசனங்கள் பலவற்றினை மறுத்தும், திரித்தும் கூறியுள்ளதால் உலகிலுள்ள சகல முஸ்லிம்களினாலும் இன்று ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

இலங்கையிலும் ஏனைய இயக்கங்கள் தோன்றிய சமகாலத்தில் இவ்வியக்கம் தோன்றிச் செயல்பட்டுவருவதை நாம் காணலாம். இவர்கள் நீர்கொழும்பு, பஸ்யாலை, கதுருவெல ஆகிய இடங்களில் தங்களுக்கெனப் பிரத்தியேகமான பள்ளிவாசல்களை அமைத்துள்ளனர். அவர்களின் இலங்கைத் தலைமையகம் அமைந்துள்ள நீர்கொழும்பில் சுன்னாப்பிட்டி பெரிய பள்ளிவாசலுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் இவர்களின் பள்ளிவாசலொன்றுண்டு. அங்கு பெண்களும் ஜும்ஆவில் கலந்துகொள்வர். நாம்புளுவ-பஸ்யாலையிலுள்ள தங்களுடைய பள்ளிவாசலில் "இன்ரநெட்" (சர்வதேச கணணி வலைப்பின்னல்) தொடர்பையும் அமைத்துள்ளனர். அதனூடாக இடம்பெறும் நிகழ்வுகளை, ஜும்ஆப் பிரசங்கம் ஆகியவைகளின் நேரடி ஒலிபரப்பினால் பார்க்கின்றனர். பொலன்னறுவை, புத்தளம் ஆகிய இடங்களில் சிறுசிறு பள்ளிவாசல்கள் உள்ளபோதிலும் அப்பகுதிகளில் காதியானி இயக்கம் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. காதியானிகள் ஏனைய பள்ளிவாசலுக்குச் சென்று தொழமாட்டார்கள். 'தூதன்' எனும் சஞ்சிகை மூலம் கொள்கைப் பிரச்சாரத்திலீடுபட்டு வருகின்றனர். காதியானிகள் ஏனையோரை முஸ்லிம்களாக ஏற்றுக்கொல்வதுமில்லை. எனவே, இலங்கையைப் பொறுத்தவரையில் இஸ்லாத்தின் வளர்ச்சியில் காதியானிகளின் செயற்பாடு பெருந்தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை எனக் கூறலாம்.

❋❋❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஹ்தத்துல் வுஜுத் - தஸவ்வுப்

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் "வஹ்தத்துல் வுஜுத்" எனும் அத்துவைதக் (Mysticism) கோட்பாட்டினால் சில முஸ்லிம்கள் ஈர்க்கப்பட்டுச் சீரழிந்து வருவதை நாம் இன்றும் காண்கின்றோம். "இறைவன்தான் உலகின்கண் இறைவன், ஆன்மா, பிரபஞ்சம் ஆகிய எல்லாமாகக் காட்சியளிக்கின்றான். அவனன்றி உலகில் வேறு எதுவுமேயில்லை. எல்லாம் அவனே. உலகில் காணப்படும் சகலதும் இறைவனின் தோற்றப்பாடுகளே "எனக்கூறும் இறைவனுடன் இரண்டறக்கலத்தல் எனும் "அத்துவைதக் கோட்பாடு," இறைவனைத் தவிர உள்ள மற்றெல்லாப் பொருட்களும் அவனுடைய படைப்புக்களே. அவனைப்போல எப்பொருளுமில்லை. தன்னுடைய எல்லாப் படைப்புக்களின் எல்லா இயக்கங்களையும் படைத்த இறைவன் எல்லாவற்றையும் உற்று அவதானிக்கின்றான். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவருமில்லை. அவனுக்கு இணைதுணை கிடையாது, அவன் தனித்தவன், அவன்வேறு படைப்பினங்கள் வேறு. படைப்புக்கள் யாவும் அவனுடைய ஆற்றலைக்கொண்டே படைக்கப்பட்டன." எனும் மூலமந்திரத்துக்குக் கட்டுப்பட்டு இயங்கும் முஸ்லிம்கள் மத்தியில் "வஹ்தத்துல் வுஜுத்" எனும் அரபுப் பெயரில் அத்துவைதம் நுழைந்து இஸ்லாமிய நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி அறியவேண்டியது இன்றைய ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கட்டாய கடமையாகும். ஏனெனில் இச்சித்தாந்தத்துக்குச் சொந்தக்காரர்கள் இந்துக்களே. அவர்களிடமிருந்தே வேதாந்த முஸ்லிம்கள் இதனைக் கடன்பட்டுக் கொண்டுவந்து இஸ்லாத்தினுள் புகுத்தியுள்ளனர்.

இந்துக்களுக்கு அவர்களின் வேதங்களில் "இரண்டுமற்ற ஒரேபொருள்" எனும் கருத்தில் "அத்துவைதம்" எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பெயரை ஆதாரமாக வைத்தே இந்துக்கள் மத்தியில் கேவல அத்துவைதம், சுத்த அத்துவைதம், சிவ அத்துவைதம் எனப்பல்வேறு மதங்கள் வழக்குக்குவரத் தொடங்கின. இம்மதங்களைச் சார்ந்த ஒவ்வொரு பிரிவு இந்துக்களும் தாங்கள்தான் அத்துவைதத்தின் உண்மையான பொருளை அறிந்த "அத்துவைதிகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சொல்லிக் கொள்வார்கள். இன்று இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வழக்கிலிருக்கும் அத்துவைதம் ஆதிசங்கரர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இதன் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர் சுவாமி விவேகானந்தர். இவர் இராமகிருஷ்ண மடங்களைப் பல பாகங்களிலும் நிறுவி, அரும்பணியாற்றியதனால் அத்துவைதம் நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்டது எனலாம்.

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் கேரள மாநிலத்தில் "காலடி" என்னுமிடத்தில் சங்கராச்சாரியார்(ஆதிசங்கரர்) பிறந்தார். அவர் "அத்துவைதம் என்றால் இரண்டும் அல்ல ஒன்று" எனப் பொருள் கொள்ளப்படும், அதாவது கண்ணுக்குப் புலப்படும் பிரபஞ்சமாகிய உலகமானது "தோற்றப் பொருள்", அது உண்மையற்ற பொருள், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே, உண்மைப் பொருள் பிரம்மம் மட்டுமே என தமது அத்துவைதக் கோட்பாட்டினை முன்வைக்கின்றார். அதனை உறுதிப்படுத்த அவர் எடுகோள்களாகக் கொள்பவை.

1. பிரம்மத்தின் இருமையற்ற தன்மை
2. உலகத்தின் உண்மையற்ற தன்மை.
3. பிரம்மாவிலிருந்து ஆத்மா வேறுபடாத நிலை என்பனவாகும்.

பிரம்மம் என்பது தானாகவுள்ள மாயப்பொருள். ஆத்மா, பிரபஞ்சம்(உலகம்) ஆகிய பொருட்கள் வெறும் தோற்றங்கள். பிரம்மம்தான் மாயச்சேர்க்கையால் உலகாகவும், உயிர்களாகவும் தோன்றுகின்றன. இத்தோற்றங்கள் உண்மையற்றவை என சங்கரர் வாதாடுகின்றார். அத்துவைதம் என்ற பெயரால் பல மதங்கள் இருந்து கொண்டு அவைகளைப் பின்பற்றுவோர் எல்லோரும் தாங்கள்தான் அத்துவைதத்தின் உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டாலும் ஆதிசங்கருடைய கருத்தே நிலைத்து நிற்கின்றது. அவர் தம் கோட்பாட்டினை விவேகசூடாமணி, உபநிடதவிரிவு ஆகியவைகள் மூலம் வெளியிட்டார்.

இன்று உலகில் நடைபெறும் காரியங்களெல்லாம் மனிதனுடைய குணங்களினாலேயே செய்யப்படுபவை. மனிதன் எவற்றையுஞ் செய்வதில்லை. அவனுடைய உடலில், உள்ளத்தில், உரையில் நிகழும் எல்லாச் செயல்களும் அவனுடைய குணங்களினாலேயே உருவாகின்றன. குணம் என்பது ஆன்மா, உடல் ஆகிய இரண்டினதும் தொடர்பினால் உருவாகுவதாகும். உடலானது சுவை, ஒளி, ஊறு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை, நாற்றம் எனும் ஐம்பூதங்களைக் கொண்டது. அவைகளுக்கு மேலாக மனிதனிடம் உணர்ச்சிவசப்படுந்தன்மை எனவும் ஒன்றுண்டு. எனவே, ஐம்பூதங்களினூடாகவே மனிதனின் இயற்கைப் பண்புகள் வெளியாகின்றன.

மண்ணினால் செய்யப்பட்ட பொருள்களான குடம், பானை, சட்டி, முட்டி என்பன வெவ்வேறு பெயர்களைப் பெற்றாலும் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டதாக இருந்தாலும் அவை சகலதுக்கும் மூலப்பொருளான "மண்" ஒன்றே. படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் பொறுப்பான இறைவனுக்கு உருவம் கிடையாது. அவன் உருவமற்ற அரூபி. ஆன்மாவும் அரூபியானது. அரூபியாகிய ஆன்மா உடலை இயங்கிக் கொண்டிருப்பது போல அரூபியாகிய இறைவனும் இரண்டறக் கலந்து முத்தொழில்(குணம்)களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்பன இறைவனுடைய பண்பின் தோற்றமேயன்றி வேறில்லை. குடம் முழுவதும் மண் வியாபித்திருப்பது போல உலகில் சகல பொருள்களிலும் இறைவன் வியாபித்திருக்கின்றான். அப்படியிருந்துகொண்டு அவன் தனது சக்தியைக் கொண்டு இயங்காவிட்டால் காற்றுவீசாது, நெருப்பு எரியாது, நீர் ஓடாது. அதனாலேயே "அவனின்றி ஓரணுவும் அசையாது" எனக்கூறி, இதுபோன்றே மனித சிந்தனைகளும் இயங்குகின்றன என்றார் சங்கராச்சாரியார். இந்த அடிப்படையிலேயே அத்துவைதிகள் விதைகளிலிருந்து எண்ணற்ற இலைகள், மலர்கள், காய்கள் உருவாவது போன்று மூலப்பொருளாகிய இறைவனின் குணங்களின் பல்வகையான தொகுதிகளே உலகிலுள்ள பொருள்கள். எனவே உலகில் காணப்படும் யாவுமே இறைவனின் தோற்றப்பாடுகள் என்கின்றனர்.

அன்பின் இஸ்லாமியச் சோதரர்! இன்று முஸ்லிம்களாகிய நாம் உலக வாழ்வில் எதையெதையெல்லாம் உண்மை என நம்பிக் கொண்டிருக்கின்றோமோ அவற்றையெல்லாம் உண்மையானவைகளல்ல என்று அத்துவைதம் மறுக்கின்றது. இந்த உலகமும் உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் வெறும் பொய்த்தோற்றங்களே, கடவுளும் உயிரும் வேறல்ல. இரண்டும் ஒன்றே என்பதே அத்துவைதத்தின் அடிப்படை என்பதை ஓரளவு விளங்கியுள்ளோம். இக்கோட்பாடு இஸ்லாத்தினுள் எவ்வாறு நுழைந்தது என்பதை அறிதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் இஸ்லாத்தின் அடிப்படையாகிய "தௌஹீத்" எனும் ஓரிறைக் கொள்கை,படைத்தவனாகிய அல்லாஹ் வேறு, படைப்பினங்கள் வேறு, படைப்பினங்கள் யாவும் அல்லாஹ்வின் வல்லமையினால் உருவாக்கப்பட்டவைகள்" என்கின்றது. அதாவது கலிமாவின் நோக்கம் அல்லாஹ் வேறு அடியான்வேறு, அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கின்ற அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும். படைப்பினங்களிலிருந்தும் வேறான அவனையன்றி வேறு எதனையும் வணங்கக் கூடாது என்பதேயாகும். இத்தத்துவத்தினை உணர்த்துவதற்காகவே இவ்வுலகுக்குக் காலத்துக்குக் காலம் நபிமார்களும் றசூல்மார்களும் அனுப்பப்பட்டனர். இதனை அல்குர்ஆன்,

"ஜின்களையும் மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை." (51:56)

"ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம். (அத்தூதர் அச்சமூகத்தவர்களிடம்) அல்லாஹ்வையே வணங்குங்கள் (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்." (16:36)

"மேலும் (நபியே!) உமக்கு முன்னர் எந்தத்தூதரையும் நிச்சயமாக என்னைத் தவிர (வணக்கத்துக்குரிய) வேறு நாயனில்லை. எனவே என்னையே நீங்கள் வணங்குங்கள் என்று அவர்பால் நாம் 'வஹீ' அறிவித்ததைத் தவிர நாம் அனுப்பவில்லை." (21:25)

முதலிய வசனங்கள் மூலம் தெளிவுபடுத்துகின்றது. ஆனால் வஹ்ததுல் வுஜூத்வாதிகளும் அவர்களைச் சார்ந்தோரும், நாங்களே அல்லாஹ்வின் பிம்பங்களாக இருக்கும்போது மற்றவர்களைப் போன்று அல்லாஹ்வை ஏன் வணங்க வேண்டும். "தௌஹீத்" எனும் கலிமாவின் கருத்து மேற்கூறப்பட்டவைகளல்ல எனக்கூறி, தௌஹீதுக்கு வேறொருகோணத்தில் கருத்துக்கூறுகின்றனர்.

அதாவது இஸ்லாம், அல்லாஹ்வுக்கு வணக்கஞ் செலுத்துவதை தௌஹீத்(ஓரிறைக் கொள்கை) என்றும், படைப்பினங்களுக்கு வணக்கஞ் செலுத்துவதை ஷிர்க்(இறைநிராகரிப்பு) என்றும் கூற, வஹ்ததுல் வுஜூதினால் ஈர்க்கப்பட்ட வேதாந்த முஸ்லிம்கள், முற்றிலும் வேறுபட்ட கருத்தையே கொடுக்கின்றனர். இவர்களும் சிலை, மற்றும் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைப் பொருட்களை வணங்குவோரை வேறொரு கருத்தில் இணைவைப்போர் என்றே கூறுகின்றனர். "வஹ்ததுல் வுஜூத் என்பது நான்வேறு அல்லாஹ்வேறு என்பதல்ல. எல்லாம் ஒன்று என்பதே. ஆகவே மனிதன் படைப்பினங்களை வணங்கினால் அவன்வேறு படைப்பினங்கள் வேறாகக் காண்கின்றான். இது "எல்லாம் அல்லாஹ்" எனும் கொள்கைக்கு முரணானது. இவ்வாறு இரண்டு பிரிவாகப் பிரித்துப் பார்க்காமல் நானும் அல்லாஹ்தான், படைப்பினங்களும் அல்லாஹ்தான், நானே அவன் எனக்கண்டு கொள்வதே தௌஹீதாகும் என இவர்கள் கூறுகின்றனர். இது இஸ்லாமிய நம்பிக்கைக்கு (அகீதா) முற்றிலும் முரணானது என்பதை உண்மையான தௌஹீத்வாதிகள் புரிந்து கொள்வர்.

இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கையானது (தௌஹீத்) இஸ்லாமிய உலகில் உமையாக்களின் ஆட்சியின் (661-750) ஆரம்பகாலத்திலிருந்தே பல்வேறு தத்துவங்களுடன் கலப்படஞ் செய்யப்பட்டது. இஸ்லாம் பல்வேறு நாடுகளுக்குப் பரவியபோது அந்நாடுகளிலுள்ளவர்கள் தத்தம் மதக் கோட்பாடுகளுடன் இஸ்லாமியக் கோட்பாட்டினைத் தொடர்புபடுத்தி ஆராயத் தொடங்கினர். இதில் முன்னணி வகித்தோர் இந்திய முஸ்லிம்களும், பாரசீகச் செல்வாக்குக்குட்பட்ட மு..்.தஸிலாக்கள் எனும் பகுத்தறிவு வாதிகளும் மற்றும் சில நயவஞ்சகத்தன்மை கொண்ட முஸ்லிம்களுமாகும்.

ஒவ்வொரு பொருளும் இறைவனே,அவன் ஒவ்வொரு பொருளிலும் வியாபித்திருக்கின்றான். எண்ணிலடங்காப் பொருள்களாகத் தோற்றுபவனும் அவனே. திருமணம் முடிப்பவனும் முடிக்கப்படுபவனும் அவனே. அறுப்பவரும், அறுக்கப்படுவதும் அவனே. பிர்அவ்ன், நம்றூத் ஆகியோரும் அவர்களின் வழித்தோன்றல்களும் பூரணமாக ஈமான் கொண்ட மு..்.மீன்களாகும். அவர்கள் சுவர்க்கவாசிகள் விக்கிரகத்தை வணங்கியோர் இறைவனையே வணங்கினர். அவர்களின் வழிசரியானதே. இத்தத்துவங்களை உலகுக்கு அறிமுகஞ்செய்யவே நபிமார்கள் அனுப்பப்பட்டனர். ஆனால் நபிமார்கள் மனிதர்களைத் துன்புறுத்திவிட்டனர். இமாம்களும் உண்மையை விட்டும் வெகுதூரஞ் சென்றுவிட்டனர். என்பன அத்துவைத்திகளைப் பின்பற்றியோரின் கருத்துக்களாகும். இவ்வாறாக இஸ்லாத்தினை விளங்கிக் கொண்டிருக்கும் சிலர் நம்நாட்டிலும் உலவிவருவதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கலாம். அல்குர்ஆனில் உருவகப்படுத்திக் கூறப்பட்டுள்ள (முதஸாபிகத்) வசனங்களுக்கு விசித்திரமான கருத்துக்களைக் கொடுத்தும் அல்குர்ஆன் வசனங்களையும் ஹதீதுகளையும் துண்டு துண்டாக உடைத்து தம் கொள்கைக்கேற்ப விளக்கங் கொடுத்தும் வருகின்றனர். கலிமாவுக்கும், வணங்கக்கூடிய கடவுள்களெல்லாம் இறைவனே. அவனின்றி உலகில் வேறு எதுவுமில்லை எனும் அத்துவைதக் கருத்துக்களையும் பிரச்சாரஞ் செய்துவருகின்றனர். இவற்றினை இஸ்லாத்தின் உண்மையான "தவ்ஹீத்" எனக் காட்டிப் பழைய கள்ளைப் புதிய போத்தலில் அடைக்க முயற்சிக்கும் இவர்களை என்னென்பது, இக்கோட்பாடானது ஏறத்தாழ ஆயிரம்வருடங்களுக்கு மேலாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் காலத்துக்குக் காலம் தோன்றி மறைந்ததை இவர்கள் அறியவில்லை போலும்.

முஸ்லிம்கள் மத்தியில் அத்துவைதக் கருத்துக்களைப் பரப்பியோரில் முக்கியமானவராகக் கருதப்படுவர் முஹ்யித்தீன் இப்னு அரபி (இப்னு அரபி) என்பவராகும். இவருடைய காலம் கி.பி. 1181 - 1259 வரையிலாகும். அரபு மொழிப் பாண்டித்தியமுடைய இவர், கிரேக்க அறிஞர்களுடன் தொடர்புடையவராக இருந்தார். கிரேக்கரின் அத்துவைதக் கோட்பாடும் சங்கரர் கொண்ட கருத்தையே கொண்டிருந்தது. இந்திய தத்துவஞானம் பற்றியும் அறிந்திருந்த இப்னு அரபி "எல்லாம் இறைவனே" எனும் அத்துவைதத் தத்துவத்தினால் கவரப்பட்டவராக இருந்தார். அத்துவைதத்துக்கு "உள்ளவை எல்லாம் ஒன்றே" எனப் பொருள்பட "வஹ்ததுல் வுஜூத்" என அரபியில் நாமஞ்சூட்டியவரும் இவரே. இவர் தம் காலத்துக்கு முன்னுள்ள சூபிஸக் கோட்பாடுகளையெல்லாம் நெறிப்படுத்தி அதை ஒரு பேரியக்கமாக்கினார்.

இப்னு அரபி, சமயங்களின் பெயரால் பிரிவினை கூடாது, எல்லாச் சமயங்களும் ஒன்றே என்ற கருத்துள்ளவராக இருந்தார். இதனாலேதான் அவர்,

வெவ்வேறு படிமங்களுக்கு என் இதயம் திறந்தே இருக்கிறது.
இது - கிறிஸ்தவ சன்னியாசிகளின் துறவுமடம்
சிலைகள் கொலுவிருக்கும் கோயில்
அரபு நாட்டு மான்களின் மேய்ச்சல்வெளி
ஹஜ் யாத்திரிகர்களுக்கு இது க.்.பாப்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
REFERENCE

தவ்றாத்தின் வரைபலகையும் இதுவே.
நான் அன்பு எனும் மார்க்கத்தையே
அனுஷ்டிக்கின்றேன்
அதன் பயணம் எத்திசைநோக்கி அடியெடுத்தாலும்
சரியே அன்பு எனும் மதமே என்னுடையது
அதுவே எனது நம்பிக்கை
எனப்பிதற்றினார் போலும் (நன்றி: ஹஸ்ஸான்)

இவர் தனது "புசூசுல்ஹிகம்" எனும் நூலில் உலகில் அனைத்தும் ஒன்றே. ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணப் பட்டுக் கணிக்கக்கூடிய அளவில் எதுவுமேயில்லை. காரணம், எல்லாமே இறைவனுடைய வெளிப்பாடுகள். எனவே, இறைவனைத்தவிர வேறு எதுவும் உலகில் இல்லை. விசுவாசியும் அவன்தான், நிராகரிப்பவனும் அவன்தான். நல்லவனும் அவன்தான், கெட்டவனும் அவன்தான், வானவர்களும் அவன்தான், எல்லாமே இறைவன்தான் எனக் கூறியுள்ளார்.

இன்னுமோரிடத்தில், அல்லாஹ் ஒரு பெரிய மனிதர், எல்லாப் பொருள்களும் வணக்கத்துக்குரியவைகளே. அல்லாஹ்தான் படைப்பு, மனிதர்கள், மிருகங்கள் யாவுமே நேர்வழியிலேயே இருக்கின்றன. அவர்களுள் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளானவர்களும் இல்லை. வழிதவறியோரும் இல்லை. பிர்அவ்ன் ஒரு விசுவாசி(மு.ஃமின்) ஆவான். அவன் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்பியவன். மறுமையில் வேதனையுண்டு என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது ஆகிய நச்சுக் கருத்துக்களை முன்வைத்தவர்.

அல்லாஹ்வை ஒரு பெண்ணாகக் கற்பனை செய்து பார்க்கும் போதுதான் அவனை நாம் முழுமையாக அறியமுடியும். அதனாலேதான் நபி(ஸல்) அவர்களும் பெண்களை அதிகமாக நேசித்தார்கள் என்றும் பிதற்றினார். மேலும் அவர் தனது "புதுஹாத்துல் மக்கியா" எனும் நூலில் "நபி(ஸல்) அவர்களுடன் எல்லா நபித்துவமும் முற்றுப்பெற்றுவிட்டன என்பதல்ல. இருப்பினும் ஷரீஅத்துடனான நபித்துவம் மட்டுமே முடிந்துவிட்டது என்பதே சரியான பொருள். உலகின்கண் இறுதிநாள்வரை மக்களின் நபித்துவம் தொடர்ந்து கொண்டேயிருக்கும் எனக் கூறினார். இக்கூற்றிலிருந்து றசூல்(ஸல்) அவர்களை இப்னுஅரபியும் இறுதிநபியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் தெளிவாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இஸ்லாமிய நம்பிக்கைக்கு (அகீதா) முரணான கருத்துக்களை இப்னு அரபி கூறியபடியினாலேயே அவரையும் அவரைத் தொடர்ந்தோரையும் இஸ்லாத்தின் பிரபல்யமான அறிஞர்களான இப்னு கதீர், இப்னு ஹஜ்ர் அல் அஸ்கலானி, இப்னு கல்தூன், இப்னு ஹிஸாம்(ரஹ்மகுமுல்லாஹ்) ஆகியோரும் இன்னும் பல அறிஞர்களும் “காபிர்” எனக் கூறியதுடன் அவருடைய கருத்தையும் கண்டித்துத் தனித்தனி நூல்களையும் எழுதியுள்ளனர். இதைப்புரிந்து கொள்ளாத சிலர் தமது நூல்களில் இப்னு அரபியை பள்ளிவாயல் மிம்பர் முன்னால் நின்று கொண்டு ஷைகுல் ஆரிபீன் (ஞானிகளின் தலைவர்) ஷைகுல் அக்பர் (மிகப்பெரிய சேய்ஹ்) என்றெல்லாம் புகழ்வதை நாம் என்னென்று சொல்வது!

இதேபோன்று பிரபல சூபியான மன்ஸூர் அல் ஹல்லாஜ் என்பவரும் “படைக்கப்பட்டுக் காணப்படுகின்ற எல்லாமே இறைவன்தான். தன் மீது அல்லாஹ் இறங்கினான்” என்றார். இன்னுமொரு அத்துவைதியான இப்னு பாரீன், “நான் இல்லையெனில் எதுவுமே உண்டாகியிருக்காது. காணப்படுகின்ற எதுவுமே உண்டாகியிருக்காது. உயிருள்ள எதுவாக இருந்தாலும் அது என்னுடைய உயிரிலிருந்து உண்டானதுதான் என்று நினைக்கின்ற ஒவ்வொரு ஆத்மாவும் என்னுடைய நாட்டத்துக்குட்பட்டே உள்ளது” என ஒரு கவிதையில் புலம்புகின்றார். மேலும் அவர் தமது “கஸ்புல் உஜூஹ்” எனும் நூலில் அல்லாஹ் பெண்ணின் தோற்றத்தில் வந்ததாகப் பாடுகின்றார். ஆரம்பமாக உருவாகியபோது ஹவ்வாவுடைய தோற்றத்தில் அல்லாஹ் வெளிப்பட்டான். காதலர்களுக்கு அழகான தோற்றத்தில் வெளிப்படுகின்றான் எனக் கூறினார். இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் தக்கலைப் பீர்முகம்மது அப்பா அல்லாஹ்வைப் பார்த்து, “நீயே உனக்கு சுஜூது செய்தாய், நீயே இப்புவிக்கு அஹமதாய் வந்தாய்.” “இப்புவியில் ஊனுருவாய் நீ அஹமது ஆனவனே” என தமது ஞானமணிமாலையில் பாடியுள்ளார்.

எனவே வஹ்ததுல் வுஜூத் கோட்பாட்டின் நம்பிக்கை அல்லாஹ் அவனுடைய படைப்புக்களில் எவற்றிலாவது அவதாரமாகின்றான் அல்லது அவற்றுடன் இரண்டறக் கலந்து சங்கமமாகின்றான் என்பதாகும். இந்த அடிப்படையிலேயே இவர்கள் கீழ்காணும் அல்குர்ஆன் வசனத்தினைத் தமது கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"(முஸ்லிம்களே! பத்றுப்போரில்) நீங்கள் அவர்களை (எதிரிகளை) வெட்டவில்லை. அல்லாஹ்வே அவர்களை வெட்டினான். (நபியே, பகைவர் மீது மண்ணை) நீர் எறிந்தபோது, அது நீர் எறியவில்லை அல்லாஹ்வே எறிந்தான்" (8:17) இந்த வசனத்தை வைத்துக் கொண்டு அல்லாஹ்தான் றசூலாகப் புவியில் அவதரித்தான் என அத்துவைதிகள் கதையளக்கின்றனர். 'அவதரித்தல்' என்றால் 'கீழிறங்கி வருதல்' என்பது பொருளாகும்.

பத்று யுத்தத்தின்போது றசூல்(ஸல்) அவர்கள் "இந்த எதிரிகள் புறமுதுகுகாட்டி ஓடப்போகின்றனர்" எனக் கூறிக் கொண்டு ஒருபிடி மண்ணை அள்ளினார்கள். குறைசிகள் நின்ற திசையை நோக்கி தன்கையை விரித்து ஊதினார்கள். அம்மண் காற்றில் பறந்து எதிரிகளின் கண்களைக் கரிக்கச் செய்தது. இது அன்றைய நிலையில் சொற்ப தொகையினரான முஸ்லிம்களை எதிரிகளிலிருந்து காப்பாற்றுவதற்காக அல்லாஹ் தனது வல்லமையைக் கொண்டு செய்த உதவியேயன்றி வேறில்லை. இதைத் தவிர்த்து "அல்லாஹ் அஹமதாய் வந்தான்" என்பது எவ்வளவு மடைமையாகும். இவ்வாறு ஒரு முஸ்லிம் நம்புவது அவனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றும் இணைவைத்தலுக்கு ஒப்பாகும். அடியார்கள் தங்கள் இரட்சகனை இவ்வுலகில் காணமுடியாது. ஆனால் விசவாசிகள் (மு.'.மின்) மறுமையிலும், சுவர்க்கத்திலும் காண்பர் என நம்பிக்கை கொள்ளல் ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கட்டாய கடமையாகும். மறுப்பது வழிகேடாகும்.

அத்துவைதத்தினை இஸ்லாத்தில் ஒரு கோட்பாடாக இணைத்துக்காட்டிய இவர்கள் அதனை ஏற்றுக் கொண்டோரை விசேட அறிஞர்கள் (காஸுல்கவாஸ்), அறிஞர்கள் (கவாஸ்), அறிவிலிகள் (அவாம்) என மூன்றாகத் தரம் பிரித்துள்ளனர். "விசேட அறிஞர்கள்" என்போர் வஹ்ததுல் வுஜூதை நன்கு கற்று இஸ்லாமிய நெறியுடன் கலந்து ஒரு சித்தாந்தத்தை உருவாக்கியவர்கள். இவர்களுட் சிலர் நூல்களையும் எழுதியுள்ளனர். அடுத்த தரத்தைச் சேர்ந்த "அறிஞர்கள்" என்போர் விசேட அறிஞர்களினால் எழுதப்பட்ட நூல்களை வேதவாக்காகக் கொண்டு கொள்கைப் பிரச்சாரஞ் செய்வோர். கடைசித் தரத்தைச் சேர்ந்த "அறிவிலிகள்" (அவாம்கள்) பாமரமக்கள் மத்தியிலிருந்து தேடிப்பிடிக்கப்பட்டு "சேஹ்" எனும் குருவிடம் சிக்கவைக்கப்பட்ட அப்பாவிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் (அவாம்) இஸ்லாத்தின் அடிப்படை (தௌஹீத்) பற்றிய எவ்வித தெளிவுமற்றவர்கள். இளம்வயதில் குர்ஆன் மதிரசாவுக்காவது சென்று இஸ்லாத்தின் ஆரம்ப அறிவையாவது பெற்றுக்கொள்ள வசதியற்ற இளைஞர்கள். இவர்களின் உள்ளம் வெள்ளைக் கடதாசி போன்றது. இஸ்லாமியனாகப் பிறந்தபடியால் மரபு வழியாக மறுமை, நரகம், சுவர்க்கம் உண்டு என நம்பியவர்கள் இவர்கள். ஆனால் அதற்காக "அமல்கள்" எதையும் செய்யாதவர்கள், செய்யத் தெரியாதவர்கள். அப்படியானவர்களை இனங்கண்டு அவர்களின் நிர்மலமான உள்ளத்தில் "வஹ்ததுல் வுஜூத்" எனும் நச்சுக்கருத்து இலகுவாக உட்பாய்ச்சப்படுகின்றது. இவர்களுக்கு வஹ்ததுல் வுஜூதை, தௌஹீதுடன் ஒப்பிட்டு ஆராயும் ஆற்றலின்மையால் எவ்வித விசாரணையுமின்றி அதனை "இஸ்லாம்" என்று ஏற்றுக் கொள்கின்றனர். தொழத்தேவையில்லை, ஏனைய இஸ்லாமியக் கிரியைகளை (ஷரீஆ) பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. பகல் முழுவதும் நன்றாக உழைத்துவிட்டு, பின்னிரவில் மங்கலான வெளிச்சமுள்ள அறையொன்றில் தனிமையில் இருந்து கொண்டு, தங்களை அல்லாஹ்வின் தோற்றப்பாடாக - பிரதிபிம்பமாக எண்ணி, சுயதரிசனஞ் செய்தால் போதும். நாம் அல்லாஹ்வுடன் இரண்டறக் கலந்துவிடலாம் என அவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. இக்கோட்பாட்டினால் ஆகர்சிக்கப்பட்ட பெரும் பெரும் அறிஞர்களெல்லாம் வழிகேடர்களாக மாறியதை வரலாற்றில் நாம் காணும்போது இவர்களெல்லாம் எம்மட்டு!

************

"தஸவ்வுப்" எனும் சூபித்துவக் கோட்பாட்டினை வரைவிலக்கணப்படுத்துவது சிரமமாகும். இதனாலேதான் குருடர்கள் யானை பார்த்த கதைபோன்று ஒவ்வொருவரும் தத்தமது சக்திக்கேற்ப அதற்குக் கருத்துக் கூறியுள்ளதை நாம் காண்கின்றோம். சிலர் அது "வஹ்ததுல் வுஜூத்" பெற்ற பிள்ளை என்றும், சிலர் ஆன்மீகத்தின் முதிர்ச்சி நிலையே சூபித்துவம் எனும் 'துறவறம்' என்றும்கூற, மாறாகச் சிலர் சூபித்துவம் இஸ்லாத்திலிருந்து வேறானதல்ல, இஸ்லாமிய வாழ்வு முழுவதுமே ஆன்மீகம் என்கின்றனர். எனவே வரலாற்றுரீதியாகவும், தத்துவார்த்த ரீதியாகவும் நடுநின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராயும்போதுதான் அதன் எதார்த்தத்தினைப் புரிந்து கொள்ளமுடியும்.

"சூப்" எனும் அரபுச் சொல், ஆட்டு உரோமத்திலான கம்பளியைக் குறிக்கின்றது. அதனை அணிந்தோரே சூபிகள் என்பது ஒருவாதமாகும். றசூலுல்லாஹ் காலத்தில் உண்ண உணவோ உடுக்க ஒழுங்கான ஆடையோ இல்லாத மக்காவாசிகள் (முஹாஜிரீன்) சிலர் மஸ்ஜிதுந் நபவி(மதினா)யில் தங்கியிருந்து கிடைப்பதை உண்டுகொண்டு வணக்கவழிபாடு (இபாதத்)களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவ்வாறான பரம ஏழைகளே "அஹ்லுஸ்ஸுப்பா" எனும் திண்ணைத் தோழர்கள் (அஹ்லுஸ்ஸுப்பா என்ற சொல் மருவியே சூபி எனும் சொல் உருவாகியதாகக் கூறுவதுண்டு) "அறிஞன்" எனும் பொருட்பட "ஸேபியா" எனும் கிரேக்க சொல்லிலிருந்து "சூபி" எனும் சொல் தோன்றியதாகக் கூறுவதுமுண்டு. ஒரு முஸ்லிமுடைய முழுவாழ்வையுமே ஆன்மீகத்துடன் (ஆன்மா-உள்ளம்) தொடர்புடையது. எனவே இஸ்லாமியக் கோட்பாட்டில் தொடர்த்தேர்ச்சியாக ஏற்பட்டுள்ள வளர்ச்சிப்பாதையே ஆன்மீகம். அதனை முழுமையாகப் பின்பற்றும் முஸ்லிம்களே சூபிகள் என மற்றொரு சாராரும் கூறுகின்றனர். சிலர் யாவற்றையும் மறுத்து கி.பி.9ஆம் , 10ஆம் நூற்றாண்டுகளில் கிரேக்க, உரோம, பாரசீக, இந்து கலாசாரங்களின் ஊடுருவல் காரணமாகவே இஸ்லாத்தினுள் "சூபித்துவம்" எனும் துறவறம் புகுந்தது என்கின்றனர். இதனை வரலாற்றாசிரியரான பேராசிரியர் நிக்கலஸ் போன்றோரும் ஆதரிக்கின்றனர்.

நபி(ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைப்பதற்கு முந்திய காலப்பிரிவை அறியாமைக் காலம் (ஜாஹிலிய்யா) என்கின்றோம். அக்கால அரபிகள் குலங்களாகவும் கோத்திரங்களாகவும் பிரிந்து அரபியப் பாலை நிலத்தில் நாடோடிவாழ்க்கை நடாத்தினர். நாகரிகம் என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வினால் அல்குர்ஆன் படிப்படியாக அருளப்பட்டதும் மக்களும் படிபப்டியாக முன்னேறத் தொடங்கினர். ஆரம்பத்தில் றசூலுல்லாஹ்வை எதிர்த்தவர்களெல்லாம் குர்ஆன் செய்த மாபெரும் புரட்சியின் காரணமாக முழுமையாக இஸ்லாமியக் கருத்துக்களை ஏற்றனர். நபி(ஸல்) காலத்தில் மதினா நகரமே இஸ்லாத்தின் தலைநகராக்கப்பட்டது. அங்கு ஆட்சியமைத்த நபியுல்லாஹ், யூதர்களுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு குர்ஆனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியை நடாத்தினார்கள். ஈற்றில் நபி(ஸல்) அவர்கள் மரணிக்கும்போது முஸ்லிம்களைத் தெட்டத்தெளிவான பாதையிலேயே இட்டுச் சென்றார்கள். சான்றாக,

"சுவர்க்கத்துக்கு உங்களைச் சமீபமாக்கி, நரகத்தைவிட்டும் தூரப்படுத்தக்கூடிய எந்த அமலும் உங்களுக்கு விபரிக்கப்படாமலில்லை." (தப்ரானி) எனும் பொன்மொழியைக் கூறலாம்.

கலீபாக்கள் காலத்தில் இஸ்லாத்தினைக் குழப்புவதற்கு யூதர்கள் மேற்கொண்ட எத்தனங்கள் எதுவுமே பலிக்கவில்லை. ஹதீதில் தில்லுமுல்லுகள் செய்ய முடியுமா என எண்ணிப் பல்லாயிரக்கணக்கான பொய்யான ஹதீதுகளையெல்லாம் கட்டி முயற்சித்தனர். ஹதீதை இனங்காண்பதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டதனால் அவர்கள் முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இடைச் செருகல்களும் பயனளிக்கவில்லை.

றசூலுல்லாஹ்வின் வழியையொட்டியதாகவே நாற்பெரும் கலீபாக்களின் ஆட்சியும் அமைந்திருந்தது. இருப்பினும் மூன்றாவது கலிபா உதுமான்(ரழி) அவர்களின் பிற்கால ஆட்சியில் உருவான உள்நாட்டுக் குழப்பங்கள் அலி(ரழி) அவர்களின் ஆட்சியின்போது அதிரிக்கத் தொடங்கின. அக்காலத்தில் இடம்பெற்ற ஜமல், ஸிப்பின் யுத்தங்கள் முஸ்லிம்களை பல உட்பிரிவுகளாக (சுன்னி, ஷியா, காவாரிஜ்)க் கூறுபோட்டன.

இந்நிலையில் கி.பி. 661இல் இஸ்லாமிய ஆட்சி உமையாக்களிடம் மாறியதும் முஆவியா(ரழி) தொடக்கம் ஆட்சி செய்த உமையாக்கலிபாக்கள், இஸ்லாமிய இறையாட்சியிலிருந்து தூரவிலகி உரோமர் பாரசீகரைப் போன்று மன்னராட்சி நடாத்த, கலிபாப்பதவியும் வாரிசு அடிப்படையில் கைமாறின. கி.பி. 750இல் ஆட்சியைக் கைப்பற்றிய அப்பாஸியரும் உமையாக்கள் பாணியிலேயே ஆட்சி நடாத்தினர். அப்பாஸியர் ஆட்சியில் மொஸபத்தேமியாவைத் தொடர்ந்து கலிபா மன்சூர் ஆட்சியில் பக்தாத் நகரம் ஆட்சித் தலைநகரமாக மாற்றியமைக்கப்பட்டது. இக்காலத்தில் ஆசியா, ஆபிரிக்காக் கண்டங்களின் பெரும்பகுதி இஸ்லாமியர் வசமாகியதால் கூபா, பஸரா, ஈரான், எகிப்து, துருக்கி மற்றும் ஸ்பெயின் நாடுகளுக்கெல்லாம் இஸ்லாம் பரவியது. இதன் காரணமாக யூதர், கிறிஸ்தவர் முதலியோர் இஸ்லாத்தில் இணைந்ததனால் தங்களுடைய பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதக்கோட்பாடுகளை இஸ்லாமிய நம்பிக்கை (அகீதா)யுடன் தொடர்புறுத்திக் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். அதற்கியைய கிரேக்க உரோம சித்தாந்தங்களுடன் தொடர்புபடுத்தி இஸ்லாத்தினை விளக்க வேண்டிய இக்கட்டான நிலை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. இக்காலத்தில் பெரும்பெரும் நகரங்களில் அரிஸ்டோட்டில், பிளேட்டோ போன்றோரின் கிரேக்க தத்துவங்கள் கொடிகட்டிப் பறந்தன. ஈரானில் தோன்றிய ஆரிய வேதம் இந்தியாவில் நுழைந்து மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியது. அத்துடன் பௌத்த, கிறிஸ்தவ, ஜொராஸ்டிய, யூத கலாசாரங்களெல்லாம் ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தினை எதிர்த்த காலமாகவும் காணப்பட்டது. இந்நிலையில் அப்பாஸியக் கலிபாக்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் ஆட்சிக்கு லாயக்கற்றவர்களாகக் காணப்பட்டனர். ஆட்சியதிகாரத்தைவிட ஆடம்பர வாழ்கைக்கே முக்கியத்துவம் வழங்கினர். ஆட்சியின் தலைவர்களாகவும் அல்இஸ்லாத்தின் தலைவர்களாகவும் இருக்கவேண்டிய கலிபாக்கள் இவை எதிலுமே பிடிப்பில்லாமல் படாடோப வாழ்க்கையில் ஈடுபட்டமையினால் உளம் வெதும்பிய மார்க்க அறிஞர்கள் இஸ்லாத்தினைப் பாதுகாக்கும் நோக்குடன் ஆட்சியிலிருந்து ஒதுங்கிவாழ விரும்பினர்.

இதில் ஒரு துரதிஸ்டம் என்னவென்றால் அவ்வாறு ஒதுங்கிய அறிஞர்கள் தாங்கள் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் வாழ்கின்றோம் எனக் கூறிக்கொண்ட போதிலும், தாங்கள் கொண்டுள்ள கருத்துக்கள் கிரேக்க, உரோம தத்துவங்களிலுமுள்ளன என அவர்களும் கூறினர். அதற்கு முக்கிய காரணம் அக்கால்தில் காணப்பட்ட பகுத்தறிவுவாதிகளான மு.'.தஸிலாக்களும் குர்ஆன், ஹதீதுக்குக் கொடுத்த தவறான விளக்கமுமாகும். அவர்கள் பிறமத சிந்தனைகளை மொழிபெயர்த்து முஸ்லிம்கள் மத்தியில் புகுத்தி வெற்றியுங் கண்டனர். இன்னோரன்ன காரணங்களினால் பிறமதத்துறவறக் கொள்கைகளும், இலகுவாக சூபித்துவம் என்ற லேபலில் (Label) இஸ்லாத்தினுள் புகுந்து விட்டது எனலாம். இக்கொள்கையை முஸ்லிம்கள் மத்தியில் பரப்புவதில் முக்கியமாக இப்னு அரபி போன்றோர் ஈடுபட்டதனால் மறைமுகமாக "எல்லாம் இறைவன்" எனும் வஹ்ததுல் வுஜூத் கொள்கை முஸ்லிம்கள் மத்தியில் புகத் தொடங்கியது. இதுபற்றி கவிஞர் அல்லமா இக்பால் அவர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சூபிசம் என்பது பிளேட்டோவின் கருத்துக்களுடன் இந்து சமயத்தின் வேதாந்த சிந்தனைகள் கலந்தது. மேலும் சூபிஸம் போதைதரும் விஷம் கலந்தது. இக்கருத்துக்கள் திருக்குர்ஆனின் தெளிவான சட்டங்களுக்கு முரண்பட்டன" எனக் கூறியுள்ளார்.

பொதுவாக நோக்கின் ஷீயாக்கள் நிறைந்து காணப்பட்ட பாரசீகநாடான ஈரானிலேயே சூபிஸம் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. உமைய்ய ஆட்சியின்போது கூபா, பஸரா, குரசான் மாகாணங்களில் பல சூபிகள் (மெய்ஞானிகள்) காணப்பட்டபோதும் அப்பாசிய ஆட்சியின்போது ஈராக்கிலும் பல முக்கிய சூபிகள் வாழ்ந்தனர். இவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர், மன்சூர் ஹல்லாஜ் என்பவராகும். இவர் தமது பக்திப் பிரவாகத்தினால் "நானே இறைவன்" (அனல்ஹக்) எனக் கூறியவர். அதற்காக அப்பாசியக் கலிபா மன்சூரினால் மரணதண்டனை வழங்கப்பட்டவர். இவரைப்போன்று பல்க் நாட்டின் மன்னனாகவிருந்து சகல சுகபோகங்களையும் அனுபவித்துவிட்டு ஞானிக்கோலம் பூண்டு நாடுகாடாக அலைந்து "நானும் இறைவனும் ஒன்றே" எனப் பிதற்றியவர் இப்றாகிம் பின் அத்ஹம். இவர்களையெல்லாம் விஞ்சியவராக சூபித்துவம் என்பது தெளிவான அத்துவைதம் என்பதை உலகுக்குப் பறைசாற்றியவர் இப்னு அரபியாகும்.

பிற்காலத்தில் சூபித்துவம் சிறுசிறு இயக்கங்களாகப் பிரியத் தொடங்கின. ஒவ்வொன்றும் தத்தம் வணக்க வழிபாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு பாதையை உருவாக்கின. இப்பாதைகளை "தரீக்காக்கள்" என்பர். தரீக்காவின் தலைவர் "சேஹ் அல்லது பீர்" என அழைக்கப்பட்டார். இறைவனை அடைவதற்கு ஷரீஅத், தரீக்கத், அக்கீத், மஹ்ரிபத் எனும் நான்கு படித்தரங்கள் (Steps) உள்ளன. இவைகள் சைவாகம காண்டங்களான, சரியா காண்டம், கிரியா காண்டம், யோக காண்டம், ஞானகாண்டம் ஆகியவைகளை ஒத்தனவாகக் காணப்பட்டன. இஸ்லாம் ஒரு வேதாந்த மதம் என நிறுவுவதற்கு முற்பட்டவர்களின் திருவிளையாடலே சூபிசம் என்பதற்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்.!

இப்படித்தரங்களில் ஊறித்திளைத்து ஞானத்தை வெளியாக்கியோரே சூபிகள். சேஹ் எனும ஞானத்தலைவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களில் விசுவாசப்பிரமாணஞ் (பைஅத்) செய்து சீடனாக (முரீத்) மாறுபவனே மேற்கூறிய நான்கு வழிமுறைகளையும் அடையமுடியும் என்கின்றனர். சூபிகளின் இவ்வடிப்படையில் கி.பி. 1078இல் முகையித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரஹ்) பெயரினால் தாபிக்கப்பட்ட முதலாவது சூபித்தவ தரீக்கா "காதிரிய்யா"வாகும். அதைத்தொடர்ந்து ஸுஹ்ரவர்த்திலா, சாதுலிய்யா, மௌலவிய்யா, நக்ஷபந்திய்யா முதலிய தரீக்காக்கள் உருவாகியுள்ளன. அண்மையில் (1999-02-02) சாதுலிய்யாத் தரீக்காவின் உலக அமீர் அப்துல் வஹ்ஹாப் லண்டனில் மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையிலும் பல்வேறு தரீக்காக்கள் இருப்பதையும் அவைகள் அடிக்கடி ஒன்றுடனொன்று மோதிக்கொள்வதையும் நாம் காணலாம். மக்கள் தாம் விரும்பிய ஏதாவதொரு தரீக்காவில் இணைந்து கொள்ள முடியும். இவ்வாறான சூபித்துவக் கோட்பாடோ, தரீக்கா வழிபாடோ றசூலுல்லாஹ் காலத்திலோ நாற்பெரும் கலிபாகாலத்திலோ இருக்கிவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புனித இஸ்லாம் ஆன்மீகம்பற்றி யாதுகூறுகின்றது என்பதை ஆராயும்போதுதான் இன்று சூபித்துவம் எனும் துறவறம் இஸ்லாமிய அடிப்படையிலிருந்து எவ்வளவுதூரம் விலகிச் சென்றுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். ஆன்மீகம் என்பது ஒரு மனிதனை உள்ளிருந்து இயக்கும் ஆத்மாவைப் பக்குவப்படுத்தக்கூடிய ஒரு துறையாகும். இதையே அல்குர்ஆனும்,

"பரிசுத்தமடைந்தவர் வெற்றியடைந்துவிட்டார்" (87:14) எனக் கூறுகின்றது. ஆகையால் ஒவ்வொரு முஸ்லிமும் தம் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தக் கடமைப்பட்டவன், அவன்தான் ஆன்மீகவாதியாகும். இஸ்லாம் மார்க்கத்தில் கடமைப்பட்டுள்ள தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ்ஜு மற்றும் திருமணம், குடும்பவாழ்வு யாவுமே ஆன்மீகத்தைப் போதிப்பவைகளே. உதாரணமாக தொழுகையை நோக்கின் இறைவன் தன்னைப் பார்க்கின்றான் அல்லது தான் அவனைப் பார்க்கின்றேன், என்ற உணர்வுடன் தொழல் வேண்டும். அப்பொழுதுதான் ஆன்மா பரிசுத்தமடையும். இந்த அடிப்படையில் ஒரு முஸ்லிமின் சகல நடவடிக்கைகளும் ஆன்மீகத்துடன் தொடர்புடுத்தப்பட்டுள்ளன. இதையே அல்லாஹ்வும் "ஜின்களையும் மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை. (51:56) எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றான்.

இந்த அடிப்படையில் நோக்கின் ஒரு முஸ்லிமின் வாழ்க்கை முழுவதுமே ஆன்மீகத்துடன் தொடர்புடையன. மாறாகச் சிலர் இவைகளுக்கெல்லாம் அப்பால் சில சித்தாந்தங்களை உருவாக்கிக் கொண்டு, இதுதான் ஆன்மீகம் எனும் சூபித்துவம், ஆன்மீகத்தில் மனிதனைப் பக்குவப்படுத்த சில மகான்கள் இருக்கின்றார்கள் எனக்கூறி இஸ்லாமிய சமுகத்தைத் திசைதிருப்பும் ஒரு தீய முயற்சியே சூபிசம். நபி(ஸல்) அவர்களும் தமது தோழர் சகலரையும் ஆன்மீக வாதியாகவே மாற்றினர். அதற்காக அவர்கள் ஷரீஅத்தில் கூறப்பட்டுள்ள வணக்க முறைகளையே கருவிகளாகக் கொண்டிருந்தனர். றசூலுல்லாஹ்வுக்கும் அவர்களைத் தொடர்ந்தோருக்குமிடையில் நபி- தோழர் என்ற உறவு இருந்ததே தவிர சூபிசம் கூறுவது போல குரு - சிஷ்யன் உறவு இருக்கவில்லை. இன்று "சூபிசம்" ஏனைய சில சித்தாந்தங்களைப் பிரதிபண்ணிக்கொண்டு அவர்கள் மட்டுமே ஆன்மீக வாதிகள், பல படித்தரங்களைக் கடந்தவர்கள், ஆன்மீகம் என்பது தனித்துறையொன்று எனவே அத்துறையில் முதிர்ச்சி பெற்ற ஒரு சேஹைக் கைப்பிடித்து அவர்கூறுவது போல செய்தால் மட்டுமே ஆன்மீகவாதியாக ஆகமுடியும் என்கின்றனர். இது என்ன விந்தை! ஆனால் இதற்கான ஆதாரங்கள் குர்ஆனிலோ, சுன்னாவிலோ இல்லை என்பது அறிஞர்கள் கருத்தாகும்.

அடுத்த பிரச்சனை ஆன்மீகத்தில் முக்திநிலை அடைந்தவரை எவ்வாறு இனங்காணமுடியும் என்பதாகும். பெரியதாடி, நீண்ட ஜுப்பா, பச்சைத் தலைப்பாகை, கையில் தபசிமாலை ஆகியவைகளைக் கொண்டா! அப்படியானால் காவியுடைதரித்து, கழுத்தில் துளசி மாலையணிந்து நெற்றியில் பட்டைதீட்டி, கையில் செபமாலையுடன் தோன்றிக் கொண்டு பெண்களைக் கடத்தியதாகவும், போதைப்பொருள் கடத்தற்றொழிலில் ஈடுபட்டதாகவும் தினந்தம் செய்தியூடகங்களினால் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படுகின்றார்களே சில போலிச்சாமிகள், அவர்களுடைய தோற்றத்துக்கும் நாம் ஆன்மீகவாதியென அடையாளமிடும் ஒருவருக்கும் என்ன வித்தியாசம்! அல்லாஹ் ஒரு மனிதனுடைய உள்ளத்தையல்லவா பார்க்கின்றான். நம்முடன் அன்றாடம் பழகுகின்ற ஒரு மனிதரை நாம் பிடித்துக்கொண்டு அவர் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர் என்று எப்படிக் கூறமுடியும்! ஒருவருடைய உள்ளத்தை இன்னொருவர் எப்படிப் புரிந்து கொள்ள முடியும். மனைவியின் உள்ளத்தையே கணவனால் புரிந்து கொள்ளமுடியாத பலவீனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே இது சாத்தியமாகுமா!

ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தரீக்காவொன்றில் சேர்வதானால் "சேஹ்" எனும் தலைவரிடம் மண்டியிட்டுத் தீட்சை பெறவேண்டும். அப்பொழுதுதான் அவன்/அவள் பரிசுத்தமடையமுடியும். இதுதானே கிறிஸ்தவர்களுக்கும், போதகர்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு. ஒரு சேஹ், ஒரு முரீதுக்கு எப்படிப் பரிசுத்த தன்மையை வழங்க முடியும். நபி(ஸல்) அவர்கள் தமது சிறிய தந்தை அபூதாலிபை இஸ்லாத்தின் பால் ஈர்ப்பதற்காக எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டார்கள். அப்பொழுது நபிக்கு அல்லாஹ்,

"நீர் விரும்பியோருக்கு நீர் நேர்வழிகாட்டமுடியாது. நாம் நாடியவர்களுக்கு மட்டுமே நேர்வழி காட்டுவோம்" எனக் கூறினான். எனவே ஒருநபிக்கு முடியாத கைங்கரியத்தை "சேஹ்" செய்ய முடியும் என்று எவ்வாறு நம்பமுடியும்.

தரீக்காக்கள் பொதுவானதொரு அடிப்படையைக் (உசூல்) கொண்டு இயங்குவதையும் நாம்காணலாம். அதாவது ஒரு தரீக்காவாதி(முரீத்), அதன் சேஹ் எதனைச் சொல்கின்றாரோ அதனையே செய்ய வேண்டும். பின்பு தனக்கென ஒரு சொந்தக் கருத்துக்கிடையாது. சேஹ் சொல்வது தமக்குத் தீமைபோன்று தோன்றினாலும் ஏற்றேயாகவேண்டும். ஏனெனில் அதன் பின்னால் ஒரு நன்மையான விடயம் இருக்கலாம் என்பர். தரீக்காக்களின் "திக்ர்" முறைகளும் அல்லாஹ்வின் கூற்றுக்கு முரணானதாக காணப்படுவதையும் நாம் நோக்கலாம். தரீக்காக்களிலுள்ளோர் அல்லாஹ்வை அஹ், ஹா, ஹி, ஹு என்றெல்லாம் கருத்தற்ற சொற்களைக் கொண்டு துதிப்பர். அல்லாஹ் தம் திருமறையில் அவனுடைய அழகிய பெயர்களைக் குறிப்பிட்டுளான். அவனுடைய பெயரை உரத்துச் சப்திமிட்டுத் துதிப்பதையும் அவன் விரும்புவதில்லை. நபி(ஸல்) அவர்களைப் பார்த்து,

"(நபியே!) உன் மனதுக்குள் மிக்க பணிவோடும் பயத்தோடும் (மெதுவாக) சொல்லி உரத்த சப்தமின்றியும், காலையிலும் மாலையிலும் உமதிரட்சகனை நினைவு கூருவீராக. (அவனை) மறந்திருப்போரில் நீர் ஆகிவிடாதீர்." (7:250) என இறைவனே கட்டளையிடுகின்றான். றசூலுல்லாஹ் அவர்களும் "நீங்கள் சப்தத்தைக் குறையுங்கள். நீங்கள் செவிடனைக் கூப்பிடவில்லை" (புகாரி) எனக் கூறினார்கள். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுப்பாடி தாளம் போட்டு அல்லாஹ்வைத் துதிக்கும்படி அல்குர்ஆனோ, சுன்னாவோ கூறவில்லை.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சியின்போது இலங்கையின் தெற்கு, தென்மேற்கு, வடமேல், மத்திய மலைநாடுகளில் சூபி ஞானவான்களின் பெயரால் தரீக்காக்கள் உருவாயின. அவர்களுக்கென தனிப்பட்ட பயிற்சி நிலையங்களும் (ஸாவியா) இயங்கிவருகின்றன. தரீக்கா ஞானிகளும் ஊர் பெயர் தெரியாமல் சிறப்புப் பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றனர். அவர்கள் நபிவழியில் ஏதாவது செய்தார்களா எனப்பார்த்தால் அதுதான் இல்லை. எனவே தூயவடிவில் இஸ்லாத்தினை விளங்கிக் "இபாதத்" செய்ய விரும்புவோர் இவைகள்பற்றி ஆழமாகச் சிந்தித்தல் அவசியமாகும்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைநின்றவை...............

* இலங்கையில் முஸ்லிம்களும் இனப்பிரச்சினையும்.
* இஸ்லாமின் தோற்றமும் வளர்ச்சியும்.
* இலங்கைச் சோனகர் வரலாறு.
* இஸ்லாத்தின் பார்வையில் யார் குழப்பவாதி.
* இஸ்லாத்தின் பார்வையில் காதியானிகள்.
* இறைவனின் தீர்ப்பே இறுதியானது.
* இமாம் மஹ்தி பற்றிய மாநபியின் முன்னறிவிப்புக்கள்.
* பிக்ஹுச் சட்டமும் மத்ஹபுகளும்.
* தப்லீ∴. தோன்றிய வரலாறு.
* அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்).
* ஜமாஅத்துல் மு∴.மினின் ஓர் அறிமுகம்.
* நான் கண்ட ம∴.தூதி (ரஹ்).
* தப்லீ∴. ஜமாஅத்தை ஏசாதீர்கள்.
* ஹஜ்ரத் ஈசா (அலை) இரண்டாம் வருகை.
* ஜமாஅதே இஸ்லாமி குற்றச்சாட்டுகளும் பதில்களும்.
* தப்லீ∴. அன்றும் இன்றும்.
* ஷீயாக்களின் சீர்கேடுகள்.
* அல் குர்ஆன் மொழிபெயர்ப்பு (தமிழ்).
* ஷீயாக்களின் மறுபிரவேசம்.
* நபிவழிக்கு முரணான தரீக்காக்கள்.
* கியாமத்து நாளின் பத்து அடையாளங்கள்.
* மதமும் மன அமைதியும்.
* ஈமானின் உண்மை எல்லாம் இறைவன் என்பதல்ல.
* இஸ்லாத்தின் தோற்றம் ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு.
* இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள்.
* Muslims of Sri Lanka (Avenues to Antiquity).
* உண்மை உதயம், இஸ்லாமிய சிந்தனை, அத்தீனுல் இஸ்லாம், வான்சுடர், அல்ஜென்னத், அந்நஜாத் - சஞ்சிகைகள்.
* நேர்காணல்கள் - ஒலியிழை நாடாக்கள்.

பொது நூலகம் நகர சபை கல்முனை



15539
REFERENCE
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியரின் ஏனைய நூல்கள்.........**

உயர்தர வகுப்புகளுக்கான,

* இஸ்லாம் - இஸ்லாமிய நாகரிகம்,
* இஸ்லாமிய நாகரிகம்,
* இஸ்லாம்

(கடந்த கால வினாவிடை நூல்கள்),

* "மருதமுனையின் வாழ்வியலும் பண்பாடும்" (முயற்சியில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் உலகின் மூலாதாரமான சிந்தனைகளைப் புரிந்து தெளிவுறுவதை எதிர்கொள்ளும் கருத்தியல் தாக்கமும், முரண்பாடான விளக்கங்களும் இஸ்லாமிய ஒற்றுமையைக் கூறுபோடும் அளவுக்கு முனைப்புப் பெற்றுள்ளதை நாமறிவோம்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் நீறுபூத்த நெருப்பாகி இந்நிகழ்வு இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதனால் ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கி இயக்கத்தின் பேரிலான ஆளடையாளத்தைத் தெரிந்துகொள்ளத் துணியும் எத்தினிப்பு கூர்மையடைந்துள்ளது எனலாம்.

'...... எவர்களுடைய இதயங்களில் மாறுபாடு இருக்கின்றதோ அவர்கள் அதில் குழப்பத்தை உண்டுபண்ணக் கருதி (இத்தகைய வசனங்களில் தவறான) பல அர்த்தங்களையே தேடிப் பின்பற்றுவார்கள்..' (அல்குர்ஆன் 3..)

இந்நிகழ்வுக்கான பின்புலத்தை அறிந்து கொள்வதற்கு முன்பாகவே ஒருபுறம் மனிதனுக்கு மனிதன் தீர்ப்புக் கூறி மேலான நீதிபதியாகவும் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்கின்றான். மனிதாபிமானமும் மானிட நேயமும் மறுபுறம் அவனது தீர்ப்பக்குள் நசுங்குண்டு மூச்சுத்திணறிக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

மனிதத் தீர்ப்புக்கு இலக்காகக் கூடிய கருத்தியல் சிந்தனைகளை உள்வாங்கவும் உருப்படியான விளக்கங்களைக் கண்டுகொள்வதற்குமான வசதிகள் கிடைப்பது இன்று தமிழ்மொழியில் அரிதாகவும் வெற்றிடமாகவும் இருப்பது ஒரு பெருங்குறைபாடாகும்.

இவ்வெற்றிடத்தை இட்டு நிரப்பும் வகையில் அல்லது இக்குறைபாட்டை நீக்கும் பணியில் நெடுநாள் தேடலின் பெறுபேறாக ஒரு பரிசோதனை முயற்சியாகக் கூடிய ஆவணமாக "இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்கள்- ஒரு வெட்டுமுகம்" என்ற நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

இஸ்லாமிய கற்கைத்துறையில கற்றல், கற்பித்தல் பணியில் நீண்டகால அனுபவப் பின்புலம் கொண்ட ஓய்வுபெற்ற பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியரான ஜனாப். எஸ். எம். மூசா ஜே.பி. இப்பரிசோதனையில் இறங்கி இருப்பது சமகாலத் தேவையைப் பொறுத்து மனங்கொள்ளத்தக்கது. அத்தோடு அவரது எழுத்துத் துறை முயற்சிக்கான ஓர் அறுவடையாகவும் இந்நூலின் வரவினைக் காண்கின்றோம்.

**எம். ஐ. எம். முஸாதிக்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org